[ISSUED 11—7—1976]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY, 26th FEBRUARY 1973

Volume CV—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

*Price 35 Paise*

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

26TH, 27TH AND 28TH FEBRUARY AND 1ST AND 2ND MARCH 1973.

*VOLUME* CV (*Nos.* 1 *to* 5.)

## TABLE OF CONTENTS


| | Pages |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. .. | vi-viii |
| *Monday, 26th February* 1973. | |
| I. Questions and Answers .. .. .. .. | 1-35 |
| II. Announcements— | |
| (1) Message from the Governor .. .. .. | 35 |
| (2) Decision of the Business Advisory Committee | 35 |
| III. Presentation of the Budget for 1973-74 .. .. | 36-48 |
| IV. Papers laid on the table of the House .. .. | 49-51 |
| *Tuesday, 27th February* 1973. | |
| Condolence Resolution on the death of Thiru T. K. Shanmugam, M. L. C. .. .. .. .. | 201-219 |
| *Wednesday, 28th February* 1973. | |
| I. Questions and Answers .. .. .. .. | 221-272 |
| I. General discussion on the Budget for 1973-74 | 272—302 |
| II. Papers laid on the table of the House .. .. | 302-304 |

V2:11.32 'N73
N73 · 10531



*Thursday, 1st March* 1973. PAGES

I. Questions and Answers .. .. .. .. 309—336

II. Statement under Rule 82 of the Council Rules *re* Proposed Strike by the Graduate Teachers .. 336—343

III. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. 343—389

IV. Papers laid on the table of the House .. 389—390

*Friday, 2nd March* 1973

I. Questions and Answers .. .. .. .. 405—433

II. General discussion on the Budget for 1973-74—*cont.* .. .. .. .. 433—480

III. Papers laid on the table of the House .. 480—481

Index .. .. .. .. 485—510

63084

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

---

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas and Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, I and Steel Control, Employment and Training, Companies, La Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-char of Public Works, Minor Irrigation including Special Min Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engine ing Wing of the Directorate of Agriculture except Soil Conservati Schemes, Passports and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY, Minis in-charge of Food, Food Production, Khadi and Village Indus and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Contro

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness Legislation on Chits, Forest and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in charge of Transport, Nationalised Transport and Motor Vehicle Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan an Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dai Development Corporation.



## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள் :

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) (ஐ.பி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி, வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் அதிகாரிகள், மாவட்ட இணைப்புச் சட்டம், துறை, தேர்தல்கள், செய்தி விளம்பரம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், இணைப்பட்ட தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ் நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, சட்ட மன்றம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், சிறை, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், [illegible], இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை, மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. சாமலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பின் தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான—கிராமதான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ் நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் நீங்கலாக பால் உற்பத்தி.

## தமிழ் நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. கே. அறிவழகன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்.

திரு. அய்யணன் அம்பலம்.

திரு. எஸ். நாராயணசாமி.

சட்ட மன்றச் செயலாளர்.

திரு. இ. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்.ஸி.

வெளியீட்டுப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எஸ்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநில சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம். ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ. எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ். ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமன உறுப்பினர். |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜா அய்யர், எம்., எம். ஏ., எல். டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம். ஏ., (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ் நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 19 கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 காட்டூர் கோபால் .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| ருஷ்ணசாமி நாயுடு, ரா. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| ன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |
| காலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| க்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| சங்கரலிங்கம் பிள்ளை, எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 27 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ் நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 28 சாம்பசிவம், இரா. .. .. | தென்னார்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 30 சிற்றரசு, சி. பி. (மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 31 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 33 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 தங்கப் பாண்டியன், வே., பி.ஏ., பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 35 தாமோதரன், ஏ.ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 36 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 தென்னரசு, எஸ். எஸ். .. .. | நியமனம். |
| 38 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 நடராசன், என். வி. (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 40 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நாராயணசாமி, ப. (வேளாண்மை அமைச்சர்). | மாநில சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 42 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |
| 43 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 44 நீல நாராயணன் .. .. | நியமனம். |
| 45 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 46 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 47 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 49 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துகிருஷ்ணன், டி. வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 54 முத்துசாமி, செ. .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 55 வசந்த பாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 56 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஓய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெள்ளப்பாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஜனார்த்தனம், ஏ. பி. .. .. | நியமனம். |
| 61 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 62 ஜெயராம ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம். | |



## தமிழ் நாடு சட்டமன்றம்.

*இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்து நான்காவது கூட்டத்தொடர்.*

*திங்கட்கிழமை, 1973 பிப்ரவரி 26*

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*National High Schools, Nagapattinam.*

* 100 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU M. ARUMUGASWAMI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether girl students are not admitted into the National High School, Nagapattinam, Thanjavur District, in higher classes; and

(b) if so, the reasons therefor ?

*தேசிய உயர்நிலைப்பள்ளி, நாகப்பட்டினம்.*

*திரு. எம். ராஜா அய்யர் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்திலுள்ள தேசிய உயர்நிலைப்பள்ளியில் உயர் வகுப்புகளில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லையா ?*

*(ஆ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :(அ) நாகப்பட்டிணம் தேசிய உயர்நிலைப் பள்ளியில் உயர் வகுப்புகளில் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman. Sir. may I know what the policy of the Government is in this regard and whether the admission of girl students in boys' schools where there are already separate Girls' High Schools available is encouraged by the Government, and if so, the reasons therefor ? Will the Government state categorically what their views are in the matter of admission of girl students in places where there are separate High School with facilities for girls' education avilable ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனியாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி இருந்தால், அந்தப் பள்ளியில்தான் பெண்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. சில எதிர்பாராத, இன்றியமையாத காரணங்களிருந்தால், அங்கு பள்ளிக் கல்வி அதிகாரிகளுடைய அனுமதியைப் பெற்று, பெண்களைச் சேர்க்கலாம். நாகப்பட்டிணத்தைப் பொறுத்த வரையில், அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் போதுமான இடமில்லாத காரணத்தால், 9-வது, 10-வது வகுப்புகளில், பெண்களை ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டிணம் தேசிய உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் 8-வது, 9-வது வகுப்பில் பயின்ற தேசிய மாணவிகளை மட்டும், 9-வது, 10-வது வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளலாம். வழங்கப்பட்ட இந்த அனுமதி 1972-73 முதல், நாகப்பட்டிணம் நகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளியில் புதிய இடம் ஏற்பாடு செய்யும்வரை பயன்படுமென்ற முறையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, வளரும் சமுதாயத்திலே ஆண்களும் பெண்களும் சமம் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கும்போது, பெண்களுக்கென்று தனியாகவும், ஆண்களுக்கென்று தனியாகவும் பள்ளிகளை ஆரம்பிப்பது என்ன நீதி? அதை மறு பரிசீலனை செய்ய அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்களையும், பெண்களையும் ஒன்றாகச் சேர்த்து, பள்ளிகளை நடத்துவதிலே எங்களுக்கு ஒருவித கஷ்டமுமில்லை. ஆனால் பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரிகள் வேண்டும், தனியாகப் பள்ளிகள் வேண்டுமென்று கோருகிறவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். ஆகவே, பெண்களுக்கென்று தனியாகப் பள்ளிகள் வைத்தால்தான் சேர்க்க முடியுமென்று சொல்கிறார்கள். அப்படித் தனியாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இல்லாத காரணத்தினாலே, படிப்பை நிறுத்திவிட்டு வீட்டிலே நிறுத்திவிடுகிறார்களென்கிற குறைபாடுகளும் நிரம்ப வருகின்றன. ஆகவே, எங்கெங்கே பெண்கள் உயர்நிலைப் பள்ளி தனியாக இல்லையோ, அங்கெல்லாம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பெண்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு, அங்கே சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பெண்களுக்கென்று தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடத்தில், ஒரேயொரு கல்லூரி இருக்கிற இடத்தில், அங்கேயே பெண்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதைத்தான் அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. இதைப் பற்றிப் பல்கலைக் கழகங்கள் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகம் ஓரளவுக்கு இதுபற்றி முடிவு செய்திருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் இனி முடிவு செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. ஒரே பள்ளி அல்லது ஒரே கல்லூரி இருக்கிற இடத்தில் இரு சாராரும் சேர்ந்து படிப்பதற்கு ஆட்சேபணையில்லை. பெண்கள் பள்ளியும் வைத்துக்கொண்டு, ஆண்கள் பள்ளியில் இரண்டு சாராரும் சேர்ந்து படிக்கலாமென்கிற நேரத்தில், போதுமான பெண்கள் இல்லாத காரணத்தால், அந்தப் பள்ளியை மூட வேண்டிய நிலை ஏற்படுவதால்தான், இந்தச் சட்டத்தை வற்புறுத்த வேண்டிய நிலையிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில ஊர்களிலே ஆண்கள் கல்லூரியிலே, பள்ளிகளிலே இட நெருக்கடி அதிகமாகவும், பெண்கள் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே இடம் இருக்கக்கூடிய நிலையும் இருந்து வருகிறது. அப்படிப்பட்ட இடங்களில், பெண்கள் கல்லூரியிலே மாணவர்கள் சேர்ந்து படிப்பதில் ஏதாவது தவறு உண்டா என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும். ஆண்கள் பள்ளியில் அல்லது கல்லூரியில் பெண்கள் சேர்ந்து படிக்கலாமென்று இருக்கும்போது, ஏன் அந்த

முறையை அங்கேயும் பின்பற்றக்கூடாது? அதில் எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. அதையும் அரசு ஆராயுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்களுக்கு அப்படியெல்லாம் இடம் தரக்கூடாதென்பதை நன்றாக உணர்வார். என்ன தவறு ஏற்படுமென்று கேட்கிறார். என்னென்ன தவறுகள் ஏற்படுமென்று மாண்புமிகு உறுப்பினர் உணர்வார்கள். பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துத்தான் ஆண்கள் பள்ளியில் சேர்க்கமுடியும். ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்க்கும்போதானாலும் சரி, அல்லது கல்லூரிகளில் பெண்களைச் சேர்க்கும்போதானாலும் சரி, குறைந்தது 2 பெண் ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அவர்களுக்குத் தனியாகத் தங்கும் அறை இருக்க வேண்டும். அவர்களுடைய வசதிக்கேற்றாற்போல் தனித்தனியாக அமைப்புகள் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றப்பட்டால்தான், பெண்கள் சேர்த்துக்கொள்ளப் படலாமென்ற நியதி இருக்கிறது. பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டிய சமுதாயமாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு ஆண்கள்தான் பாதுகாப்புத் தரவேண்டுமேயொழிய, பெண்களிடம் போய் ஆண்கள் பாதுகாப்பு கேட்பது சரியாகாது.

**திரு. எம். ஆறுமுகசாமி:** தலைவரவர்களே, நாகப்பட்டினம் நகரத்திலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு, தொலைவிலேயிருந்து பெண்கள் வரவேண்டிய சங்கடமிருப்பதாலே, நாகப்பட்டினத்தைப் பொறுத்த வரையிலாவது, அந்தப் பெண்களை எல்லாப் பள்ளிகளிலும் சேர்த்துக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சில எதிர்பாராத நெருக்கடிகள், இடையூறுகள் ஏற்படும்பட்சத்தில் கல்வி அதிகாரிகள் அனுமதி பெற்று, பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாமென்று விதியிருக்கிறது. இப்போது அந்த வகையில் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலை நீடிக்கும் படிக்கத் தொலைவுக்குப் போக வேண்டிய காரணமிருப்பதால், கல்வி அதிகாரிகளே அதற்கு அனுமதியளிக்கலாம்.





**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவரவர்களே, அந்த ஊரில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் இடமில்லையென்ற காரணத்தினால், 9-வது, 10-வது, 11-வது வகுப்புகளில் மாத்திரம் பெண்களைச் சேர்த்துக்கொள்ள அரசு அனுமதி அளித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அப்படியிருப்பின், அந்தப் பெண்களைக் கீழ் வகுப்புகளில் சேர்த்துக்கொண்டு, 9-வது, 10-வது, 11-வது போன்ற உயர் வகுப்புகளில் அவர்களைச் சேர்க்காதபடி அரசு பார்த்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். கீழ் வகுப்புகளில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிப்பதில் எந்தவிதமான தவறுமில்லை. கல்லூரிகளில் படிப்பதிலும் தவறில்லை. 9-வது, 10-வது, 11-வது வகுப்புகளில், "adolescent age" -ல் ஆண்களுடன், பெண்கள் சேர்ந்து படிக்காதபடி அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இடவசதியைப் பொறுத்து அந்த முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொன்னமாதிரி, தொலைவிலேயிருந்து வருகிறவர்கள், உள்ளூரிலேயே ஆண்களும், பெண்களும் படிக்கிற உயர்நிலைப்பள்ளி இருந்தால், அண்மையிலுள்ள அந்தப் பள்ளிக்குப் போய்விட்டு வருவதுதான் நல்லதென்று கருதுவார்கள். 1½ மைலுக்கு அப்பால் போவது என்கிற நிலைமை வருகிறபோதுதான், அதிகாரிகள் தனிச் சலுகைகள் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எப்படியிருந்தாலும் இந்த ஊரைப் பொறுத்த வரையிலும், அந்தப் பெற்றோர்களுடைய, மாணவிகளுடைய கோரிக்கையைப் பொறுத்து கல்வி அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள்.

### *Refixation of Salaries to Graduate Assistants.*

*101 *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether the Second Pay Commission has recommended that in the refixation of salaries, no one should get lower emoluments than what the one junior to him gets;

(b) if so, whether this has been followed in determining the dates of next increment of salary in the case of the Graduate Assistants serving in the Government (B) Secondary Schools in the Ramanathapuram district ; and

(c) if not, the reasons therefor ?

**பட்டதாரி ஆசிரியர்களுக்கு சம்பளங்களைத் திருத்தியமைத்தல்.**

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சம்பளங்களைத் திருத்தியமைக்கையில் எவரும், அவருக்கு இளநிலையிலுள்ளவரைக் காட்டிலும் குறைவான சம்பளத்தைப் பெறக் கூடாது என்று இரண்டாவது சம்பள ஆணைக் குழு பரிவுரை செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு (B) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களைக் குறித்து அடுத்த சம்பள உயர்வு தேதிகளை முடிவு செய்வதில் இது பின்பற்றப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, இம்மாதிரி திட்டவட்டமாக அரசு ஆணையிருந்தும்கூட, பல சீனியர் புரஃபசர்ஸ், அசிஸ்டெண்ட் புரஃபசர்ஸ், டீச்சர்ஸ், ஆகியோர் ஜூனியர்கள் வாங்கும் ஊதியத்தை விடக் குறைவாக வாங்குகிறார்களென்பது அரசுக்குத் தெரியுமா ? அந்தமாதிரியானதொரு நிலை இருக்கக் கூடாதென்பதற்காக, அந்தந்த இலாகா தலைவர்களே அந்தப் பாகுபாட்டைத் திட்டவட்டமாகப் போக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட வேறுபாடுகளைப் போக்க வேண்டுமென்பதுதான் எண்ணம். ஆனால் முதலில் ஒரு 'ஆப்ஷன்' கொடுத்தவர்கள்,



அந்த ஆப்ஷனை மாற்றி, வேறொரு 'ஆப்ஷன்' கொடுக்க வந்தார்கள். அதனால்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டது. அப்படியிருந்தாலும்கூட, அதைத் தளர்த்தி, இந்த விதிகளின்படி எந்த அளவுக்கு அவர்களுக்குச் சலுகைகள் சேரவேண்டுமோ, அவைகள் சேர்வதற்கான நடவடிக்கையை எடுக்கும்படியாகக் கல்வித்துறை அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனுடைய சிபாரிசின்படி, சம்பள விகிதங்களை நிர்ணயம் செய்கிறபோது, 500 மாணவர்களுக்கு மேலேயுள்ள ஒரு பள்ளியில் 30 ரூபாய் என்றும், 500 மாணவர்களுக்குக் கீழுள்ள பள்ளிகளில் 20 ரூபாய் என்றும் தலைமை ஆசிரியர்களுக்கு 'ஸ்பெஷல் பே' இருக்கிறது. ஆனால் தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது, 'சீனியாரிட்டி'படி நியமனம் செய்யப்படாததால், சில ஜூனியர் தலைமை ஆசிரியர்கள் 500 மாணவர்களுக்கு மேலுள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாகவும், சி சீனியர் தலைமை ஆசிரியர்கள் 500 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாகவும் இருக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு இந்தப் பதவி உயர்வு வரும் பதவிகளுக்கெல்லாம் 'ஸ்டிரிக்ட் சீனியாரிட்டி'-ஐக் கடைப்பிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** துணைக் கேள்விகள் எல்லாம் சாதாரணமாக சுருக்கமாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடமில்லை. தனிக் கேள்வி போட்டால், அறிந்து கூற முடியும். ஏற்கெனவே உள்ள தன்மையை நீக்கி, அவர்களுடைய சீனியாரிட்டியை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக்கொண்டு. அது குறித்த தக்க நடவடிக்கைகளை எடுக்க பள்ளிக் கல்வி இயக்குநரும், கல்வித் துறைச் செயலாளரும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி? கொஞ்சம் உயரமாகக் கையைத் தூக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுக்குத் திருத்தியமைக்கப்பட்ட புதிய உத்தரவுப்படி கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஊதிய உயர்வு தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இன்னும் அமுல் படுத்தப்படாமல் உள்ளது. இதுவரையில் அமுல் படுத்தப்படாமலிருப்பதற்கான காரணத்தையும், அதை விரைவிலே அமுல்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பது பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்கள் தெரிவிக்கலாம்.

### *Music Teachers*

* 102 Q.— THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether English in E.S.L.C. is insisted on, in the case of E.S.L.C. passed T.T.C. holders in Music employed as Music Teachers in local body institutions ; and

(b) if so, whether there is any proposal to relax such insistence and treat E.S.L.C. with Tamil as qualified for such posts ?

### இசை ஆசிரியர்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உள்ளாட்சி நிறுவனங்களில் இசை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்று இசையாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஈ.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் ஈ.எஸ்.எல்.சி.யில் ஆங்கிலத்தில் தேறியிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதா ?

(இ) அப்படியெனில், அதைத் தளர்த்தப்பட்டு அத்தகைய பதவிகளுக்கு ஈ.எஸ்.எல்.சி.யில் தமிழில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது என விதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *B.T. Assistants*

* 103. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether in the case of B.T. Assistants in Government Secondary Schools, the total service, irrespective of the different managements served under, is taken into account for purposes of selection to Selection Grade ; and

(b) if not, the reasons therefor ?

### பி.டி. ஆசிரியர்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களைப் பொறுத்தவரை, தேர்வுநிலை தரத்திற்கு அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, அவர்கள் எந்த நிர்வாகங்களின்கீழ் பணி புரிந்தனர் என்பதைக் கருதிப் பாராமல், அவர்கள் பணி புரிந்த மொத்தப் பணிக் காலமும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) அரசுப் பணியில் நுழைந்த நாளும், அந்தந்தப் பணி வகுப்பில் ஒருவர் பெற்றிருக்கும் பணி மூப்பு நிலையுமே விதிகளின் படி பதவி உயர்வுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அரசு அல்லாத பிற பள்ளிகளில் ஆற்றியுள்ள பணிக்காலத்தைக் கணக்கில் எடுத்து, பதவி உயர்வுக்குக் கவனிப்பதானால், ஏற்கெனவே அரசுப் பணியில் உள்ளவர்களின் உரிமைகளைப் பறிப்பதாக முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலேயுள்ள ஆசிரியர்களுக்கு அவர்கள் அரசுப் பள்ளியிலே ஆற்றிய அவர்களுடைய ஆண்டுக் கணக்கை எடுத்து அதற்குமேல் அவர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுக்கிறார்கள். ஆனால் அரசுப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளிலே எவ்வளவு ஆண்டுக் காலம் ஊழியம் செய்திருந்தாலும்கூட, அதைக் கணக்கெடுப்பதிலே வேறுபட்ட நிலைமைகள் இருக்கின்றன. அதுமாதிரி இருக்கிற நிலைமையை மாற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதையும், ஒரு இடத்தில் அதுமாதிரி இருக்கிற பொழுது இன்னொரு இடத்தில் ஏன் கொடுக்கக் கூடாது என்று அரசு நினைக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் ஏற்கெனவே உள்ள விதியின்படி, அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்கள், அவ்வாறு அல்லாதவர்களுடைய பணி ஆண்டுக் காலத்தைக் கொண்டு வந்து சேர்த்தால், தங்களுக்கும் மேலே அவர்களைப் பதவியில் சேர்த்து விடுகிறார்களே என்கிறார்கள். விதி முழுவதையும் மாற்றினால்தான் முடியும். அதையும் ஆராய்ந்து வேண்டுமானால் அரசாங்கம் முடிவெடுக்கலாம். ஆனால் அதைப்பற்றி விவரக் குறிப்பு இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அரசாங்கப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், ஜில்லா போர்டு நிறுவனங்களில் இருந்து வந்த ஆசிரியர்களுக்கும் இந்த செலக்ஷன் கிரேடு தருவதிலே பாகுபாடு இருக்கிறதென்று அவர்கள் முறை கூறினார்களே, அது குறித்து அரசு என்ன முடிவு செய்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும் பாகுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஏதாவது சில பாகுபாடுகள் இருந்தாலும், அவைபற்றி ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. அதுபற்றி முழுக் குறிப்பு என்னிடம் இல்லை. பாகுபாடு ஏதும் இல்லாது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.



THIRU G. SWAMINATHAN : Sir, as a sort of clarification, I want to know from the Hon. Minister whether parity will be maintained between the teachers in the Government Schools and Private Schools in the matter of selection to Selection Grade. In the case of teachers working in private schools, their period of service in Government Schools is taken into consideration, while in the case of teachers working in Government Schools, the number of years they had served in private schools is not taken into consideration. I want to know whether parity will be maintained between these two classes of teachers.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிக்கும் அரசுப் பள்ளிக்கும் இடையே நீண்ட பல காலமாகவே வேறுபாடுகள் இருந்து வந்திருக்கின்றன. ஆனால் அரசுப் பள்ளிகளிலே பணியாற்றுபவர்களுக்கு இருந்த அவ்வளவு உரிமைகள், வசதி வாய்ப்புகள் தனியார் பள்ளிகளில் பணியாற்றுபவர்களுக்கு பல ஆண்டுக் காலமாகத் தரப்படவில்லை. இப்போது மெல்ல மெல்ல இரண்டையும் ஒன்றுபடுத்துகின்ற விரைவான முயற்சிகளை எடுத்து அந்த வசதிவாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இருக்கிறது. எல்லா வகையிலும் இரண்டும் ஒன்றாக ஆக்கப்படுகின்ற சூழ்நிலையில் வேண்டுமானாலும் அந்த வாய்ப்பு வசதி நிலைமைகள் வரக்கூடும். இந்த விதியை எந்த அளவுக்கு மறுபரிசீலனை செய்யலாம் என்பது பற்றி யோசிக்கலாம். அரசும் ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகளைத் தடுக்கின்ற முயற்சியில்தான் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 'ஏ' விங் என்று சொல்லப்படுகின்ற பள்ளிகளிலே பணியாற்றுகின்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு 33 சதம் செலக்ஷன் கிரேடும், 'பி' விங் என்று சொல்லப்படுகின்ற பள்ளிகளிலே பணியாற்றுகின்ற பள்ளியாசிரியர்களுக்கு 15 சதம் செலக்ஷன் கிரேடும், முனிசிபல், எய்டட் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு 10 சதம் செலக்ஷன் கிரேடும் அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லா பட்டதாரி ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் இந்த 33 சதம் செலக்ஷன் கிரேட் வழங்குவதற்கு அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 பிப்ரவரி 26

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே எடுத்துச் சொன்னபடி, அரசுத் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பல சலுகைகள் இருக்கின்றன. அவ்வளவு சலுகைகள் கழகப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றுபவர்களுக்கு இல்லை. அந்தச் சலுகைகளை மெல்லப் புகுத்துவதற்கான முயற்சிகளில் தான் ஈடுபட்டு வருகிறோம். அதைச் செயல்படுத்துவதை இரு சாராரும் ஒத்துக்கொள்ள வேண்டும். 'ஏ' விங், 'பி' விங் என்று இரண்டு துறைகள் வேண்டாம். அவரவர்கள் அந்தந்தத் துறையிலே ஒரே விங்கில் இருக்கலாம். அவரவர்கள் எப்போது சேர்ந்தார்களோ அதிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால் ஒத்துவரமாட்டேன் என்கிறார்கள். சிலர் தங்களுக்குக் கிட்டிய உயர்விலிருந்து கீழே போக வேண்டுமே என்ற காரணத்தால் ஒத்துவரமாட்டேன் என்கிறார்கள். ஆகவே இந்த இரு படிகளை ஒன்றாக்கி வேறுபாடில்லாத நிலைமையை உண்டு பண்ண வேண்டுமென்றுதான் நாம் முயற்சி செய்து வருகின்றோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அரசுப் பள்ளிகளுக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்களுக்கு வயது வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா அல்லது எந்த வயதிலும் எடுத்துக்கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி வயது வரம்பு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, செலக்ஷன் கிரேடு கொடுக்கிறபோது அரசினர் பள்ளியில் உள்ளவர்களுக்கு 33 என்று இருந்தாலும்கூட, தலைமையாசிரியர்கள், பி.டி.ஓக்கள் மற்றவர்களையெல்லாம் விலக்கிவிட்டு உண்மையிலேயே 5 சதம்தான் இப்போது 'ஓர்க் அவுட்' ஆகிறது என்கிறார்கள். மற்றத் துறையிலே உள்ளவர்களுக்கு 10, 15 சதம் கொடுக்கப்படுகிறது. 10, 15 சதம் என்றில்லாமல் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு 10 சதம் என்று ஒரு ஆணையைப் பிறப்பித்து இந்த நிலையை மாற்ற அரசு முன்வருமா?



1973 பிப்ரவரி 26]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியமாதிரி, எல்லா நிலைமையையும் பார்த்து, வேறுபாடுகளைக் களைந்து, நியாயத்தின் அடிப்படையில் ஒரு நல்ல முறையை உருவாக்க வேண்டுமென்பது தான் நமது கொள்கையாகும். 10, 15, 25 சதவிகிதம் என்று இருப்பதை ஒருவிதமான நியதி, நியாயம் கிடைக்கிற அளவுக்கு மாற்றியமைப்பது பற்றி யோசிப்பதிலே கஷ்டம் இருக்காது. இரண்டையும் ஒன்றுபடுத்தும்போது, இரு சாராரும் ஒத்துவர வேண்டும். ஒருவருக்குச் சாதகமாக அமையும்போது, மற்றவருக்குப் பாதகமாக அமைகிறது. கூடுமானவரை ஒரேவிதமான சூழ்நிலை ஏற்படுமானால் நல்லது. பள்ளிகளில் ஆசிரியர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஒரே முறை அமைய வேண்டுமென்கிற அந்த நிலையை அடையத்தான் நாம் முயற்சிகள் செய்து கொண்டு வருகிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்ட பிரச்சினை, தனியார் பள்ளியாசிரியர்களுக்கு அதனாலே அசௌகரியங்கள் இருந்தன. இப்போதுள்ள செலக்ஷன் கிரேடிலே அரசாங்கப் பள்ளிகளிலே இருப்பவர்களுக்கு ஆதாயம் கிடைத்திருக்கிறது. அரசாங்கத் துறையில் மேல் நிலையில் இருப்பவர்க்கு 7 ஆண்டுகளில் செலக்ஷன் கிரேடு கிடைப்பது தனியார் துறையில் இருப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் கழித்தும்கூட வராத நிலைமை இருக்கிறது. இப்படி ஒன்றுக்கொன்று தாறுமாறாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரை, பல்வேறு பள்ளிகள் இருக்கின்ற காரணத்தாலே அவற்றிலுள்ள ஆசிரியர்கள், மூப்புப் பணி அடிப்படையிலே மாறுதல் பெற்றுக்கொள்ள முடியும். தனியார் பள்ளியிலே ஒருவர் நுழைந்தால், 35 ஆண்டுக் காலம் அந்தந்த இடத்திலேயே அந்தப் பள்ளியிலேதான் இருப்பார். கிட்டத்தட்ட 40 வயதில் தலைமையாசிரியராக வந்து 60 வயது வருகிற வரையில் அவர்தான் தலைமையாசிரியராக இருப்பார். அந்த இடத்தை வேறு யாரும் எட்டிப்பிடிக்க முடியாது. அரசுப் பள்ளிகளிலே அல்லது கழக உயர்நிலைப் பள்ளிகளிலே தலைமையாசிரியர் பதவியில் காலி இடம் ஏற்படுகின்றபோது, பணி மூப்பின் அடிப்படையிலே, அந்த இடத்திற்குரியவர்கள் அந்த இடத்திற்கு மாறுதல் செய்யப்

படுவர். ஆகவேதான் தனியார் பள்ளியில் 20, 25 ஆண்டுகள் தலைமையாசிரியருக்கு அடுத்தவராக, அஸிஸ்டெண்டாக இருக்க முடியுமே தவிர, தலைமையாசிரியர் பதவிக்கு வரவே இயலாது. இப்படிப்பட்ட இடர்பாடுகள் ஏற்படுகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட வேறுபாடுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

திரு. சி. வி. ராஜகோபால்: மாணவர்களாலும், ஆசிரியர்களாலும், கல்லூரி மாணவர்களாலும், உயர்நிலைப் பள்ளிகளாலும், கிளர்ச்சிகள் அதிகமாக நடத்துவது தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பள்ளிகளிலா அல்லது சர்க்கார் நடத்துகின்ற பள்ளிகளிலா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கை அல்லது பாலிசி நோட் வரும்போது, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம். அரசினர் பள்ளிகளிலும் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற பள்ளிகளிலும் அதிகமாக இருக்கின்றது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த 'ஏ' விங், 'பி' விங், எய்டட் பள்ளி என்பதில் எல்லாம் செலக்ஷன் கிரேடு வழங்குவதில் ஆசிரியர்களிடையே ஒற்றுமை வரவேண்டு மென்ற பிரச்சினை இதில் எழவில்லை. செலக்ஷன் கிரேடு எய்டட் பள்ளியிலே சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும், பி.டி. படித்தவர்களுக்கும் இல்லாமல், டிஸ்டிரிக்ட் போர்டிலே இருக்கக் கூடியவர்களுக்கு, கொடுக்கக்கூடிய ஒரு முறை இருக்கிறது. ஆகலால் ஊழிய கால அடிப்படையில் அதைச் செய்ய வேண்டு மென்று இரண்டு பிரிவினரும் ஒத்துவர வேண்டுமென்ற ஒரு நிலையே எழாமல் இருக்கின்றது. செலக்ஷன் கிரேடு ஊழிய கால அடிப்படையில் கல்வியமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்களா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இரண்டையும் ஒன்றுபடுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைதான் இது. இது குறித்து நான் சொல்லவில்லை. இதைப் பொறுத்த வரையில், ஊழிய கால அடிப்படையில் செலக்ஷன் கிரேடு கொடுப்பது என்று வைத்து, சில பேருக்கு 6 ஆண்டுக் காலத்தில் கிடைக்கும்



என்று சொல்லியும், அவர்களுக்கு 12 ஆண்டுக் காலத்திற்குப் பிறகும் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்பதற்காக அதை ஆராய்ந்து தக்க வழி வகுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Orders of the Chief Educational Officer, Madras*

* 104. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware that the orders of the Chief Educational Officer—*Vide* Rc. No. 8337/A2/71, dated 30th November 1971 of Chief Educational Officer, Madras-15 are contrary to G.O. Ms. No. 1105, dated 25th July 1969 of the Director of Collegiate Education ; and

(b) if so, the reasons therefor ?

### சென்னை தலைமைக் கல்வி அதிகாரியின் ஆணைகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை-15, தலைமைக் கல்வி அதிகாரி அலுவலகத்தின் 30—11—1971 நாளிட்ட ஆர். சி. 8337/ஏ 2/71 ஆம் எண்ணில் கண்டுள்ள தலைமைக் கல்வி அதிகாரியின் ஆணைகள், கல்லூரிக் கல்வி இயக்குநரின் 25—7—1969 நாளிட்ட 1105 ஆம் எண் அரசாணைக்கு முரணாக உள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) குறிப்பிட்டுள்ள அரசு ஆணைக்கும், சென்னை முதன்மை கல்வி அலுவலரின் ஆணைக்கும் முரண்பாடு எதுவுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### Khadi Industrial Estates

*113. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether Khadi Industrial Estates have been opened in this State ; and

(b) if so, the details thereof ?

### கதர் தொழிற்பேட்டைகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் கதர் தொழிற்பேட்டைகள் தொடங்கப் பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1969-70 ஆம் ஆண்டில், திருப்பூர், பெருமாநல்லூர், சூலூர், இடையன்வலசு ஆகிய நான்கு இடங்களில் ஒவ்வொன் றிலும் ஒன்றாக நான்கு கதர்த் தொழிற் பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

### Entertainments Tax

*105. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any proposal to levy entertainments tax on an *ad hoc* or percentage basis ; and

(b) if so, the details regarding the same ?

### கேளிக்கை வரி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனி அடிப்படையில் அல்லது சதவீத அடிப்படையில் கேளிக்கை வரி விதிக்கும் செயற்குறிப்புள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?



THE HON. THIRU P. U. SHANMUGAM : (a) Yes.

(b) The question is under consideration and it is too early to give any details about the proposal.

THIRU G. SWAMINATHAN : Sir, I want to know the reason for the proposal to change the existing system into another system on an *ad hoc* basis. Is it due to evasion or due to harassment ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : It is due to evasion, Sir.

THIRU A. R. DAMODARAN : Is there any proposal for the Government themselves to print cinema tickets and distribute them to the cinema theatres, so that evasion of entertainments tax could be cut down to a certain extent ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, this is one of the suggestions which are being considered.

THIRU G. SWAMINATHAN : Are the Government considering the levy of entertainments tax on the basis of the seating capacity in the theatres, and is it only for permanent theatres or for all theatres ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, this is also one of the suggestions being considered.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள தியேட்டர், டூரிங் சினிமா உரிமையாளர்கள் ஒன்று கூடி, அந்த மாநாட்டில் பாண்டிச்சேரி மாநிலத்தில் போன்று ஏ. பி. சி, வகுப்புப் பிரகாரம் சினிமா கொட்டகைகளில் இந்தக் கேளிக்கை வரி வசூலிப்பது என்றும், அரசாங்கத்திற்கு முறையாகப் பணம் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் வற்புறுத்தப்பட்டது. அந்த முறைப்படி இந்த அரசாங்கம் கேளிக்கை வரிகளை, பஸ்களுக்குப் போடுவது போல், வாரத்திற்கு ஒரு முறை அல்லது மாதத்திற்கு ஒரு முறை அந்தக் கொட்டகையாளர்களிடம் வசூலிக்கிற முறையைப் பின்பற்றுமா என்று அறிய விரும்புகிறேன். 4-20 பி

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கேளிக்கை வரி வாரத்திற்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை சினிமா கொட்டகை அதிபர்களிடம் வசூலிப்பதற்கேற்ப, அவர்கள் முன்பணம் கட்டி டிக்கட்டுகளை சீல் போட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் சீல் போட்ட டிக்கட்டுகளைக் கொடுக்கிறார்களா, இல்லையா என்பதில் தவறுதல் நடக்கிறது என்று அரசுக்குப் புகார் வந்து அதை எப்படி மாற்றியமைப்பது என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். அந்த முறையில், அங்கத்தினர் சொன்னபடி, பல்வேறு யோசனைகளும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தலைவரவர்களே, சீல் போடுவதற்குப் பதிலாக தாங்களே பிரிண்ட் பண்ணி அந்தந்த சினிமா அதிபர்கள் வாங்கிக்கொள்ளும்படியாக உத்தரவு போட இயலுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தமாஷா வரியில் பெரும்பாலான பகுதி நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் செல்கிறது. இதில் நகராட்சிகள் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளுமானால், ஏய்ப்பு பெருவாரியாகத் தடுக்கப்படுமென்று நம்புகிறேன்.

THIRU C. V. RAJAGOPAL : Hon. Chairman, will the Hon. Minister be pleased to state whether several cabaret dances are going on in Madras without the knowledge of the Government ? My submission is that the Hon. Minister also ought to know all these things. May I know whether any entertainments tax is collected in respect of them ?

MR. CHAIRMAN : Has the hon. Member seen any Minister in places where such dances are conducted ? Without seeing them, the hon. Member should not make a charge against any Minister. I am here to take care of their rights also.

THIRU C. V. RAJAGOPAL : My humble submission is that the Hon. Minister ought to know all these things and I am not accusing any of them.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அடிக்கடி அங்கே போவதாகத் தெரிகிறது. அங்கே போகாமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் போவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

*Idol of Sivalingam*

*106. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any stone Sivalingam was unearthed at Mudikondanallur near Cuddalore about 4th October 1972 ; and

(*b*) if so, the details thereof ?

*சிவலிங்கத்தின் உருவச் சிலை*

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் வாக்கில் கடலூருக்கு அருகேயுள்ள முடிகொண்டநல்லூரில் கல்லினாலாகிய சிவலிங்கம் ஏதேனும் தோண்டி எடுக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டம் முடிகண்டநல்லூர் கிராமத்தில் அவ்வூர் கிராம அதிகாரி 28—9—1972 அன்று தன்னுடைய நிலத்தை சமப்படுத்திக் கொண்டிருந்தபோது கல்லினாலான சிவலிங்கத்தின் உருவச் சிலை கண்டெடுக்கப்பட்டது. அது சாதாரண கற்சிலையாகும்.

*Government-run Textile Mills*

*107. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the financial position of the Government-run Textile Mills at Coimbatore for the year 1970–71 ; and

(*b*) the number of workers to whom these mills have provided employment ?

### அரசு நடத்தும் பஞ்சாலைகள்

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூரில் அரசு நடத்தும் பஞ்சாலைகளுக்கு 1970-71 ஆம் ஆண்டில் இருந்த நிதி நிலை யாது?

(இ) இந்தப் பஞ்சாலைகளில் எத்தனை தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 1970-71-ல் தொழில் (வளர்ச்சி, ஒழுங்கு) சட்டத்தின்கீழ் நான்கு ஆலைகள் எடுக்கப்பட்டு அவை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின்கீழ் வேலை செய்தன. அவ்வாண்டில் அந்த ஆலைகள் மொத்தம் ரூ. 13.89 லட்சம் நஷ்டமடைந்தன.

(இ) இவ்வாலைகள் 2,447 நபர்களுக்கு வேலை வாய்ப்பு தந்தன.

### *Physically Handicapped Workers*

*103 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the Government have offered incentives to (i) Physically Handicapped workers and (ii) the employers of these candidates; and

(b) if so, the details thereof?

### உடல் ஊனமுற்றுள்ள பணியாளர்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) உடல் ஊனமுற்றுள்ள பணியாளர்கள், (2) இவர்களைப் பணிக்கு அமர்த்திக்கொண்டுள்ள தொழிலதிபர்கள் ஆகியோர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அரசு அவர்களுக்குச் சலுகைகள் வழங்குகின்றதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) (1) & (2) ஆம்.

(இ) உடலூனமுற்றோர்க்கு அதிக அளவில் வேலைவாய்ப்பளித்திருக்கும் தொழிலதிபர்கள், குருடர், செவிடர், முடவர் ஆகிய உடல் ஊனமுற்றோர், மூளை பாதிக்கப்பட்டவர்கள், தொழுநோயிலிருந்து குணமடைந்தவர்கள் வகையைச் சேர்ந்த திறமைமிக்க பணியாளர்கள் ஆகியோருக்கு மாநில அரசு பரிசுகள் வழங்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கான பரிசில், ஒவ்வொருவருக்கும் ரூ 150 என்ற ரொக்கப் பரிசும், பாராட்டு இதழ் ஒன்றும் அடங்கும். உடலூனமுற்றோர்க்கு வேலைவாய்ப்பளித்த தொழிலதிபர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கும் பரிசில் தகுதிச் சான்றிதழும் அடங்கும்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்த செஞ்சிலுவைச் சங்கம் போன்றவைகளால் ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் தொழிற்பேட்டைகளுக்கு அரசு மானியம் வழங்குகிறதா, அல்லது அதை ஊக்குவிக்க மேலும் திட்டம் வகுத்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, பெரும்பாலான தொழிற்சாலைகளில் வேலை கொடுத்தால் அவர்களை ஊக்குவிக்கக் கூடிய திட்டம் இது.

### *Language (Legislative) Commission*

*109 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) the details of the work done by the Language (Legislative) Commission so far; and

(b) when the work is likely to be completed?

### மொழி (சட்ட மன்ற) ஆணைக்குழு

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மொழி (சட்ட மன்ற) ஆணைக்குழுவால் இதுவரை செய்யப்பட்ட பணியின் விவரங்கள் யாவை?

(இ) அப்பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) மாநில ஆட்சி மொழி (சட்ட) ஆணைக்குழு, சட்டச் சொல் அகராதியைத் தமிழில் தொகுத்துள்ளது. இந்திய அரசியலமைப்பைத் தமிழில் மொழி பெயர்த்து முடித்துவிட்டது.

(இ) இந்த ஆணைக்குழு, தனது பணியை ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் செய்து முடிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எந்தவிதமான மொழி பெயர்ப்புகளைச் செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கச் சட்டங்களை மொழி பெயர்த்து வருகிறார்கள். மத்திய அரசாங்கச் சட்டங்களை அவர்களுடைய ஆலோசனையோடு மொழி பெயர்க்கிறோம். நம் மாநிலச் சட்டங்களை நாமே மொழி பெயர்க் கிறோம்.

## *Cosmetology Course*

* 110 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the (i) placement (ii) employment scope for the candidates passing out of the Cosmetology Course in Women's Polytechnic, Madras have been examined ; and

(*b*) if so, the details thereof ?

## ஒப்பனையியல் (Cosmetology) பயிற்சி

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை, மகளிர் பலதொழில் நுட்பக் கல்லூரியில் ஒப்பனையியல் ( Cosmetology ) பயிற்சியை முடித்துவிட்டு வரும் மாணவிகளை (1) பணியில் அமர்த்துவதற்கும், (2) அவர் களுக்குள்ள வேலைவாய்ப்பு நிலை குறித்தும் ஆய்வு செய்யப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) ஒப்பனையியல் பாடமுறையில் தேறியவர்கள் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள சினிமா ஸ்டுடியோக்களிலும், ஒப்பனையியல் நிலையங்களிலும், அழகுபடுத்தும் நிலையங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படலாம். அம்பத்தூரிலுள்ள அரசு வணிகக் கழகத்தைச் சேர்ந்த " விக் " ( Wig ) தொழிற்சாலையிலும் சிலர் வேலைக்கமர்த்தப்படலாம். பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய மாநகரங்களிலுள்ள அழகுபடுத்தும் நிலையங்கள் சில திறமை வாய்ந்த ஒப்பனையாளர்கள், முடியலங்காரம் செய்பவர்கள் தேவை என்று அடிக்கடி விளம்பரம் செய்கின்றன. எனவே, இவர்களுக்குப் பொதுவாக வேலைவாய்ப்புகள் போதிய அளவு உள்ளன.

THIRU G. SWAMINATHAN : May I know the place where this Institute in which Cosmetology Course is available has been set up, whether the course is intended only for ladies or for men also, and the number of candidates coming out after training every year and the number employed and unemployed ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, என்னைப் பொறுத்த அளவிற்கு. இது வேலைவாய்ப்பு அளிப்பதுதான். அடையாறில் உள்ள பாலிடெக்னிக்கில் இந்த கோர்ஸ் நடத்தப் படுகிறது. வேலைவாய்ப்பைப் பொறுத்த அளவிற்கு இரண்டே இரண்டு பேர்தான் பதிவு செய்திருக்கிறார்கள்.

## *District Magistrate*

* 111 *Q.*—THIRU A. R. RAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to upgrade the post of District Magistrate to the cadre of District Judge , and

**(*b*) if so, the stage at which the matter now stands ?**

## மாவட்ட மாஜிஸ்திரேட்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட மாஜிஸ்திரேட் பதவியை மாவட்ட நீதிபதி தரத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Bogus Rice Cards*

* 112 Q.—Thiru M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether a large number of bogus rice cards have been detected in Madras City in 1970–71 ; and

(*b*) if so, the action taken thereon ?

## போலி அரிசிப் பங்கீட்டு அட்டைகள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970–71-ல் சென்னை மாநகரில் பெருவாரியான போலி அரிசிப் பங்கீட்டு அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(இ) ஆமெனில், அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) அத்தகைய அட்டைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

## *Electricity Arrears*

* 114 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the amount of arrears due to be paid to the Tamil Nadu Electricity Board by various Industrial undertakings in the State from 1967–68 to 1971–72, year-wise ;



(*b*) the names of Industrial undertakings which have to pay the arrears and the amount of arrears ;

(*c*) the action taken by the Government to collect these arrears ;

(*d*) whether these arrears will be collected with interest ; and the rate of interest ?

## மின்சாரக் கட்டண பாக்கி

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு மின்சார வாரியத்துக்கு மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களிடமிருந்து 1967–68 முதல் 1971–72 முடிய வருடவாரியாக, வரவேண்டிய மின்சாரக் கட்டண பாக்கி எவ்வளவு?

(இ) மின் கட்டண பாக்கி தரவேண்டியுள்ள நிறுவனங்கள் எவை? அவை ஒவ்வொன்றும் வருடவாரியாகத் தரவேண்டிய தொகை எவ்வளவு?

(உ) இந்த பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை விவரங்கள் என்ன?

(எ) இந்த நிலுவைத் தொகைகள் வட்டியுடன் வசூலிக்கப் படுமா? வட்டி விகிதம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: விவர அறிக்கை * மன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு மார்ச் முடிய ரூ. 1,32,46,611.80 மின் கட்டண பாக்கிகள் தொழில் நிறுவனங்களிலிருந்து வரவேண்டியிருப்பதாகவும், அதை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ற தலைப்பின் கீழ் சேகரிக்கப்பட்டு வருகிறது எனவும், தற்போது செலுத்தப் பட்டுள்ளது என்ற விபரங்களும் அறிக்கையில் காணப்படுகின்றன. 4-30

* 52-67A ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்டுள்ளது என்றால் முழுத் தொகையும் வரப் பெற்றுள்ளதா, சேகரிக்கப்பட்டு வருகிறது என்றால் என்ன பொருள் என்பதையும் அறிய விரும்புகிறன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, பாக்கி இருப்பது தவணை முறையில், சில மில்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இடத்திலும் எந்தெந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலவற்றிற்கு கோர்ட்டில் வழக்கு போடப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே. இந்த மாதிரி ஆலைகள் பல ஆண்டுகளாகவே பாக்கி வைத்திருக்கின்றன என்பதை அரசு அறியுமா? அதுவும் சில ஆலைகள், பெரிய தொழிலதிபர்களால் நடத்தப்பட்டு நல்ல வருவாய் உள்ளவை, இந்த மின் கட்டண பாக்கியை பெரிய அளவில் வைத்திருக்கின்றன. இந்த மாதிரியாக பாக்கி வைத்திருக்கும் ஆலை அதிபர்கள் எட்டு, பத்து ஆலைகளுக்குச் சேர்ந்தாற்போல் கொடுக்காமல் இருக்கிறார்கள். பணப் பற்றாக்குறை இருக்கும் நேரத்தில், இந்த மாதிரிப் பணம் பாக்கி இருப்பதை மின் வாரியம் கவனிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கவனிக்காமலிருப்பதற்குக் காரணம் ஒன்றுமில்லை. எந்தெந்த முறையில் அரசாங்கத்தின் பாக்கிகளைப் பெற வேண்டுமென்பதற்கு சட்ட விதி முறைகள் இருக்கின்றன. எந்த முறையில் நாம் செல்ல வேண்டுமோ அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில மில்களைப் பொறுத்த வரையில், ஒரு முறை கையாளப்பட்டு வருகிறது. இன்றைய தினம் கோர்ட்டில் வழக்குகள் போடப்பட்டு அவை நடந்துகொண்டிருக்கின்றன. ஒப்புக்கொண்ட பொருளாதார நிலைமைக்கு ஏற்ப, சில மில்கள் செலுத்திக்கொண்டு வருகின்றன. தனிப்பட்ட யாருக்கும் எந்தச் சலுகையும் காட்டப்படவில்லை.





**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவர் அவர்களே, இந்த மின் கட்டண பாக்கிக்காக எடுக்கப்பட்ட கோர்ட் நடவடிக்கையில் ஏதாவது ஒரு மில் தான் கட்டவேண்டிய தொகையில் தனக்குச் சரியாக குறிப்பிட்ட வாட்ஸ் காண்ட் சப்ளை செய்யப்படவில்லை என்று காரணம் கூறி, தள்ளுபடி செய்யக் கோரியது உண்டா? அப்படி ஏதேனும் தள்ளுபடி செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தகவல் எனக்கு இல்லை. அரசாங்கத்திற்குப் பணம் வர வேண்டுமானால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் சரியானபடி நடந்துகொண்டு வருகிறது. மேற்கொண்டு விவரங்கள் தேவைப்பட்டால், குறிப்பிட்டு தனிக் கேள்வி போடலாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, தவணை முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது என்பது விளங்குகிறது. சேகரிக்கப்பட்டு வருகிறது என்றால், அதற்கு என்ன பொருள், என்ன அர்த்தம் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, 'கலெக்டட்' என்பதற்கு சேகரிக்கப்பட்டு வருகிறது என்பதுதான் அர்த்தம்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்த்தால், சில தொழிலதிபர்கள், அதுவும் குறிப்பாக இரண்டொருவர், முப்பது முப்பத்தி ஐந்து லட்சம் அளவுக்கு பாக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொகைகளை மூலதனமாக வைத்து ஒரு தொழில் நடத்த இயலும் போல் தோன்றுகிறது. இந்த மாதிரிச் செய்து வருபவர்களுக்கு ஏதாவது வட்டி போடக்கூடாதா? தவணை தவறினால் வட்டி வசூல் செய்ய ஏற்பாடு இருக்கிறதா? மின்சாரச் சட்டத்தில் அப்படிப் போட இடமில்லை என்றால், அதற்கான திருத்தம் கொண்டுவந்து வட்டி வசூல் செய்ய அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, மின்சாரச் சட்டத்தின்படி, 12 சதம் சர்சார்ஜ் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, வெளியே 24 சதவீத வட்டிக்குக் கூட பணம் கொடுக்க ஆள் இல்லை. 12 சதவீதம் சர்சார்ஜ் மட்டும் போட்டால், ரொம்ப சௌகரியமாகப் போய்விடும். அதையே மூலதனமாக வைத்துக் கொண்டு விடுவார்கள். கடைசியில் வசூலிக்க முடியாத ஒரு நிலைமையை ஏற்பட்டு விடப்போகிறது. அதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, அரசு நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொண்டுள்ள ஆலைகளில், எடுத்துக் கொள்வதற்கு முன்னால் மின் கட்டண பாக்கி இருந்தால், அரசு நிர்வாகத்தில் எடுத்துக் கொண்ட பிறகு, அந்த பாக்கியையும் சேர்த்து அவ்வப்போது உரிய காலத்தில் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் இப்பொழுது இல்லை.

**திரு. எல். பலராமன்:** தலைவர் அவர்களே, இந்த மின் கட்டணம் 1967–68 முதற்கொண்டு பாக்கியில் இருந்து வருகிறது. அது முதற்கொண்டு இன்று 1971–72 வரையில் ஆண்டுதோறும் எவ்வளவு பாக்கி என்று விவரம் தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆண்டுதோறும் பாக்கி ஏற்படக் காரணம் என்ன? வருடந்தோறும் பாக்கியை வசூலிக்காமல் மேலும், மேலும் பாக்கியை உண்டாக்கிக் கொண்டு போவது நல்லதா? இந்த நிலைமையைப் போக்க ஏதாவது சட்டத்தில் விதி இருக்கிறதா? அதை ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டு இறுதியில் எவ்வளவு பாக்கி, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாக்கியைக் கட்டத் தவறினால், உரிய காலத்தில், மூன்று ஆண்டு காலத்திற்குள் வசூல் செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறது. டைம் பார் ஆவதற்கு முன்னால், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல கேஸ்கள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.





**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவர் அவர்களே, 1967–68 ஆம் ஆண்டுக்கு முன்னால் மின் கட்டண பாக்கி உண்டா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, இதை விட அதிகமாக இருக்கலாம். தனிக் கேள்வி போட்டால் சொல்லக் கூடும்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** சேகரிக்கப்பட்டு வருகிறது என்றால் 'அண்டர் புரோகிரஸ் ஆப் கலெக்‌ஷன்' (under progress of collection) என்று அர்த்தம்.

*Pumpsets using Electric Power*

* 115. THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of pumpsets which have consumed power (*i*) below 200 units, (*ii*) above 200 units but below 400 units, and (iii) above 400 units on the average in Tamil Nadu during last year ?

**மின்சாரம் பயன்படுத்திய பம்பு செட்டுகள்**

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாட்டில், சென்ற ஆண்டில் சராசரியாக 200 யூனிட்டுகளுக்குக் கீழும், 200-க்கு மேல் 400 யூனிட்டுகளுக்குக் கீழும், 400 யூனிட்டுகளுக்கு மேலும் மின்சாரம் பயன்படுத்திய பம்புசெட்டுகள் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே,

200 யூனிட்டுகளுக்குக் கீழ்—160,000 பம்புசெட்டுகள்;

200-க்கும் 400-க்கும் இடையில்—335,000;

400 யூனிட்டுகளுக்கு மேல்—145,000.

*Rare Species of wild Animals*

* 116 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) whether there are any rare species of wild animals which are living in the forests of Tamil Nadu alone and not found in the forests of other States; and

(b) if so, the names of such species of wild animals ?

## சிறப்பு விலங்குகள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற நாட்டு வனங்களில் இல்லாமல் தமிழ் நாட்டு வனங்களில் மாத்திரம் வாழும் சிறப்பு விலங்குகள் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அவ்விலங்குகள் எவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) நீலகிரி தார் என்னும் விலங்கு, தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி, ஆனைமலைக் குன்றுப் பகுதிகளிலும் அருகிலுள்ள கேரளத்தைச் சேர்ந்த குன்றுப் பகுதிகளிலும் மட்டுமே காணப்படுகின்ற வன விலங்காகும்.

## Parambu Hills Afforestation Scheme

* 117 Q.—THAVATHIRU KUNDRAKKUDIADIGALAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) the stage at which Parambu Hills Afforestation Scheme stands at present; and

(b) when this will be completed ?

## பறம்புமலைக் காட்டை வளர்க்கும் திட்டம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பறம்பு மலைக் காட்டை வளர்க்கும் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?



(இ) இந்த வேலை எப்போது நிறைவுறும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) 1971–72 ஆம் ஆண்டு பறம்பு மலைப் பகுதியில் ஆறு ஹெக்டேர் பரப்பளவில் காட்டு மரங்களை வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிட்ட பகுதியில் புளி, மா, பலா, மூங்கில், நீலகிரி தைல மரங்கள், முந்திரி மரங்கள் போன்ற மர வகைகள் வளர்க்கப்பட்டன. 1972–73-ல் இரண்டு ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு காட்டு மரங்கள் வளர்க்கப்பட்டன.

(இ) இத் திட்டம் 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவிற்குள் நிறைவுறும்.

## Travel Agents

* 118 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether there is any proposal to license travel agents and also lay down the conditions under which a licence could be granted to them; and

(b) if not, the reason therefor ?

## பயண ஏற்பாட்டு முகவர் நிறுவனங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பயண ஏற்பாட்டு முகவர் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கவும், எந்த நிபந்தனைகளின் கீழ் அவர்களுக்கு உரிமம் வழங்க இயலுமோ அந்த நிபந்தனைகளை வரையறுக்கவும் செயற்குறிப்பு ஏதும் உளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக, அண்மையில் ஒரு வழக்கு ஒரு ஆம்னி பஸ் ஆப்பரேட்டரால் போடப்பட்டு அரசு உடனடியாக நடவடிக்கை

எடுக்க வேண்டும், அது வரையில் தனிப்பட்ட 'டிராவல் ஏஜண்ட்' மூலமாக யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம் என்று உயர் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்டு பல மாதங்களாகி விட்டன. எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் உயர் நீதிமன்றத்தில் ஆம்னி பஸ் சொந்தக்காரர்கள் தொடர்ந்த வழக்கில் கூறியுள்ளபடி, இந்த டிராவல் ஏஜண்டுகளைப் பொறுத்த வரையில், விதிமுறைகள் வகுத்து அவர்களுக்கு லைசென்ஸ் வழங்குகின்ற வரையில் யார் வேண்டுமானாலும் டிராவல் ஏஜண்டுகளாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர். அதற்கான விதிமுறைகள் சீக்கிரத்தில் தயாரிக்கப்படும். அரசு விரைவில் செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*White Revolution Scheme*

* 119 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether it is a fact that a White Revolution Scheme is being worked out to be introduced as a Pilot Measure in Thanjavur district; and

(b) if so, the salient features of the Scheme ?

"வெள்ளைப் புரட்சித் திட்டம்"

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாகச் செயலுக்குக் கொண்டு வரப்படுவதற்காக "வெள்ளைப் புரட்சித் திட்டம்" ( White Revolution ) ஒன்று வகுக்கப்பட்டு வருகிறதென்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அத் திட்டத்தின் முக்கிய கூறுகள் யாவை?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அண்மையில் நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் தஞ்சாவூரில் பேசுகிற போது, வெள்ளைப் புரட்சித் திட்டம் விரைவில் வரவிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதே மாதிரி, குடும்ப நலத் திட்டத்தின் இறுதி விழாவில் மாயவரத்தில் பேசுகிறபோதும், அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருத்து தெரிவிக்கின்றார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு பூராவும் வெண்மைப் புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்று தான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் நாடு டெய்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் அமைத்த பிறகு, சில மாவட்டங்களை உள்ளடக்கி இது செய்யப்பட்டிருக்கிறது. முதலில் இந்தத் திட்டம் தமிழ் நாடு பூராவும் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கார்ப்பரேஷன் ஆரம்பித்த பிறகு, சென்னை நகரத்திற்கு வருகின்ற பாலும் உற்பத்தியாகின்ற பாலும் 90 சதவீதம் கார்ப்பரேஷன் அமைந்துள்ள பகுதியிலேயே இருப்பதால், முதலில் வெண்மைப் புரட்சித் திட்டத்தை இந்த மாவட்டங்களில் நிறைவேற்றி விட்டு, பிறகு இதர மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் பருத்தி சாகுபடித் திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறார். பருத்தியும் வெண்மையாக இருப்பதால், அதுவும் இந்த வெண்மைப் புரட்சித் திட்டத்தில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: பதில் இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, வெளுத்தது எல்லாம் பால் என்று சொல்லிவிட முடியாது.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, வெண்மைப் புரட்சிக்கு அதிகம் விளம்பரம் இல்லாமல் இருக்கிறதே. பசுமைப்

புரட்சித் திட்டம்போல் இதற்கும் தக்க விளம்பரம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் போன்றவர்கள் தங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக நல்லபடி விளம்பரம் தேடித் தரலாமென்று கருதுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, வெண்மைப் புரட்சித் திட்டத்தின் அடிப்படையில் வெண் பன்றி இறைச்சி சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். தஞ்சாவூரில் இந்த வெண் பன்றி இறைச்சியை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கே கிடைக்காத நிலைமை இப்பொழுது இருந்து வருவதை அரசு அறியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வெண் பன்றி இறைச்சி ஏழை மக்களுடைய உணவில் ஏற்படுகின்ற ஊட்டச் சத்து பற்றாக்குறையை நீக்குவதற்கு, பெரிய அளவில் பயன்படுவதாக அந்தத் துறையினர் கூறுகிறார்கள். அதை நிபுணர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை மக்கள் வரவேற்கிறார்கள் என்பதை அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிந்துகொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, வெண்மைப் புரட்சித் திட்டத்தில் எதை, எதை சேர்க்கத் திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கால் நடைத் துறையில் புரதச் சத்து உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று பால் உற்பத்தியைப் பெருக்குவதோடு, வெள்ளாடு இன தர வளர்ச்சியையும் அயல் நாட்டு இனமான வெள்ளைக் கோழியை லட்சக்கணக்கில் வளர்த்து முட்டை உற்பத்தியைப் பெருக்குவதற்கும், அதேபோல் வெண் பன்றி வளர்த்து அதன் இறைச்சியைப் பெருக்குவதற்கும் இன்னும் கால்நடை வகையைச் சேர்ந்த வேறு வகை உணவுப் பொருட்களைப் பெருக்குவதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் இதிலடங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**MR. CHAIRMAN : Questions are over.**

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received the following message, dated 15th February 1973 from the Governor of Tamil Nadu :—

"I have received with great satisfaction your resolution of thanks for the Address with which I opened the present session of the Legislature."

### (2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு. 4·10

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. today, the following programme of business has been decided :—

27th February 1973 (Tuesday)—Condolence Resolution on the demise of Thiru T. K. Shanmugam, M.L.C.

28th February 1973 (Wednesday) to 3rd March 1973 (Saturday)—General discussion on the Budget for the year 1973–74.

4th March 1973 (Sunday)—Holiday.

5th March 1973 (Monday) and 6th March 1973 (Tuesday)—General discussion on the Budget for the year 1973–74.

7th March 1973 (Wednesday)—Reply to the debate on the Budget by the Hon. the Chief Minister.

The Council will meet at 11 a.m. on 27th February 1973 and from 4 p.m. to 7 p.m. on other days.

## 3. 1973–74ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

> " இடுக்கண் வருங்கால் நகுக—அதனை
> அடுத்தூர்வ தஃதொப்ப தில் "

என்ற குறள் மொழிக்கொப்பத் தடைக்கற்களைக் கடந்து, நாட்டு வளம்—மக்கள் நலம்—இவையே நம் குறிக்கோள் எனப் பயணம் நடத்தியவாறு சமதர்ம மணங்கமழ் சமுதாயத்தை அமைத்திட அண்ணா வழியில் அயராது பணி புரியும் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை மேலவையின் சார்பில் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் அன்பு ஆதரவை என்றும்போல் இன்றும் வேண்டி நிற்கிறேன்.

1972–73ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும், 1973–74ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும்* இவண் வழங்கிட விழைகிறேன்.

2. உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவைகள் ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு. அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, படிப்படியாக—ஆனால் உறுதியாக சமதர்மக் கொள்கைகளை

*68–200ஆம் பக்கங்களில் சட்டப் பேரவையில் முதலமைச்சர் ஆற்றிய உரை இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நடைமுறைப்படுத்தி வருகிறோம். அறிவிக்கப்பட்ட சமதர்மத் திட்டங்கள்—சட்டங்கள் எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், மேலும் நாம் மேற்கொள்ள இருக்கிற அடுத்த கட்ட சமதர்மத் திட்டங்களையும் இந்த நிதிநிலை அறிக்கை கோடிட்டுக் காட்டுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தனியுடைமைகளைத் தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் இளைக்க வைக்கப்படுகிறது என்றாலும், தேசிய உடைமையாக்கப்பட்ட அந்தத் தனியார் உடைமைகள், தரித்திர நாராயணர்களாய்த் திரியும் வசதியற்ற லட்சோபலட்சம் அடித்தளத்து மக்களை வாழவைக்கப் போதுமானவைகளல்ல என்பதை மறந்திடலாகாது. வேலை வாய்ப்புகளின் வாயிலாக, வறுமையை வெளியேற்றுவதின் வாயிலாக அனைவரையும் வாழ வைக்கலாம்—வசதிகளைத் தரலாம் என்பது இன்பமான நம்பிக்கைதான் எனினும், அந்த நம்பிக்கை விளிம்பை அடைய இடையில் உள்ள தொலைவை எண்ணிப் பார்த்து அதற்குள்ளாகக் காலம் கடத்தாமல், ஏழை எளியோர்க்கு, இரப்போர்க்கு, குடிசை வாழ்வோர்க்கு, குருடாகிவிட்டோர்க்கு, வீட்டு மனை இல்லாதோர்க்கு, விவசாயத் தொழிலாளர்க்கு, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம். அவர்தம் வாழ்த்துக்களை, ஊக்கமாகக் கொண்டு தொடர்ந்து தொண்டாற்றுகிறோம்.

4. இந்த முதல் உதவி மட்டும் போதாது—முழுமையானதும் நிலையானதுமான உதவி சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்தே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்தத் திட்டங்கள் பற்றிய கண்ணோட்டமும், அவைகளை மாநில அரசுகள் நிறைவேற்றிட இன்றுள்ள மத்திய-மாநில தொடர்புகள் எவ்வாறெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

அதற்கு முன்பு, நமது மாநில வரவு-செலவுகளை முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானது.

## 1973-74 வரவு-செலவுத் திட்டம்.

5. 1972–73ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் மிகுதி 1·80 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. திருத்த மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் வரவு 441·04 கோடி ரூபாயாகவும், செலவு 439·24 கோடி ரூபாயாகவும் இருக்கும். மன்றத்தில் வைக்கப்படும் 1973–74ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்படி, வருவாய்க் கணக்கில் வரவு 465·56 கோடி ரூபாயாக இருக்குமென்றும், செலவு 465·07 கோடி ரூபாயாக இருக்குமென்றும், வருவாய்க் கணக்கில் மிகுதி 49 இலட்சம் ரூபாயாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

6. 1973–74ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு 465·07 கோடி ரூபாயாகும். இதில் 41·47 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு. திட்டச் செலவு என்பது மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே என்பதைச் சுட்டிக்காட்டவே இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொதுக் கல்விக்கான திட்டச் செலவு 11·78 கோடி ரூபாய் அளவில் அமைந்துள்ளது என நாம் குறிப்பிடும் பொழுது, கல்வி குறித்த நமது மொத்த நிதி ஒதுக்கீடு 97·23 கோடி ரூபாய் என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

7. அவைமுன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளில் 1973–74ஆம் ஆண்டிலாகும் மூலதனச் செலவு 37·97 கோடி ரூபாய், மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை 53·07 கோடி ரூபாய், இதர கடன்களும், முன்பணங்களும் 11·50 கோடி ரூபாய் ஆகியவைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.



## நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

8. 1973–74ஆம் ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேகம், 1973–74ஆம் ஆண்டின் நம் வளர்ச்சிப் பணிகளின் வேகத்தை அடித்தளமாகக் கொள்ளும். எனவே, 1973–74-ல் அதற்கென ஒதுக்கப்படும் நிதியளவு தனிச் சிறப்பைப் பெறுகிறது. 1969–70-ல் 87·45 கோடி ரூபாய் அளவுக்கும், 1970–71-ல் 97·50 கோடி ரூபாய் அளவுக்கும், 1971–72-ல் 114·07 கோடி ரூபாய் அளவுக்குமாக படிப்படியாக நம் வளர்ச்சித் திட்டங்களின் வேகத்தை உயர்த்தியுள்ளோம். ஐந்தாண்டுக் காலத்தில் இம் மாநில வளர்ச்சித் திட்டங்களுக்காக, 575 கோடி ரூபாயாவது செலவிடப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றாண்டுகளிலான திட்டச் செலவு 299 கோடி ரூபாய் ஆகும். எனவே நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாயும் 1973–74-ல் 150 கோடி ரூபாயும் செலவாகும் திட்டங்களைத் தீட்டி அனுப்பினோம்.

9. நமது திட்டங்களின் அளவைக் குறித்தும் நமது பொதுவான நிதிநிலை குறித்தும் மத்திய திட்ட ஆணைக் குழுவுடனும், திட்ட அமைச்சருடனும் சென்ற திங்கள் நான் விவாதம் நடத்தினேன். அதன் விளைவாக திட்டச் செலவு, நடப்பு ஆண்டில் 116 கோடி ரூபாயாகவும், அடுத்த ஆண்டு 120 கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் நமது மாநிலத்தின் திட்டத்தேவைகளை மனதில் கொண்டு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து நடப்பாண்டு திட்டத்திற்கு 120·27 கோடி

ரூபாயும், அடுத்தாண்டுத் திட்டத்திற்கு 126·44 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மாநில அரசு எடுத்த இத் துணை முயற்சிகளுக்கும் பிறகு நான்காவது ஐந்தாண்டு திட்ட நிதி ஒதுக்கீடு 546 கோடி ரூபாயாகத்தான் இருக்கும். இது, திட்ட ஆணைக்குழு முதலில் அறிவித்த தொகையாகிய 519 கோடி ரூபாயை விட ஓரளவு கூடுதலாக இருக்கிறதெனினும், நாம் முடிவாகக் கேட்ட 575 கோடி ரூபாயை விட குறைவு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

## திட்ட நிதி உதவி.

**10.** இதற்குக் காரணம் நான்காவது திட்டக் காலத் திற்கு மத்திய அரசு நமக்கு அளிக்க இருந்த 250 கோடி ரூபாய்க்குப் பதிலாக 202 கோடி ரூபாயாக குறைத்து அளித்ததுதான். மாநிலங்களுக்கு மத்திய அரசு திட்ட நிதி உதவி அளிப்பதில், தமிழ் நாட்டின் பங்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10·8 சத விகிதமாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7·4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4·7 சத விகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப் போக்கைத்தான் காட்டுகிறது.

இந்திய நாட்டின் மக்கள் தொகையில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 7·5 சத விகிதம் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் ஐந்தாண்டு திட்டத்திலாவது பழைய நிலை தொடராமல் நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைத் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக வற்புறுத்திக் கூறுகிறேன்.



## நிதி ஆணைக் குழு.

**11.** மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதி ஆணைக்குழுவே தலையாய இடம் பெற வேண்டும். இத்தகைய ஏற்பாடே நிதி ஆதாரங்களைப் பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்தளிப் பதில், நியாயமாகவும், உறுதியாகவும் செயல்பட ஏற்பு டையதாகும். முந்தைய நிதி ஆணைக்குழு அடிப்படை யாகக் கொண்ட பல குறியீடுகள் அனுபவ ரீதியில் ஒத்து வராத தன்மையை நிதி ஆணைக்குழுவுக்கு நமது அரசு சுட்டிக்காட்டியுள்ளதோடு, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது. மாநிலங்களின் திட்டப் பணிகளின் தேவை, திட்டத்தின் பாற்படாத ஏனைய பணிகளின் தேவை, இரண்டையும் நிதி ஆணைக் குழுவே ஒருசேர கருதிப் பார்க்கவேண்டும் என்பதும் நமது கருத்தாகும். பின்தங்கிய மாநிலங்களை கணக்கில் எடுத்துக் கொள்வதோடு, பிற மாநிலங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் இந்த அரசு தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிற முறையீடாகும். மாநில அதிகாரப் பட்டிய லில் உள்ள வேளாண்மை, கல்வி, நல்வாழ்வு முதலிய துறைகளிலும் மத்திய அரசு மேல் உரிமை ஏற்கும் பழக்கம் நிற்க வேண்டுமென நாம் கூறியுள்ளோம். இத் துறைகளுக்குச் செலவிடவேண்டிய தொகை முழுதுமே நிதி ஆணைக்குழு வாயிலாக மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு வரிவருவாயைப் பிரித்துக் கொடுப்பதற்கான அடிப்படை விரிவாக்கப்பட வேண்டுமென்றும் வருமானத்தின்மீது விதிக்கப்படுகின்ற கூட்டு நிறுவனவரி (Corporation Tax), மாநிலங்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்கும் வரிவருவாய்த் தொகுதிக்குள் அடங்கவேண்டுமென்றும் ஆயத்தீர்வையில் மாநிலங்கள் பெறுகிற பங்கு 50 சத விகிதமாக உயர்த்தப்பட

வேண்டுமென்றும், இத்தகைய மாற்றங்களின் மூலமே மாநிலங்களின் நிதிநிலை, நிச்சயமற்ற தன்மையிலிருந்து விடுபட முடியுமென்றும், நிதி ஆணைக்குழுவிடம் நமது அரசு எடுத்துக் கூறியிருக்கிறது.

4–50 பி.ப. 12. பல்வேறு துறைகளிலும் விரைந்த முன்னேற்றத்திற்காக நமது அரசு, பணிகளைத் தொடர்ந்து ஆற்றுகிறது எனினும்,—அந்தத் துறைகளில் பெரும்பாலானவை மத்திய அரசின் உதவிகளுக்காகவும், அனுமதிகளுக்காகவும் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதை, நிதிநிலை அறிக்கையை ஊன்றிக் கவனித்தால் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய இடர்ப்பாடுகளைக் களைந்து தயக்கமின்றித் தகைசால் திட்டங்களை நிறைவேற்றத்தான் மாநில அரசுகள் முழுமையான சுயாட்சித் தன்மையுடன் விளங்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். மத்தியிலும்,—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல், மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலேயே நிலைபெறவும் வலுப் பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். இந்தக் கருத்து வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு, மாநில அளவில் தன்னாலியன்ற சோஷலிசத் திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருவதையும், அண்மையில் பேருந்துகள் தேசிய உடைமையாக்கப்படும் சட்டம் நிறைவேற்றப்பட்டதையும் நாட்டு மக்கள் நன்கறிவர். தமிழ்ச் சமுதாயம் மகிழத்தக்க வேறு சில அறிவிப்புக்களையும் இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாக நான் நாட்டுக்கு வழங்குகிறேன்.

### (1) உணவு தானிய மொத்த வாணிபம்.

உணவு தானிய மொத்த வாணிபம் பற்றி குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்பாக பிப்ரவரி 24-ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற, முதலமைச்சர்கள் மாநாட்டில் வருவாய்த் துறை அமைச்சர் கலந்துகொண்டுள்ளார். அதில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், நமது மாநிலச் சூழ்நிலைக்கேற்ப, இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு நடத்துவது பற்றி ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.



### (2) தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவு.

தொழிற் சட்டங்கள் குறித்த பல்வேறு பிரச்னைகளில் அறிவுரை தேவையாயிருந்து, அதற்கான செலவு செய்ய தனிப்பட்ட தொழிலாளர் பலருக்கும் சிறு தொழிற்சங்கங்களுக்கும் இயலாத நிலை உள்ளது. இவர்களது பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்து, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது மட்டுமன்றி, என்னென்ன ஆதாரங்களுடன் எந்த அமைப்பை அணுகவேண்டும் என்பது பற்றியும், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கு, அவர்களது பிரச்சினைகளில் சட்ட ஆலோசனை கூறுவதற்காக, தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் வரும் ஆண்டு ஏற்படுத்தப்படும்.

### (3) அரசு அலுவலர்கள்.

மத்தியிலும், மாநிலங்களிலும் உள்ள அரசு அலுவலர்களின் ஊதியம் குறித்து ஒருமித்த கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு கூறியுள்ள கருத்து முக்கியமானது ஆகும். மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய வீதங்களை மாற்றும்போது, மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க

வேண்டுமென்று கூறியுள்ளோம். மாநில அரசுகள் தத்தம் அலுவலர்களது ஊதிய வீதங்களை மத்திய அரசின் ஊதிய வீதங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கத் தேவையான நிதி உதவி அளிக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்கவேண்டுமென வலியுறுத்துகிறேன்.

நடப்பாண்டில் மாநில அரசு ஊழியர்களுக்கு நன்மைகள் பலவற்றை நாம் செய்துள்ளோம். அகவிலைப் படியை உயர்த்துவதற்கு மட்டும் நமக்கு நடப்பாண்டில் 5·5 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. தனி நபர் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தியதாலும் தொடர்பான வேறு சில சலுகைகளை அளித்ததாலும் நமக்கு ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை செலவாகிறது. இவ்வாண்டு வீட்டு வாடகைப்படி சென்னை மாநகரப் பகுதியில் ஊதியத்தில் 12 சத விகித அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டுள்ளது. சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்ற வகையில், 1973–74-ல் சென்னைப் பகுதிக்கு 15 சத விகிதம் வரையும், மற்றப் பகுதிகட்கு தக்கவாறும், வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படும். இதற்கென 1·5 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். தங்கள் ஊதியங்களை மேலும் உயர்த்தும்படி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுக்கும்போது, மாநில அரசின் நிதி நிலைமையைக் கருதிப் பார்க்கும்படி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இருப்பினும், அகவிலைப்படி உயர்வு தேவை என்ற அரசு அலுவலர்களின் முறையீட்டை ஏற்று, அகவிலைப்படியை 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் அலுவலர் அனைவர்க்கும் 10 ரூபாய் அதிகப்படுத்த அரசு முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்வு ஏப்ரல் மாதத்திற்கான ஊதியத்திலிருந்து தொடங்கப்



பெறும். இதற்கு மட்டும் ஆகும் ஆண்டுச் செலவு 6 கோடி ரூபாயாகும். அரசின் நெருக்கடியான நிதி நிலையை முன்னிட்டு இந்த அகவிலைப்படி உயர்வு, ஓராண்டு காலத்திற்கு அலுவலர்களின் வருங்கால வைப்பு நிதியில் (Provident Fund) சேர்க்கப்படும். வழக்கம்போல் இந்த உயர்வு, ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களுக்கும் இதே முறையில் வழங்கப்படும்.

### (4) தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இதுவரை அரசு வழங்கியுள்ள வீட்டு மனைகளில், சுமார் 80,000 மனைகளில் வீடுகள் கட்டப்படாமல் உள்ளன. இவற்றில் விரைந்து வீடுகள் கட்டுவதற்கு உதவும் வகையில் தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டு வசதிக் கழகம் ஒன்றை அரசு அலுவலர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. வங்கிகளிலிருந்தும், ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும், நிதி உதவிபெற்று, பத்தாண்டுக் காலத்தில் இம்மனைகளில் வீடுகள் கட்டி முடிக்க அரசு திட்டமொன்றைத் தீட்டியுள்ளது. முதற்கட்டமாக 1973–74-ல் 10,000 வீடுகள் கட்டப்படுமென்பதைத் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

### (5) புதுக்கோட்டை.

நீண்ட நெடுங்காலமாக புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க வேண்டுமென்ற முறையீட்டை ஏற்று தனி மாவட்டமாக அமைக்கப்படும் என்பதை அந்த வட்டாரத்து மக்களுக்குப் பேருவகையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உருவாக வேண்டிய அந்த

மாவட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய பகுதிகள் பற்றியும், அதன் காரணமாக எழும் பிரச்னைகள் பற்றியும் ஆராய்ந்து பரிந்துரை செய்யும் அறிக்கையினைத் தயாரித்து அரசுக்கு அளிக்க வருவாய்த் துறை வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

(6) பக்கிங்ஹாம் கால்வாய்ச் சீரமைப்பு.

கூவம் சீரமைப்புத் திட்டப் பணி நிறைவெய்தியதை அனைவரும் அறிவர். அடுத்து, நமது மாநிலத்தில் 100 மைல் நீளம் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயினை 33 அடி அகலமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் ஆக்கி, அந்த நீண்ட கால்வாயைப் போக்குவரத்துக்கேற்ற வகையில் எழிலுற மாற்றிட வேண்டுமெனவும் நாம் திட்டமிட்டுள்ளோம். இத் திட்டத்தினை 1973–74ஆம் ஆண்டிலேயே தொடங்கி விடுகிறோம். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்துள்ளோம்.

(7) தனியார் மின் நிறுவனங்கள்.

தனியார் துறையில் மின் வழங்கும் நிறுவனங்களில் 1967-ல் அரசு எடுத்துக்கொண்டது போக, எஞ்சியுள்ள ஏழு தனியார் மின் வழங்கு நிறுவனங்களான, (1) கும்பகோணம் எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன்; (2) நாகப்பட்டினம் எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன்; (3) வேலூர் எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன் ; (4) சவுத் மெட்ராஸ் எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன்; (5) திருநெல்வேலி-தூத்துக்குடி எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன் ; (6) சேலம்-ஈரோடு எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன் ; (7) செங்கோட்டை எலெக்டிரிக் சப்ளைக் கார்ப்பரேஷன் ஆகியவற்றை நாட்டுடைமையாக்கும் சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(8) அலுமினியம் தொழிற்சாலை.

அலுமினியம் கனிப்பொருள் தமிழகத்தில் கிடைக்கிறது. அதைக் கொண்டு மேட்டூரில் நடைபெறும் மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்கு (MALCO) அரசுப் பொறுப்பிலுள்ள தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) நிறுவனத்தின் மூலம் 115 இலட்சம் ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் அலுமினியம் ஏராளமான சிறிய, பெரிய தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகப் பயன்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் கனிப் பொருளை பொது மக்களுடைய நன்மைக்காக முறைப்படி பயன்படுத்தவும், உற்பத்திப் பொருளைச் சீராகத் தொழில் வளர்ச்சிக்கு வழங்கிடவும், அலுமினியத் தொழில் நாட்டு மக்களுக்கு அதிகப் பயன் கிடைக்க வழி செய்யவும், மேட்டூரில் உள்ள அலுமினியத் தொழிற்சாலையை நாட்டுடைமையாக்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. முதற்கட்டமாக இதன் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்வதற்கான சட்டம் மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்று இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

(9) நிலச் சீர்திருத்தம்.

உழுபவர்களுக்கு நிலம் உரிமையாக்கப்பட வேண்டும் என்பது நமது கொள்கை. இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் பல்வேறு நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நில உடைமையாளர்களின் கீழ் பன்னெடுங்காலமாக உழுது பயிரிட்டுவரும் குத்தகைக்காரர்களின் பாதுகாப்புக்காகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குத்தகைக்கு உழுது பாடுபட்டுவரும் உழவர்களுக்குத் தாங்கள் உழும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து விலைக்கு வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ள உரிமை தரும் சட்டம் கொண்டு வருவது என்று அரசு முடிவு செய்துள்ளது. ஏழை சிறு நில உடைமையாளர்

களுக்குப் பாதகம் ஏற்படாத வண்ணம் இதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். என்பதை பூரிப்புப் பொங்கிட அறிவிக்கிறேன். இதற்காக ஏழை விவசாயக் குத்தகைதாரர்களுக்குத் தேவைப்படும் நிதி உதவி அளிக்க குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் ஒன்று அமைக்கப்படும்.

13. சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்பதை மறவாது இந்த ஆறு ஆண்டுகளில் சொல்லிய வண்ணம் பல சாதனைகளைப் புரிந்து சமதர்ம ஒளிபரவிடும் புத்தம் புதிய சமுதாயத்தைப் படைத்திட சூளுரை மேற்கொண்டுள்ளோம். அதற்குச் சான்று பகருகின்ற அறிவிப்புக்களைத்தான் இன்று இந்த அவையின் கண் வழங்கியிருக்கிறேன். இது போன்ற எண்ணங்களுக்கு, ஆண்டு அனுபவித்த ஆதிக்க புரியினரிடமிருந்து வரும் கடுமையான எதிர்ப்புக்களை இன்முகத்தோடு புறங்கண்டு, இத்திட்டங்களையும் சட்டங்களையும் ஆதரிப்பர் என எதிர்பார்க்கும் இடங்களிலிருந்தும் நாம் வியப்படையும் வண்ணம் விரோதக் கணைகள் கிளம்புவதையும் வேதனையுடன் சமாளித்தவாறு நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆயினும், நமக்கு நம்பிக்கையும் ஆறுதலும் வழங்குகின்ற வகையில்

"செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ்த் தங்கும் உலகு"

என்ற பொய்யாமொழி அமைந்துள்ளதை மட்டும் சுட்டிக் காட்டி, இந்த நிதிநிலை அறிக்கையை மன்றத்தின் முன் வைத்து என் கடமையை நிறைவேற்றுகிறேன். வணக்கம்.

**Mr. CHAIRMAN**: The House will now adjourn and meet again at 11-00 a.m., tomorrow. The House then adjourned.





## 4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutary Rules and Orders.

36. Notification issued with G.O. Ms. No. 2712, Agriculture, dated the 23rd October 1972 in regard to regulation of trade in ragi and sugar-cane jaggery in Chingleput district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

37. Notification issued with G.O. Ms. No. 2714, Agriculture, dated the 23rd October 1972 in regard to regulation of trade in tapioca in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

38. Notification issued with G.O. Ms. No. 2503, Rural Development and Local Administration, dated the 1st December 1972, in regard to the extension of the term of office of the Members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd December 1972. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

39. Notification issued with G.O. Ms. No. 3202, Home, dated the 16th December 1972, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

40. Notification issued with G.O. Ms. No. 3011, Home, dated the 28th November 1972, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

41. Notification issued with G.O. Ms. No. 3515, Revenue, dated the 29th December 1972, in regard to amendments to the Religious Institutions (Custody, Investment and Lending or Borrowing of Moneys) Rules, 1963. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

42. Notification issue with G.O. Ms. No. 2582, Public (Services-A), dated the 25th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of posts of Joint Directors of Rural Development in Tamil Nadu General Service from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

43. Notification issued with G.O. Ms. No. 2583, Public (Services-A), dated the 25th October 1972 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Computors in Tamil Nadu State Transport Department within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

44. Notification issued with G.O. Ms. No. 2912, Health and Family Planning, dated the 15th December 1972, making the Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Rules, 1972. [Laid on the table of the House under section 36 (3) of the Tamil Nadu Homoeopathy System of Medicine and Practitioners of Homoeopathy Act, 1971 (Tamil Nadu Act 5 of 1972).]

B. *Reports, Notifications and Other Papers.*

* 23. Return of Asse's for 7 Members of the Legislative Assembly as on 31st March 1971 and 25 Members of the Legislative Assembly as on 31st March 1972.

£ 24. Memorandum for the Sixth Finance Commission.

25. Notification issued with G.O. Ms. No. 3514, Revenue, dated the 29th December 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed to be executed by Thirumathi N. Janaki Ammal, wife of Thiru P. N. Raman, Principal, Tiruchy Tutorial College, Tiruchirappalli, in favour of the General Secretary, Periakulam Educational District Association for Teachers' Welfare and Educational Advancement, Kodaikanal, Madurai district.

* Laid on the table of the House on 13th February 1973.

£ Sent by post to all M.L.Cs. on 21st February 1973.



26. Notification issue with G.O. Ms. No. 2654, Revenue, dated the 9th October 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of four sale deeds and one gift deed to be executed by the owners of the lands in favour of the Standard Fire Works Educational and Charitable Trust, Sivakasi, Ramanathapuram district.

27. Notification issued with G.O. Ms. No. 3016, Agriculture, dated the 7th December 1972, in regard to an amendment to the Nilgiris Fishing Rules, 1966.

28. Notification issued with G.O. Ms. No. 891, Social Welfare, dated the 30th September 1972, making the Management of Special Homes and Work Houses in the State of Tamil Nadu Rules, 1971.

29. Notification issued with G.O. Ms. No. 3359, Revenue, dated the 13th December 1972, in regard to repeal of the rules issued under the Travancore-Cochin Government Land Assignment Act relating to Kuthagapattom so far as they apply to the transferred territory, namely, the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district.

30. Notification issued with G.O. Ms. No. 2704, Revenue, dated the 13th October 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deeds to be executed in favour of the Thanjavur District Muslim Educational Association Kumbakonam.

31. Notification issued with G.O. Ms. No. 3478, Revenue, dated the 27th December 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act 1899 (Central Act II of 1899) in respect of the mortgage deed to be executed by Bala Mandir (Foundling Hospital), Madras, in favour of the Life Insurance Corporation of India for obtaining a loan for Rs. 2,00,000 (Rupees two lakhs only) from the Life Insurance Corporation of India.

[24–25 ஆம் பக்கங்களில் 114ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க. ]

விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும். | ஆண்டு வாரியாக உள்ள கட்டண நிலுவைகள். (2) | | | | | 2 (a) முதல் 2 (e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| | 1967–68 | 1968–69 | 1969–70 | 1970–71 | 1971–72 | | |
| (1) | (a) | (b) | (c) | (d) | (e) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| தஞ்சாவூர் மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 1 மாடர்ன் அரிசி ஆலை, பொன்னவராயன் கோட்டை, (செயலாளர், பட்டுக்கோட்டை கூட்டுறவு விற்பனைச் சங்கம்). | .. | .. | .. | .. | 12,682·95 | 12,682·95 | சேகரிக்கப்பட்டு வருகிறது. |
| | .. | .. | .. | .. | 12,682·95 | 12,682·95 | |
| தென்னாற்காடு மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 2 சேஷசாயி தொழிற்சாலை, வடலூர் .. | .. | .. | .. | .. | 66,137·50 | 66,137·50 | சேகரிக்கப்பட்டு வருகிறது. |
| | .. | .. | .. | .. | 66,137·50 | 66,137·50 | |
| மேட்டூர் மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 3 சுந்தரம் நூற்பு ஆலை, குமாரபாளையம் .. | 22,396·80 | .. | .. | .. | 22,396·80 | 22,396·80 | வழக்கு, நீதி மன்றத்தில் விசாரணையில் உள் |
| 4 இந்தியா சிமெண்ட், சங்ககிரி .. .. | .. | 91,936·25 | 27,375·45 | .. | .. | 1,19,311·70 | தகராறில் உள்ள உரிமைக் கோரிக்கை, ஒரு பகுதி தொகை செலுத்தப்பட்டது. |
| 5 சென்னை அலுமினியம் கம்பெனி .. .. | .. | .. | .. | .. | 1,56,243·30 | 1,56,243·30 | தவணை முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| | 22,396·80 | 91,936·25 | 27,375·45 | .. | 1,56,243·30 | 2,97,951·80 | |
| இராமநாதபுரம் மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 6 பயனியர் நூற்பு ஆலை .. .. .. | 58,317·27 | 50,000·00 | 50,000·00 | 50,000·00 | 50,000·00 | 2,58,317·27 | வழக்கு தொடரப்பட்டு, ஒரு பகுதிக்குத் தீர்ப்பாணை வழங்கப்பட்டது. மீதத்தை வசூலிப்பதற்கு மேலும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| 7 சென்னை ரிப்போர்ட்ஸ் .. .. .. | 13,229·56 | 10,862·83 | .. | 4,714·17 | 6,715·33 | 35,521·89 | ஆண்டுக் குறைந்த அளவுக் கட்டணங்களை நீக்கி விடுவதற்கான பயன்துய்ப்போரின் வேண்டுகோள் ஆலோசனை இருந்து வருகிறது. |
| | 71,546·83 | 60,862·83 | 50,000·00 | 54,714·17 | 56,715·33 | 2,93,839·16 | |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும். (1) | ஆண்டு வாரியாக உள்ள கட்டண நிலுவைகள். (2) 1967–68 (a) | 1968–69 (b) | 1969–70 (c) | 1970–71 (d) | 1971–72 (e) | 2 (a) முதல் 2 (e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். (3) | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. (4) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 8 ஸ்தர்ன எண்ணெய் ஆலை .. .. | .. | .. | 6,989·09 | 2,193·04 | 710·10 | 9,892·23 | துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு; தொகை செலுத்துமாறு பயன்துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 9 சண்முகர் ஆலை .. .. .. .. | .. | .. | .. | 15,840·55 | 30,557·67 | 46,398·22 | கதவடைப்பு செய்யப்பட்ட கால அளவுக்கான குறிப்பிட்ட தொகைகளை தள்ளி விடுவதற்கான வேண்டுகோள் ஆய்வில் உள்ளது. |
| 10 சோமசுந்தரம் ஆலை .. .. .. | .. | .. | .. | 43,510·00 | 1,12,103·90 | 1,55,613·90 | தவணை முறைகளில் வசூல் நடந்து வருகிறது. |
| 11 காளீஸ்வரர் ஆலை .. .. .. .. | .. | .. | .. | 18,298·05 | 66,147·15 | 84,445·20 | ஷை |
| 12 ஜானகிராம் ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 23,940·30 | 23,940·30 | 1—4—1972-ல் செலுத்தப்பட்டுள்ளது. |
| 13 இராமமூர்த்தி தொழில்கள் .. .. | .. | .. | .. | .. | 2,271·17 | 2,217·17 | ஆண்டுக்குறைந்த அளவுத் தொகையைச் செலுத்துமாறு மின்சக்தி பயன் துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 14 மத்திய கடல் மீனளத் துறை, மண்டபம் .. | .. | .. | 2,414·10 | .. | .. | 2,414·10 | இக்கட்டணம் மின்சார வரிக் கட்டணத்தைக் குறிக்கிறது. இதனைச் செலுத்துமாறு பயன் துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| | 71,546·83 | 60,862·83 | 59,403·19 | 1,34,555·81 | 2,92,445·62 | 6,18,814·28 | |
| மதுரை மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 15 மீனாட்சி ஆலை, பரவை .. .. .. | .. | .. | .. | 1,247·05 | 1,39,522·45 | 1,40,769·50 | தவணை முறையில் செலுத்தப்பட்டு வருகிறது. |
| 16 மீனாட்சி ஆலை, மதுரை .. .. | .. | .. | .. | .. | 1,72,752·05 | 1,72,752·05 | ஷை |
| 17 விஜயகுமார் ஆலை, பழனி .. .. .. | .. | .. | .. | .. | 1,73,951·85 | 1,73,951·85 | ஷை |
| 18 ராசரத்னா ஆலை .. .. .. .. | .. | .. | .. | 14,700·00 | 53,915·05 | 68,615·05 | ஷை |
| | .. | .. | .. | 15,947·05 | 5,40,141·40 | 5,56,088·45 | |
| மதுரை மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 19 ராசரத்னா தொழில்கள் .. .. .. | .. | .. | .. | .. | 5,810·55 | 5,810·55 | ஒரு பகுதித் தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| 20 மஹாலட்சுமி பஞ்சாலை .. .. .. | .. | .. | .. | .. | 84,791·50 | 84,791·50 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 21 சிவகாமி ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 52,212·50 | 52,212·50 | ஷை |
| 22 விஜயலட்சுமி ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 39,286·00 | 39,286·40 | ஷை |
| 23 தியாகராசர் ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 32,776·75 | 32,776·75 | ஷை |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும். (1) | ஆண்டு வாரியாக உள்ள கட்டண நிலுவைகள். (2) 1967–68 (a) | 1968–69 (b) | 1969–70 (c) | 1970–71 (d) | 1971–72 (e) | 2 (a) முதல் 2 (e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். (3) | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. (4) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 24 ஆனைமலையார் ஆலை | .. | .. | .. | .. | 8,721·35 | 8,721·35 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 25 புவனேஸ்வரி பஞ்சாலை | .. | .. | .. | .. | 4,454·25 | 4,454·25 | ஷை |
| 26 கோதண்டராம் நூற்பு ஆலை | 99,106·48 | 17,003·95 | 14,019·25 | 17,504·45 | 7,498·55 | 1,55,132·68 | துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு நிலுவைத் தொகைக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| 27 ராஜா ஆலை, மதுரை | 5,073·27 | 35,786·55 | 23,970·30 | 24,578·47 | 5,934·05 | 95,342·64 | ஷை |
| 28 பழனி ஸ்ரீ முருகன் பஞ்சாலை | 32,812·82 | 23,954·65 | 10,937·90 | 20,819·52 | 2,552·75 | 91,076·64 | துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு ஆலையானது மூடப்படும் தருவாயில் உள்ளது. |
| 29 பாண்டியர் எண்ணெய் ஆலை | .. | .. | .. | .. | 3,491·65 | 3,491·65 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 30 கே. டி. கே. பருத்தி விதை எடுக்கும் ஆலை, தேனீ. | .. | .. | .. | .. | 2,606·95 | 2,606·95 | ஷை |
| 31 பால்ராஜ் காகிதம்—அட்டை தயாரிப்பு ஆலை. | .. | .. | .. | .. | 1,111·40 | 1,111·40 | ஷை |
| 32 அமராவதி ஸ்ரீ வெங்கடேச காகித ஆலை | .. | .. | .. | .. | 91,612·50 | 91,612·50 | ஷை |
| 33 கந்தசாமி ஆலை | .. | .. | .. | .. | 2,366·15 | 2,366·15 | ஷை |
| 34 தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | .. | .. | .. | 7,112·05 | 7,112·05 | ஷை |
| 35 செட்டிநாடு சிமிட்டி கார்ப்பரேஷன் | .. | .. | .. | .. | 11,719·15 | 11,719·15 | ஷை |
| 36 மாடர்ன் அரிசி ஆலை | .. | .. | .. | .. | 1,360·05 | 1,360·05 | ஷை |
| | 1,36,992·57 | 76,745·15 | 48,927·45 | 78,848·49 | 9,05,569·95 | 12,47,083·61 | |
| செங்கற்பட்டு மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 37 சிதை ஆலை | 13,974·95 | .. | .. | .. | .. | 13,974·95 | துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு, ஏலம் எடுப்போர் இன்மையால் நிறைவேற்றப்படவில்லை. |
| 38 மோக்ரோ கருவிகள் | .. | .. | .. | 25,114·96 | 16,150·74 | 41,265·70 | நிலுவைச் செலுத்துவதன் மூலம் மின்சக்தி இணைப்பு பெறுமாறு பயன் துய்ப்போர் கோரப்பட்டுள்ளார். |
| 39 இராஜேஸ்வரி சர்க்கரை ஆலை | .. | .. | 431·25 | 7,392·70 | 5,772·14 | 5,571·12 | 4-வது கட்டத்தில் கொடுக்கப்பட்ட தொகை பிணையத் தொகையாகிய ரூ 8,024·97-ஈரிக் கட்டியதற்குப் பிறகு உள்ள தொகையாகும். நிலுவையை வசூலிப்பதற்கான சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 13,974·95 | .. | 431·25 | 32,507·66 | 21,922·88 | 60,811·77 | |
| வேலூர் மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 40 ஸ்ரீ பாலாஜி சர்க்கரை ஆலை | .. | .. | .. | .. | 10,800·00 | 10,800·00 | தவணை முறைகளில் வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| | .. | .. | .. | .. | 10,800·00 | 10,800·00 | |

விவர அறிக்கை.

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் ஆலைகள். (1) | ஆண்டு வாரியாக உள்ள கட்டண நிலுவைகள். 1967–68. (a) | 1968–69 (b) | 1969–70 (c) (2) | 1970–71 (d) | 1971–72 (e) | 2(a) முதல் 2(e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். (3) | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. (4) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| தருமபுரி மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 41 லாஸ்கோ எஃகு ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 28,980·45 | 28,980·45 | இத்தொகை தாமதமாகச் செலுத்தப்பட்ட சர் சார்ஜ் கட்டணத்தைச் சேர்ந்ததாகும். இத் தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | .. | .. | .. | .. | 28,980·45 | 28,980·45 | |
| பைகாரா மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 42 கோயம்புத்தூர் நூற்பு-நெசவு ஆலை .. | .. | 3,23,674·85 | 25,674·90 | 2,91,427·10 | 32,545·90 | 6,73,522·75 | நிவாரண நடவடிக்கைகள் — நிலுவைத் தொகைகளை வசூலிப்பது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 43 கம்போடியா ஆலை .. .. .. .. | 2,04,161·75 | 69,750·00 | 58,125·00 | .. | .. | 3,32,036·75 | ஷை |
| 44 சோமசுந்தரம் ஆலை .. .. .. | 22,841·80 | 67,802·25 | 1,70,689·30 | 1,09,142·76 | 82,575·30 | 4,53·051·41 | ஷை |
| 45 காளீஸ்வரர் ஆலை .. .. .. .. | 1,18,297·05 | 88,382·80 | 97,237·36 | 1,05,262·10 | 63,023·00 | 4,72,202·31 | வழக்கு தொடரப்பட்டுள்ளது. |
| பைகாரா மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 46 ஸ்ரீரங்க விலாஸ் ஆலை .. .. .. | 1,30,240·90 | 53,778·25 | 43,619·90 | .. | .. | 2,27,639·05 | நிவாரண நடவடிக்கை. |
| 47 பங்கஜா ஆலை .. .. .. .. | 1,90,045·05 | 78,225·90 | 52,905·05 | 40,744·90 | 21,156·85 | 3,83,107·75 | மூடப்பட்டுள்ளது. உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. |
| 48 சாரதா ஆலை .. .. .. .. | .. | 1,38,222·35 | 2,25,903·05 | 2,61,192·05 | 1,33,769·15 | 7,59,088·60 | துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு. தவணை முறையில் தொகை செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 49 லோட்டஸ் ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 35,171·65 | 35,171·65 | வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 50 ஜனார்த்தன ஆலை .. .. .. .. | 20,489·60 | .. | .. | .. | .. | 20,489·60 | வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 51 ஸ்ரீபழமலை அரங்கநாதர் ஆலை .. .. | 29,961·00 | 23,979·30 | 19,244·90 | 19,244·90 | 16,866·85 | 1,09,296·95 | மூடப்பட்டுள்ளது. உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. |
| 52 கோயம்புத்தூர் முருகர் ஆலை .. .. | .. | 74,390·00 | 70,315·95 | 1,01,074·39 | 10,914·25 | 2,56,694·59 | நிவாரண நடவடிக்கை. |
| 53 சரோஜா ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 19,357·25 | 19,357·25 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 54 ஞானம்பிகை ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 69,696·30 | 69,696·30 | ஷை |
| 55 கோயம்புத்தூர் கமலா ஆலை .. .. | .. | .. | 1,64,756·95 | 3,43,049·20 | 2,300·00 | 5,32,816·15 | ஒரு பகுதித் தொகை செலுத்தப்பட்டுள்ளது. |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் ஆலைகள். (1) | ஆண்டு வாரியாக உள்ள கட்டண நிலுவைகள். 1967-68 (a) | 1968-69 (b) | 1969-70 (c) (2) | 1970-71 (d) | 1971-72 (e) | 2 (a) முதல் 2 (e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். (3) | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. (4) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 56 விஜயலட்சுமி ஆலை | .. | .. | .. | .. | 78,328·65 | 78,328·65 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 57 கத்ரி ஆலை | 22,892·35 | .. | .. | 20,743·25 | 67,359·85 | 1,10,995·45 | ஒரு பகுதி தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| 58 கண்ணபிரான் ஆலை | .. | .. | .. | .. | 91,693·65 | 91,693·65 | ஷை |
| 59 ஸ்ரீ ஹரி ஆலை | .. | .. | .. | .. | 29,918·40 | 29,918·40 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 60 நரசிம்மம் "எ" ஆலை | .. | .. | .. | .. | 35,766·70 | 35,766·70 | |
| 61 கிருஷ்ணவேணி பஞ்சாலை | 65,337·85 | 15,500·70 | 6,174·50 | .. | .. | 87,013·05 | நிவாரண நடவடிக்கை. |
| 62 பிரகாஷ் ஆலை | .. | .. | .. | .. | 48,309·05 | 48,309·05 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 63 பவானி ஆலை | .. | .. | .. | .. | 45,960·55 | 45,960·55 | ஒரு பகுதி தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| 64 ஆனந்தகுமார் ஆலை | .. | .. | .. | .. | 30,641·30 | 30,641·30 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 65 ஓம் பராசக்தி ஆலை | .. | 49,608·25 | 21,616·70 | .. | .. | 71,224·95 | நிவாரண நடவடிக்கை. |
| 66 ஸுதர்ஸன் ஆலை | .. | .. | .. | .. | 36,005·70 | 36,005·70 | ஒரு பகுதி தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| 67 ராதிகா ஆலை | 47,149·00 | 27,692·90 | 26,455·80 | 26,455·80 | 17,637·20 | 1,45,390·70 | மூடப்பட்டுள்ளது. உரிமை கோரப்பட்டு வருகிறது. |
| 68 சற்குண பஞ்சாலை | .. | .. | .. | .. | 21,510·90 | 21,510·90 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 69 பத்மா ஆலை | 1,584·29 | 9,446·65 | 7,620·00 | 1,136·80 | .. | 19,787·74 | இத்தொகையில் பெரும் பகுதி மாதக் குறைந்த கட்டணத்தைச் சேர்ந்ததாகும். இதனை தள்ளி விடுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. |
| 70 நரசிம்மா (பி) ஆலை | .. | .. | .. | .. | 71,510·55 | 71,510·55 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 71 தென் இந்தியா விஸ்கோஸ் | .. | .. | .. | 72,000·00 | 1,03,300·32 | 1,75,300·32 | தானே உற்பத்தி செய்து கொள்வதற்கான வரியை குறிப்பதாகும். மாற்றியமைத்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. |
| 72 ஜி. ஆர். அண்ட் கோ. | .. | .. | .. | .. | 30,570·95 | 30,570·95 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 73 கோபால்ட் பஞ்சாலை | .. | .. | .. | .. | 46,183·50 | 46,183·50 | ஷை |
| 74 சாத்தப்பா பஞ்சாலை | .. | .. | .. | .. | 2,274·75 | 2,274·75 | ஷை |
| 75 தமிழ்நாடு நூற்பு ஆலை | .. | .. | 13,648·10 | 2,351·90 | 9,042·75 | 25,042·45 | தவணை முறையில் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 76 அவிநாசி நூற்பு ஆலை | .. | 6,100·30 | 14,899·50 | 16,399·80 | 16,260·30 | 53,659·90 | கதவடைப்பிலுள்ள ஆலைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. |
| 77 அம்பாள் ஆலை | 15,576·33 | .. | .. | .. | 37,191·83 | 52,768·16 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |

| தொடர் என்னும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் ஆலைகள். | ஆண்டுவாரியாக உள்ள கட்டண நிலுவைகள். | | | | | 2 (a) முதல் 2(e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். | வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| | 1967-68. (a) | 1968-69 (b) | 1969-70 (c) | 1970-71 (d) | 1971-72 (e) | | |
| (1) | | | (2) | | | (3) | (4) |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 78 லட்சுமி நாராயண நூற்பு ஆலை .. .. | .. | .. | .. | .. | 17,773·25 | 17,773·25 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 79 ஸ்ரீ ஸ்ரீராமலிங்க சூடாம்பிகை ஆலை .. | .. | .. | .. | 87,878·85 | 55,212·45 | 1,43,091·30 | பெரும்பகுதி தொகை தற்போது செலுத்தப் பட்டுள்ளது. |
| 80 செல்வ லட்சுமி ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 1,742·85 | 1,742·85 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 81 எம். ஸி. ஷராப் (கலைக்கப்பட்டுவரும் வாசுதேவர் தொழில்களின் குத்தகைதாரர்). | .. | .. | .. | .. | 4,723·95 | 4,723·95 | நிலுவைத் தொகைகள் பிணையத் தொகையில் பின்னர் சரிக்கட்டப்பட்டன. |
| 82 வாசுதேவர் தொழில்கள் (கலைக்கப்பட்டு வருகிறது). | 32,413·29 | .. | .. | .. | .. | 32,413·29 | மூடப்பட்டுள்ளது. அரசுக் கலைப்பு அதிகாரிக்கு கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 83 அஹா வெல்டிங் எலெக்ரோட்ஸ் .. .. | 29,784·35 | 34,135·02 | 28,260·35 | 9,357·44 | .. | 1,01,537·16 | உத்திரவாதத் தொகையை திரும்ப வரையறுப்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. |
| 84 ஈஸ்டர்ன் எலெக்ட்ரிகல்ஸ் .. .. .. | .. | .. | 100·0 | 1,400·00 | .. | 1,500·00 | இத்தொகையில் 50 சதவீதம் வசூலிக்கப்பட்டது. |
| 85 இராமகிருஷ்ண தொழில்கள் .. .. | .. | .. | .. | 5,200·00 | .. | 5,200·00 | தற்போது வசூலிக்கப்பட்டுள்ளது. |
| 86 அர்க்ஸ் பொறியியல் கம்பெனி .. .. | 4,949·17 | .. | .. | .. | .. | 4,949·17 | மூடப்பட்டுள்ளது. கோரிக்கை ஆணை உறுதிப் பத்திரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. |
| 87 அம்பர் பருத்தி ஆலை .. .. .. | 36,602·18 | .. | .. | 4,174·75 | 3,659·90 | 44,436·83 | இந்த நிலுவையில் அனுமதிக்கப்படாத மின் சக்திக் கட்டணமான ரூபாய் 36,602·18-ம் அடங்கும். இதில் ரூபாய் 5,000-ஐ பயன் துய்ப்போர் செலுத்திவிட்டார். பிணையத் தொகையான ரூபாய் 7,100-ம் சரிக்கட்டப் பட்டது. எஞ்சியுள்ள தொகையை செலுத்துமாறு பயன்துய்ப்போர் கேட்கவேண்டும். மின்சக்தி கட்டண நிலுவைகளை பொறுத்த மட்டில் தவணை முறையில் வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 88 கோயம்புத்தூர் வேளாண்மைத் தொழில் .. | 10,626·77 | .. | .. | .. | .. | 10,626·77 | ஆண்டுக்கு குறைந்த கட்டணம் குறைந்ததை இது குறிக்கிறது. |
| 89 கேட்டே ஸ்டோல் .. .. .. .. | .. | .. | .. | .. | 3,400·00 | 3,400·00 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 90 சாரதா எண்ணெய் ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 1,933·30 | 1,933·30 | தற்போது சரிக்கட்டப்பட்டது. பிணையத் தொகையில் சரிக்கட்டப்பட்டுவிட்டது. 8—3—1972-லிருந்து ஆக L.T. மாற்றப்பட்டது. |
| 91 நான்கோ ரப்பர்-பிளாஸ்டிக்ஸ் .. .. | .. | .. | .. | .. | 6,586·30 | 6,586·30 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 92 ராதாகிருஷ்ண எண்ணெய் ஆலை .. .. | .. | .. | .. | .. | 1,535·80 | 1,535·80 | ஷை |
| 93 கோயம்புத்தூர் இன்ஸலேஷன் நாடா .. | .. | .. | - | .. | 1,697·85 | 1,697·85 | ஷை |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் ஆலைகள். (1) | ஆண்டுவாரியாக உள்ள கட்டண நிலுவைகள். (2) 1967-78 (a) | 1968-69 (b) | 1969-70 (c) | 1970-71 (d) | 1971-72 (e) | 2(a) முதல் 2(e) வரையிலுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். (3) | வசூலிக்கப்பட்ட நடவடிக்கை. (4) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 94 ஜகன்னுதா பருத்தி விதை எடுத்தல்—எண்ணெய் ஆலை. | .. | .. | .. | .. | 1,000·00 | 1,000·00 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| | 9,72,952·73 | 10,60,719·52 | 10,47,459·31 | 15,20,235·99 | 14,26,808·75 | 60,28,176·30 | |
| திருச்சிராப்பள்ளி மின்வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 95 கரூர் ஆலை .. .. .. .. | .. | .. | .. | 1,37,283·20 | 77,705·65 | 2,14,988·85 | தவணை முறையில் செலுத்த அனுமதிக்கப்பட்டு உள்ளது. |
| 96 புதுக்கோட்டை பஞ்சாலை .. .. .. | .. | 55,724·10 | 1,13,054·00 | 65,757·70 | 61,173·30 | 2,95,699·60 | மின் சக்தி பயன்படுத்துவர் கட்டண நிலுவையைத் தவணைகளில் செலுத்த அனுமதி அளித்து நீதிமன்றத்திலிருந்து ஆணை பெறப்பட்டுள்ளது. |
| 97 தியாகேசர் ஆலை, மணப்பாறை .. .. | .. | .. | .. | .. | 52,400·00 | 52,400·00 | தற்போது செலுத்தப்பட்டுள்ளது. |
| 98 காவேரி நூற்பு நெசவு ஆலை .. .. | .. | .. | .. | 54,319·60 | 38,780·40 | 93,100·00 | தவணை முறையில் செலுத்த அனுமதிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 99 சேஷசாயி காகித அட்டை தயாரிப்பு நிறுவனம், புகளூர். | .. | .. | .. | .. | 5,548·34 | 5,548·34 | வாரியத்திலிருந்து பெறவேண்டிய தொகையை மின் சக்திக் கட்டணத்திற்காகச் சரிக்கட்டிக் கொள்ளும்படி செய்து கொள்ளப்பட்ட வேண்டுகோள் ஆய்வில் உள்ளது. |
| சென்னை மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 100 அரசினர் அச்சகம் .. .. .. .. | .. | .. | .. | .. | 20·87 | 20·87 | தாமதமாக செலுத்தப்பட்ட சர்சார்ஜ் கட்டணத்தைச் செலுத்துமாறு பயன் துய்ப்போருக்கு ஒறுக்கப்பட்டுள்ளது. |
| 101 கனரக வண்டிகள் தொழிற்சாலை .. .. | 29,487·67 | .. | 2,220·77 | 452·85 | 2,300·70 | 35,321·99 | வரியைச் செலுத்துமாறு பயன் துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 102 பொதுப்பணித் துறை பணிக்காரர் .. .. | .. | .. | .. | .. | 1·40 | 1·40 | தாமதமாகச் செலுத்தப்பட்ட சர்சார்ஜ் கட்டணத்தைச் செலுத்துமாறு பயன் துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 103 இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் .. | .. | .. | .. | .. | 1,130·49 | 1,130·49 | ஷை |
| 104 ஸ்ரீராம் எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை | 21,718·19 | .. | .. | .. | .. | 21,718·19 | வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. |
| 105 தென் இந்திய மாவு ஆலை .. .. .. | .. | .. | .. | .. | 30,770·90 | 30,770·90 | தொகை தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 106 பைலட் பேனு கம்பெனி .. .. .. | .. | .. | .. | .. | 1,426·00 | 1,426·00 | ஷை |
| 107 கே. வி. கோபாலன் .. .. .. | .. | .. | .. | .. | 2,069·75 | 2,069·75 | ஷை |
| 108 சித்ரம் அண்ட் கம்பெனி .. .. .. | .. | .. | .. | .. | 2,528·30 | 2,528·30 | ஷை |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும். | ஆண்டு வாரியாக உள்ள கட்டண | | | நிலுவைகள். | | 2 (a) முதல் 2 (b) வரையி லுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். | வசூலிக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| | 1967–68 (a) | 1968–69 (b) | 1969–70 (c) | 1970–71 (d) | 1971–72 (e) | | |
| (1) | | (2) | | | | (3) | (4) |
| | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | |
| 109 சென்னை எஃகு கண்ணாடி தொழிற்சாலை .. | .. | .. | .. | 9,292·35 | .. | 9,292·35 | குறைந்த அளவு மின் கட்டணம் குறைவது, தள்ளிவிடுவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. |
| 110 சென்னை காகித அட்டை தொழிற்சாலை .. | .. | .. | .. | 6,141·97 | 2,444·40 | 8,586·37 | வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 111 பொரமண்டல் எஃகு .. .. .. | .. | .. | 1,600·00 | 2,144·45 | .. | 3,744·45 | குறைந்துள்ள குறைந்த அளவு மின் கட்டணம் குறித்து கடிதத் தொடர்பு நடந்து வருகிறது. |
| 112 சாராத இயந்திர கார்ப்பரேஷன் .. .. | .. | .. | .. | .. | 950·90 | 950·90 | தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 113 ஜெனித் விளக்கு-எலெக்ட்ரிகல் .. .. | .. | .. | .. | .. | 696·00 | 696·00 | வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |
| 114 ஆர்க் எலக்ட்ரோட்ஸ் இந்தியா .. .. | .. | .. | 1,297·09 | .. | .. | 1,297·09 | மூடப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 115 சக்தி குழாய்கள் .. .. .. .. | .. | .. | .. | 56,556·60 | 1,77,774·00 | 2,34,330·60 | தவணை முறையில் செலுத்த அனுமதியளிக்கப் பட்டுள்ளது. |
| 116 சாந்தா பெயிண்ட்ஸ் .. .. .. | 3,128·60 | .. | 20,884·36 | .. | 10,979·05 | 34,992·00 | குறைந்துள்ள குறைந்த அளவுக் கட்டணம் குறித்து கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. |
| 117 இண்டி இயந்திரக் கருவிகள் .. .. | .. | .. | .. | .. | 3,307·85 | 3,707·85 | தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 118 கெண்ட் செராமிக் டைல்ஸ் கம்பெனி .. | .. | .. | .. | .. | 3,433·80 | 3,433·80 | ஷை |
| 119 பாரத் மாவு ஆலை .. .. .. .. | .. | .. | .. | .. | 1,731·90 | 1,731·90 | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தொகை எதிர்பார்க்கப்படுகிறது. |
| 120 சிவசங்கரா உருளை மாவு ஆலை .. .. | .. | .. | .. | 9,246·40 | .. | 9,246·40 | பிணையத் தொகை ரூபாய் 10,000 உள்ளது. குறைந்துள்ள குறைந்த அளவு காரியக் கட்டணத்தை தள்ளி விடுவது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. |
| 121 யூனிடி போர்ஜிங்ஸ் .. .. .. .. | .. | .. | .. | .. | 3,441·50 | 3,441·60 | தொகை தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 122 சென்னை கேபில்ஸ் .. .. .. .. | .. | .. | .. | .. | 188·75 | 188·75 | தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 123 ஜதர்ன் சுரங்கம், உலோகப் பொறியியல் கம்பெனி. | .. | .. | .. | .. | 3,576·05 | 3,576·05 | தொகை தற்போது பெறப்பட்டுள்ளது. |
| 124 குமுதம் .. .. .. .. .. | .. | .. | .. | .. | 4,536·05 | 4,536·05 | ஷை |
| | 54,694·46 | .. | 26,502·21 | 83,834·62 | 2,53,307·66 | 4,18,338·95 | |

| தொடர் எண்ணும் உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும். (1) | ஆண்டு வாரியாக உள்ள கட்டண | | | நிலுவைகள். | | 2 (a) முதல் 2 (b) வரையி லுள்ள கட்டண நிலுவையின் மொத்தம். | வசூலிக்கப்பட்ட நடவடிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| | 1967-68 (a) | 1968-69 (b) | 1969-70 (c) | 1970-71 (d) | 1971-72 (e) | | |
| (1) | | | (2) | | | (3) | (4) |
| | ரு | ரு | ரு | ரு | ரு | ரு | |
| ஈரோடு மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 125 அம்பிகா தொழிற்பேட்டை, ஈரோடு .. | .. | .. | .. | 3,475·70 | 1,012·00 | 4,487·70 | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. தொகை செலுத்துமாறு பயன் துய்ப்போருக்கு எழுதித் தெரிவிக்கப்பட்டது. தவணை முறையில் தொகை செலுத்த அனுமதிக்கப்பட்டது. |
| 126 தனலட்சுமி எண்ணெய் ஆலை, பவானி .. | .. | .. | .. | 1,896·70 | 16,417·70 | 18,314·40 | தவணை முறையில் தொகை செலுத்த அனுமதிக்கப்பட்டது. |
| 127 தமிழ்நாடு அட்டைகள், காகிதங்கள் தயாரிப்பு ஆலை, புஸ்காறு. | .. | .. | .. | .. | 23,205·45 | 23,205·45 | கட்டணத்தை தள்ளிவிடுமாறு பயன் துய்ப்போரின் வேண்டுகோள் ஆய்வில் உள்ளது. |
| | .. | .. | .. | 5,372·40 | 40,635·15 | 46,007·55 | |
| திருநெல்வேலி மின் வழங்கு நிறுவனம்— | | | | | | | |
| 128 சீதாஞ்சலி ஆலை .. .. .. .. | 6,390·40 | 26,891·40 | 29,919·88 | 27,255·30 | 21,482·68 | 1,11,939·66 | தவணை முறையில் தொகை செலுத்த அனுமதிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 129 தாரங்கதாரா கெமிகல்ஸ் ஒர்க்ஸ் .. | .. | 7,35,269·68 | 9,58,331·86 | 13,08,910·63 | 5,14,537·72 | 35,17,049·89 | நிலுவைத் தொகையை 36 மாதத் தவணையில் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்டு வருகிறது. |
| 130 புஷ்பாஞ்சலி தொழில்கள் .. .. .. | 6,936·15 | 22,845·10 | 30,804·75 | 28,725·45 | 30,788·85 | 1,20,100·30 | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஒரு பகுதி நிலுவைக்கான தீர்ப்பாணை பெறப்பட்டது. எஞ்சியுள்ள தொகையை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 13,326·55 | 7,85,006·18 | 10,19,056·49 | 13,64,891·38 | 5,66,809·25 | 37,49,089·85 | |

## இணைப்பு II.

[..36 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

**தமிழ் நாடு முதல் அமைச்சர், மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள், 1973–74ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சட்ட மன்றப் பேரவைமுன் வைத்து, 1973ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 26ஆம் நாளன்று ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"இடுக்கண் வருங்கால் நகுக—அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்"

என்ற குறள் மொழிக்கொப்பத் தடைக்கற்களைக் கடந்து, நாட்டு வளம்—மக்கள் நலம்—இவையே நம் குறிக்கோள் எனப் பயணம் நடத்தியவாறு சமதர்ம மணங்கமழ் சமுதாயத்தை அமைத்திட அண்ணா வழியில் அயராது பணி புரியும் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை பேரவையின் சார்பில் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் அன்பு ஆதரவை என்றும்போல் இன்றும் வேண்டி நிற்கிறேன்.

1972–73ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளையும், 1973–74ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும் இவண் வழங்கிட விழைகிறேன்.

2. உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவைகள் ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு. அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, படிப்படியாக—ஆனால் உறுதியாக சமதர்மக் கொள்கைகளை



நடைமுறைப்படுத்தி வருகிறோம். அறிவிக்கப்பட்ட சமதர்மத் திட்டங்கள்—சட்டங்கள்; எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், மேலும் நாம் மேற்கொள்ள இருக்கிற அடுத்த கட்ட சமதர்மத் திட்டங்களையும்—இந்த நிதிநிலை அறிக்கை கோடிட்டுக் காட்டுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தனியுடைமைகளைத் தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் இளைக்க வைக்கப்படுகிறது என்றாலும், தேசீய உடைமையாக்கப்பட்ட அந்தத் தனியார் உடைமைகள், தரித்திர நாராயணர்களாய்த் திரியும் வசதியற்ற லட்சோபலட்சம் அடித்தளத்து மக்களை வாழவைக்கப் போதுமானவைகளல்ல என்பதை மறந்திடலாகாது. வேலை வாய்ப்புக்களின் வாயிலாக, வறுமையை வெளியேற்றுவதின் வாயிலாக அனைவரையும் வாழவைக்கலாம்—வசதிகளைத் தரலாம் என்பது இன்பமான நம்பிக்கைதான் எனினும், அந்த நம்பிக்கை விளிம்பை அடைய இடையில் உள்ள தொலைவை எண்ணிப் பார்த்து அதற்குள்ளாகக் காலம் கடத்தாமல், ஏழை எளியோர்க்கு, இரப்போர்க்கு, குடிசை வாழ்வோர்க்கு, குருடாகிவிட்டோர்க்கு, வீட்டு மனை இல்லாதோர்க்கு, விவசாயத் தொழிலாளர்க்கு, நம்மால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறோம். அவர்தம் வாழ்த்துக்களை, ஊக்கமாகக் கொண்டு தொடர்ந்து தொண்டாற்றுகிறோம்.

4. இந்த முதல் உதவி மட்டும் போதாது—முழுமையானதும் நிலையானதுமான உதவி, சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்தே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அந்தத் திட்டங்கள் பற்றிய கண்ணோட்டமும், அவைகளை மாநில அரசுகள் நிறைவேற்றிட இன்றுள்ள மத்திய-மாநில தொடர்புகள் எவ்வாறெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

அதற்கு முன்பு, நமது மாநில வரவு-செலவுகளை முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானது.

### 1973-74 வரவு-செலவுத் திட்டம்.

5. 1972–73ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் மிகுதி 1·80 கோடி ரூபாயாக இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. திருத்த மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் வரவு 441·04 கோடி ரூபாயாகவும், செலவு 439·24 கோடி ரூபாயாகவும் இருக்கும். மன்றத்தில் வைக்கப்படும் 1973–74ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்படி, வருவாய்க் கணக்கில் வரவு 465·56 கோடி ரூபாயாக இருக்குமென்றும், செலவு 465·07 கோடி ரூபாயாக இருக்குமென்றும், வருவாய்க் கணக்கில் மிகுதி 49 இலட்சம் ரூபாயாக இருக்குமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

6. 1973–74ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு 465·07 கோடி ரூபாயாகும். இதில் 41·47 கோடி ரூபாய் திட்ட நிதி ஒதுக்கீடு. திட்டச் செலவு என்பது மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே என்பதைச் சுட்டிக்காட்டவே இந்த விளக்கம் அளிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கல்விக்கான திட்டச் செலவு 11·78 கோடி ரூபாய் அளவில் அமைந்துள்ளது என நாம் குறிப்பிடும் பொழுது, கல்வி குறித்த நமது மொத்த நிதி ஒதுக்கீடு 97·23 கோடி ரூபாய் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

7. அவை முன் வைக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளில் 1973–74ஆம் ஆண்டிலாகும் மூலதனச் செலவு 37·97 கோடி ரூபாய், மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை 53·07 கோடி ரூபாய், இதர கடன்களும், முன்பணங்களும் 11·50 கோடி ரூபாய் ஆகியவைகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது.



### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

8. 1973–74ஆம் ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேகம், 1973–74ஆம் ஆண்டின் நம் வளர்ச்சிப் பணிகளின் வேகத்தை அடித்தளமாகக் கொள்ளும். எனவே, 1973–74-ல் அதற்கென ஒதுக் கப்படும் நிதியளவு தனிச் சிறப்பைப் பெறுகிறது. 1969–70-ல் 87·45 கோடி ரூபாய் அளவுக்கும், 1970–71-ல் 97·50 கோடி ரூபாய் அளவுக்கும், 1971–72-ல் 114·07 கோடி ரூபாய் அளவுக்குமாக படிப்படியாக நம் வளர்ச்சித் திட்டங்களின் வேகத்தை உயர்த்தியுள்ளோம். ஐந்தாண்டுக் காலத்தில் இம் மாநில வளர்ச்சித் திட்டங் களுக்காக, 575 கோடி ரூபாயாவது செலவிடப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றுண்டுகளிலான திட்டச் செலவு 299 கோடி ரூபாய் ஆகும். என்வே நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாயும் 1973–74-ல் 150 கோடி ரூபாயும் செலவாகும் திட்டங்களைத் தீட்டி அனுப்பினேம்.

9. நமது திட்டங்களின் அளவைக் குறித்தும் நமது பொதுவான நிதிநிலை குறித்தும் மத்திய திட்ட ஆணைக் குழுவுடனும், திட்ட அமைச்சருடனும் சென்ற திங்கள் நான் விவாதம் நடத்தினேன். அதன் விளைவாக திட்டச் செலவு, நடப்பு ஆண்டில் 116 கோடி ரூபாயாகவும், அடுத்த ஆண்டு 120 கோடி ரூபாயாகவும் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும் நமது மாநிலத் தின் திட்டத் தேவைகளை மனதில் கொண்டு, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளில் சிக்கனத்தைக் கடைப் பிடித்து நடப்பாண்டு திட்டத்திற்கு 120·27 கோடிக

ரூபாயும், அடுத்தாண்டுத் திட்டத்திற்கு 126·44 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மாநில அரசு எடுத்த இத் துணை முயற்சிகளுக்கும் பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு 546 கோடி ரூபாயாகத்தான் இருக்கும். இது, திட்ட ஆணைக்குழு முதலில் அறிவித்த தொகையாகிய 519 கோடி ரூபாயை விட ஓரளவு கூடுதலாக இருக்கிறதெனினும், நாம் முடிவாகக் கேட்ட 575 கோடி ரூபாயை விட குறைவு என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

### திட்ட நிதி உதவி.

**10.** இதற்குக் காரணம், நான்காவது திட்டக் காலத் திற்கு மத்திய அரசு நமக்கு அளிக்க இருந்த 250 கோடி ரூபாய்க்குப் பதிலாக 202 கோடி ரூபாயாக குறைத்து அளித்ததுதான். மாநிலங்களுக்கு மத்திய அரசு திட்ட நிதி உதவி அளிப்பதில், தமிழ்நாட்டின் பங்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10·8 சத விகிதமாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7·4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4·7 சத விகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப் போக்கைத்தான் காட்டுகிறது.

இந்திய நாட்டின் மக்கள் தொகையில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 7·5 சத விகிதம் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் ஐந்தாண்டு திட்டத்திலாவது பழைய நிலை தொடராமல் நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதைத் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக வற்புறுத்திக் கூறுகிறேன்.



### நிதி ஆணைக்குழு.

**11.** மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதி ஆணைக்குழுவே தலையாய இடம் பெற வேண்டும். இத்தகைய ஏற்பாடே நிதி ஆதாரங்களைப் பல்வேறு மாநிலங்களுக்குப் பிரித்தளிப் பதில், நியாயமாகவும், உறுதியாகவும் செயல்பட ஏற்பு டையதாகும். முந்தைய நிதி ஆணைக்குழு அடிப்படை யாகக் கொண்ட பல குறியீடுகள் அனுபவ ரீதியில் ஒத்து வராத தன்மையை நிதி ஆணைக்குழுவுக்கு நமது அரசு சுட்டிக்காட்டியுள்ளதோடு, அதை மாற்றி அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது. மாநிலங்களின் திட்டப் பணிகளின் தேவை, திட்டத்தின்பாற்படாத ஏனைய பணிகளின் தேவை, இரண்டையும் நிதி ஆணைக் குழுவே ஒருசேர கருதிப் பார்க்கவேண்டும் என்பதும் நமது கருத்தாகும். பின்தங்கிய மாநிலங்களை கணக்கில் எடுத்துக் கொள்வதோடு, பிற மாநிலங்களில் உள்ள பின்தங்கிய பகுதிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் இந்த அரசு தொடர்ந்து எடுத்துக்கூறி வருகிற முறையீடாகும். மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள வேளாண்மை, கல்வி, நல்வாழ்வு முதலிய துறை களிலும் மத்திய அரசு மேல் உரிமை ஏற்கும் பழக்கம் நிற்க வேண்டுமென நாம் கூறியுள்ளோம். இத் துறைகளுக் குச் செலவிட வேண்டிய தொகை முழுதுமே நிதி ஆணைக் குழு வாயிலாக மாநிலங்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாநிலங்களின் கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென் றும், மாநிலங்களுக்கு வரி வருவாயைப் பிரித்துக் கொடுப் பதற்கான அடிப்படை விரிவாக்கப்பட வேண்டுமென்றும், வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற கூட்டு நிறுவனவரி (Corporation Tax), மாநிலங்களுக்குப் பங்கீட்டுக் கொடுக்கும் வரிவருவாய்த் தொகுதிக்குள் அடங்கவேண்டுமென்றும், ஆயத்தீர்வையில் மாநிலங்கள் பெறுகிற பங்கு 50 சத விகிதமாக உயர்த்தப்பட

வேண்டுமென்றும், இத்தகைய மாற்றங்களின் மூலமே மாநிலங்களின் நிதிநிலை, நிச்சயமற்ற தன்மையிலிருந்து விடுபட முடியுமென்றும், நிதி ஆணைக்குழுவிடம் நமது அரசு எடுத்துக் கூறியிருக்கிறது.

### இயற்கையின் கொடுமையும், ஏற்ற நடவடிக்கையும்.

**12.** வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட சீர் குலைவு எவ்வளவு என்பதை நேரில் கண்டு மதிப்பிட்ட மத்திய அரசுக் குழுவினர், தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டியதோடு, சீரமைப்புப் பணி களுக்காக வழங்கிய பரிந்துரை அறிக்கையை மத்திய அரசு ஏற்று 14·25 கோடி ரூபாய் அளித்திட முன் வந்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். இது போன்ற இயற்கையின் கொடுமைகளைத் தணிக்கும் பணிகளை மேற்கொள்ள அந்தந்த மாநிலத் திட்டங்களிலேயே தொகை ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதே என் கருத்து. கடந்த பத்தாண்டுகளில் அந்தந்த மாநிலத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம், வறட்சி ஆகிய அனுபவ அடிப்படையில் எதிர்காலத் தேவைகளை முன்கூட்டியே மதிப்பிட்டு திட்டத்தில் தக்க தொகையினைச் சேர்த்திட வேண்டும். இவ்வாறு செய்தால் எந்த மாநிலத்தில் இது போன்ற துயர் தணிப்புப் பணிகள் தேவைப்படுகிறதோ, அந்த மாநிலம் ஏற்கனவே அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இயலும்.

### வேளாண்மை வளர்ச்சி.

**13.** உணவு தானிய உற்பத்தி 1971–72-ல் 70·45 இலட்சம் டன். 1972–73-ல் அந்த அளவு 72·02 இலட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இயற்கையின் ஒத்துழையாமைக்கிடையிலேயும் வேளாண்மைத்



துறையில் நாம் பெற்றுள்ள இந்த வளர்ச்சி மகிழத்தக்க தாகும். துண்டு நிலங்களையும் விட்டுவிடாமல் அங் கெல்லாம் இயன்ற அளவு பயிரிடும் பொருட்டு, சம்பாப் பருவத்தில் அவசரக் காலத் திட்டம் ஒன்றை இந்த அரசு விரிந்த அளவில் மேற்கொண்டது. அதன் கீழ் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங் களில் 4·82 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல்லும், பல்வேறு மாவட்டங்களில் 4·13 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சிறு தானியங்களும், 6·10 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு வகைகளும் விளைவிக்க முனைந்துள் ளோம். மற்றும் 2 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சூரிய காந்திச் செடி வளர்க்கப்படும்.

மேற்கண்ட முயற்சிகளின் காரணமாக மாநில அரசு தன்னால் இயன்ற அளவுக்கு பயறு போன்ற தானிய வகை களையும், எண்ணெய் வித்துக்களையும் அதிகமாக விளை வித்து அவைகளின் விலையேற்றங்களைக் குறைக்க முடியு மென்று நம்புகிறது. உழவனின் ஊக்கமும் அரசின் ஆர்வமும் ஒன்றிக் கலந்து வேளாண்மை வளர்ச்சிக்கான விரைவுப் பணிகள் நிறைவேறும் இந்த வேளையில், அதனை மேலும் உற்சாகப்படுத்துகின்ற அளவுக்கு உரம் வழங் குதலில் மத்திய அரசின் முழு ஒத்துழைப்பை தமிழ் நாடு எதிர்பார்க்கிறது. 1972–73-ல் நமக்குத் தேவைப்படும் உரம் நைட்ரஜன் கணக்கில் 2·74 இலட்சம் டன். ஆனால் இதுவரை நைட்ரஜன் கணக்கில் 1·30 இலட்சம் டன்னுக்குத்தான் மத்திய அரசின் ஒதுக்கீடு நமக்குக் கிடைத்துள்ளது. மத்திய வேளாண்மை அமைச்சர் அண்மையில் இங்கு வந்திருந்த போது நமது மாநிலத்தின் உணவு தானிய தன்னிறைவுக்கும் அதற்கும் மேலாக ஓரளவு அண்டை மாநிலங்களின் தேவைக்கு வழங்கவும், நம் வேளாண்மையைப் பெருக்கிட மத்திய

அரசு தட்டின்றி உரமும், தாராள நிதி உதவியும் செய்திட வேண்டுமென்று கேட்டுள்ளோம். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நமது வேளாண்மைப் பணிகள் தொடருகின்றன.

1973–74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 22·36 கோடி ரூபாய் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண்மைக்காக மின் இணைப்பு கொடுத்ததில் மின்சார வாரியத்துக்கு ஒரு ஆண்டுக்கு ஏற்படும் இழப்பு 14 கோடி ரூபாயாகும். அதில் பெரும்பகுதியை ஈடு செய்வதற்கு மின்சார வாரியத்துக்கு, 1972–73 திருத்த மதிப்பீட்டில் 1971–72, 1972–73 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக 17·8 கோடி ரூபாயும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·2 கோடி ரூபாயும் உதவித் தொகையாக கொடுக்கப்படுவது, அவை முன் வைத்துள்ள மதிப்பீடுகளில் அடங்கும். வேளாண்மைக்காக அரசு செலவிடும் தொகைகளை கணக்கில் எடுக்கும்பொழுது, பாசனப் பணிகளைப் பேணி வருவதற்காக நாம் செலவு செய்யும் 15·55 கோடி ரூபாயையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். பாசனக் கட்டணமாக நமக்கு கிடைப்பது 3·66 கோடி ரூபாய் மட்டுமேயாகும். புதிய பாசன வேலைகளை மேற்கொள்ளுவதற்காக இவ்வாண்டுக்கு 12·23 கோடி ரூபாயும் மறு ஆண்டுக்கு 12·44 கோடி ரூபாயும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆக, பல்வேறு கணக்குகளில் வேளாண்மையின் வளர்ச்சிக்கென அரசு 55 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்க முன்வந்துள்ளது என்பது தெளிவாகும். இதற்கு மேலாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வேளாண்மைக் கடன் வழங்கி வருகிறோம். நடப்பாண்டில் (1972–73) டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை, நீண்ட காலக் கடனுகவும், நடுத்தரக் காலக் கடனுகவும், குறுகிய காலக் கடனுகவும் 57·27 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். ஆண்டின் எஞ்சிய பகுதியில் மேற்கொண்டும் இவ்வகையில் 40 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும். 1973–74-ல் குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்ட காலக் கடனுக 100 கோடி ரூபாய் அளவுக்கு வழங்கப்படும்.



## கால்நடை வளர்ப்பு.

14. "கால்நடை வளர்ப்பு" என்பதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 4·31 கோடி ரூபாயாக இருந்தது. இது 1972–73 திருத்த மதிப்பீட்டில் 4·89 கோடி ரூபாயாகவும், 1973–74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 5·17 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. 1973–74-ல் 5 மையக் கிராம வட்டாரங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம். தமிழ் நாட்டில் கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்தை 1973–74-ல் 15 இலட்சம் ரூபாய் செலவில் சைதாப்பேட்டை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மேற்கொள்வதெனவும் முடிவு செய்துள்ளோம். மேலும், 1973–74-ல் 25 கால்நடை மருந்தகங்கள் புதிதாக 6 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

## மக்கள் நல்வாழ்வும், மருத்துவப் பணிகளும்.

15. குடும்ப நலத் திட்டம் உட்பட மக்கள் நல்வாழ்வுக்கான மருத்துவப் பணிகள் திட்டத்திற்காக 1972–73-ல் 38·91 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறோம். அடுத்த ஆண்டில் 41·17 கோடி ரூபாய் இதற்கெனச்

செலவிடத் திட்டமிட்டுள்ளோம். 1972-73, 1973-74 ஆகிய இரு ஆண்டுகளில், 61 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மாநில அரசு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

கரூரிலும், வாணியம்பாடியிலும் 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகள், சென்னை அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர்-சிறுர் மருத்துவமனையில் 30 படுக்கைகள், கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள், திருநெல்வேலியில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 147 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவுகளைக் கட்டுதல், 5 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் இதயத் துடிப்பு பதியும் மின் இயந்திரம் அமைத்தல், 10 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் ஊடு கதிர்ப் (X-Ray) பிரிவுகளை ஏற்படுத்தல் ஆகியவை, வரும் ஆண்டில் நிறைவேற்றப்படவிருக்கிற சில புதிய திட்டங்களாகும்.

மேலும் நமது அரசு நாட்டு மருத்துவ முறைக்கும் ஊக்கம் அளிக்கிறது. அரும்பாக்கத்தில் அறிஞர் அண்ணு அரசினர் நாட்டு மருத்துவமனையில் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவ பிரிவு கட்டுதல், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் பத்தில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்குதல் ஆகியவற்றை இத்துறை பற்றிய பணிகளில் முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கண்ணொளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் சூன் திங்கள் முதல் இதுவரையில் சுமார் 35,000 ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு கண் அறுவை சிகிச்சை செய்து இலவசக் கண்ணுடிகள் வழங்கப்பட்டுள்ளன.



தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோய் தீர்க்கும் மருத்துவமனைகள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டுக்குள் மொத்தம் 10 மறுவாழ்வு இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 5,000 தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான பணிகள் தொடங்கிவிடும்.

### கல்வித் துறை.

16. நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி கல்வித் துறைக்கே உரியதாக இருந்து வருகிறது. 1966-67-ல் வருவாய்க் கணக்கில் கல்விக்கு 43·86 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்க, இத் தொகை 1972-73 திருத்த மதிப்பீட்டில் 95.82 கோடி ரூபாயாகவும், 1973-74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 97.23 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. தொடக்கக் கல்விக்கு ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் செலவை அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து கொள்ளும் முறையினை அரசு மாற்றியமைத்துள்ளது உறுப்பினர்கள் அனைவருக்கும் உவகை ஊட்டும். இவ்வகையில், 1971—72 ஆம் ஆண்டில் 32·12 கோடி ரூபாய் மட்டுமே அரசு கொடுத்திருக்க, இத் தொகை 1972—73 திருத்த மதிப்பீட்டில் 35·95 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வேறு துறைகளின் கீழ், அதாவது மருத்துவக் கல்வி, அரிசன நலப் பள்ளிகள், வேளாண்மைக் கல்வி ஆகியவற்றில் கல்விக்காகச் செலவிடும் தொகையையும் சேர்த்துக்கொண்டால், 1973—74-ம் ஆண்டில் மொத்தக் கல்விச் செலவு 108·5 கோடி ரூபாயாகும். வருவாய்க் கணக்கில் கல்விச் செலவின் சத வீதம் 24-க்கு மேல் இருக்கும். 1966—67-ல் நம் மாநிலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை 105-ஆக இருந்து 1972—73-ல் 176-ஆக

உயர்ந்துள்ளது, உயர் கல்வியில் இந்த அரசாங்கம் எடுத்துள்ள உருவான நடவடிக்கைகளுக்குச் சிறந்த சான்ருகும்.

கல்வி பெறுவதற்கு சமுதாயத்தின் அடித்தளத்தி லுள்ள மக்களுக்கும் வாய்ப்புகளை விரிவாக்கும் அதே நேரத்தில், கல்வியின் தரங்கள் தேய்ந்து விடாமல் பராமரித்துப் பாதுகாக்கும் பணி இன்று நம்மை எதிர் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில், பள்ளிகளில் நாம் அளித்துவரும் பயிற்சியின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, பள்ளிப்பாடத் திட்டங்களில் மாறுதல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப் பாக, அறிவியல் பாடங்களில், தொடக்கக் கட்டத்தி லிருந்தே, மாணவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்ருேம். கல்வி பயிற்று விக்கும் ஆசிரியர்களின் தொண்டு சிறக்கும் வகையில், ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் கணிசமாக உயர்த்தப் பட்டுள்ளன. தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் போலவே ஒத்த ஊதிய விகிதங் களும் ஓய்வூதியம் போன்ற சலுகைகளும் அளிக்க முன் வந்துள்ள மாநிலங்களில் தமிழகம் தலையாயது என்பதில் நாம் பெருமை கொள்கிருேம். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்கள் எல்லாக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

கல்விப் பயிற்சிக் கால அளவைப்பற்றி நாட்டிலே பற்பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், பட்டம் பெறுவதற்கு 15 ஆண்டுகள் பயிற்சி அடிப் படையாக அமையவேண்டும் என்ற கருத்துக்கு அனைத்து இந்தியாவிலும் ஒருமித்த ஆதரவு கிட்டியுள்ளது. தமிழ கத்தில் இப்போது வழங்கும் முறைப்படி இப்பதினைந்து



ஆண்டுப் பயிற்சிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கல்லூரி மட்டத்தில் ஓராண்டு புகுமுக வகுப்பு தொடர வேண் டுமா அல்லது அதற்குப் பதிலாக இரண்டு ஆண்டுகள் இடைநிலை வகுப்பை மீண்டும் கொண்டுவர வேண்டுமா, அதைத் தொடர்ந்து பட்ட வகுப்பு இரண்டு ஆண்டு களாக இருக்க வேண்டுமா அல்லது மூன்று ஆண்டுகளாக இருக்க வேண்டுமா என்பன போன்ற பிரச்சினைகளைப் பற்றி கல்வி நிபுணர்களின் வட்டாரங்களில் வெவ்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கல்லூ ரிப் பயிற்சி இப்பொழுது உள்ளதுபோல் நான்கு ஆண்டு களாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமா, அல்லது ஐந்து ஆண்டுகளாக உயர்த்தப்பட வேண்டுமா என்பதில் நாம் ஒரு முடிவு எடுத்த பின்புதான், அதையொட்டி பள்ளிப் பயிற்சி இப்பொழுது உள்ளதுபோல் 11 ஆண்டுகளாக தொடர்ந்து இருக்கலாமா அல்லது 10 ஆண்டுகளாக குறைக்கப்பட வேண்டுமா என்ற முடிவு செய்ய வேண்டி யிருக்கும். கல்லூரிப் படிப்பு கால அளவு குறித்து நம் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் தங்கள் முடிவான கருத்தைத் தெரிவித்த பின்பு, அந்த அடிப் படையில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது.

அயல்நாடுகளில் பயிற்சி பெற்றுப் பணியாற்றிவரும் நம் நாட்டு நிபுணர்கள், தமிழகத்திற்கு ஓராண் டாகிலும் வந்து, அவர்கள் பெற்ற அனுபவத்தை நம் முடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளிக்கும் முறையில் "தமிழ் நாடு உயர்பணி உதவித் தொகைத் திட்டம்" ஒன்று செயல்படுத்தப்படும் என்று சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கை உரையில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அயல் நாடுகளிலுள்ள நம்முடைய நிபுணர்கள் பலருடன தொடர்பு கொண்டுள்ளோம். வரும் ஆணடில

ஒருசிலராவது தமிழகக் கல்லூரிகளிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகின்றேன்.

கல்விக்காக அரசும் சமுதாயமும் செய்து வரும் மூலதனச் செலவையும் ஆர்வமான முயற்சிகளையும், மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வதுதான் அவர்களுடைய எதிர்காலத்திற்கும் நாட்டினுடைய எதிர்காலத்திற்கும் உகந்தது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. அமைதியாகவும் ஆர்வத்துடனும், மாணவர்கள் கல்விப் பயிற்சி பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலையை அமைத்துத் தருவது எதிர்காலத் தலைமுறையினரின் நலனில் அக்கறை கொண்ட அனைவருடைய பொறுப்புமாகும். கல்விக்குச் சிறிதும் தொடர்பில்லாத பல பிரச்சினைகளைக் குறித்து மாணவர்களிடையே பதட்ட நிலையை உருவாக்கும் முயற்சிகள் ஆங்காங்கு மேற்கொள்ளப்படுவதைக் கண்டு நான் மிகுந்த வேதனை கொள்கின்றேன். கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில், அனைவரும் அரசுடன் இதில் ஒத்துழைத்து, மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்வுக்குச் செம்மையான அடித்தளம் அமைத்துக் கொள்ள உத்தரவாதம் வேண்டுமென்று நான் மிகுந்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் நலனைக் காக்கவும், கல்வித் தரம் வளமடையச் செய்யவும், உரிய நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்வதே, அரசின் கொள்கையாக இருக்கும்.

### மின்வசதி.

**17.** தமிழ் நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறன் கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 500 மெகாவாட் அளவு உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் மின் வெட்டின் காரணமாக இந்தியாவில் பல



மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைப் போலவே, நம்முடைய மாநிலமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடிக்கான காரணங்களை மன்றம் நன்கறியும். நீர் மின் நிலையங்களையே நம்பியிராமல், அனல், அணு மின் நிலையங்களை அமைக்கவும், இருப்பவைகளை விரிவுபடுத்தவும் மத்திய அரசிடம் மாநில அரசு பலமுறை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. மின் உற்பத்திக்காக மாநில அரசு வகுத்துள்ள சிறிய திட்டங்களுக்குக் கூட நீண்ட காலமாக மத்திய அரசின் அனுமதிக்குக் காத்திருக்க வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகி விட்டது. தொழில் வளரும் வேகத்திற்கு ஏற்ப அதனை முந்திக்கொண்டு மின் வசதி பெருகியாக வேண்டும். ஆனால், 1983-84-ல் தமிழ் நாட்டில் மின்சாரம் 3,000 மெகாவாட் அளவுக்கு பற்றாக்குறை இருக்கக்கூடும் என்பதைக் கணக்கிட்டு நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம். அதனை அலட்சியப்படுத்தாமல், நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற நெய்வேலி இரண்டாவது சுரங்கம், கல்பாக்கம் அணு மின் நிலைய விரிவாக்கம், தூத்துக்குடியில் அணு மின் நிலையம், மேட்டூரிலும் தூத்துக்குடியிலும் அனல் மின் நிலையங்கள், ஹோகனக்கல் நீர் மின் நிலையம் ஆகியவை செயல்பட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 200 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள காடம்பாறை நீர் மின் வசதித் திட்டத்தை மத்திய அரசின் அனுமதிக்காக 1971-ல் நம் அரசு அனுப்பியது. இதற்கு 1973 பிப்ரவரியில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கிடையே மின்வெட்டினால் எழுந்துள்ள இன்னல்களை விரைந்து பரிசீலித்து விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் நலனில்

அக்கறை கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதோடு, மேலும் தேவைப்படுகிற நடவடிக்கைகளை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதை ஒரு பொதுப் பிரச்சினையாகக் கருதி, கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் அரசுடன் ஒத்துழைத்தால் எழுந்துள்ள சிக்கல்களை எளிதாகத் தீர்ப்பதற்கு இயலும் என்பதையும் வேண்டுகோளாக விடுக்கிறேன்.

### கைத்தறி.

**18.** நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்காக, வருவாய்க் கணக்கில் 1972–73-ல் 1·52 கோடி ரூபாயும், 1973–74-ல் 1·94 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்களுக்காகக் கடன் கணக்கில் கைத்தறித் துணி விற்பனை செய்ததால் ஏற்பட்ட பணத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு வட்டியில்லா வழிவகை முன்பணமாக 1·5 கோடி ரூபாய் அரசு கொடுத்துள்ளது. இந்த உதவியைப் பயன்படுத்தி இவ்வாண்டு தலைமைச் சங்கம் தொடக்கச் சங்கங்களிடமிருந்து 8·10 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய முடிந்தது. 1966–67-ல் 3·25 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளையே கொள்முதல் செய்திருந்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

வேட்டிகள், புடவைகள், துண்டுகள், படுக்கை விரிப்புக்கள், சமுக்காளங்கள் இவற்றினைக் கைத்தறிக்கென்றே ஒதுக்கி வைக்குமாறும், சுலபமாகச் செயற்படுத்தத் தக்க வகையில் இது பற்றிய விதிகளை எளிதாக்குமாறும் மத்திய அரசை நாம் வற்புறுத்தியுள்ளோம். இவ்வகையில் மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்காதது வருந்தத்தக்கது.



மற்றொரு முக்கியமான பிரச்சினை, தறிகளுக்கு நூல் வழங்குவது பற்றியதாகும். கூட்டுறவு அமைப்பின் கீழ்வரும் தறிகளுக்கு கூட்டுறவு நூற்பு ஆலைகள் மூலம் நியாயமான விலையில் நூல் வழங்கி வருகிறோம். அதைப் போல கூட்டுறவு அமைப்புக்கு அப்பாற்பட்ட கைத்தறிகளுக்கும் நியாயமான விலையில் நூல் வழங்க வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கு தமிழகத்திலுள்ள நூற்பாலைகளிடமிருந்து மாநில அரசு மூலம் நூல் வழங்க, தக்க அதிகாரங்களை மாநில அரசுக்குத் தர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுள்ளோம். இதைப்பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலை எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்புடைய தீர்வுகளை எடுத்துக் கூறுவதற்காக, திரு க. சந்தானம் அவர்கள் தலைமையில் வல்லுநர் குழுவொன்றை நியமித்துள்ளோம். கைத்தறித் தொழிலில் தொழிலாளருக்கு ஊதியங்களை நிர்ணயிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதற்காக ஊதிய ஆய்வுக்குழு ஒன்றையும் நியமித்துள்ளோம். இந்த இரண்டு குழுக்களின் அறிக்கைகளைப் பெற்று, அவைகளின் பரிந்துரைகளை ஆய்ந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

### தொழில் வளர்ச்சி.

**19.** உரிமம் கிடைக்கப் பெற்றுள்ள நைலான், சோடியம் ஹைட்ரோ சல்பைட், டயர், பி.சி.டி., போன்ற தொழில்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சிறு தொழில்களுக்காக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) வாயிலாக 3·56 கோடி ரூபாய்க்கு மூலப்பொருள்களும்,

இயந்திரங்கள் வாங்குவதற்கும் தொழிற்கூடங்கள் கட்டுவதற்குமாக 1·80 கோடி ரூபாய்க் கடனும் நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இவை 8·50 கோடி ரூபாயாக உயரும். தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) மூலமாக 6·52 கோடி ரூபாய் மூலதனம் உள்ள தொழில்களுக்கு 1·06 கோடி ரூபாய் அளவுக்குக் கடனும், பங்குத் தொகையுமாக உதவி அளிக்க இந்த அரசு முன் வந்துள்ளது. இவ்விரண்டு நிறுவனங்களும் அண்மையில் இந்த அரசினுல் நிறுவப்பட்டு வெற்றிகரமாக நடந்து வருகின்றன என்பதை மன்றம் நன்கறியும். அரசே நடத்தும் சிறு தொழில்களை நிர்வகிக்கும் தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனத்தின் (TANSI) உற்பத்தி அளவு 1966–67-ல் 4·79 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாருக, மின்சாரப் பற்ருக் குறையுள்ள நடப்பாண்டில் 7 கோடி ரூபாய் அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தாண்டில் இது 9 கோடி ரூபாயாக உயரும்.

மாநில அரசு புதிய பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்து வருகிறது என்ருலும், சேலம் உருக் காலை தவிர தமிழ்நாட்டிலே மத்திய அரசுத் துறைத் தொழில் திட்டம் எதுவுமே நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை எனலாம். 1972–73-ல் இந்தியா முழுவதற்குமாக மத்திய அரசு 686 கோடி ரூபாய் அளவுக்குத் தொழில் துறைகளில் முதலீடு செய்துள்ளதாகத் தெரிகிறது. இதில் 20 கோடி ரூபாய் மட்டுமே, இம் மாநிலத்தில் நடப்பாண்டில் செய்யப்படும் முதலீடு. பாதுகாப்புக்குத் தேவையாகும் பொருள்களையும் வேறு தொழிற்சாதனங்களையும் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பான இடம் தமிழ் நாடு என்பது தெளிவாகும். கீழ்க்காணும் பெருந் தொழில்களை தமிழ் நாட்டில் அமைத்திட மத்திய அரசின் அனுமதியை வேண்டியுள்ளோம். அத் தொழில்களாவன :—



தூத்துக்குடியில் தொழில்களுக்கான எண்ணெ சுத்தி கரிப்புச்சாலை (52 கோடி ரூபாய்), மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலைகள் (80 கோடி ரூபாய்), பாலிஸ்டர் சுருள் தொழிற்சாலை (13 கோடி ரூபாய்), சேலத்தில் வெப்பந்தாங்கிக் கற்கள் தயாரிக்கும் தொழிற் சாலை (10 கோடி ரூபாய்). காவிரி கழிமுகப் பகுதியில் எண்ணெய் தேடும் பணியை மேற்கொள்ள மத்திய அரசை வற்புறுத்தி வருகிருேம்.

இத்தொடர்பில் மற்ருென்றையும் குறிப்பிட விழைகிறேன். சேது சமுத்திரத் திட்டத்தை மேற் கொள்ள வேண்டுமென்று இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே வேண்டி வருகிருேம். இத்திட்டத்தை நிறைவேற்றுவது அவசரமும் அவசியமும் ஆகும். நம் நாட்டின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து கிழக்குக் கரையோரப் பகுதிகளுக்குச் செல்வதற்கு ஆகும் பயண நேரம் இதனுல் பெரிதும் குறையும். இது, நாட்டின் பாதுகாப்பிற்கும், கடலோர வாணிபத் திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனை ஐந் தாவது திட்டக் காலத்திலாவது மேற்கொள்ள வேண்டு மென மத்திய அரசை நான் வேண்டிக் கொள்கிறேன். இது தவிர, தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுள்ளோம்.

### வேலை வாய்ப்பு.

**20.** ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப் பிட்டிருப்பது போல், வேலை வாய்ப்புகளைப் பெருக்கு வதற்கு சிறப்புத் திட்டங்களை 10 கோடி ரூபாய்

செலவில் நாம் தொடங்கி வைத்துள்ளோம். 3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், 3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற சாலை அமைப்புத் திட்டம், 61 இலட்சம் ரூபாய் செலவில் இளைஞர் அணித் திட்டம், 1·31 கோடி ரூபாய் செலவில் வறட்சி பாதிப்புப் பகுதித் திட்டம், 47 இலட்சம் ரூபாய் செலவில் பொறியியல் பட்டதாரிகளுக்கும், சான்றிதழ் பெற்றவர்களுக்கும் தொழில் பழகும் சிறப்புத் திட்டம், கைப்பணியாளர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குதல், 25 இலட்சம் ரூபாய் செலவில் ஆசிரியர்கள் தொழில் பழகும் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.

மேலும், படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களின் பிரச்சினையை மனதிற்கொண்டு ஒரு விரிவான சிறப்புத் திட்டத்தை வகுத்துள்ளோம். 15 கோடி ரூபாய் அளவில் ஆண்டுக்கு செலவு செய்து வேலை வாய்ப்புக்கள் அளிப்பதற்காக மாநில அரசு தயாரித்துள்ள இத் திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, விரைவில் செயல்படுத்த முடியுமென நம்புகிறோம்.

### கிராம முன்னேற்றம்.

**21.** 1,500 மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கிய சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகள் அமைப்புத்திட்டம் ஒன்றை கடந்தஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையில் 19 கோடி ரூபாய் அளவில் திட்டப்பட்ட திட்டத்தின்கீழ், 1972–73ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப் பணிக்கென 1973–74ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.





ஊராட்சி கல்வி-நிதி விசாரணைக் குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில், வளர்ச்சி வட்டாரங்களின் வகைப்பாடு மாற்றி அமைக்கப்பட்டு, அதற்கேற்ப ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்குக் கொடுக்கப்படத்தக்க ஊரகத் தீர்வை மேல்வரி இணை மானிய வீதங்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 1973–74-ல் ஊராட்சி ஒன்றியங்கள் 5·25 கோடி ரூபாய் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### நகர் முன்னேற்றம்.

**22.** நகர்ப்புற-நாட்டுப்புற திட்டமிடுவதற்கான சட்ட வரைவு, சட்டமாக ஆகிவிட்டதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். இச் சட்டத்தின்கீழ், நகர்ப்புற-நாட்டுப்புற திட்ட அமைப்பு அதிகார மன்றங்களை அமைத்திடுவது குறித்து அரசு ஆழ்ந்து ஆலோசித்து வருகிறது. இப் பணிக்கென இம் மாநிலம் எட்டு வட்டாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான வட்டாரத் திட்டங்கள் தீட்டும் பணி நிறைவெய்தும் நிலையிலுள்ளது. வட்டாரத் திட்டங்களுடன், நகரப் பகுதிகள் ஒழுங்கு முறையுடன் வளர்ச்சியுறுவதற்காகப் பெருந்திட்டங்களும் விரிவான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார அமைப்பை (Metropolitan Development Authority) அரசு ஏற்படுத்தியுள்ளது. சென்னைமாநகரின் பிரச்சினைகள் மேலும் பெருகி விடாமல் இருப்பதற்காக, சென்னையிலிருந்து சுமார் 30 கல் தொலைவில் எல்லா வசதிகளும் நிறைந்த துணை நகரங்களைத் தோற்றுவிப்பது இவ் வமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும். இத் திட்டத்தினை அரசு முதற்கண் செங்கற்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூருக்கு அருகில் நிறைவேற்றுவதென

முடிவெடுத்துள்ளது. இத் துணைநகர், மறைந்த தமிழ்ப் பேரறிஞர் மறைமலையடிகளின் நினைவாக 'மறைமலைநகர்' என அழைக்கப்படும். இதற்கான தொடக்க முயற்சியை மேற்கொள்வதற்காக 1973–74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி.

**23.** 1973–74ஆம் ஆண்டுத் திட்டத்தில் வீட்டு வசதிக்கென 7·08 கோடி ரூபாய் செலவிடப்படும். மேலும் வங்கிகளிடம் இருந்து அதிக நிதி வசதி பெற்று நடுத்தர வகுப்பினருக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்கட்கும் பயன்படத்தக்க வகையில் ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது திருச்சி, சேலம், இராமனாத புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். மத்திய கூட்டுறவு வீடு அடமான சங்கமும் வீட்டு வசதிக்கான கடன்களை அதிகரித்து வருகிறது. இதற்காக ஆயுள் காப்பீட்டு கழகத்திடமிருந்து கூடுதல் வசதிகளைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## குடிசை மாற்று வாரியம்.

**24.** நகர்ப்புற குடிசை மாற்றும் திட்டத்திற்காக நாம் 1972–73ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். 1972–73ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் 6·5 கோடி ரூபாயும், 1973–74ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 6·5 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளோம்.

நடப்பாண்டில் 4,500 குடியிருப்புகளும், வரும் ஆண்டில் மேலும் 4,500 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், குடிசைப் பகுதிகளுக்கு சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.



## குடிநீர், வடிகால் வசதி வாரியம்.

**25.** 1969–70-ல் குடிநீர், வடிகால் வசதி வாரியம் அமைத்ததிலிருந்து சென்னைமாநகராட்சிக்கும், ஏனைய நகராட்சிகளுக்கும் குடிநீர் வசதியளிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். சென்னைக்குப் போதிய அளவில் நீர் கொண்டு வருவதற்கான மாபெரும் திட்டமாகிய வீராணம் திட்டம் 1974-ல் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70லிருந்து நடப்பாண்டு முடிய, 84 புதிய நகர குடிநீர் வசதித்திட்டங்கள் ஏற்கப்பட்டுள்ளன. 43 திட்டங்கள் முடிவடைந்துள்ளன. மேலும் 25 திட்டங்கள் இந்த ஆண்டிலே முடிவடையும் என எதிர்பார்க்கிறோம். இதன் பயனாக, 99 நகராட்சிகளில், 80 நகராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி கிடைத்துள்ளது. மேலும் 10 நகராட்சிகளுக்கான திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய 9 நகராட்சிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

ஆறு ஆண்டுக் காலத்தில், சுமார் 40 கோடிச் செலவில் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தருவதற்கான திட்டமொன்றை குடிநீர் வடிகால் வசதி வாரியம் வகுத்துள்ளது. முதற்கட்டமாக, 100 இலட்சம் ரூபாய்ச் செலவில், கிராமங்களில் இவ்வாண்டு 220 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டு இத் திட்டத்தின்கீழ் 200 இலட்சம் ரூபாய் செலவில் 450 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும். இது வன்றி, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படும் கிராம குடிநீர்த் திட்டத்தின்கீழ் 1·46 கோடி ரூபாயும் ஐக்கியநாடு குழந்தைகள் விரைவு நல நிதி (UNICEF) திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ரூபாயும் அடுத்த ஆண்டு செலவிடப்படும். குடிநீர் வசதிக்காக 1966–67-ல் சுமார் 3·5 கோடி ரூபாய் செலவிடப்பட்டதற்கு மாறாக, 1973–74-ல் மொத்தம் சுமார் 20 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1973 பிப்ரவரி 26

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்.

23. சமுதாயத்தில் வாழ்க்கை வசதியற்று துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் அடித்தள மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, 1973-74ஆம் ஆண்டில், அரிசன நலன் என்ற தலைப்பில் முன்பு இணைத்து ஒதுக்கப்பட்ட சத்துணவு திட்டத்திற்கான தொகை 88 இலட்சம் ரூபாய் நீங்கலாக 8·16 கோடி ரூபாயும், பிற்பட்ட வகுப்பினர் நலனுக்கென 5·56 கோடி ரூபாயும் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதில் மாநிலத் திட்ட இனங்களும் மத்திய அரசு பொறுப்பேற்கும் இனங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | மொத்தம். | திட்டத்திற்கு அப்பாற்பட்ட மாநிலச் செலவு. | மாநிலத் திட்டம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்கள். |
|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | | |
| தாழ்த்தப்பட்டோர் நலன் (1973–74) .. | 8·16 | 5·52 | 2·05 | 0·59 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் (1973–74) .. | 5·56 | 1·76 | 3·50 | 0·30 |

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகும் செலவில் மிகப் பெரும் பகுதியை மாநில அரசே தன் வசதிகளிலிருந்து செய்துவருகிறது என்பது மேலே கொடுத்துள்ள புள்ளி விவரத்திலிருந்து தெரியும்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரில் திறமையுள்ள கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றையும் தோற்றுவித்துள்ளோம். இவர்களில் திறமையுள்ளவர்கள் மற்றெந்த வகுப்பினருக்கும் படிப்பிலும் பணியிலும் தாங்கள் சளைத்தவர்களல்ல என்பதை மெய்ப்பித்துக் காட்டும் வகையில் தன்னம்பிக்கையும் தக்க எழுச்சியும் பெறுவதற்காகவே இத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.



1973 பிப்ரவரி 26]

வங்கிகளிடம் இருந்து இரண்டு கோடி ரூபாய் பெற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வரும் ஆண்டில் விடுதிகள் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. இதனையும் சேர்த்து, தாழ்த்தப்பட்டவர் நலனுக்கென 9·16 கோடி ரூபாயும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென 6·56 கோடி ரூபாயும் வரும் ஆண்டில் செலவிடப்படும் என்பது தெளிவாகும்.

தொழிலாளர் நலன்.

27. தொழிலாளர் நலனில் அக்கறைகொண்டுள்ள இந்த அரசு, கைத்தறித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை ஆராய குழு அமைத்திருப்பது போல், விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தையும் ஆராய்ந்து பரிந்துரையளிக்க குழு ஒன்றை அமைத்துள்ளது. மேலும் சிறு தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தின் முன் 'ரிட்' மனுக்கள் செய்வதற்கோ, "ரிட் அப்பீல்" செய்வதற்கோ ஆகும் செலவில் ஒரு பகுதியை ஏற்கும் பொருட்டு, தக்க வசதியற்ற தொழிற்சங்கம் ஒன்றுக்கு 150 ரூபாய் கொடுக்க தீர்மானித்துள்ளது. தொழிலாளர் நலநிதி ஒன்றையும் நாம் அமைத்துள்ளோம். இதற்கு அரசு ஐந்து இலட்சம் ரூபாய் முதற்கட்டமாக மானியமாக அளித்துள்ளது.

குடியிருப்பு மனைச் சட்டம்.

28. தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை உறுதி செய்தல்) சட்டத்தின்கீழ், தஞ்சை மாவட்டத்தில் 1,57,000 பேருக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 1,00,000 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ; 47,000 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து குடியிருப்புமனையின் விலையை வசூலிக்க வேண்டாமென்றும் குடியிருப்பு உரிமையாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய

இழப்பீட்டுத் தொகையை மாநில நிதியிலிருந்தே கொடுத்து விடுவதென்றும் மாநில அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சட்டம் மலைப் பகுதிகள் நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுகிறது. மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தால் பயனடைவார்கள்.

29. இவ்வாறு பல்வேறு துறைகளிலும் விரைந்த முன்னேற்றத்திற்காக நமது அரசு, பணிகளைத் தொடர்ந்து ஆற்றுகிறது எனினும்,—அந்தத் துறைகளில் பெரும்பாலானவை மத்திய அரசின் உதவிகளுக்காகவும், அனுமதிகளுக்காகவும் காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலையிருப்பதை, இந்த நிதி நிலை அறிக்கையை ஊன்றிக் கவனித்தால் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இத்தகைய இடர்ப்பாடுகளைக் களைந்து தயக்கமின்றித் தகைசால் திட்டங்களை நிறைவேற்றத்தான் மாநில அரசுகள் முழுமையான சுயாட்சித் தன்மையுடன் விளங்க வேண்டுமென்ற இந்த அரசின் கொள்கையை வலியுறுத்தி வருகிறோம். மத்தியிலும்,—மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல், மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலேயே நிலை பெறவும் வலுப் பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும். இந்தக் கருத்து வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு, மாநில அளவில் தன்னாலியன்ற சோஷலிசத் திட்டங்களைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருவதையும், அண்மையில் பேருந்துகள் தேசீய உடைமையாக்கப்படும் சட்டம் நிறைவேற்றப்பட்டதையும் நாட்டு மக்கள் நன்கறிவர். தமிழ்ச் சமுதாயம் மகிழத்தக்க வேறு சில அறிவிப்புக்களையும் இந்த நிதி நிலை அறிக்கை வாயிலாக நான் நாட்டுக்கு வழங்குகிறேன்.



### (1) உணவு தானிய மொத்த வாணிபம்.

உணவு தானிய மொத்த வாணிபம் பற்றி குடியரசுத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அதன் தொடர்பாக பிப்ரவரி 24ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற, முதலமைச்சர்கள் மாநாட்டில் வருவாய்த் துறை அமைச்சர் கலந்துகொண்டுள்ளார். அதில் விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், நமது மாநிலச் சூழ்நிலைக்கேற்ப, இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு நடத்துவது பற்றி ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

### (2) தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவு.

தொழிற் சட்டங்கள் குறித்த பல்வேறு பிரச்சினைகளில் அறிவுரை தேவையாயிருந்து, அதற்கான செலவு செய்ய தனிப்பட்ட தொழிலாளர் பலருக்கும் சிறு தொழிற்சங்கங்களுக்கும் இயலாத நிலை உள்ளது. இவர்களது பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்து, என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, என்னென்ன ஆதாரங்களுடன் எந்த அமைப்பை அணுக வேண்டும் என்பது பற்றியும், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கு, அவர்களது பிரச்சினைகளில் சட்ட ஆலோசனை கூறுவதற்காக, தொழில் சட்ட ஆலோசனைப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

### (3) அரசு அலுவலர்கள்.

மத்தியிலும், மாநிலங்களிலும் உள்ள அரசு அலுவலர்களின் ஊதியம் குறித்து ஒருமித்த கொள்கை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று நாம் மத்திய

அரசுக்கு கூறியுள்ள கருத்து முக்கியமானது ஆகும். மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய வீதங்களை மாற்றும்போது, மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கூறியுள்ளோம். மாநில அரசுகள் தத்தம் அலுவலர்களது ஊதிய வீதங்களை மத்திய அரசின் ஊதிய வீதங்களுக்கு ஏற்ற முறையில் மாற்றியமைக்கத் தேவையான நிதி உதவி அளிக்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்கவேண்டுமென வலியுறுத்துகிறேன்.

நடப்பாண்டில் மாநில அரசு ஊழியர்களுக்கு நன்மைகள் பலவற்றை நாம் செய்துள்ளோம். அகவிலைப் படியை உயர்த்துவதற்கு மட்டும் நமக்கு நடப்பாண்டில் 5·5 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. தனி நபர் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதாலும் தொடர்பான வேறு சில சலுகைகளை அளித்ததாலும் நமக்கு ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை செலவாகிறது. இவ்வாண்டு வீட்டு வாடகைப்படி சென்னை மாநகரப் பகுதியில் ஊதியத்தில் 12 சத விகித அளவுக்கு உயர்த்தித் தரப்பட்டுள்ளது. சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்ற வகையில், 1973–74-ல் சென்னைப் பகுதிக்கு 15 சத விகிதம் வரையும், மற்றப் பகுதிகட்கு தக்கவாறும், வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படும். இதற்கென 1·5 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். தங்கள் ஊதியங்களை மேலும் உயர்த்தும்படி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் கோரிக்கை விடுக்கும்போது, மாநில அரசின் நிதி நிலைமையைக் கருதிப் பார்க்கும்படி அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும், அகவிலைப்படி உயர்வு தேவை என்ற அரசு அலுவலர்களின் முறையீட்டை ஏற்று, அகவிலைப்படியை 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் அலுவலர் அனைவர்க்கும்



| Other loans .. .. .. | 3[illegible],80·11 | 11,45·09 | —4,51·08 | 40,74·12 |
| *Other liabilities.* | | | | |
| State Provident Fund and Savings Bank deposits .. | 35,11·74 | 4,80·29 | 4,80·64 | 44,72·67 |
| Total—Liabilities .. | 6,59,36·63 | 27,57·49 | 20,45·09 | 7,07,39·21 |
| — (1) | Assets as on 31st March 1972. (2) | Assets expected to be created during 1972-73. (3) | Assets expected to be created during 1973-74. (4) | Total estimated assets on 31st March 1974. (5) |
| | | (RS IN LAKHS.) | | |
| *Assets.* | | | | |
| Loans advanced (due to Government) .. .. | 1,73,15·87 | 11,83·02 | 9,99·47 | 1,94,98·36 |
| Loans to Electricity Board .. | 2,42,68·37 | 4,87·00 | 1,50·00 | 2,49,05·37 |
| Capital expenditure .. .. | 3,56,32·53 | 51,32·85 | 37,97·34 | 4,45,62·72 |
| Cash balance and investments. | 18,44·00 | —13,61·00 | .. | 4,83·00 |
| Total—Assets* .. | 7,90,60·77 | 54,41·87 | 49,46.81 | 8,94,49·45 |

| — (1) | Assets as on 31st March 1972. (2) | Assets as estimated on 31st March 1973. (3) | Assets as estimated on 31st March 1974. (4) |
|---|---|---|---|
| | | (RS IN LAKHS.) | |
| Excess of assets over liabilities .. | 1,31,24·14 | 20,84·38 | 29,01·72 |

* Excludes proposals for additional mobilisation.

## APPENDIX IV.

### STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF TAMIL NADU UNDER THE FOURTH FIVE-YEAR PLAN.

| Heads of Development. (1) | Fourth Five-Year Plan Provision (Tentative), 1969-70 to 1973-74. (2) | Budget Estimate, 1972-73. (3) | Revised Estimate, 1972-73. (4) | Budget Estimate, 1973-74. (5) |
|---|---|---|---|---|
| | | (RS IN LAKHS.) | | |
| I. Agricultural and Allied Programmes— | | | | |
| 1. Agricultural Production .. .. | 30,15 | 6,19 | 5,64 | 5,81 |
| 2. Minor Irrigation .. .. .. | 25,56 | 7,63 | 7,65 | 8,98 |
| 3. Soil Conservation .. .. .. | 5,43 | 93 | 1,10 | 1,17 |
| 4. Ayacut Development Programme .. | 27 | 2.01 | 1,00 | 1,01 |
| 5. Animal Husbandry .. .. .. | 8.14 | 83 | 83 | 1,28 |
| 6. Dairying and Milk-supply .. .. | 5.34 | 44 | 43 | 45 |
| 7. Forest .. .. .. .. | 4,73 | 83 | 85 | 1,42 |
| 8. Cinchona .. .. .. .. | 56 | 19 | 20 | 22 |
| 9. Fisheries .. .. .. .. | 10,09 | 1,93 | 1,84 | 1,37 |
| 10. Warehousing and Marketing .. | 79 | 19 | 40 | 30 |
| Total .. | 91,66 | 21.22 | 19,94 | 21,61 |
| II. Co-operation and Community Development— | | | | |
| 1. Co-operation .. .. .. | 28,72 | 1,58 | 2,00 | 1,86 |
| 2. Community Development and Rural Development Programmes .. .. | 11,54 | 1,72 | 1,89 | 97 |
| Total—II. .. | 40.26 | 3,30 | 3.98 | 2,83 |
| III. Irrigation and Power— | | | | |
| 1. Irrigation and Flood Control .. | 39,06 | 8,17 | 7,27 | 7,01 |
| 2. Power .. .. .. .. | 1,69,79 | 32,66 | 34,14 | * 40,00 |
| Total—III. .. | 2,08.85 | 40,83 | 41,41 | 47,01 |

* Of this, a sum of Rs 8 crores will be met outside the plan by Institutional Finance.



| Heads of Development. (1) | Fourth Five-Year Plan Provision (Tentative), 1969-70 to 1973-74. (2) | Budget Estimate, 1972-73. (3) | Revised Estimate, 1972-73. (4) | Budget Estimate, 1973-74. (5) |
|---|---|---|---|---|
| | | (RS IN LAKHS) | | |
| IV. Industry and Mining— | | | | |
| 1. Large and Medium Industries .. | 32,05 | 3,70 | 3,35 | 4,25 |
| 2. Mineral Development .. .. | 1,04 | 20 | 13 | 12 |
| 3. Village and Small Industries .. | 31,00 | 4,90 | 4,47 | 5,39 |
| Total—IV. .. | 64.09 | 8,80 | 7,95 | 9 76 |
| V. Transport and Communications— | | | | |
| 1. Roads .. .. .. .. | 25,04 | 4,73 | 6,07 | 6,65 |
| 2. Road Transport .. .. .. | 7,29 | 1,22 | 1,20 | 1,02 |
| 3. Inland Waterways .. .. .. | .. | 11 | 37 | 3 |
| 4. Tourism .. .. .. .. | 26 | 12 | 14 | 20 |
| Total—V. .. | 32.59 | 6.18 | 7,78 | 7,90 |
| VI. Social Services— | | | | |
| 1. General Education .. .. | 53,17 | 10,34 | 11,01 | 12,12 |
| 2. Technical Education .. .. | 6,59 | 1,24 | 1,49 | 1,40 |
| 3. Cultural Programmes .. .. | 61 | 7 | 7 | 7 |
| 4. Health and Family Planning .. | 17,32 | 3,28 | 3,54 | 4,53 |
| 5. Nutrition .. .. .. .. | .. | .. | .. | 54 |
| 6. Water-supply and Sanitation .. | 55,12 | 8,96 | 9,26 | 11,71 |
| 7. Housing .. .. .. .. | 30,30 | 6,34 | 6,41 | 6,55 |
| 8. Town-Planning and Urban Development .. .. .. .. | 2,24 | 54 | 55 | 84 |
| 9. Welfare of Backward Classes .. | 10,00 | 4,46 | 5,31 | 5,91 |
| 10. Social Welfare .. .. .. | 1,32 | 23 | 80 | 54 |

| Heads of Development. (1) | Fourth Five-Year Plan Provision (Tentative), 1969-70 to 1973-74. (2) | Budget Estimate, 1972-73. (3) | Revised Estimate, 1972-73. (4) | Budget Estimate, 1973-74. (5) |
|---|---|---|---|---|
| | | | (RS IN LAKHS) | |
| VI. Social Services—*cont.* | | | | |
| 11. Craftsmen Training and Labour Welfare .. .. .. .. | 2,39 | 27 | 30 | 40 |
| 12. Public Co-operation .. .. | 8 | 2 | 1 | 1 |
| Total—VI. .. | 1,79,23 | 35 75 | 38,75 | 41,62 |
| VII. Miscellaneous— | | | | |
| 1. Statistics .. .. .. .. | 59 | 19 | 12 | 21 |
| 2. Hill Areas Development Programme. | 7,00 | 36 | 34 | 50 |
| Total—VII. .. | 7,59 | 55 | 46 | 71 |
| **GRAND TOTAL** .. | 6,23,67 | 1,16,63 | 1,20.27 | * 1,26,14 |

* Excludes a sum of Rs 8 crores, shown under ' Power ' outside the Plan.

## தமிழ்நாடு சட்டமன்றம்.

### செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் முற்பகல் 11 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் தீர்மானம்.

திரு. டி. கே. சண்முகம், எம்.எல்.சி., அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: திரு. டி. கே. சண்முகம், எம்.எல்.சி., அவர்கள் 15—2—1973 ஆம் நாள், சென்னையில் இயற்கையெய்தினார் என்பதை இம்மன்றத்திற்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, "1968-ம் ஆண்டு முதல் இம்மன்றத்தின் உறுப்பினராக இருந்த கலைஞர் திரு. தி. க. ஷண்முகம் அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து இம் மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, ஔவை என்றும், முத்தமிழ் கலா வித்வ ரத்தினமென்றும், நாடகக் கலை வேந்தரென்றும் தமிழ் நாட்டு மக்களால் அன்போடு அழைக்கப் பட்டவரும், இந்த மாமன்றத்தில் தமிழ் உணர்ச்சி பொங்கி எழுகிற அளவுக்கு பல்வேறு நேரங்களிலே கருத்துக்களை எடுத்துவைத்தவரும், நம்முடைய பேரன்புக்குப் பாத்திரமானவருமான கலைஞர் டி. கே. ஷண்முகம் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தது தாங்கொணாத வேதனையை நமக்கு அளிக்கின்ற நிகழ்ச்சியாகும். அவர்கள் தமிழ்நாட்டுக் கலை உலகில் ஈடு இணையற்ற நடிகராகவும், எழுத்தாளராகவும், நாடகப் பேராசிரியராகவும் திகழ்ந்தார்கள். இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் நாடகக் கலை மூலமாக அவர்

ஆற்றிய தொண்டினை நாம் மறந்திட இயலாது. 'தேச பக்தி', 'கதரின் வெற்றி' ஆகிய அவருடைய நாடகங்கள் அந்தக் காலத்தில் தடை செய்யப்பட்டன வென்றால், அது வெள்ளையனை எதிர்த்து, இந்திய நாட்டினுடைய விடுதலைக்காக அந்த நாடகத்தில் எழுப்பப்பட்ட எழுச்சி மிகுந்த குரலுக்கு, அப்போது ஆண்டு வந்த வெள்ளையன் விதித்த தடையென்று சொன்னால் அது மிகை யாகாது. அவர்கள் நாட்டுக்காகவும், மொழிக்காகவும், குறிப்பாகவும், சிறப் பாகவும் தமிழின மக்களுக்காகவும் தன்னை ஒப்படைத்துக்கொண்ட பெருந்தகை யாளராவார்கள். அவர்கள் நாடகத்திலும், திரை உலகத்திலும் ஏற்ற பாத்தி ரங்கள் எதுவானாலும், அவைகள் ஒளி மிகுந்து உயர்ந்ததொரு தன்மையை விவரிக்கின்ற அளவுக்கு அந்தப் பாத்திரத்தோடு ஒன்றி, தனிச் சிறப்பினை அந்தப் பாத்திரத்திற்கு அளிக்கக்கூடிய வல்லமை பொருந்திய நாடகப் பேராசிரியராக மறைந்த கலைஞர் டி. கே. ஷண்முகம் அவர்கள் விளங்கினார்கள். அவர்களுடைய ஆற்றலைப் பாராட்டி 1941-ம் ஆண்டு மதுரைத் தமிழ் சங்கம் "முத்தமிழ் கலா வித்வ ரத்தினம்" என்ற பட்டத்தை அவருக்கு வழங்கியது. 1944-ம் ஆண்டு திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்ற நாடகக் கலை மாநாட்டில், 'ஔவை' என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் மாத்திரமல்லாமல் இலங்கை, மலேயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும், இந்தியாவிலே பல்வேறு பகுதிகளிலும், முக்கிய பட்டணங்களிலும் திரு. டி. கே. ஷண்முகம் அவர்களுடைய நாடகங் கள் நடைபெற்றிருக்கின்றன. திரு. மோதிலால் நேருவின் 100-வது ஆண்டு விழாவினை, டெல்லித் திருநகரிலே கொண்டாடியபோது, ஔவை டி. கே. ஷண்முகம் அவர்கள் அளித்த நாடகத்தை மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வெகுவாகப் பாராட்டிய நிகழ்ச்சியை நாடு மறந்திருக்காது. அவர்கள் டில்லி, மைய சங்கீத நாடக அகாடமி சார்பில் சிறந்த நாடக நடிக ரென்று 1962-ல் கௌரவிக்கப்பட்டார்கள். 1953-ல் அவர் நடித்து வெளிவந்த 'மனிதன்' என்கிற படம் சிறப்புக்குரிய படம் என்கிற பெயரினைப் பெற்றது மாத்திரமல்லாமல், அதிலே மிக முக்கியமான பாத்திரத்தை ஏந்தி நடித்த திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் சிறந்த நடிகர் என்று, அன்று தமிழ் நாடு விருது அளித்துப் பாராட்டி மகிழ்ந்தது. 1971-ம் ஆண்டு 'பத்மஸ்ரீ' என்ற பட்டத்தை அவர்கள் பெற்றார்கள். நாமெல்லாம் அவரைப் பாராட்டி மகிழ்ந் தோம். சென்ற ஆண்டு தான் அவர்களுடைய 60-வது வயது நிறைவெய்தி யதையொட்டி, மணி விழாவினை மிகுந்த மன மகிழ்ச்சியோடு தமிழ் நாட்டு மக்கள் கொண்டாடி குதூகலித்தார்கள். ஆனால் இன்றைக்கு அவர் நம் மிடையே இல்லை. பொதுவாக தமிழரசுக் கட்சித் தலைவர், சிலம்புச் செல்வர், திரு. ம.பொ.சி. அவர்கள், அவருடைய இழப்பில் எவ்வளவு துக்கத்திற்கு ஆளாகியிருப்பார்கள் என்பதை நாம் அறிவோம். அதைப் போலவே, கலை



உலகம், தமிழ் கூறும் நல்லுலகம், கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களுடைய உள்ளங்கள் அனைத்தையும் அழவிட்டு, நம்முடைய நண்பர், இந்த அவையி னுடைய உறுப்பினர், திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் மறைந்திருக்கிறார்கள். அழகிய தோற்றம், எந்த நேரத்திலும் புன்முறுவல் பூக்கும் முகம், கடிந்து பேசாத தன்மை, எளிய, இனிய சுபாவம் படைத்த அவரது இழப்பில் உள்ள படியே தமிழ் நாடு இன்று ஏங்கித் தவிக்கிறது. அவருடைய குடும்பத்திற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, பத்மஸ்ரீ டி. கே. ஷண்முகம் அவர்களை இழந்துவிட்டோம். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், நாம் இழக்க முடியாத ஒருவரை இழந்து விட்டோம். அவருக்கிருந்த தமிழ்ப் பற்றை, வேறு யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. பல சமயங்களில், தனிப்பட மட்டுமல்ல, பொதுக் கூட்டங்களில்கூட தமிழின் பெருமையைப் பற்றிப் பேசும்போது, கண்ணீர் விட்டு விடுவார். அதை வெறும் தாயாக மட்டுமல்லாமல், தாய், தெய்வம் அத்தனையும் தமிழ் தான் என்று பேசுவார். அவரை நினைக்கும்போதெல்லாம், என்னுடைய ஊரைச் சேர்ந்த திரு. விஸ்வ நாத தாஸ் நினைவு அடிக்கடி ஞாபகத்திற்கு வரும். அதுமாதிரி மன்னார்குடி திரு. நடராசப் பிள்ளை அவர்களின் நினைவும் ஞாபகத்திற்கு வரும். இந்த மூவரும் தேச பக்தியைத் தூண்டுவதில், நாடகத் தமிழ் மூலம், நாடகத்தின் மூலம் ஒரு பெரும் புரட்சியையே உண்டுபண்ணிக்கொண்டிருந்தார்கள். 'மனிதன்' என்ற நாடகத்தைப் பற்றி முதல்வரவர்கள் சொல்லும்போது, எனக்கு அப்படியே தத்ரூபமாக ஞாபகத்திற்கு வந்தது. ஒருமுறை அந்த நாடகத்தைப் பார்த்தேன். 'கதரின் வெற்றி', 'தேச பக்தி' நாடகங்களைப் பற்றியும் சொன்னார்கள். 'ராஜராஜசோழன்' என்று சொல்லும்போது, நாம் திரு. டி. கே. ஷண்முகம் அவர்களை மறந்து விடுகிறோம். ராஜராஜ சோழனே மு.ப. 11-00
தத்ரூபமாக வந்ததுதான் நமக்குத் தெரியுமேயொழிய, திரு. டி. கே. ஷண்முகம் அவர்களை மறந்து விடுகிறோம். அந்த அளவுக்கு எந்த ரூபத்தில் நடிக்கிறாரோ அத்துடன் ஒன்றி விடுவார். அவருடைய இழப்பு நமக்குப் பேரிழப்பு; நமக்கு மட்டுமல்ல, இந்த தேசத்துக்கே பேரிழப்பாகும். நாடகம் ஒவ்வொரு பாஷையி லும் இருக்கலாம். குஜராத்தில் நாடகம் போடுகிறார்கள். மகாராஷ்டிரத்தில் நாடகம் போடுகிறார்கள். வங்காளத்தில் நாடகம் போடுகிறார்கள். ஆகையினால், பாஷைகள் பல இருந்தாலும், நாடகம் நடிப்ப தென்பது ஒன்றுதான். டெல்லியில் இவருடைய நடிப்பைப் பற்றி முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நாம் மட்டுமல்ல, தமிழே தெரியாதவர்கள் கூட அவ ருடைய நடிப்பைப் பார்த்து எவ்வளவு புகழ்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். பலமுறை டெல்லியில் போய் அவர் நாடகம் நடித்திருக்கிறார்கள். ஒரு முறை அவர் டெல்லியில், 5, 6 நாடகங்கள் நடத்திவிட்டு விமானத்தில்

வரும்போது நானும் அவருடன் வந்தேன். அப்போது அவர் அங்கே கிடைத்த மகிழ்ச்சி, மரியாதையைப்பற்றிச் சொன்னார். தமிழே தெரியாத டெல்லியி லுள்ள மற்ற பாஷைக்காரர்கள் மத்தியில் தமிழுக்கு எவ்வளவு மரியாதை இருக் கிறதென்பதை நான் இப்போது தான் தெரிந்து கொண்டேன் என்று சொன் னார். அவர் ஒரு நல்ல பண்பாளர். நடிப்பு என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அவர் ஒரு இலக்கணமாக இருந்தார். அரசியலைப் பொறுத்தவரையில், அவருக்கு அரசியல் என்பதே திரு. ம.பொ.சி. தான். அவர் அரசியலைப் பற்றி எண்ணத் தொடங்கிய நாளிலிருந்து திரு. ம.பொ.சி. எங்கிருந்தாரோ அங்கே அவரும் இருந்தார். அப்படிப்பட்ட ஒரு நல்ல கட்டுப்பாடுடன் கூடிய டிசைப்பிளாக அவர் திரு. ம.பொ.சி.-க்கு இருந்து வந்தார். நான், அவர் இறந்த 4-ம் நாள் தான் சென்னைக்கு வந்தேன். வந்த வுடன் அவரின் இல்லத்துக்குச் சென்று அவரின் சகோதரர் பகவதி அவர் களிடம் துக்கம் விசாரிக்கிறபோது எங்கே திரு. ம.பொ.சி. என்றுதான் கேட் டேன். அப்படி அவரின் குடும்பத்தில் ஒருவராக இருக்கிற துணைத் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. முதல்வர் அவர்கள் கூட இங்கே வருவதற்கு முன்னால் சொன்னார் கள், "என்ன பேசப் போகிறோம், திரு. ம.பொ.சி.-யை துக்கம் விசாரிக்க வேண்டியதுதான்" என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு, அவர் வேறு, இவர் வேறு என்று சொல்ல முடியாத அளவிற்கு 25 ஆண்டுக் காலம் இருந் தார்கள். உண்மையில் எனக்கு அவர் மறைந்து விட்டாரே, நாம் இழந்து விட்டோமே என்று நம்பவே முடியவில்லை. மதுரையில் வானொலியில் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டவுடனே எனக்கு அப்படித் திகில் ஏற்பட்டுவிட்டது. என்ன செய்வது? அவருடைய மக்களைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அவரின் பெயரைச் சொல்லக்கூடியவர்களாகத் தான் இருப்பார்கள். அவர்களுக்கு என் கட்சி சார்பாகவும், என் சார்பாகவும் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்று முதல்வர் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தையொட்டி உங்கள் எல்லோருடனும் சேர்ந்து நானும் என்னுடைய அஞ்சலியை நம்முடைய முத்தமிழ் கலா வித்வ ரத்னம் கலைஞர் சண்முகம் அவர்களுடைய ஆன்மா வுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குமரி மாவட்டம் பல கலைஞர்களை நமக்குத் தந்தது. ஒரு மாவட்டம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சிறிய நிலப்பரப்புத்தான் என்றாலும், அந்தப் பகுதியிலிருந்துதான் இளங்கோவடி களுக்குப் பிறகு இரண்டாயிரம் ஆண்டு கால இடைவெளியை நிரப்ப ஒரு மனோன்மணீய சுந்தரனார் தோன்றி 'மனோன்மணியம்' என்ற நாடகக் காப்பி





யத்தை யாத்துக் கொடுத்தார். அவருடைய மரபைச் சேர்ந்தவராகவே கலைஞர் சண்முகம் அவர்கள் குமரி மாவட்டத்தில் பிறந்தார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் அந்தப் பகுதியில் தோன்றியவர்தான். இப்படிப் பல அறிஞர்கள், பல புலவர்கள் தோன்றிய பகுதியில் தோன்றி தமி ழகம் முழுவதையும் தன்னுடைய களமாகக் கொண்டு கலைத் தொண்டு புரிந் தார் கலைஞர் சண்முகம் அவர்கள். இந்த மேலவையில் அவர் உறுப்பினராக இருந்தது இந்த அவைக்கே தனி மதிப்பு என்று சொல்லத் தக்க வகையில் பெருமதிப்பிற்குரியவராக அவர்கள் திகழ்ந்தார்கள். கலைஞர் சண்முகம் அவர்கள், முதல்வர் அவர்கள் எடுத்துக்காட்டியது போன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முத்தமிழ் கலா வித்வ ரத்னம் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். அந்தப் பட்டம் அவருக்கு முழுவதும் பொருந்தக் கூடியதாக இருந்தது. இயற்றமிழில் சிறந்த எழுத்தாளராக அவர் விளங்கினார். அவர் எழுதிய 'நாடகக் கலை' என்ற நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப் பட்டிருக்கிறது. இறதிக் காலத்தில் "எனது நாடக வாழ்க்கை" என்று அவர் எழுதிய நூல் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலே சேர்க்கத்தக்க மிகச் சிறந்த நூல். இயற்றமிழில் பேசவும் ஆற்றல் பெற்றிருந்தார். பிரச்சாரகர் என்ற நிலைக்கு அவர் தன்னை ஆட்படுத்திக்கொள்ளாததால் அந்த நிலையில் நான் அவரை வைத்துச் சொல்ல இயலவில்லை என்றாலும், தன் கருத்தில் பட்டதை, பிறர் மனதில் பதிய வைக்கிற வகையிலே எடுத்துப் பேசுவதிலும் அவர் ஆற்றல் பெற்றிருந்தார். இந்த மன்றத்தில் அதைப் பார்த்திருக்கிறோம். இசைத் தமிழில் மிகச் சிறப்பாகப் பாடக்கூடிய, உணர்ச்சி வயப்பட்டுப் பாடுகிற நிலையில் அவர் தகுதி பெற்றிருந்தார். உண்மையில் 5 ஆண்டுகளுக்கு முன்பு முதலில் அவருக்கு இருதய தாக்குதல் நோய் வந்த பிறகு, இடைப் பட்ட 5 ஆண்டுக் காலத்தில் அவர் கூட்டங்களில் பாடாமல் இருந்திருந்தால், இன்னும் கொஞ்ச காலம் இருந்திருப்பாரோ என்ற ஐயம் எனக்குண்டு. அந்த வகையில் எந்தத் திருமண விழாக்களிலும் கலந்துகொண்டு முதலில் தமிழ் வாழ்த்துப் பாடுவார். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மகள் திருமணத்தில் "நீங்கள்தான் முதலில் தமிழ் வாழ்த்துப் பாட வேண்டும்" என்று அவரை அழைத்தார்கள். இப்படி பல பெரிய குடும்பங்களில் நடக்கிற திருமணங்களில், அவர் பாடியிருக் கிறார். மண விழாக்களில் பெரிய வித்வான்களை அழைத்துப் பாடவைக்கிறார் களே, அதைப் போலவே அவர் ஒரு பெரிய ஆஸ்தானப் பாடகர் போல தமிழ் இனத்துக்கு இருந்தார். இசைத் துறையில், நாடகத் துறையில் அவர் எல்லா மாக விளங்கினார். சிறந்த நடிகராக இருந்தார் என்பது மட்டுமல்ல, தலைசிறந்த நாடக நடிகர்களைத் தயாரித்துக் கொடுத்த ஒரு பெரும் ஆசானாக அவர் திகழ்ந்தார். திரைப்பட உலகத்தில் இன்றைக்கு பெரும் புகழ்மிக்க

நட்சத்திரமாக இருக்கிறவர்களில் சில பேர்கள் அவரின் குழுவில் இருந்தவர்கள் என்று பார்க்கிறபோது, நாடக நடிகராக, நடிகர்களைத் தயாரிக்கும் ஆசானாக, நாடகங்களை அமைக்கின்ற நாடக நூல் ஆசிரியராக, நாடகக் குழுவை நடத்திச் செல்கிற ஒரு நிர்வாகியாக, இப்படி எல்லாமாக இருந்த பெருமைக்குரியவர், முத்தமிழ் கலா வித்வ ரத்னம் என்ற பெயருக்கு அவர் பொருந்தியவராக இருந்தார். தமிழரசுக் கழகத்தில் சேர்வதற்கு முன்பே அவர் பல சாதனைகளைப் புரிந்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு. பாரதியார் பாடல்கள் ஒரு சிலருடைய தனி உடைமையாக இருந்தபோது அதை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று ஒரு பெரிய கிளர்ச்சியைத் தொடங்கி, ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில், அவரைப் பார்த்துப் பேசி, அதை நாட்டுடைமை ஆக்கியதற்கு கலைஞர் சண்முகம் தான் காரணமாகத் திகழ்ந்தார். கேளிக்கை வரியிலிருந்து நாடகத்துக்கு விலக்களிக்க வேண்டும் என்ற கிளர்ச்சியைத் தொடங்கி, அதில் வெற்றி பெற்று, நாடக உலகத்திற்கு ஒரு பெருமையைத் தேடித்தர அவர் காரணமாக இருந்தார் என்பதையும் பார்த்தோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது போன்று, 25 ஆண்டுகளுக்கு முன்பே அவர் என்னோடு தொடர்பு கொண்டார். அவர்கள் கூறியது போன்று, அவர் எனக்காகத்தான் அரசியலுக்கு வந்தார். கடைசி வரையில் எனக்காகவே அரசியலில் இருந்தார். தமிழ் மாநிலம் அமைந்த நாள் விழாவைத் தமிழரசுக் கழகம் கொண்டாடிய போது, அதில் பேசிய கலைஞர் சண்முகம் அவர்கள், 'கலைஞர் உலகம் முழுவதும் உங்கள் பக்கம்தான் இருக்கிறது, நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று நாம் எல்லாரையும் பார்த்துச் சொன்னார்கள். அது மிக வாய்மை பொருந்திய ஒரு வார்த்தை. அதற்குப் பிறகு பல மாதங்கள் போய்விட்டன. இதுவரையும்—எத்தனையோ சோதனைகளுக்குப் பிறகும்—கலை உலகம் கலைஞர் முதல்வரின் பின்னால்தான் இருக்கின்றது. ஆனால், அந்த வாய்மையைச் சொன்னவர் மறைந்துவிட்ட நிலையை இன்று நாம் பார்க்கிறோம். அது மட்டுமல்ல. தமிழரசுக் கழகம் போராட்டம் துவக்கியபோதெல்லாம் ஒரு கலைஞர் என்ற முறையில் நான் அவருக்கு விதிவிலக்களிக்க விரும்பினேன், அந்த விதிவிலக்கை அவர் ஒருமுறை கூட ஏற்றுக்கொண்டதில்லை. "தமிழ்நாடு" என்ற பெயர் நம்முடைய தாய்நாட்டுக்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்தபோது, அவருடைய நாடகப் பணியை நிறுத்திவைத்து, ஒருநாள் போராட்டத்திற்குத் தலைமை தாங்கிக் கைதியானார். 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20-ம் நாள் மாநில சுயாட்சிப் போராட்டம் நடந்தபோது, அவர் அந்தப் போராட்டத்திலும் கலந்துகொண்டார். அதனால், அவர் ஒருநாள் காவலில் இருக்க நேர்ந்தது. ஆகவே எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவர் அரசியலில் ஆவேசம் காட்டவில்லை. அரசியலில் பிற கட்சிக்காரர்களுக்கு தன்னுடைய



கருத்துக்களை அவர்களின் மனம் புண்படாதவாறு எடுத்துக் கூறும் முறையைப் பின்பற்றினார். அந்தக் கலைஞரை தமிழக அரசு பலமுறை கௌரவித்ததற்காக நன்றி சொல்வதற்கு இதுதான் சிறந்த வாய்ப்பு என்பதனால் இந்த அரசிற்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் நாடகக் கலைக்கான ஒரு பிரதிநிதியாக இந்த மன்றத்தில் ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்பே நியமிக்கப்பட்டு இருக்கவேண்டும். அதற்கு அவர் தகுதி வாய்ந்தவராக இருந்தார். தி.மு.கழக அரசு வந்த பிறகு இந்த மன்றத்திற்கு அவரை அழைக்க, கலைஞர் அவர்கள்தான் முன்னணியில் இருந்தார்கள். அண்ணாவிடம் எடுத்துச் சொல்லி அவரை இந்த மன்றத்திற்கு அழைத்து வந்தார். குடும்ப நலத் திட்டத்துக்கான 'நாடகக் கலைக் குழு' ஒன்றை அமைத்து, அதற்கு அவரைத் தலைவராக வைத்தார்கள் கலைஞர் அவர்கள். இதைப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டிருந்த நிலையில், அது முடியும் முன்பே, நம்மிடமிருந்து அவர் விடை பெற்றுவிட்டார். பத்மஸ்ரீ விருது கிடைப்பதற்கு இந்த அரசு அவருக்கு உதவியாக இருந்து அவரை அகில இந்திய ரீதியில் பெருமைப்படுத்தியிருக்கிறதென்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடவுள் தொண்டில் ஈடுபடவேண்டும் என்பதற்காக ஹிந்து அறநிலைய ஆலோசனைக் குழுவில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். என்னை அணுகி கலைஞரிடம் இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று கூடச் சொன்னார். நான் அவருக்கு அன்றைக்குச் சொன்னது இன்றைக்கு நினைவு வருகிறது. 'கலைஞர் என்ற பெயரை வைத்திருக்கிற உங்கள் இரண்டு பேர்களுக்குமிடையே நான் என்ன தூது; நீங்களே போய்க் கேளுங்கள்' என்று சொன்னேன். கடைசியில் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை அணுகி அவர்கள் அந்தக் குழுவில் அவரை நியமித்தார்கள். ஆனால், அந்தக் குழு இன்னமும்கூட கூடவில்லை. அதற்குள் அவர் நம்மிடம் இருந்து விடை பெற்றுக்கொண்டார். எல்லா வகையிலும் மிகச் சிறந்தவராக விளங்கினார் அவர். அப்படிப்பட்ட மனிதரை நாம் பார்க்கவே முடியாது. அந்த உத்தமருக்கு உங்களோடு சேர்ந்து நானும் அஞ்சலி தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும் பிறரும் என்னையும் குறிப்பிட்டு என்னிடம் துக்கம் தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்**: தலைவரவர்களே, முதல்வர் அவர்களும், நமது துணைத் தலைவரவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மதிப்பிற்குரிய திரு. டி. கே. சண்முகம் அவர்களைப்பற்றி தங்களுடைய கருத்துக்களையெல்லாம் தெரிவித்தார்கள். கிட்டத்தட்ட 1949-ம் ஆண்டிலிருந்து நான் மதிப்பிற்குரிய தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களோடு தொடர்பு கொள்ள ஆரம்பித்த காலத்திலிருந்து திரு. டி. கே. சண்முகம் அவர்களை நெடு நாட்களாக மு.ப. 11-20

அறிவேன். அதற்கு முன்னாலே மாணவப் பருவத்தில், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறிய மாதிரி அவருடைய நாடகங்கள் பலவற்றை நான் கல்லூரி மாணவன் என்ற அளவில் பார்க்கக்கூடிய பெரிய வாய்ப்புக் கிடைத்தது. என்னுடைய கல்லூரி நாட்களில், நான் சினிமாக்களுக்கும், நாடகங்களுக்கும் அதிகமாகச் செல்லக்கூடியவன் என்ற முறையில் அவரு டைய ஒவ்வொரு நாடகத்தையும் பல முறை பார்த்தது உண்டு. ரத்தபாசம், ஔவையார் போன்ற நாடகங்களை ஒரு முறையல்ல, 5, 6 முறை கூடச் சென்று பார்த்திருக்கிறேன். அதிலும் ராஜராஜசோழன் நாடகத்தைப் பொறுத்த வரையில் இன்றைய தினத்திலே ராஜராஜ சோழனுடைய சிலையை தஞ்சையில் வைத்து ஒரு பெருமையை இந்த அரசு தேடிக்கொண்டது என்றால், அவனு டைய பெருமையை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வெளி நாடுகளில், மலேசியா போன்ற இடங்களில் பரப்பச் செய்த ஒரு உரிமை திரு. சண்முகம் அவர் களுக்கு உண்டு. அவர் இந்த நாடகங்களை நடத்தியிராவிட்டால், நாட்டி லுள்ள மக்களுக்கு இவ்வளவு தூரம் அவனைப்பற்றித் தெரிந்திருக்க முடியுமா என்பது சிந்திக்கக்கூடிய விஷயம். திரு. ம. பொ. சி. நன்றாக எடுத்துச் சொன்னார்கள். அவர் அவரோடு நிரம்பத் தொடர்பு கொண்டவர். கட்சி என்று மட்டுமல்ல, தனிப்பட்ட முறையில் அவரோடு சிறந்த நண்பராக இருந்து வந்தார். மாலை நேரங்களில் கடற்கரையோரங்களில் 8 மணி, 9 மணி, 10 மணி அளவிலும்கூட அவருடன் இருந்து உரையாடிப் பேசி மகிழ்கிற சந்தர்ப்பங்கள் அவருக்கு நிறைய உண்டு என்பது நன்றாகத் தெரியும். அவ ருடைய கட்சியில் இருந்தாலும் கூட, போராட்டங்களிலேயெல்லாம் கூட அவர் ஈடுபட்டார் என்பதையெல்லாம் நாம் அறிவோம். அதாவது இந்தக் காலத்தில் அரசியலில் ஈடுபடுகிறவர்கள், கட்சியில் ஈடுபடுகிறவர்கள் என்று சொன்னால், எந்தக் கட்சியிலும் யாரும் நிலையாக இல்லாத நிலையைத்தான் நாம் பார்க் கிறோம். அதுவும் கட்சியில் இருப்பவர்கள் அந்தக் கட்சியினுடைய வாழ்வு இருக்கிற சமயங்களில் அதில் தொடர்ந்து இருந்து, சில சமயங்களில் அந்தக் கட்சியில் தாழ்வு வரும்போது அல்லது அந்தக் கட்சியால் லாபம் இல்லை யென்றால் அந்தக் கட்சியை விட்டுப் போகக்கூடிய நிலைமையைப் பார்க்கிற போது, ஒரே கட்சியில் கடைசி வரை இருந்திருக்கக்கூடிய ஒரு பெருமை தமிழ்நாட்டில் உண்டு என்று சொன்னால், தமிழ்நாட்டில் இதுவரை திரு. பி. டி. ராஜன் அவர்களை முன்னோடியாக வைத்துச் சொல்வது வழக்கம். திரு. பி. டி. ராஜன் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் அந்தக் காலத்திலிருந்து, அவரேதான் ஜஸ்டிஸ் கட்சி என்று சொல்லும் அளவிலே கூட, அந்த ஜஸ்டிஸ் கட்சியில் ஒரே தலைவராக, ஒரே தொண்டராக இருந்துகொண்டிருக் கிறார்கள். அதேமாதிரி திரு. சண்முகம் அவர்கள் தமிழரசுக் கழகத்தில், அது மிக விருவிருப்பாக, மிகச் சிறப்பாக இருந்த 1940 ஆம் ஆண்டிலிருந்து





இன்றைய வரையில் இருந்து தமிழரசுக் கழகத்தை விட்டு அணுவளவும் இம்மியும் பிசகாதபடி இருந்து தொண்டாற்றியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, அவர்களின் சிறந்த உள்ளத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அடுத்தபடியாக நல்லொழுக்கத்தைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நாடகத் துறையில் இருப்பவர்கள், சினிமாத் துறையில் இருப்பவர்கள் என்று பார்க்கிற போது, சாதாரணமாக நல்லொழுக்கத்தைப்பற்றி அவர்களுக்கு அவ் வளவு தூரம் போதிக்க முடியாது என்ற கருத்து தமிழகத்தில் அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் துறையில் இருக்கிறவர்கள் தவறாக நினைத்துக் கொள்ள வேண்டாம். அது சரியான கருத்தாக இருக்கலாம், அல்லது தவறான கருத்தாக இருக்கலாம். ஆனால் பொதுப்படையாக அப் பிராயங்கள் இருக்கின்றன. நல்லொழுக்கம் என்று சொல்கிறபோது, வாய்ப்புக் கிடைக்காமல் இருப்பவர்கள் நல்லொழுக்கத்தோடு இருக்கிறார்கள் என்று சொல்வதில் பயனில்லை. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன மாதிரி, அவர் பார்ப்பதற்கே ஆள் அழகாக இருக்கக் கூடியவர், சிறந்த முறையில் அந்தக் காலத்தில் இருந்தவர். அவர் ஒழுக்கத்திற்கு உதாரணமாக கடைசி வரை இருந்தார். இது போன்றவர்களை இந்தத் துறையில் பார்ப்பது என்பது மிகவும் கஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுவும் இந்த மேலவையில்—எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது—மதுவிலக்குப் பிரச்னை வந்தபோது மதுவிலக்கைத் தளர்த்தக் கூடாது என்று பேசி அவர்கள் கவிதை யாக மட்டுமல்ல, ராகம் போட்டே, ராகத்தோடு ஒரு பாட்டைப் பாடினார்கள். அந்த நேரத்தில். நான், மேலவையில் இருக்கிறவர்கள் பாடலாமாவென்று கேட்டதற்கு முதலமைச்சரவர்கள் மதுவிற்குத்தான் விலக்கு, பாட்டிற்கு விலக்கு அல்ல என்று சொன்னது என் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் அடிக்கடி இந்த மேலவையில் பேசியபோதெல்லாம் தாகூர் கலையரங்கத்தைப் பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவ ருக்குச் சிறந்த ஞாபகார்த்தம் அந்த தாகூர் கலை அரங்கத்தை நல்ல முறையில் கட்டுவதாகும். இந்த அரசு அதற்குத் தகுந்த காரியங்களைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். முடிவாக நான் ஒன்று மட்டும் சொல்வேன். சினிமாவில், நாடகத் துறையில் இருக்கிறவர்களைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொல்வார்கள் என்று நண்பர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் அடிக்கடி என்னிடத்தில் சொல்வது வழக்கம். அறிஞர் அண்ணா அவர்கள், “இந்த நாடகத் துறையில், சினிமாத் துறையில் இருப்பவர்களை எரி நட்சத்திரத்திற்கு உவமையாகச் சொல்லி, எரி நட்சத்திரம் திடீரென்று மேலே யிருந்து கீழே விழுகிறபோது, சில சமயங்களில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக்

கொண்டிருக்கும். ஆனால் அதனுடைய வாழ்க்கை வானத்தில் அதிக நாட்கள் இருப்பதில்லை. கீழே விழுகிறபோது அது கரித் துண்டாக மாறிவிடும். இது போன்ற வாழ்க்கைதான் சினிமாத் துறையில், நாடகத் துறையில் இருப்பவர் களுக்கும். அவர்கள் ஒளிவிட்டுப் பிரகாசிப்பார்கள், மறு நிமிஷம் பார்க்கிற போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாத நிலைமையில் இருப் பார்கள்" என்று சொன்னார்கள் என்பதாகச் சொல்வது வழக்கம். ஆனால் நம்முடைய திரு. சண்முகம் அவர்களைப் பொறுத்தவரையில், அந்த விதிக்கு அவர் விலக்காக இருந்தார் என்றுதான் சொல்வேன். ஏனென்றால் அவர் நாடக வாழ்க்கையில் எரி நட்சத்திரமாக அல்ல, முழு நிலாவாக இருந்து கொண்டிருந்தார்கள். வளர்ந்து வளர்ந்து முழு நிலாவாக அவர்கள் இருந் தார்கள் என்பதைப் பார்க்கிறபோது, அதற்கும் அவர்கள் விதி விலக்காக இருந்துகொண்டிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்து அமைகிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** தலைவரவர்களே, இன்றைக்கு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானம் நம் மன்றத்தின் உறுப்பினராக இருந்த திரு. டி. கே. சண்முகம் அவர்கள் மறைவு குறித்ததாகும். அவர் என் பக்கத்திலே உட்கார்ந்திருந்தவர். கலைஞர் அவர்களும், துணைத் தலைவரவர்களும், எதிர்க்கட்சித் தலைவரவர்களும், நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களும் அவருடைய சேவைகளைப்பற்றி, அவர் மொழிக் காக எந்த அளவிற்குப் பாடுபட்டார், தேசத்திற்காகப் பாடுபட்டார் என்பதை பற்றிச் சொன்னார்கள். அதைத் தவிர நான் புதிதாக ஒன்றையும் சொல்ல முற்படவில்லை. அவருக்கிருந்த புகழுக்கும், பெருமைக்கும் அப்பால் அவர் ரொம்பவும் அடக்கமாக இருந்தவர் என்றுதான் சொல்ல வேண்டும். எப்போதும் சிரித்த முகத்தோடு, தலை வணங்கி, நண்பர்களை வரவேற்று வணக்கம் சொல்கிற ஒரு நிலை, படம்போல என் மனதில் அப்படியே நிலைத்தி ருக்கிறது. அவர் அரசியலில் தமிழ் மொழியை வளர்த்து அதற்கு தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு தன் தலைவர் திரு. ம.பொ.சி.யோடு அரும்பாடு பட்டவர் என்பதை நாம் அனைவரும் அறிவோம், தமிழகமும் உணரும். அம் மாதிரி அவர் தேசியப் பற்றும் மிகுதியாக உடையவர் என்பதை நாடு உணரும். இந்த நாடக உலகத்திற்கே ஒரு பெரிய புகழையும், பெருமையையும் தேடித் தந்தவர் திரு. டி. கே. சண்முகம் என்றால், அது மிகையாகாது. அவ்வளவு பெரிய சிறந்த ஒரு அன்பர் நம்முடைய மன்றத்தில் அங்கத்தினராக இருந்தது நமக்கெல்லாம் பெருமையாக இருந்தது. அவருடைய இழப்பு மன்றத்திற்கு ஒரு பெரிய இழப்பு. தமிழ்நாடும், இந்தத் தேசமும் ஒரு சிறந்த அன்பரை



இழந்துவிட்டது. அவர் தமிழ் உலகத்திலேயே முன்னிலையில் இருக்க அரும் பாடுபட்டவர். அப்படிப்பட்டவரை நாம் இழந்துவிட்டோம். இந்தக் குறையை யாராலும் ஈடு செய்ய முடியாது என்ற உணர்ச்சியோடு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். ஜெயராம ரெட்டியார்:** தலைவரவர்களே, மறைந்த நண்பர் பத்மஸ்ரீ டி. கே. சண்முகம் அவர்கள் மறைவு குறித்து நமது முதல்வரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மறைந்த திரு. டி. கே. சண்முகம் அவர்களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தேசப் பற்றும், தெய்வப்பற்றும், தமிழ்ப்பற்றும் ஒருசேர அமைந்த பண்பாளராக தமிழ்நாட்டிற்கே அவர் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினார்கள் என்றால், அது மிகையாகாது. நண்பர் திரு. சுவாமி நாதன் அவர்கள் சொன்ன மாதிரி, நாடகக் கலையில் ஈடுபட்டிருக்கிறவர் களுக்கு ஒரு நல்ல பெயர் கிடைப்பது கஷ்டம். நல்ல கௌரவமான பெயர் கிடைப்பது கஷ்டம். ஆனால் அதற்கு விதி விலக்காக, சென்ற 25 ஆண்டு களாக நாடகக் கலையில் இருப்பவர்களில் ஒரு பெரிய உன்னதமான ஸ்தா னத்தை வகித்த பண்பாளராக, எடுத்துக்காட்டாக இந்த நாட்டில் வாழ்ந்தவர், நாடகக் கலைக்கே ஒரு பெருமையைத் தேடிக் கொடுத்தவர் என்ற நிலையில் அவர் வாழ்ந்தார் என்ற பெருமையை அவர் தேடிக் கொண்டார். அவர் மது விலக்கிலே கூட மிகுந்த தீவிரமான நம்பிக்கை கொண்டவராக இருந்தார். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் கோடைக்கானலில் இதைப்பற்றிக்கூட வருத்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த மாதிரி அவர் ஒரு எடுத்துக் காட்டாக, நல்ல ஒரு பண்பாளராக நம்மிடையே திகழ்ந்தவர், அடுத்தவரும் அவரைப்போல வாழ்ந்து காட்டவேண்டுமென்ற ஒரு ஆசையை உடையவராக அவருடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர். குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்ன மாதிரி, நமது துணைத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களை நினைக்காமல் இருக்க முடியாது. அவருடைய மறைவு குறித்து அவர் சொல் லும்போது 'நான் இனிமேல் தனித்துவிடப்பட்டவன்' என்று திரு. ம. போ.சி.
மு.ப. 11-20. அவர்கள் அவருடைய மறைவு குறித்து மறைந்த நாளன்று செய்தி விடுத்திருந் தார்கள். நான் தனியனாகிவிட்டேன் என்ற சொல்லிலிருந்து, அவர் உண்மையி லேயே தனியனாகி விட்டார் என்பதும், எவ்வளவு தூரம் அந்தப் பற்று இருந் தது என்பதும் தெரிகிறது. எப்பேர்பட்ட ஒரு பெரிய மனிதரை இழந்து விட்டோம்! அவரை இழந்தது தமிழ்நாட்டிற்கே ஒரு இழப்பாகும், நாடகக் கலைத்துறைக்கும் ஒரு இழப்பாகும். நமது வாழ்க்கையிலே நாம் ஒரு பண்பா ளரை இழந்துவிட்டோம். அவருடைய மறைவுக்காக முதற்கண் நம் துணைத் தலைவர் அவர்களுக்கும், திரு. தி. க. சண்முகம் அவர்களுடைய குடும்பத் தாருக்கும் என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, in the demise of Thiru T. K. Shanmugam, this House has lost one of its most dignified Members and a very fine and sensitive personality. I think the whole field of Tamil Drama and Fine Arts has lost a sensitive personality who contributed so much to the cause of the Fine Arts and one of the great characteristics which other Members have stressed was his absolute sense of humility. In fact, artistes are generally temperamental and sometimes arrogant also, but Thiru T. K. Shanmugam in spite of being one of the most famous artistes of Tamil Nadu never lost his equanimity in his approach to the debates or in private conversation. I had always found him to be a man of extreme humility which was his outstanding characteristic. We in this House have lost a genial personality. We shall miss him very much, because when he used to enter the House in his flowing white robes and with his silver hair, we used to feel the presence of a great personality. It is indeed a sad thing to reflect that he should have been taken away in the prime of his life. On behalf of my party as well as on behalf of others who have witnessed him on the stage, I wish to convey to the members of the bereaved family and more particularly to his brother, our deep sense of sorrow and heart-felt condolences on his demise.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவரவர்களே, நமது அருமை நண்பர் கலைஞர் திரு. சண்முகம் அவர்கள் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து விட்டமைக்காக நாம் மிகுந்த வேதனையடைந்தவர்களாக இருக்கின்றோம். நான் சார்ந்திருக்கின்ற முஸ்லீம் லீக் கட்சியினுடைய அனுதாபத்தையும், என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நமது சண்முகம் அவர்கள், இந்த சபையிலே உறுப்பினர் ஆனார்கள். ஒரு மனிதர் இந்தச் சபையிலே உறுப்பினரானால், அவருடைய அந்தஸ்தும், கவுரவமும் உயர்வதுண்டு. ஆனால் ஒரு சிலர் இந்தச் சபையிலே உறுப்பினராவதன் மூலம் இந்தச் சபையினுடைய அந்தஸ்தும் கவுரவமும் உயர்வதுண்டு. நண்பர் திரு. சண்முகம் அவர்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய மறைவு உண்மையிலேயே எல்லோரையும் வேதனையில் ஆழ்த்தக்கூடிய ஒரு பேரிழப்பாகும். அவர்கள் இந்தச் சபையில் பல நல்ல கருத்துக்களைச் சொல்லியிருந்தார்கள். அவர்களுடைய பேச்சுக் களிலே ஒரு பேச்சு இன்றைக்கும் என் கண் முன்னால் நின்று கொண்டிருக் கிறது. அன்று பேசும்போது நான் முதலிலே பேசினேன். என்னை அடுத்து அவர்கள் பேசினார்கள். நாங்கள் இரண்டு பேரும் திராவிட முன்னேற்றக்



கழகத்தின் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எங்கள் இருவருக்கு மிடையே நமது அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் உட்கார்ந் திருந்தார்கள். அன்றைக்கு அவர்கள், இரண்டு பக்கம் இரண்டு விரோதிகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். நான் பேசிய பிறகு அன்றைக்கு அவர் பேசிய பேச்சு உண்மையிலேயே மனத்தைக் கலக்கக்கூடியதாக இருந்தது. மது விலக்கை ரத்து செய்யும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார்கள். பேசியபோது தன்னுடைய தந்தையார் மது அருந்திக்கொண்டு தன்னுடைய தாயாரை அடித்த காட்சியை வருணித்துப் பேசினார்கள். சிறு குழந்தையைப் போல அவர் தேம்பித் தேம்பி அழுது பேசினார்கள். அதை யாரும் மறக்க முடியாது. எந்த அளவுக்கு வேதனையுடன் அவர்கள் பேசுகிறார்கள் என்பதை உணரும்போது அது உண்மையிலேயே நெஞ்சத்தை அசைக்கக்கூடிய பேச்சாக இருந்தது. எப்போதுமே மறக்க முடியாத அளவுக்கு, பசுமையாக என்னுடைய நினைவிலே இருக்கக்கூடிய பேச்சாக, அது அமைந்தது. இத்தகைய உருக்கமான கருத்துக்கள் நம் கவனத்தை ஈர்க்கக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன என்று நான் கருது கிறேன். நல்ல மனிதர் என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்கள். நம் சண்முகம் அவர்கள் பழகுவதில் இனிமையான சுபாவம் கொண்டவர்கள். அவர்கள் சில காலம் எனது பக்கத்து ஸ்தானத்திலே இந்தச் சபையிலே வீற்றிருந்ததன் காரணமாக, அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது எனக்குக் கிடைத்த ஒரு பேறு என்றுதான் சொல்ல ஆசைப்படுகின்றேன். அவருடைய பேச்சிலும் மூச்சிலும் தமிழ்ப் பற்று பிரகாசித்தது. அவர் தமிழ் மொழியின்பால் எவ்வளவு பற்று கொண்டிருந் தார் என்பது ஒவ்வொரு வார்த்தையாலும் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு இருந்தது. அவர்கள் தமிழ் மொழியில் எத்துணை பற்று கொண்டவர் களாக இருந்தார்கள்! அவர்கள் 6 வயது முதற்கொண்டு நாடகத் துறையிலே ஈடுபாடு கொண்டு கடைசி மூச்சு வரைக்கும் அதிலே ஈடுபாடு கொண்டவர் களாக இருந்தார்கள். மூன்று மாதத்திற்குள் ஒரு நாள் நான் அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். அப்போது நான் நடிப்பதை நிறுத்திவிட்டேன் என்று அவர்கள் சொன்னார்கள். அது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஏன் நிறுத்திவிட்டீர்கள் என்றேன். டாக்டர் பிளட் பிரஷர் என்று சொன்னார் என்றும், நடிக்கக்கூடாது என்று தடை உத்தரவு போட்டுவிட்டார் என்றும் ஆகவே நிறுத்திவிட்டேன், இனிமேல் நடிக்கவும் போவதில்லை என்றும் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர் சொன்னது கடைசி வார்த்தையாகவே முடிந்துவிட்டது. இது உண்மையில் ஒரு வேதனைக்குரிய அம்சமாகும். அவருடைய சிறுபிராயத்திலிருந்தே அவர் கலைத் துறையில் ஈடுபட்டிருந்தாலும், பொதுவாழ்விலும் அவருடைய பங்கு கணிசமாக இருந்தது. மக்களுக்குச்

சேவை செய்யவேண்டுமென்ற ஒரு பற்று அவரிடத்திலே உருவாகியிருந்ததன் காரணமாக, தமிழரசுக் கழகத்திற்கு அவர் ஒரு செயலாளராக இருந்தார். அது அவருடைய சேவையால் முன்னேற்றம் அடைந்ததற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. அத்தகைய ஒரு நல்ல மனிதர் மறைந்து விட்டதற்கு மீண்டும் என் அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொண்டு முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. ஆர். சக்தி மோகன்: தலைவரவர்களே, முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அனுதாபத் தீர்மானத்திற்கு என்னுடைய கட்சியின் சார்பிலே ஆதரவு தெரிவித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக நாடகக் கலையின் மூலம் தேசிய இயக்கத்திற்கும், தெய்வீக இயக்கங்களுக்கும் அருந்தொண்டு ஆற்றிய பெருமைக்குரியவர்
மு. ப. 11-40 திரு. டி. கே. சண்முகம். அவர் அடக்கமாகவும் நண்பர்களுக்கெல்லாம் நண்பராகவும் இருந்தவர். அவர் இவ்வளவு விரைவில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார் என்பதை நினைத்துப்பார்க்கவும் முடியவில்லை. நினைத்துவிட்டால் அவரைப்பற்றி என்ன பேசுவது என்பதற்கு வார்த்தைகளே வரவில்லை. அந்த அளவுக்கு அவர் அனைவருக்குமே நண்பராக இருந்தார். யாரோடு பழகினாலும் பழகிய மட்டில் அவரை மறக்க முடியாது. அந்த அளவுக்கு பண்போடு வாழ்ந்தவர். நண்பர்கள் கூறிய மாதிரி, நாடகத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பல குறைபாடுகள்; அதுவும் சமுதாயத்திலே நாடகக்காரர்கள் என்று சொன்னால், அவர்களுக்கு என்று ஒரு சரியான அந்தஸ்து தரப்படாதிருந்த காலத்திலே நாடகத் துறைக்கே ஒரு தனி கவுரவத்தையும், தனி அந்தஸ்தையும் கொடுத்ததன் மூலம் அவர் தமிழ் நாட்டிற்குப் பெரும் கலைஞராக விளங்கினார். அவர்களுடைய இரண்டொரு நாடகங்களுக்கு நானே தலைமை வகித்திருக்கிறேன். அருமைத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் திண்டுக்கல்லிலே நடந்த நாடகத்திற்குத் தலைமை வகித்தபோது, 'கூத்து இலக்கியத்தின் இலக்கியம்' ஆக இருப்பவர்கள் தமிழ் நாட்டில் திரு. தி. க. சண்முகம் அவர்கள் என்று அன்றைக்கு அவரைப் புகழ்ந்தார்கள் என்பதை நினைவுகூர்கிறேன். திரு. சண்முகம் அவர்கள் இருதய நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று குணமடைந்து வருகின்றார்கள் என்றும், இரண்டொரு நாளில் வீடு திரும்பிவிடுவார்கள் என்றும் கேட்டு மகிழ்ச்சிகரமாக இருந்த நேரத்தில் மறுநாள் மரணம் அடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டவுடனே மிகமிக வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தவர்களில் நானும் ஒருவன். திரு. ம. பொ. சி. அவர்களோடு 1948-49 ஆம் வருடம் முதல் தொடர்பு கொண்டிருந்த எனக்கு, அவருக்கு என்னைவிட மிகமிக நெருங்கிய முறையில் அவருடைய அரசியலின் அரசியலாக



இருந்தவரை, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த ஒருவரை இழந்து திரு. ம. பொ. சி. அவர்கள் எப்படி அந்த வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம்தான் எனக்கு முதலில் ஏற்பட்டது. நாடகத் துறையில் பெரியதொரு நடிகர் என்பது மட்டுமல்லாமல், அங்கத்தினர்கள் கூறியதுபோல பல நல்ல நடிகர்களை, புகழ்வாய்ந்த நடிகர்களை உண்டாக்கிய பெரியதொரு ஆசானாக இருந்தார். அவருக்கு பத்ம ஸ்ரீ பட்டம், முத்தமிழ் கலா வித்வ ரத்தினம் என்ற பட்டம் எல்லாம் அளித்து கௌரவித்தாலும்கூட, அந்தப் பட்டங்கள் அவர் மூலமாகப் பெருமைப்பட்டன என்றுதான் நான் கருதுகிறேன். தமிழ் இனத்திற்காக, தமிழ் கலைக்காக, தமிழ் மொழிக்காக அவர் பட்டிருக்கிற பாடு கொஞ்சநஞ்சமல்ல. தமிழ்க் கலையையும், தமிழ் இனத்தையும், தமிழ் மொழியையும் அவர் வாழ்வித்த அளவிற்கு, அவரை அந்த இனமும், கலையும் வாழ்வித்திருக்கிறதா என்பதைப்பற்றி நாம் ஐயப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே அவருடைய புகழ் நிலைக்க, அவர் மூலம் வளர்ந்துள்ள நாடகத் துறை வளத்தோடும் கௌரவத்தோடும் வளர்வதற்கான வகையில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு அவருக்கு ஒரு நல்லதோர் நினைவுச் சின்னத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் வேண்டி, அனுதாபத் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பாக ஆதரித்து அமர்கிறேன்.

* திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு தலைவரவர்களே, மறைந்த கலைஞர் அவர்களின் பலவகைப்பட்ட சிறப்பினை அவரையறிந்த பெரியோர்களெல்லாம் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். உலகிற்கு உயரிய கருத்துக்களையெல்லாம் அவர்கள் உத்தமமான நடிப்பின் மூலமாக எடுத்துரைத்தார்கள் என்ற உத்தமர்களின் வரிசையில் அவர்கள் இடம் பெறுகிறார்கள். தமிழ் உலகமே அவருடைய மறைவு குறித்து வருந்துகிறது. ஆனால் இன்று நாம் அதை நினைத்து வருந்துவது நமக்கு ஒரு புற நிகழ்ச்சியாக அமையாதபடி, அந்தப் பெரியாரை இந்த அவையில் அங்கத்தினராக நமது அன்பிற்குரிய அரசு ஆக்கியமையால் நம்மில் ஒருவரை இழந்துவிட்டோமே என்ற எண்ணம் தோன்றுகிறது. அவர் இனிய சுபாவம் உள்ளவர் என்றும், சாந்தமானவே இருக்கக்கூடியவர் என்றும் கூறப்பட்டது. அவர்கள் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்கள் என்று எடுத்துக் கூறினார்கள். யாரேனும் ஆங்கிலத்தில் நுணுக்கமாகப் பேசுவார்களேயானால், எனது பக்கத்திலிருந்து அதன் நுணுக்கம் என்ன என்று அவர்கள் கேட்பார்கள். கூறின பிறகு, இதைத் தமிழிலேயே சொல்லியிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும் என்று சொல்லி வருந்துவார்கள். அவர்கள் எல்லாம் தமிழ் மயமாக இருக்க வேண்டும் என்ற கனவை நனவாக இங்கே கண்டார்கள். தமிழ் அல்லாதபடி ஆங்கிலத்தில் பேசும்பொழுது, அவருக்குக்

கோபம் வரலாம். ஆனால் அது அவரிடம் ஒரு பெரிய குறை என்று கருது கிறேன். அவருக்குக் கோபம் என்பதே தெரியாது என்று கருதுகிறேன். நடிப்பில் கோபித்திருக்கலாம். ஆனால் விவாதத்தில் அவர்கள் கோபித்துப் பார்த்ததே இல்லை. சாந்தமாக இரு, கோபப்படாதே என்று தேசப் பிதா காந்திஜி அவர்கள் சொன்ன உண்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர் அவர் என்று நான் கருதுகிறேன். வாதங்களில் ஏன் கோபம் என்று காந்திஜி அவர்கள் கேட்பார்கள். If you are in the right, you need not lose your temper. If you are in the wrong, you cannot afford to ''

என்று அவர்கள் கூறுகிறார்கள். வாதிக்கும்பொழுது வாதம் நியாயமாக இருந்தால், கோபத்திற்கு இடமே இல்லை. வாதம் அநியாயமாக இருந்தால், கோபம் வேறு வர வேண்டுமா என்று கூறுகிறார்கள். அவர்கள் புன்முறுவலுடன் நியாயமான கோரிக்கைகளை, ஆளும் கட்சி ஏற்றுக்கொள்ளாதபடி சில கோரிக்கைகளைக்கூட எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் எடுத்துக் கூறும் பாங்கை எல்லா அரசியல் வாதிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அரசியல் கட்சிகளுக்குள் பல மோதல்கள் ஏற்படும்பொழுதுகூட, நமது கோரிக்கைகளை என்றும் நாம் கோபத்திற்கு இடம் அளிக்காதபடி, சிறிதுகூட நம்முடைய சாந்தத்தை இழக்காதபடி எடுத்துக் கூறவேண்டும் என்பதை அவரிடமிருந்து பிற அங்கத்தினர்களாகிய நாம் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன். 61 வயது வாழ்ந்து மறைந்தார்கள், இளைஞராக மறைந்தார்கள் என்று நான் கருதுகிறேன். உலகத்தில் '' Those whom the God loves die young '' என்று சொல்வது உண்டு. ஆண்டவனுடைய அன்பிற்கு உரியவர்கள் எல்லாம் இளமையிலே மறைவார்கள் என்று சொல்வதுண்டு. இது அல்ப ஆயுசிலே இறந்தவர்களுக்காக ஏதோ ஆறுதலுக்காகச் சொல்லக்கூடியதல்ல. எத்தனையோ ஆண்டுகள் வாழ்ந்து இறந்தாலும் கூட, இறக்கும்பொழுதுகூட, இளைஞருக்கு இருக்கிற மனப்பான்மையுடன் இறக்கும் ஒருவர்தான் ஆண்டவனுடைய அன்பிற்கு அருகதையானவர் என்று கருத வேண்டியது பேருண்மையாகும். அவரிடம் அவருடைய வயதிற்குரிய ஒரு முதுமை விவேகம் இருந்தது. இளைஞருக்கு உரிய ஒரு ஆவல், அதற்கு வேண்டிய ஒரு உற்சாகம் எல்லாவற்றையும் அவரிடம் நாம் கண்டோம். நம்முடன் ஒருவராக இருந்து, வாழ்ந்து மறைந்த அப்பெரியாரின் நினைவு என்றென்றும் நம் தமிழ்நாட்டில் இருக்க வேண்டுமென்று இப்பேரவையில் உள்ள கட்சி சார்பற்ற ஆசிரியர்களின் சார்பில் நான் வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்:** மறைந்த திரு டி. கே. சண்முகம் அவர்களுக்காக முதலமைச்சர் கொண்டுவந்த அனுதாபத் தீர்மானத்தை ஏற்றுப் பேசிய பல கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் சொல்லிய கருத்துக்





களில், அந்தக் கவலை மிகுந்த கருத்துக்களில், நானும் பங்கு கொள்கிறேன் என்று முதன் முதல் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நம்மிடையே நீண்ட காலம் வாழ்ந்துவிட்ட ஒருவர் நம்மிடையே இருந்து பிரிந்துவிட்டார். தனக்கு வந்திருந்த அவமானத்தைக் கூடக் கருதாமல், தான் பேசுகின்ற மொழிக்கும் வாழ்கின்ற நாட்டிற்கும் வருகின்ற அவமானத்தை போர்க்களத்திலே சந்திக்கின்ற போர் வீரன் இறந்துவிட்ட பிறகு, அவருடைய குடும்பத்திற்கு நம்முடைய ஆறுதலைச் சொல்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்று கிரேக்க நாட்டு அரசன் பெரிக்லீஸ் போர்க்களத்தில் மாண்டுவிட்ட வீரர்களின் குடும்பத்தைப் பார்த்துச் சொன்ன அறிவுரையை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். மறைந்த நண்பர் திரு. டி. கே. எஸ். அவர்கள் தமிழ் பேசினால், அவர் மூச்சும் பேச்சும் எல்லாம் தமிழாக இருந்ததாக நீங்கள் எல்லாம் சொன்ன கருத்திலிருந்து நான் கொஞ்சம் மாறுபடுகிறேன். ஏனென்றால் தமிழ் அவர் மூச்சாகவும் இல்லை, பேச்சாகவும் இல்லை; அவரே தமிழாக இருந்தார். அவரே தமிழாக இருக்கிறபொழுது, அவரது பேச்சும் மூச்சும் தமிழாகத்தான் இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயப்பாடு தேவையில்லை என்றே கருதுகிறேன். அவர் இந்த மன்றத்திற்கு வருகிறபொழுதெல்லாம் நான் நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைப் பார்ப்பேன். திரு. சண்முகம் அவர்கள் வராமல் தனியாக திரு. ம.பொ.சி. அவர்களைக் கண்டதேயில்லை. இப்பொழுது இங்கே பார்க்கிறபொழுது, நண்பர் திரு. ம.பொ.சி. அவர்களுக்குப் பின்னால் ஏதோ ஒரு சூன்னிய இடைவெளி, ஒன்றுமே இல்லாத ஒரு இடம், நிரப்பப்படாமல் விடப்பட்ட ஒரு இடம் தெரிகிறது. அவருக்குத் துணையாக இருந்த ஒருவர், அவரை விட்டு விட்டுப் போய்விட்ட பிறகு, திரு. டி. கே. சண்முகம் அவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்வதற்கு முன்னாலேயே, அல்லது ஆறுதல் சொல்வதுடன் கூடவே, நமது மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டியிருக்கும்.

திரு. டி. கே. எஸ். 25-ம் தேதி ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்று எனக்கு முதன் முதல் அறிவித்தவரே நமது துணைத் தலைவர் அவர்கள்தான். நான் அன்று போய்ப் பார்க்கமுடியாத நிலைமையில் நானும் மருத்துவ மனையில் படுக்கையில் இருந்த காரணத்தால், அன்றாடம் திரு. ம.பொ.சி. அவர்களுடன் தொடர்பு கொண்டு அவர் உடல் நிலையைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருந்தேன். உள்ளபடியே நமது நாட்டில் 61 ஆண்டுகள் வாழ்வது என்பது மிகப் பெரிய காலம் என்றாலும், நாட்டிற்கு உதவாத ஒருவர், சமுதாயத்திற்கு உதவாத ஒருவர், மொழிப்பற்றில்லாத ஒருவர், இறந்துவிடுகிறபொழுது, நாடு கவலைப்படுவதில்லை. ஆனால் ஒரு சமுதாயத்திற்

காகவும், மொழிக்காகவும், கலைக்காகவும், நாடகத்திற்காகவும், வாழ்ந்த ஒருவர் இவ்வளவு சீக்கிரம் போய்விட்டாரே என்று ஏற்படுகிறபொழுது, அந்த இடைவெளியை நிரப்புவதற்கு யார் கிடைப்பார் என்று ஏங்குகின்ற வேளையில், மற்ற யாரும் கிடைக்காதபொழுது, துக்கம் அதிகரிக்கத்தான் செய்யும். இந்த நிலைமையில்தான், என்னைப் பொறுத்தவரையில், நண்பர் திரு. டி.கே.எஸ் அவர்களை வைத்துப் பார்க்கிறேன்.

மற்றொரு கலைஞர் இங்கு வரக்கூடும். ஆனால் அவர் வருகிறபொழுது, தமிழ்த் தேரே அசைந்து வருகிற மாதிரி, நில நடுக்கம் ஏற்படாத அளவுக்கு காலடிச் சத்தம்கூட பிறருக்குக் கேட்காமல் வருவார் என்பதை நான் அவர் இல்லாத நேரம் எண்ணி எண்ணி மகிழ்வதுண்டு. அப்படிப்பட்ட ஒருவரை இழந்து விட்டிருக்கிறோம். அவர் மாத்திரமல்ல. நண்பர் திரு. டி. எஸ். அருணாசலம் அவர்கள் இந்தப் பக்கத்திலே வீற்றிருந்தார்கள். இந்த ஆண்டிலேயே நாம் இரண்டு உறுப்பினர்களை இழந்துவிட்ட துக்கத்திலேயிருக்கிறோம். ஆனாலும் மறைந்துவிட்ட டி.கே.எஸ். அவர்கள் விட்டுச்சென்ற வேலைகளை, அவர் எந்த இடத்திலே அந்தப் பணிகளை விட்டாரோ அந்த இடத்திலிருந்து மேலும் மேலும் தொடர்ந்து சிறக்கச் செய்யவேண்டும் என்று அவருக்குப் பின்னாலே வருகின்ற கலைஞரைக் கேட்டுக்கொண்டு, நீங்கள் காட்டிய அனுதாபத்தில் நானும் பங்கு பெறுகிறேன் என்று சொல்லிக்கொண்டு இதைப்படிக்கிறேன்.

'ஔவை சண்முகம்' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. டி.கே. சண்முகம் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு, ஆளுநர் அவர்களால், 21—4—1968-ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டார். அவர், டில்லி சங்கீத நாடக அகாடமியிலும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்திலும் உறுப் பினராக இருந்தார். அவர், தனது நாடகக் குழுவினருடன், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார். அவர், 1966-ம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில், இந்தியக் குழுவின் உறுப்பினராகக் கலந்துகொண்டார். அவர், நூற்றுக் கணக்கான நாடகங்களை நடத்தியுள்ளார். நடைமுறைக்குகந்த வகையில், அமைந்துள்ள இந்த நாடகங்கள் மக்களின் கருத்தை ஈர்த்து தமிழ் நாடக உலகில் புதியதொரு வரலாற்றையே ஏற்படுத்தின. அவர், தமிழ்நாடகக் கழகத்தின் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார். அவர் சிறந்த நடிகர் என் பதற்காக குடியரசுத் தலைவர் பரிசையும், பத்மஸ்ரீ பட்டத்தையும் பெற்றுள்ளார். சட்டமன்ற மேலவை நடவடிக்கைகளில் அவர் தீவிர பங்கு கொண்டு செயலாற்றி யுள்ளார். அவரது மறைவால் சிறந்த நண்பர் ஒருவரை நாம் இழந்து விட்டோம்.



அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறும், இத்தீர்மானத்தை நிறைவேற்றுமாறும் இம்மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்றார்கள்).

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்:** மறைந்த திரு. டி. கே. சண்முகம் அவர்களின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மேலவை இப்போது கலைந்து, 1973-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை மாலை 4 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

புதன்கிழமை, 1973 பிப்ரவரி 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Health Officers*

* 127 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the names of the Municipalities in the State where the posts of Health Officers are vacant as on 1st November. 1970 and as on date and the period for which they have been kept vacant?

### சுகாதார அதிகாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1970, நவம்பர் முதல் நாளில், இம்மாநிலத்தில் எந்தெந்த நகராட்சிகளில் சுகாதார அதிகாரி பதவிகள் காலியாகவிருந்தன ? இன்றைய தேதியில் எத்தனை காலியாகவுள்ளன ? எவ்வளவு காலமாக அவை காலியாகவுள்ளன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1—11—1970-ல் நகராட்சிகளில் உடல் நலத் துறை அலுவலர்களின் இடங்கள் காலியாக இருந்தது பற்றி ஒரு விவரப் பட்டியல் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் திருவாரூர் நகராட்சியில் மட்டும் அத்தகைய உடல்நல அலுவலரின் இடம் நிரப்பப் படாமல் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 8—10—1970 அன்று கொடுக்கப்பட்டதாகும். எட்டு மாதகாலமாக இந்தப் பதவி தஞ்சையில் காலியாக இருந்தது. அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள புதிய விவரங்களி

விருந்து பார்த்தால், தஞ்சையில் மட்டுமல்லாமல் வேறு பலவிடங்களிலும்
இப்பதவி காலியாக இருந்தது என்று தெரிகிறது. சில இடங்களில் நான்கு
ஆண்டுகள், ஐந்து ஆண்டுகளாகக் காலியாக இருந்ததாகத் தெரிகிறது.
ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை போன்ற இடங்களில் இத்தனை ஆண்டுகளாக அந்தப்
பதவிக்குரிய அதிகாரிகளைப் போடாததற்குக் காரணம் என்ன? இனிமேல்
இம்மாதிரியான தாமதத்தைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்
கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்தப் பெயரில்
இருந்த பதவிகள் காலியாக இருந்தது உண்மை. ஆனால் அந்தப் பெயரில்
உள்ள பதவிகள் மற்றொரு பெயரால், 'துப்புரவுத் துறை அலுவலர்கள்—
சேனிடரி இன்ஸ்பெக்டர்ஸ் செலக்ஷன் கிரேட்' உடையவர்கள் 1962 முதல்
அந்தப் பதவிகளை நிரப்பி வந்தனர். மறுபடியும் ஹெல்த் ஆபீசர்கள் என்று
எம்.பி.பி.எஸ். பட்டத் தேர்வு பெற்றவர்களை நியமிப்பது என்ற கொள்கை
23—7—70 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு அப்படித் தேர்வு பெற்ற
வர்கள் அந்தப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதற்குப் பின்னர்
நேரடியாக எடுக்கப் பெற்ற எம்.பி.பி.எஸ். தேர்வு பெற்றவர்கள் அந்த
நியமனத்தை மனதார விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை என்று காணப்பட்டது.
ஆகவே அதற்குப் பின்னர், ஏறத்தாழ ஆறு திங்களுக்கு முன்னர் அந்த
ஹெல்த் ஆபீசர் பொறுப்புக்கு 42 டாக்டர்கள் நேரடியாக சர்வீஸ் கமிஷனால்
தேர்ந்தெடுக்கப்பட்டு பெரும்பாலான இடங்களில் அந்த ஹெல்த் ஆபீசர்
பதவிகள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இன்றையதினம் நிரப்பப்
பட்டிருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்கள் மன்னார்குடியிலிருந்து மேட்டுப்பாளையம்
வரையில் உள்ள ஊர்களைப் பொறுத்ததுதான் என்று தெரிகிறது. ஸ்ரீரங்கம்,
திருவண்ணாமலை ஆகிய ஊர்களில் நான்கு ஆண்டுகளாக அந்தப் பதவி நிரப்பப்
படாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? திருவண்ணாமலையில் 1967-லிருந்து
1972 வரை சுகாதார அதிகாரி இல்லை. இப்படி ஆண்டுக் கணக்கில் காலியாக
இருக்க வேண்டிய அவசியம் என்ன? இனிமேலாவது அம்மாதிரி ஏற்படாத
வாறு பார்த்துக்கொள்ள அரசாங்கம் எந்த முறையைக் கையாளப்போகிறது
என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, it is one thing to
say that a Health Officer did not hold the post to be in charge of
the sanitary condition in the Municipality; but it is another thing



to say that some Sanitary Inspector was in charge of the same work.
As such, a Sanitary Inspector in an up-graded position was in
charge of the work though the post of Health Officer was vacant.

THIRU G. SWAMINATHAN: Sir, as I have already informed,
in some of the places, the Health Officers were not there; but,
perhaps, some other persons who were inferior in official status
might have attended to the work. But, actually, the posts of
Health Officers were vacant and that is what the Minister has also
stated in his reply. It may be all right in the case of places like
Mannargudi, Mettupalayam, etc., where there has been an altera-
tion of the post. But even in the other places mentioned as items
(1) to (8) in the note given to us, the posts have remained vacant.
That is what I could not understand.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, even when the
post is vacant and a Health Officer is not posted there, the next
man in the official line is in charge of the work concerning the
Municipality and that arrangement was always there.

THIRU G. SWAMINATHAN: Sir, in that case, can we
construe that without the Medical Officer, other persons can be in
charge for years; and if so, what was the necessity to see that
Health Officers were appointed?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, wherever the
qualified people are not willing to come forward to take up such
posts, naturally the posts could not be filled up. That was the
position in the present case.

## *Ayurvedic System of Medicine*

* 128 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon.
the Minister for Public Health be pleased to state the steps taken
by the Government to foster Ayurvedic system of medicine in
this State?

## ஆயுர்வேத மருத்துவ முறை

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

இம்மாநிலத்தில் ஆயுர்வேத மருத்துவ முறைக்கு ஊக்கமளித்து வளர்க்க
அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மூன்று இந்திய மருத்துவ முறைகளான சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், யுனானி மருத்துவம் ஆகியவற்றுள் ஆயுர்வேத மருத்துவமும் யுனானி மருத்துவமும் பிற மாநிலங்களில் பெரிதும் கையாளப்படுகின்றன. சித்த மருத்துவம் தமிழ் நாட்டின் தனித்தன்மை பெற்ற மருத்துவ முறையாகும். இங்ஙனம் சித்த மருத்துவ முறை அரசிடம் தனிச் சலுகைகள் பெறுவதற்கு உரித்தாயினும், அரசு மற்ற இரு முறைகளையும் ஒதுக்கிடவில்லை. தமிழ்நாட்டில் ஏறத்தாழ 97 ஆயுர்வேத மருத்துவ மனைகள் அரசாலும், உள்ளாட்சி மன்றங்களாலும், தனியார் நிறுவனங்களாலும் நடத்தப் பட்டு வருகின்றன. தனியார் நடத்தும் தகுதி வாய்ந்த ஆயுர்வேத மருத்துவ மனைகளுக்கு அரசு மான்யங்கள் வழங்குகின்றது. சென்னையில் அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவ மனையில் புது டில்லி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆராய்ச்சி மையக் குழு ஓர் ஆயுர்வேத மருத்துவ ஆராய்ச்சிப் பகுதி அமைக்க இவ்வரசு எல்லா உதவிகளையும் செய்துள்ளது. ஆயுர்வேத மருத்துவத்திற்காக மேற்கூறிய மருத்துவ மனையில் ஒதுக்கப்பட்ட 33 படுக்கை களில், பத்து படுக்கைகளை மேற்கூறிய ஆராய்ச்சிப் பகுதிக்காக அரசு ஒதுக்கி யுள்ளது.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சித்த வைத்திய முறைக்குச் சிறப்பான சலுகைகள் அளித்து வருகிறோம் என்று சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஆயுர்வேதத்திற்கும் ஊக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது. சித்த வைத்தியர்கள் உற்பத்தி செய்கின்ற மருந்துகளுக்கு வரிச் சலுகைகள் அளிப்பதுபற்றி அரசிடம் ஏதாவது யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் ஏதும் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. மு. இராமநாதன் :** தலைவர் அவர்களே, ஆயுர்வேத வைத்திய முறை யில் மிகுந்த சிறப்பிடத்தைப் பெற்றிருக்கின்ற வாரணாசி பல்கலைக் கழகத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து சிறப்புப் பயிற்சி பெறுவதற்கு யாரேனும் அனுப்பப் பட்டிருக்கிறார்களா? அப்படி அனுப்பப்படவில்லை என்றால், இனிமேலாவது அனுப்புகின்ற உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அப்படி யாரும் விண்ணப்பம் செய்யவில்லை. அப்படி ஏதாவது விண்ணப்பம் வந்தால், அனுப்பத் தான் வேண்டுமா என்பது பரிசீலனை செய்யப்படும்.





**திரு. எல். பளனிமன் :** தலைவர் அவர்களே, யுனானி, சித்த வைத்தியம், ஆயுர் வேதம் ஆகிய இந்த மூன்று வைத்திய முறைகளும் இப்பொழுது வளர்ந்து வருகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று வைத்திய முறை களுக்கும் ஏதாவது ஒரு முறையில் தொடர்பு படுத்த அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மனித ருக்கும் ஒவ்வொரு வகையான நோய் வருகிறது. ஒவ்வொரு வகையான நோய்க்கும் ஒவ்வொரு வகையான வைத்திய முறை சிறப்பாக இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, ஹோமியோபதி கல்லூரி ஆரம்பிப்பதற்கு திட்டம் இருக்கிறதா? அதற்கு ஒதுக்கப்பட்டிருக் கின்ற தொகை எவ்வளவு? எப்பொழுது துவக்கப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி ஏற்பட வேண்டும் என்ற ஆசை எங்களுக்கும் இருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக் கின்ற தொகையைக் கொண்டு எப்படிச் செய்யலாம் என்பது ஆலோசனையில் உள்ளது.

*Prevention of new slums coming up in Madras City*

* 120 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken by the Tamil Nadu Slum Clearance Board to prevent new slums coming up in Madras City?

**சென்னையில் புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படுவதைத் தடுத்தல்**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னை மாநகரில் புதிதாக குடிசைப் பகுதிகள் ஏற்படுவதைத் தடுக்க தமிழ் நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் எடுத்துள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்னை மாநகரில் புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(1) குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முன் அனுமதி பெறாமல், குடிசைப் பகுதிகளில் குடிசைகள் அல்லது கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது என்று விதிக்கும் தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு

அகற்றுதல்) சட்டத்தின் 3, 5, 29, 62-வது பிரிவுகளிலுள்ள விதித் துறைகளைப்
பொதுமக்களின், குறிப்பாக, குடிசைப்பகுதி மக்களின் நாட்டத்திற்குக்
கொண்டுவருகிற அறிவிப்பு ஒன்று தினசரி செய்தித் தாள்களில் வெளியிடப்
பட்டுள்ளது.

( ii ) குடிசைப் பகுதிகளில் அனுமதி பெறுமல் ஆக்கிரமிப்பு செய்துள்ள
வர்களை குடிசைப்பகுதி மாற்று வாரிய அதிகாரிகள் வெளியேற்றி வருகின்றனர்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் குடிசைப் பகுதி
மாற்று வாரியம் ஏழு ஆண்டுகளில் சென்னையில் இருக்கும் குடிசைகளை மாற்றி
யமைப்பதற்குத் திட்டம் வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதன்படி
எத்தனை குடிசைகளை மாற்றியமைத்திருக்கிறார்கள் என்பதற்கு, விவரம் இருந்
தால், அறிய விரும்புகிறேன். மேலும் புதியதாக வந்துள்ள குடிசைகள்
அகற்றப்படுவதாகச் சொன்னார்கள். எவ்வளவு குடிசைகள் அவ்வாறு அகற்றப்
பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சென்னை நகரில்
4-10 ஏறத்தாழ 1,200 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளில் குடிசை
மி.ப. மாற்று வாரியத்தின் பணி நடைபெற்றாக வேண்டும். 1,200 குடிசைப் பகுதி
களில் 7 ஆண்டுக் காலத்தில் கட்டி முடிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ள குடி
யிருப்புக்களின் எண்ணிக்கை 1,50,000 ஆகும். இப்போது எடுத்துக்கொள்ளப்
பட்டுள்ள திட்டங்கள் 85. அவைகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள குடி
யிருப்புக்கள் 28,579. அந்த 85 திட்டங்களில் செயல்பட ஆரம்பித்த திட்டங்கள்
63. அந்தத் திட்டங்களின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் 23,232. அதிலே
கட்டி முடிக்கப்பட்டவை 4,590. வேலை நடந்து கொண்டிருப்பது 7,897. ஆரம்ப
வேலைகள் தொடங்கப்பட்டிருப்பவை 10,745. ஆக இந்த முதல் கட்ட வேலை
23,232 குடியிருப்புகள் அமைவதோடு முடிவுறும். எவ்வளவு குடிசைகள்
அகற்றப்பட்டுள்ளனவென்ற விவரமில்லை. அத்துமீறி கட்டப்பட்ட நூற்றுக்
கணக்கான குடிசைகள் அகற்றப்பட்டுள்ளன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, குடிசைகள் அகற்றப்
பட்டு, புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள காலனிகளிலே, பாதைகளிலும்,
அதன் ஓரங்களிலும் புதிய புதிய குடிசைகள் கட்டப்பட்டு, அந்தக் கட்டிடங்
களே குடிசைகளாக மாறிவிட்டன. அதை அரசு அறியுமா ? அப்படிக் கட்டு
கின்ற குடிசைகளை உடனடியாக அப்புறப்படுத்த முயலுமா என்பதை அறிய
விரும்புகிறேன். மேலும் இனிமேல் அப்படிக் கட்டப்படுவதை உடனே அகற்ற
அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, குறிப்பாக அயோத்
தியா குப்பம், நொச்சிக் குப்பம் போன்ற பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர்
பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறாரென்று கருதுகிறேன். அங்கெல்லாம் அந்தக்
குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. சில குடிசைகளிலே உள்ள
வர்கள் அந்த இடங்களுக்கு இன்னும் மாற்றப்படவில்லை. வேலை முழுமையடை
யாத காரணத்தால், அவர்கள் மாற்றப்படவில்லை. அங்கே புதிதாகக் குடிசைகள்
கட்டிவிட்டார்கள் என்று எண்ணுவது தவறாகும். இன்னும் அங்கே கட்டி
முடிக்காத காரணத்தால், அந்தக் குடிசைகள் அப்படியே இருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, சில இடங்களில் அத்துமீறி
குடிசைகளைப் போடுபவர்கள் இருக்கிறார்கள். அவைகளை அகற்றுகிற நேரத்தில்,
யாரும் சிபாரிசுக்கு வாராமல் இருந்தாலே, குடிசை மாற்று வாரியத்தின் பணி
வேகமாக நடைபெற வழியுண்டு.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, இந்தக் குடிசை மாற்று
வாரியத்தின் மூலமாகக் கட்டிடம் பெற்றவர்கள், அவற்றை வாடகைக்கு விட்டு
விட்டு, வேறு இடங்களுக்குச் செல்லுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை
எடுக்குமா ? இந்தக் குடிசை மாற்று வாரிய விஸ்தரிப்பு மதுரைக்கு எப்போது
வருமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தக் குடியிருப்புக்
களைப் பெற்றவர்கள், அதை வாடகைக்கு விட்டுவிட்டு, வேறு இடங்களுக்குப்
போனால், அதைத் தடுக்க குடிசை மாற்று வாரியம் தீவிரமாக நடவடிக்கை
எடுக்கும். குடிசை மாற்று வாரியத்திற்குத் தெரியாமல் இப்படிப்பட்ட
தவறுகள் நடக்குமானால், அதை அறிந்திருக்கிற, பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள
உறுப்பினர்கள் அவற்றை குடிசை மாற்று வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு
வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரு புனிதமான
காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிற நேரத்தில், கட்சிச் சார்பற்ற முறையில் அனை
வரும் ஒத்துழைக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. சென்னையில்
இப்போது நடைபெறுகிறது. மதுரைக்கு இது எப்போது வருமென்று
மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டார்கள். சென்னையிலே ஓரளவுக்கு இந்தப்
பணியினுடைய வெற்றி ஏற்பட்ட பிறகுதான், மற்ற நகரங்களுக்கும் இதைத்
தொடர்ந்து செயல்படுத்தலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சொன்ன
அயோத்தியா குப்பம் போன்ற பகுதிகளில் மக்கள் குடியேறிவிட்டார்கள்.
அவர்கள் குடியேறிய பிற்பாடு, தண்ணீர் இல்லாமல், தண்ணீர்ப் பானையை
எடுத்துக்கொண்டு, ரோடுக்கு வருகிறார்கள். அந்த வீடுகளில் மற்ற வசதி

களெல்லாம் செய்யப்பட்டுள்ளன. இவையனைத்தையும், என்னிடமும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களிடமும் தினசரி வந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அங்கே உலாவச்செல்லும்போது சொல்கிறார்கள். எனவே தண்ணீர் வசதியை சீக்கிரமாகச் செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பு ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு தண்ணீர்த் தொட்டியை நான் திறந்து வைத்தேன். அப்பொழுது சென்னை மாநகராட்சி மன்ற நிர்வாகத்தினருக்கு ஒரு யோசனை சொன்னேன். இன்னும் கொஞ்சம் பெரிய அளவுக்குக் கட்டினால், அயோத்தியாகுப்பத்திற்கும் தண்ணீர் கொண்டுபோயிருக்க முடியுமென்று சொன்னேன். அதைத் தொடர்ந்து தண்ணீர் தொட்டியொன்று கட்ட ஆரம்பித்து, அயோத்தியாகுப்பத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்ல வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படி தண்ணீர், மின் விளக்கு போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதினால், வாடகை 55 அல்லது 60 ரூபாய் ஆகிறது. நாம் 15 ரூபாய்தான் அவர்களிடமிருந்து வாடகை பெறுகிறோம். மீதிப் பணத்தை அரசு மானியமாகக் கொடுக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, are the Government aware of the new slum which is coming up near the overbridge connecting Gandhi Irwin Road and Poonamallee High Road? Is it a new slum or is it an old slum shifted to that place?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அது இப்போது தற்காலிகமாக குடிசை மாற்று வாரியத்திற்கு அவர்களைக் குடியேற்றுவதற்காகச் செய்யப்பட்ட தற்காலிக ஏற்பாடு.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, உலகிலேயே இரண்டாவது அழகிய கடற்கரையென்று சென்னைக் கடற்கரையைப் பாராட்டுகிறார்கள். நமது குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படுகின்ற கட்டிடங்கள் பூராவும் அந்த அழகிய கடற்கரையின் பக்கத்தில் கட்டப்படுகின்றன. அதனால் சென்னை மக்களுக்கு வரவேண்டிய நல்ல காற்று தடைப்படுகிறது. அங்கே உயரமான கட்டிடங்களைக் கட்டியிருக்கிற காரணத்தால், நல்ல காற்று, சுகாதாரக் காற்று சென்னைக்கு வராமல் தடைபடுகிறது. எனவே, அந்தக் கட்டிடங்களை சென்னைக்கு உள் பக்கமாக, 8 அல்லது 10 மைல் தள்ளிக் கட்டுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்தக் கேள்வி பத்திரிகையில் வராமலிருப்பது நல்லது. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் பிறகு அந்தப் பகுதிகளில் உலாவ முடியாது.

### *Fire Accidents*

* 121 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) the number of fire accidents which occurred till date from January 1972, in Madras City;

(b) the number of (1) huts and (2) houses destroyed by the fire; and

(c) the total value of the damage caused by the fire?

### தீ விபத்துக்கள்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1972 ஜனவரி முதல் இன்று வரை சென்னை மாநகரத்தில் எத்தனை தீ விபத்துக்கள் நடந்தன?

(இ) தீயினால் எரிந்த (1) குடிசைகள், (2) வீடுகள் எத்தனை?

(உ) இவைகளின் மொத்த மதிப்பீடுகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 1—1—72லிருந்து மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்டு எழுதிய நாளாகிய 20—10—1972 வரையில் சென்னை மாநகரில் ஏற்பட்ட தீ விபத்துக்கள் 31 (முப்பத்து ஒன்று) ஆகும்.

(இ) (1) 706 குடிசைகள் தீக்கிரையாயின.

(2) வர்ணக் கடை ஒன்று.

(உ) மொத்த இழப்பு ரூ. 1,93,450 என்று மதிப்பிடப்படுகிறது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த விபத்துக்கள் எல்லாம் எப்படி ஏற்பட்டனவென்பதை முதலமைச்சரவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: தீ விபத்துக்கள் எல்லாம் தீயினால் ஏற்பட்டன.

திரு. எல். பலராமன்: தற்செயலாக ஏற்பட்டதா அல்லது வேறு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன். இதற்கெல்லாம் பல காரணங்கள் பரவலாகக் கூறப்படுகின்றன. [illegible] உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 31 தீ விபத்துக்கள் ஏற்பட்டதாகச் சொன்னேன். ஒவ்வொன்றிற்கும் என்ன காரணத்தால் ஏற்பட்டதென்பதை விளக்குவது இயலாத காரியம். பொதுவாக குடிசைகளில் இந்தத் தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கு சிம்மினி விளக்குகள் உபயோகப்படுத்துவது ஒரு காரணம். குடிசைகள் மிகத் தாழ்வாக இருக்கிற காரணத்தால், விளக்குகளின் சுடர் ஓலையில் பட்டு தீ விபத்து ஏற்படுகிறது. இரவில் எலிகள் எரிந்துகொண்டிருக்கிற விளக்குகளின் திரிகளை இழுத்துக்கொண்டுபோய் கூரையில் வைப்பதாலும் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. மண்ணெண்ணெய் ஸ்டவ்கள் உபயோகப்படுத்துவதில் பக்கத்துக் கடைகளிலிருந்து இந்தத் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. பட்டாசு மருந்துகளை இப்படிப்பட்ட குடிசைப் பகுதியிலே உபயோகிப்பதனால் தீ விபத்து ஏற்படுகிறது. இப்போது அண்மைக் காலத்தில் போலீசாரும், குடிசை மாற்று வாரியத்தினரும் இந்தக் குடிசைகளுக்கு அடிக்கடி சென்று, பிரச்சாரம் செய்து தீ விபத்துக்களைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## *Hindi Pandits*

* 122 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Hindi Pandits with in-service training and T.S.L.C. Certificates, are admitted to the shortened B.T. Course on taking their B.A. degree under the present rules; and

(*b*) if not, whether there is any proposal to do so?

## இந்தி ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தற்போதுள்ள விதிகளின் கீழ், பணிக்காலப் பயிற்சியும், டி.எஸ்.எல்.சி. சான்றிதழும் பெற்ற இந்தி ஆசிரியர்கள், பி.ஏ. பட்டம் பெறுவதன்மேல், குறுகியகால பி.டி. பயிற்சி பெறச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா ?

(இ) இல்லையெனில், அவ்வாறு அவர்களைச் சேர்த்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : இல்லை.





திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முன்னாள் இந்தி ஆசிரியர்கள் டி.எஸ்.எல்.சி. படித்து, பி.ஏ. பட்டம் பெற்று, "ஷார்ட்டன்டு பி.டி." பயிற்சியில் சேர வேண்டுமென்று சொன்னால், அவர்களை மட்டும் அரசு அனுமதிக்கவில்லையென்று சொல்கிறார்கள். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். அதுமாதிரி சில விண்ணப்பங்கள் என்னிடம் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; தலைவரவர்களே, இந்தி படித்தவர்களுக்கு, எம்.இ.ஆர். 132 படி, டி.எஸ்.எல்.சி. படிக்காமல், இன்சர்வீஸ் டிரெயினிங் படித்தவர்களுக்கு, ஷார்ட்டன்டு பி.டி. பயிற்சி கொடுப்பதில்லை. அவர்களுக்கு 'புல் கோர்ஸ்' கொடுக்கப்படுகிறது. அவர்கள் 2 ஆண்டுகள் செகண்டரி கிரேடு படித்திருந்தால், அவர்களுக்கு "ஷார்ட்டன்டு பி.டி. கோர்ஸ்" கொடுக்கப்படுகிறது. அந்த வகையில், இன்-சர்வீஸ் டிரெயினிங் மூலம் டி.எஸ்.எல்.சி. பெற்றிருக்கிறவர்கள் 9 மாத காலம் படித்தாக வேண்டுமென்று பல்கலைக் கழகம் கூறியிருப்பதால், அந்தக் கருத்து வற்புறுத்தப்படுகிறது. செகண்டரி கிரேடு 2 ஆண்டு படித்திருந்தால், ஷார்ட்டன்டு கோர்சில் சேர்க்கப்படுவார்கள். அப்படி 2 வருடம் படிக்காதவர்கள் "புல் டைம்" கோர்சில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களுள் சிலர் இடைநிலை ஆசிரியர்களாக மாற்றப்பட்டு, டி.எஸ்.எல்.சி. தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டு, அவர்கள் அதில் தேர்ச்சி பெற்றும் டி.எஸ்.எல்.சி. கொடுக்கப்படவில்லை. அந்தச் சான்றிதழ்களை அவர்களுக்கு வழங்க அரசு வழி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிலைமையை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இவர்கள் 2 ஆண்டு பயிற்சி பெறவில்லையென்ற ஒரே ஒரு எதிர்ப்பை பல்கலைக் கழகம் தெரிவிப்பதாகத் தெரிகிறது. இவர்கள் டி.எஸ்.எல்.சி. சர்ட்டிபிகேட் பெற்றபடியினாலே, கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலமாக அவர்களையும் அந்த "ஷார்ட்டன்டு பி.டி. கோர்ஸ்"க்கு எடுத்துக்கொள்ளலாமென்று அரசு பரிந்துரை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன். ஏனெனில் பிற டி.எஸ்.எல்.சி. ஹோல்டர்சுக்குள்ள தகுதிகளை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பயிற்சிக் காலம் இரண்டு

பி.ப. 4–0 ஆண்டுக் காலம் இல்லாமல்போனாலும் அந்த அடிப்படைத் தகுதி இருக்கிறபடியினால், அரசு அதை மறுபடியும் பரிசீலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சம்பளம் மற்றவைகள் கொடுக்கின்ற வகையில் டி.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இன்-சர்வீஸ் டிரெயினிங்கிலே அவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அதிலேயும் தனிச் சலுகை தந்து, இதிலேயும் தனிச் சலுகைத் தரக்கூடாது என்று பல்கலைக் கழகம் முடிவு செய்திருக்கின்ற காரணத்தால், இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இது முன்னால் இருந்த இந்தி ஆசிரியர்களுக்கு அரசு சகாயம் செய்ய வேண்டுமென்பதற்காக ஏற்பட்டது. இந்தி ஆசிரியர்கள் ஒரு ஆண்டுப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். டி.எஸ்.எல்.சி. தேர்வில் எல்லோரையும் போலவே பரிட்சை எழுதி வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, விதி முறையை மாற்றி, டி.எஸ்.எல்.சி. யிலும் பாஸ் செய்து, பி.ஏ. வும் பாஸ் செய்திருப்பார்களானால், அவர்களை பி.டி. படிப்பில் சேரத் தகுதியுடையவர்களாகக் கருதுவோமானால், தற்போது இருக்கக்கூடிய 100, 150 பி.டி. ஆசிரியர்கள் தகுதி உடையவர்களாகக்கூடிய நிலை ஏற்படும். அதை அரசு பரிசிலனை செய்யுமா என்று மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலில் சொன்ன மாதிரி அதை அரசு பரிசீலிக்கிற நிலையில் இல்லை. வேண்டுமென்றால் அவர்களுடைய விண்ணப்பங்களை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க அரசு ஆயத்தமாக இருக்கின்றது. இதிலே டி.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இன்-சர்வீஸ் மூலமாகப் படித்திருக்கிறார்கள். ஷார்ட்டன்ட் பி.டி. கோர்ஸ் நான்கு மாதம் எடுத்துப் படித்தாலும், 9 மாதம் படித்தவர்களுக்குத் தரப்படுகிற அதே கேள்வித்தாள்கள் தான் தரப்படுகின்றன. ஆகவேதான் ஷார்ட்டன்ட் இன்-சர்வீஸ் கோர்ஸ் 9 மாதம் படிக்க வேண்டுமென்று பல்கலைக் கழகம் வற்புறுத்துகிறது. அரசு மறுபடியும் இந்த விண்ணப்பங்களை வேண்டுமானால், பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கலாம். பல்கலைக் கழகம் பார்த்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமானால், அதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்தக் கோரிக்கையை பல்கலைக் கழகம் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. ஆதலால் இவர்கள் 4 மாதம் ஷார்ட்டன்ட் பி.டி. டிரெயினிங் போக இயலாத நிலை இருக்கிறது. இவர்கள் நம்பர் மிகவும் குறைந்து கொண்டே வருகிறபடியினாலே, ரெகுலர் பி.டி., 9 மாத



கோர்சுக்கு இவர்களுக்கு முன் உரிமை கொடுத்து எடுத்து, அந்த 9 மாத காலத்திற்கும் அவர்களுக்குரிய சம்பளங்கள், ஷார்ட்டன்ட் கோர்சுக்கு உள்ள சலுகைகள் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்புவதற்கு அவர்களை அரசு ஊக்குவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது 9 மாத காலப் பயிற்சியில் பல இந்திப் பண்டிதர்கள் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மற்றச் சலுகைகளைக் கொடுப்பது இயலுமா இயலாதா என்பதுபற்றி இப்போது என்னால் கூறுவதற்கில்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும்.

## *Educational Systems*

* 123 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether the Government are examining any proposal for modernising the educational systems in this State;

(b) whether the Hon. Chief Minister had talks on this subject during his visit to the United States of America in 1971; and

(c) if so, the details thereof?

## கல்வி முறைகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் கல்வி முறைகளை காலத்திற்கேற்ப புதுப்பிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1971-ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்றிருந்தபோது இது குறித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினாரா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1972-73-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டின் மீதான பேருரை ஆற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேலை நாடுகளில் பணி புரியும் இந்திய விஞ்ஞானிகளையும், தொழில் நுட்ப வல்லுனர்களையும் இந்த மாநிலத்தில் உள்ள விஞ்ஞானம், தொழில் நுட்பத் துறைகள் மற்றும் கல்லூரிகளுக்கு வரவழைத்து,

அந்தந்த நிபுணர்களின் துறையில் கல்வித் தரத்தினை உயர்த்தும் எண்ணத்துடன் ஓர் திட்டத்தை ஆரம்பிக்க இவ்வரசு தீர்மானித்திருப்பதாகவும் கூறினர். இம்முடிவினை அடுத்து தமிழகத்தைச் சேர்ந்த அயல் நாட்டில் பணி புரியும் 30 திறமை மிக்க அறிஞர்களை வரவழைத்து இம்மாநிலத்திலுள்ள விஞ்ஞானம், மற்றும் தொழில் நுட்பத் துறை, மற்றும் கல்லூரிகளில் சிறப்புப் பணி புரியவும், அவ்வாறு பணி புரியும் காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 700 லிருந்து ரூ. 1,200 வரை ஊதியம் வழங்கவும், இது தவிர வருகை தந்து சிறப்பு விரிவுரை வழங்க ஆண்டு ஒன்றுக்கு 20 பேராசிரியர் பதவியிடங்கள் ஏற்படுத்தி, 20 மேலை நாட்டு சிறிய விஞ்ஞானிகளையும் வரவழைத்து விரிவுரை ஆற்றும் திட்டம் ஒன்றையும் இவ்வரசு செயலாற்றத் திட்டமிட்டுள்ளது. இது தவிர, விஞ்ஞானம் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கவுன்ஸிலால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானிகள் குழாத்திலிருந்து விஞ்ஞானிகளின் சேவையை இம்மாநிலத்தில் பயன்படுத்தவும் இவ்வரசு உத்தேசித்துள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: இந்தத் திட்டத்தின்படி யாராவது அறிஞர்கள் இங்கே செயலாற்றுகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது யாரும் செயலாற்றவில்லை. வெளிநாடுகளிலேயுள்ள சங்கங்களின் மூலமாக, குழுக்கள் மூலமாக, நம்முடைய எம்பஸிகள் மூலமாக ஆங்காங்கு பணி புரிகின்ற வல்லுனர்கள், அறிஞர்கள் ஆகியவர்களுக்கு நம் சம்மதம் தெரிவித்துக் கடிதம் அனுப்பியிருக்கிறோம். அவர்களிடத்திலிருந்து பதில் கடிதம் வந்த பிறகு, இந்த முறைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, வெளி நாடுகளில் பணி புரிந்து கொண்டிருக்கும் பேராசிரியர்கள் இங்கு வருவதாக இருந்தால், இங்கு கொடுக்கப்படக்கூடிய சம்பளம் ரூ. 700 லிருந்து ரூ. 1,200 வரைக்கும்தான் என்று சொல்லுகின்றார்கள். அவர்கள் வெளி நாடுகளிலே ரூ. 5,000, 4,000, 3,000 என்று மாதம் ஒன்றுக்குப் பெறுகிறார்கள் என்று நான் அறிகிறேன். அந்த நிலையில் நாம் அழைத்தால் யார் வருவார்கள்? அப்படி அழைக்கப்பட்டபோது, யாராவது பதில் எழுதியிருக்கிறார்களா? அவர்கள் என்ன பதில் எழுதியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அங்கே கொடுக்கின்ற அளவு சம்பளம் இங்கே நம்மால் தர இயலாது. ஏனென்றால் அவர்கள் அங்கே மாதம் ஒன்றுக்கு ரூ. 10,000 கூட வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு ஆறு மாத காலம் அல்லது ஒரு ஆண்டுக் காலம் இடைக்காலம்



காலத்தில் இங்கு வந்துவிட்டுப் போகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆகவே அந்த இடைக்காலமான ஒரு ஆண்டு அல்லது ஆறு மாத காலத்தை இங்கே அவர்கள் வந்து சாதாரண விடுமுறை நாட்களாகக் கருதாமல், அந்த நாட்களை இப்படிப் பயன்படுத்துவார்களானால், அதற்கு என்று நாம் மாநில ஊதியத்திற்கு ஏற்ற வகையில் ஊதியம் தரலாம். அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் அவர்களுடைய பணிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Government consider inviting those people at the time when they have recess for three months in a year, so that they could avail of the furlough for which they are eligible and this Government could take advantage of their services by offering them some small amounts that will compare with their salaries during such recess?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களின் யோசனையும் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆராயப்படலாம்.

THIRU G. VASANTHA PAI: Sir, I also want to bring to the notice of the Government that for educational institutions, there is a system of circulating what is called 'Arts Programme' and 'Science Programme' to the students at a very nominal cost of two or three dollars and they are like reviews—12 books in the year, with illustration of Space Programme, with illustration of Moon Rides and with statements about progress in various departments of science. If such 'Programmes' could be got by the Government through the embassy here and if they could be circulated to the students, that would go a long way towards the modernisation of education in this State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தக் கல்வித் துறையிலே மாற்றங்கள், சீர்திருத்தம் செய்கின்றபோது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறிய யோசனையும் கவனத்தில் கொள்ளப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த மாற்றங்கள் ஏற்படுத்துவது நல்லது என்று தமிழக அரசாங்கம் உணர்ந்திருந்தாலும், மத்திய அரசாங்கம் இதில் என்ன கவனம் செலுத்துகின்றது? இப்படி மாற்றுவதனால், மத்திய அரசாங்கத்திடத்திலிருந்து அனுமதி ஏதாகிலும் பெற வேண்டுமா அல்லது அவர்கள் மாற்றம் செய்ய வேண்டுமென்று கருதுகிறார்களா? இதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை. ஆனால் நாம் இதை நடைமுறைப்படுத்திய பிறகு நல்ல பலன்கள் ஏற்பட்டு, அவர்களிடமிருந்து கிடைக்கிற தொகை போதுமானதாக இல்லை என்கின்ற குறைபாடு ஏற்படுகின்ற நிலை ஏற்படுமானால், அப்போது மாநில அரசு இந்தத் திட்டத்திற்கு இவ்வளவு தருகிறது, மத்திய அரசும் இதற்குத் தரவேண்டும் என்று கேட்கின்ற வகையில், ஏற்படுகின்ற பலன்களை எடுத்துச் சொல்லி அவர்களிடம் நாம் உதவி கேட்க வாய்ப்பு ஏற்படும். இப்போது இந்தத் திட்டத்திற்கென்று நாம் எந்த உதவியும் பெறவில்லை.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, இப்படி அழைக்கப்படும் நிபுணர்கள் சம்பந்தமாக, தமிழ் நாட்டிலிருந்து போய் அமெரிக்காவிலிருந்து வந்து வேலை செய்கின்றவர்களை மாத்திரம் தான் இந்தத் திட்டம் குறிப்பிடுகிறதா அல்லது அங்கேயே நிபுணர்களாக இருப்பவர்களை இங்கே வரவழைத்து வேலை பெறுபவர்களை மட்டும் குறிப்பிடுகிறதா என்பது பற்றி விவரமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் கூறியபடி, இந்த இரண்டு திட்டங்களும் இதன் கீழே வருகின்றன. இங்கே வந்து 6 மாதம் அல்லது 1 ஆண்டு பணிபுரிகின்றவர்களுக்கு, ரூ. 700 லிருந்து ரூ. 1,500 வரை அவர்கள் எவ்வளவு காலம் இங்கே இருந்து பணி செய்ய விரும்புகிறார்களோ, அவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அதைத் தவிர 20 வெளி நாட்டுப் பேராசிரியர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றி, பலன் ஏற்படுத்துகின்ற அளவுக்கு, அவர்களை வரவழைக்கவும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது.

## *High Schools*

* 124 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of (1) High Schools and (2) their location, to be opened this year, i.e., 1972?

## உயர்நிலைப் பள்ளிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :





இந்த ஆண்டில், அதாவது 1972-ல் தொடங்கப்படவிருக்கிற உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை? அவை எந்தெந்த இடங்களில் தொடங்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு விவர அறிக்கை @ சபையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, சுதந்திர தின வெள்ளி விழாவின்போது, அதையொட்டி சிறப்புக் கிராமங்களாக இருக்கக்கூடிய கிராமங்களில் ஹைஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அரசு அறிவித் திருந்தது. அந்த சிறப்புக் கிராமங்கள் இதற்காக ரூ. 10,000 முன் பணமாகக் கட்ட வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது கடினமாகத்தான் இருக்கும். ஏனென்றால் 374 ஒன்றியங்களில், ஒவ்வொரு ஒன்றியத்திற்கு ஒரு சிறப்புக் கிராமத்தைத் தேர்ந்தெடுக்கிறோம். அங்கே சில இடங்களில் உயர்நிலைப் பள்ளி இருக்கலாம். நாம் வைத்திருக்கின்ற திட்டப்படி, கொள்கைப்படி 5 சிற்றூர்கள் உள்ள வட்டாரத்திலே குறைந்தது ஒரு உயர்நிலைப் பள்ளியாவது இருக்க வேண்டும். அதற்குப் பக்கத்திலேயிருக்கின்ற இடத்தை நோக்கமாகக் கொண்டு அங்கு போதுமான வசதி இல்லாமல் இருந்து, நெருக்கம் அதிகமாக இருந்து, அங்கு ஒரு பள்ளி ஏற்படுத்துகிற அளவிற்கு மாணவர்கள் எண்ணிக்கை இருக் கிறது என்ற நிலைமை ஏற்பட்டால், அங்கே மட்டும்தான் நாம் அந்த உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆங்காங்கே இருக்கின்ற சிற்றூர் களிலே எங்கு பள்ளி ஏற்படுத்துகின்ற அளவுக்கு வாய்ப்பு ஏற்படுகிறதோ அங்கு ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 40 முதல் 50 வரை உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்துகின்ற அளவுக்குதான் நிதி வசதி ஏற்படும். நமது மாநிலத்திலே கூடுமானவரையில் வாய்ப்பு ஏற்படுகின்ற சிற்றூர்களிலே மட்டும் இந்த வேலையை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, கட்டணம் கட்ட வேண்டியது என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்ற சாதாரண ஊர்களுக்கெல்லாம் ரூ. 10 ஆயிரம் கட்ட வேண்டுமென்று இருக்கிற போது வேறு பல சிற்றூர்களுக்கு ரூ. 10 ஆயிரம் கட்ட வேண்டுமென்ற இந்த நியதியைத் தளர்த்தினால் பல இடங்களுக்கும் அதைத் தளர்த்த வேண்டிய நிலைவரும்.

---

@ 305-307 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, 1972-73-ல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் 12-ம், அரசு உயர்நிலைப் பள்ளிகள் 43-ம் திறக்கப் பட்டிருக்கின்றன. ஐந்து மைல் சுற்றளவுக்குள் உயர்நிலைப் பள்ளி இல்லாத போது, இருக்கும் உயர்நிலைப் பள்ளிகளில் இடமிருந்தால், அதில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டாமல், அக்கம் பக்கத்திலேயே பல உயர்நிலைப் பள்ளி களைத் திறந்து அந்தப் பள்ளிகளின் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப் படுகிறது. இந்த மாதிரி சித்தலூர் என்ற சிவகங்கை பக்கத்திலுள்ள ஒரு ஊரில் ஒரு உயர்நிலைப் பள்ளி திறக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பக்கத்திலுள்ள பெரிய ஊராகிய வேம்பத்தூரிலிருந்து தான் ஆசிரியர்களும், மாணவர்களும் செல்கிறார்கள். ஆகவே, எந்தெந்த கிராமங்களில் இந்தப் பள்ளிகள் தேவை என்று அரசு உத்தியோகஸ்தர்கள் பரிந்துரை சொல்கிறார்களோ அதைக் கடைசி முடிவாக ஏற்று அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : Supplementaries should always be short. The hon. Member is giving a long lecture.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூடுமான வரையில் நாம் செலவழிக்கின்ற தொகைக்கேற்றபடி மாணவர்கள் பயிற்று விக்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் அடிப்படையாக வைத்துக்கொண் டிருக்கிறோம். ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும், அதற்கேற்ப பள்ளிகள் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் தான் சில பல இடங்களில் நல்ல ஆட்களைக் கொண்டுவந்து ஆங்காங்கே கூடு மான வரையில் வைத்திருக்கிறோம். ஒரு பள்ளி ஏற்படுகிற நேரத்தில் வேறு ஒரு பள்ளியில் ஆசிரியருக்கு வேலை நீக்கம் எற்படக் கூடாதென்பதைக் கவனத்தில் கொள்கிறோம். இப்போது கூடுமான வரையில் வேறு புதிய பள்ளிகள் திறப்பதற்கு அனுமதி வழங்காமலிருக்கிறோம். இப்போது இருக்கிற 3,700-த்துச் சில்லரை உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு 70 உயர்நிலைப் பள்ளிகள் 'எக்கானமி' என்று சொல்லப்படுகிற அளவிற்கு மாணவர்களின் அளவு 7, 8, 6 என்று இருக்கிறது. இதையெல்லாம் மூடுவது கஷ்டம். அப்படிப்பட்ட பகுதிகளில் வேறு பள்ளிக்கூடங்கள் வராமல் அந்தப் பள்ளியே வளரவேண்டு மென்ற கருத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் எல்லாப் பள்ளிகளும் பயன்படத்தக்க அளவிலே அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, வெள்ளி விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட அரசு அறிக்கையிலே சிறப்புப் பணிகளாக ஹைஸ்கூல் இல்லாத ஊரில் ஹைஸ்கூல்களும், மருத்துவ வசதி இல்லாத ஊரில் மருத்துவ வசதிகளும் செய்வதாக இருக்கிறது. அநேகமாக நல்ல கிராமங்களாக சிறப்புக் கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில கிராமங்களில் பள்ளி இல்லை



யென்றால், அதற்கு இந்த ரூ. 10 ஆயிரம் கட்டுவதிலிருந்து விதிவிலக்கு அளித்தால் சிறப்பாக இருக்கும், இந்த வெள்ளி விழாவிலே விட்ட அறிக்கைக்கு அது ஏற்றவாறு இருக்கும் என்பதால், அரசு இதைப்பற்றி ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ரூ. 10 ஆயிரம் என்ற விதியைத் தளர்த்துவதில் ஏற்படுகிற சங்கடத்தை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு பள்ளி, இரண்டு பள்ளிகளுக்கு இந்த மாதிரி இதை நீக்கினால், பலரும் அதை முன் மாதிரியாக வைத்து தங்களின் பகுதிகள் எல்லா வகையிலும் பின்தங்கியிருக்கின்றன, யாரும் அதற்கு உதவி செய்ய வரவே மறுக்கிறார்கள் என்று சொல்லி, இந்த ரூ. 10 ஆயிரம் கட்டுவதி லிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்பார்கள். இந்த ரூ. 10,000 கூட 15 ஆண்டுக் காலத்திற்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட அதே தொகையாக இருக்கிறதே தவிர, அதை உயர்த்தலாமா என்ற எண்ணம் இருந்தும் கூட, இப்போது உயர்த்தவேண்டாம், இந்த ரூ. 10 ஆயிரமே மக்களுக்கு இதிலே தொடர்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இருக்கிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, சர்க்காருடைய ஒரு அறிக்கையை ஒட்டி விவரத்திற்கு ஏற்றதாக இல்லையே என்பதைத் தான் சொல் கிறேன்.

MR. CHAIRMAN : The hon. Member is repeating the same supplementary question.

ஒரே கேள்வியை நான்கு தடவை கேட்டால் ஒரு மணி நேரத்திற்கு மேலே போகும்.

I would not allow unnecessary supplementary questions from any quarter.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, வெள்ளி விழா அறிக்கையிலே அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு கருத்தைத் தெரிவிக்கிற காரணத்தால், அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊர்களுக்கு சில சலுகைகள் அளிக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். எல்லா ஊர்களுக்கும் இந்தச் சலுகைகள் அளிக்க முடியாதென்றாலும், அந்தக் கிராமங்களுக்காவது அளிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வெள்ளி விழாவையொட்டி, சிற்றூர் என்கிற முறையில் வேறு பல வசதிகள் பெரும் செலவு செய்து உருவாக்குகிற காரணத்தால், இந்த வசதி செய்யப்படா

இருக்கிற கிராமங்களில் இந்தமாதிரி பள்ளிக்கூட வசதிகளைச் செய்வதற்காகத் தான் இந்தப் பணம் வசூல் செய்யப்படுகிறது. ஆக எல்லா சிற்றூர்களுக்கும் இந்த நிலை வர, எங்கே அதிக வாய்ப்பு இருக்கிறதோ அந்த ஊரில் அதை ஏற்படுத்த நாம் முயற்சி செய்யலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, சிறிய கிராமங்களிலும் பள்ளிகள் இருக்கிற காரணத்தால், அவற்றில் சில பள்ளிகளில் 100 மாணவர்கள், 150 மாணவர்கள் மட்டுமே படிக்கிற நிலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது போன்ற சிற்றூர்களில் பள்ளிகள் அமைப்பதைத் தவிர்த்து, பேரூராட்சிகளிலுள்ள பள்ளிகளில் படிப்பதற்கு மற்ற சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மாணவர்கள் வருவதற்கு வசதியாக பேருந்துகள் விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், பல சிறு கிராமங்களில் இருக்கிற பள்ளிகளுக்கு ஆசிரியர்களே செல்வதில்லை என்ற புகார்களும் வந்திருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து இப்படிப்பட்ட புகார் வந்திருக்கிறது. ஆகவே, பள்ளிகளற்ற கிராமப்புற மாணவர்கள் அண்மை ஊர்களிலுள்ள பள்ளிகளுக்குச் செல்ல பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாகப் பேருந்து வசதிகள் செய்ய முடியாது. பெரும்பாலும் பல சாலைகளில் பேருந்து வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தான் பயன்படுத்தி வர வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால், சைக்கிளில் தான் அவர்கள் சென்று வர வேண்டும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, எங்கள் ஊரில் 10 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு ஹைஸ்கூல் கட்டுவதற்காக ரூ. 10 ஆயிரம் கட்டி என்னுடைய 1½ ஏக்கர் நிலத்தையும் கொடுத்து, அதற்கு ஏற்பாடு செய்து எல்லாக் கட்டிடமும் அரசின் உதவியால் கட்டப்பட்டு முடிக்கப்படவிருக்கிறது. ஆனால் 3½ ஏக்கர் சோச்சம் நிலம் நீங்கள் கொடுக்கவில்லையென்று நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதன் பேரில் பக்கத்திலுள்ள நிலக்காரர் தன் நிலத்தை நெகோஷியேஷன் மூலமாகக் கொடுக்கத் தயாராக இல்லை; அதிகப் பணம் கிடைக்க வேண்டுமென்று நினைக்கிறார்; ஆகவே, அந்த நிலத்தை 'அக்விஸிஷன்' பண்ணிக் கொடுங்கள் என்று சொல்லியும், இதுவரை எந்த முயற்சியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை மூலமாக ஒரு முடிவு ஏற்பட்டு அதன் மூலமாக அந்தப் பள்ளிக்கு வேண்டிய அவசியமான இடத்தைப் பெற வேண்டும். அப்படி இல்லையென்றால், 'அக்விஸிஷன்' மூலமாகத் தான் அதைப் பெற வேண்டும். ஆகவே, அதைத் தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இப்போது ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னால், என்னென்ன அடிப்படைச் சூழ்நிலைகள் இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது? அதை மாற்றியமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசு சார்பாக உயர்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தது 5 ஏக்கர் நிலமும், கட்டிடமும், விளையாடும் இடம் அமைக்க போதிய கட்டிட அமைப்பும் வேண்டும், தற்காலிகமாக பள்ளிக்கூடம் நடத்துவதற்கு இடவசதி காண்பிக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஓரளவுக்கு ஈட்டு மானியத் தொகை கட்ட, கட்டிடம் எழுப்புவதற்கு தளவாடங்கள், மற்றைய சாமான்கள் கொடுக்க வேண்டும், பராமரிப்புச் செலவுககாக ரூ. 10 ஆயிரம் முன்பணமாகக் கட்ட வேண்டும். 12,500 ரூபாய் கட்டிடத்திற்கு ஈட்டு மான்யத் தொகையை அரசாங்கம் தருவதற்கு ஏற்றதாக அதையும் வசூலிக்கவேண்டும். இது அரசு சார்பாகக் கட்டுகிற பள்ளிகளுக்கு. தனியார் பள்ளிகளுக்கு வேண்டிய இடவசதி, விளையாட்டு இடம், தளவாடங்கள் பள்ளிக்கு ஏற்பாடுகள் செய்து தரவேண்டும். அது தவிர கட்டிட நிதி என்று ஒரு லட்சம் ரூபாய் தர வேண்டும். முதலில் ரூ. 50 ஆயிரம் கட்ட வேண்டும். அதற்குப் பிறகு ஆண்டுக்காண்டு ரூ. 10 ஆயிரம் என்று 5 ஆண்டுகளில் மீதியைக் கட்ட வேண்டும்.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ரூபாய் 10 ஆயிரம் கொடுப்பதற்கு பல தீர்மானங்கள் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஊராட்சி இலாகாவும், கல்வி இலாகாவும் ஒரே அமைச்சரிடம் இருப்பதால், இதில் நேரடியாக கவனம் செலுத்தி அதை சீக்கிரம் கொடுக்க அனுமதியளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம் மக்களுக்கு சமூக வளர்ச்சி, ஊர் வளர்ச்சி சம்பந்தமாகப் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், அதன் நிதியை வேறு வகைக்கு ஒதுக்கக் கூடாதென்ற பொதுக் கருத்தை வைத்துக்கொண்டு மறுக்கிறார்கள்.

அண்மையில் ஒரு ஊராட்சி ஒன்றியம் இவ்வளவுதான் ரிசர்வு நிதி—ஒரு
லட்சம் ரூபாய், 2 லட்சம் ரூபாய் தான்—வைத்திருக்க வேண்டுமென்று
சொல்லி, அதற்கு மேலே இருந்தால் அந்தத் தொகையைக் கல்விக்காகச்
செலவிடலாமென்று யோசனை கூறியிருக்கிறேன். அப்படிப்பட்ட ஊராட்சி
ஒன்றியங்கள் அறிவிக்கலாம். முக்கியமான குடிநீர் பிரச்சினை போன்ற
வசதிகள் செய்ய பணம் இல்லாத இடங்களில் பள்ளிகளுக்குச் செலவு
செய்தால், அடிப்படை வசதிகளைச் செய்ய முடியாது. ஆகவே குறிப்பிட்ட
அளவுக்கு ரூ. 3 லட்சம், ரூ. 2 லட்சம் வரை ஒவ்வொரு ஒன்றியத்திலும் காப்பு
நிதி இருக்க வேண்டும். உறுப்பினர் அவர்களின் ஒன்றியத்தில் ரூ. 7, 8 லட்சம்
இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். ஆகவே, அதிலே இப்படிப்பட்ட
வசதிகள் செய்வதற்கு வேண்டிய தொகை போக, மீதியைக் கல்விக்காக
எப்படிச் செலவிடுவது என்பதற்கு விரைவில் முடிவு எடுக்கப்படும்.

வினா 125.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : திரு. முத்துசாமி இடத்தில் இல்லை.

## *Cumulative Time Deposit Scheme*

* 125 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether any complaint has been received by the Government that compulsion is resorted to for enrolment in cumulative Time Deposit Scheme;

(*b*) whether any complaint has been received by the Government that the amount received from the teachers has not been credited to the Small Savings Account and that money has been taken out from the Small Savings Account by forgery: and

(*c*) if so, the action taken thereon?

## வளரும் மாத சேமிப்புத் திட்டம்

திரு. எல். பலராமன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வளரும் மாத சேமிப்புத் திட்டத்தில் (C.T.D) சேருவதில் கட்டாயப்படுத்தப்படுவதாக அரசுக்குப் புகார் வந்துள்ளதா?



(இ) ஆசிரியர்களிடம் இருந்து பெறப்பட்ட தொகை சிறு சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருந்ததாகவும் சிறு சேமிப்புக் கணக்கிலிருந்து கள்ளக் கையெழுத்து போட்டு பணம் எடுத்ததாகவும் அரசிற்குப் புகார் கிடைத்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) ஆம். இரண்டு கல்வி மாவட்டங்களிலிருந்து இது குறித்து புகார் வந்துள்ளது.

(உ) புகாரின் மீது விசாரணை செய்து கையாடல் செய்த நபர்களிடமிருந்து பணத்தை மீட்டு உரியவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. குற்றம் செய்த ஆசிரியர்கட்கு தண்டனை வழங்கப்பட்டது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டத்தில் அந்த மாதிரி நடந்திருக்கிறது? மேலும் அது போன்ற தவறுகள் நடக்காமலிருப்பதற்கு அரசாங்கம் திட்டவட்டமாக ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேவகோட்டை கல்வி மாவட்டத்தில் சிமங்கலம் ராமசாமி ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியராக இருந்தவர் 1966 முதல் மே 1970 வரை 4 ஆசிரியர்களின் ரூ. 2,360-ல் ரூ. 715-ஐ மட்டும் அந்தந்த ஆசிரியர்களின் கணக்கில் வரவு வைத்துவிட்டு மீதித் தொகையை தன்னுடைய சொந்தக் கணக்கில் வரவு வைத்துக்கொண்டார். அது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தத் தொகை மீட்கப்பட்டு, அந்தந்த ஆசிரியர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. ஆக அப்படிச் செய்த அந்தத் தலைமை ஆசிரியர் அந்தப் பணத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், தன்னுடைய கணக்கில் வரவு வைத்திருந்தார். அதற்காக அவருக்கு தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொல்லி 6 மாதத்திற்கு அவருக்குச் சம்பளம் குறைக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டது. இது போல, விருதுநகர் ராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றிய ஆவுடையப்பன் என்ற எழுத்தர் சம்பளத்தில் பிடிக்கும் திட்டத்தில் ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், மற்றும் யூனியன் எழுத்தர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பணத்தில் ரூ. 2,772யைக் கையாடல் செய்ததாகப் புகார் கிடைத்ததன் பேரில், அந்தத் தொகை முழுவதும் அவரிடமிருந்து பிடிக்கப்பட்டு அந்தந்த ஆசிரியர்கள், சிப்பந்திகளின் கணக்கில் 7—10—1972 அன்ற

காளையார்கோயில் அஞ்சலகக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. அதோடு அந்த எழுத்தரின் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

## *Rural Roads Schemes*

* 126 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the first phase of the Rural Roads Schemes in this State?

## கிராமச் சாலைத் திட்டங்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் கிராமச் சாலைத் திட்டங்களின் முதற் கட்டப் பணி விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஊர் சாலைகள் திட்டத்தின் முதல்பகுதியில், 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊர்களை பராமரிக்கப்பட்ட சாலைகளுடன் இணைக்கும் வகையில் 281 கி.மீ. நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கவும்; மேலும் 1,427 கி.மீ. நீளமுள்ள தற்போதுள்ள சீர்படுத்தப்படாமல் இருக்கும் சாலைகளை மேம்பாடு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முதற்பகுதி திட்டத்துக்கான வேலை மதிப்பீடு ஆறு கோடி ரூபாய்கள் ஆகும். இத்தொகை 1972-73 மற்றும் 1973-74 ஆண்டுகளில் செலவு செய்யப்படும்.

4-40 பி.ப. **திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, 6 கோடி ரூபாய் கிராமப்புறச் சாலைகளுக்குச் செலவு செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது மாவட்ட வாரியாக எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்த 6 கோடி ரூபாயை 1972-73, 1973-74 இந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால், மாவட்ட வாரியாகத் தரப்படும்.



## *Incorrect Weights*

* 129 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that incorrect weights are being used by the Posts and Telegraphs Department in our State; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

## தவறான எடைகள்

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**(அ) நமது மாநிலத்தில் அஞ்சல்-தந்தித் துறையால் தவறான எடைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது உண்மையா?**

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) அம்மாதிரியான நிகழ்வு எதுவும் மாநில எடை அளவு கட்டுப்பாட்டு அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, பல அஞ்சல் நிலையங்களில், பார்சல்கள், ரிஜிஸ்டர்டு ஆர்ட்டிகள் இவைகளுக்கெல்லாம் எடை போட பழைய தராசுகளை வைத்திருக்கிறார்கள். பல இடங்களில் புதிய எடைகளும் கிடையாது. நான் ஒரே தபாலை 3 அஞ்சல் நிலையங்களில் கொண்டுபோய் எடைபோடச் செய்தபோது, 3 விதமான எடை கூறி, அதற்குத் தகுந்த ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொன்னார்கள். குறைத்து ஒட்டினால் 'டியூ' போடுகிறார்கள். அந்த மாதிரி அஞ்சலகங்களில் சரியான தராசு, எடை முதலியன வைத்திருக்கிறார்களா என்று கண்காணிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1958-ம் ஆண்டின் எடைகள் அளவைகள் சட்டம் தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்தும் என்றாலும், தமிழ்நாட்டிலே உள்ள ரெயில்வே, அஞ்சல்-தந்தித் துறைகளில் மாநில அரசு அதைத் தற்போது செயல்படுத்தவில்லை. இந்த இரு துறைகளிலும் பயன்படுத்துகிற எடை அளவைகளைச் சரிபார்த்து முத்திரையிடுவதற்கு வழி வகை ஏதும் இன்னும் உருவாக்கப்படாததே இதற்குக்

காரணமாகும் இதுகுறித்து இந்திய அரசோடு கடிதப் போக்குவரத்து வைத்து இப்போது ஒரு முடிவுக்கு வரப்பட்டிருக்கிறது. அண்மையில் சண்டிகரில் நடந்த எடைகள் அளவைகள் கட்டுப்பாடு அதிகாரிகள் மாநாட்டில், அஞ்சல்-தந்தித் துறைகள் பயன்படுத்தும் எடைகள் அளவைகளை மாநில எடைகள் அளவைகள் இயக்குநர் அலுவலகம் சரிபார்த்து முத்திரையிட்டுத் தர வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து அஞ்சல் துறைத் தலைவருடன் விவாதித்து இந்த அரசுக்கு அறிக்கை அனுப்ப எடைகள் அளவைகள் கட்டுப்பாடு அதிகாரி திட்டமிட்டிருக்கிறார்.

*Cases pending in the Presidency Magistrate's Courts in Madras City.*

* 130 Q.—THIRUVALARGAL V. ISVARMURTI, M. ARUMUGASWAMI AND S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a large number of cases, including criminal cases are pending in the Presidency Magistrate's Courts in Madras City; and

(b) the steps taken (i) to expedite the proceedings and (ii) for the quick disposal of the cases?

**மாநகர மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்களில் முடிவடையாத வழக்குகள்**

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:
திரு. எம். ஆறுமுகசாமி:
திரு. எஸ். வெள்ளபாண்டியன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள மாநகர மாஜிஸ்திரேட் நீதி மன்றங்களில், குற்ற வழக்குகள் உட்பட அதிக அளவிலான வழக்குகள் முடிவடையாத நிலையில் உள்ளன என்பது உண்மையா?

(இ) இந்த வழக்குகளை (1) விரைவாக விசாரணை செய்யவும் (2) விரைவில் முடிவு செய்யவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மாநகர கௌரவ சிறப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் உட்பட, ஊதியம் பெறும் கௌரவ மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில், 30—9—1972 ஆம் நாள் நிலவரப்படி 16,724 குற்றவியல் வழக்குகள் முடிவுறு நிலையில் இருந்தன. 1—1—1972-லிருந்து 30—9—1972 வரையிலுள்ள கால அளவில் பதிவு செய்யப்பட்ட 3,43,186 வழக்குகளைக் கணக்கில் கொண்டு பார்த்தால், முடிவுறு நிலையிலுள்ள இந்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது என்று கூற இயலாது.



(இ) மாநகர் மீது விசாரணை வரம்புடைய மாநகர்த் தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உட்பட ஒன்பது மாநகர மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. ஒன்பதாவது மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு 1969 ஆம் ஆண்டு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அதிகரித்துள்ள பணிச்சுமையைச் சரிக்கட்ட இந்நீதிமன்றம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வருகிறது. மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் தங்களது சாதாரணப் பணிக்குத் தடை ஏற்படா வண்ணம் விசாரணை செய்ய இயலாத பெரிய வழக்குகள், விசாரணை செய்யப்படுவதற்காக, அவ்வப்போது, அங்கே வருகின்றன. நேர்வுக்கேற்ப, அது போன்ற வழக்குகள் குறித்து விசாரணை செய்ய, சிறப்பு மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களை அரசு அமைத்து வருகிறது. தவிர, டில்லி சிறப்பு காவல் துறையால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் குறித்து விசாரணை செய்வதற்கென்றே தனி நீதிமன்றம் ஒன்று உள்ளது. இந்நீதிமன்றத்திற்கு, துணை நீதிபதி பதவித்தரத்தில் உள்ள அதிகாரி ஒருவர் நீதிபதியாக இருக்கிறார்.

THIRU G. VASANTHA PAI: Sir, the question mentions about the number of cases pending in the Presidency Magistrate's Courts, including criminal cases. May I know whether the Magistrates have been invested with powers to try any case other than criminal cases?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, பிரெசிடென்சி மாஜிஸ்ட்ரேட்டுகள் கிரிமினல் வழக்குகளை மட்டும் தான் விசாரிக்கிறார்கள் including criminal cases ' என்பது 'redundant' என்று நினைக்கிறேன்.

*District Munsifs*

* 131 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether in the matter of selecting District Munsifs from those already in service as Magistrates, the principle of seniority is strictly adhered to; and

(b) whether this principle was strictly followed in the recent selection made during August 1972?

## மாவட்ட முன்சீப்கள்

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏற்கெனவே மாஜிஸ்ட்ரேட்டுகளாகப் பணிபுரிபவர்களிலிருந்து மாவட்ட முன்சீப்களைத் தெரிந்தெடுப்பதில், பணி மூதுநிலை கண்டிப்பாகப் பின்பற்றப்படுகிறதா?

(இ) அண்மையில் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மாவட்ட முன்சீப்புகள் தெரிந்தெடுக்கப்பட்டபோது இக்கொள்கை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளும், சப்-மாஜிஸ்டிரேட்டுகளும் "மாற்றுதல்" முறை மூலம் மாவட்ட முன்சீப்புகளாக நியமிக்கப்படத் தகுதியுடையவராவார்கள். அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் பரிவுரையின் மேல் மாவட்ட முன்சீப் பதவிக்கு பணி நியமனம் செய்யப்படுகிறது. ஆணைக்குழு தனது பரிவுரைகளைச் செய்கையில், தான் பரிவுரை செய்யும் நபர்களின் பட்டியலை அவர்களது தகுதி அடிப்படையில் வரிசைப்படுத்தி அனுப்புகிறது. எனவே, பணி மூதுநிலை முறையைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற வினாவே எழவில்லை.

## United Nations Development Project Survey

* 132 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the second phase of UNDP survey for minerals is being undertaken in the State; and

(b) if so, the details thereof?

## ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஆய்வு

**திரு. எஸ். வெள்ளபாண்டியன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கனிப் பொருள்கள் குறித்த ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஆய்வின் இரண்டாம் நிலைப் பணி இம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாவது நிலைப்பணிக்கு ஒப்புதல் அளிக்குமாறு இந்திய அரசின் மூலமாக, தமிழ்நாடு அரசு ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனம் சுமார் 613,000 டாலரும் அரசு சுமார் ரூ. 25.56 லட்சமும் அளிக்கின்றன. இரண்டாவது நிலைப்பணி நிறைவேற 27 ஆட்படை ஊற்றமாதங்கள் ஆகும். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனம் இத்திட்டம் தொடர்பான ஆவணத்திற்கு ஏற்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு விரைவிலேயே முறையான அனுமதி அளித்து அதில் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணியின்கீழ் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் முதல் நிலைப்பணியின்கீழ் தொடங்கப்பட்ட 20,000 ச.கி.மீ. பகுதியில் விரிவான ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** முதல் நிலை ஆய்வுப் பணியின் மூலமாக இந்த மாநிலத்தில் கனிப் பொருள்கள் எங்கெங்கு எவ்வளவு கிடைக்கும் என்ற ஆராய்ச்சியின் முடிவு ஏதேனும் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதற்குப் பெரிய பதிலாகச் சொல்ல வேண்டும் அல்லது அறிக்கை தான் தர வேண்டும். தனிக் கேள்வி போட்டால், கவனிக்கப்படும்.

**திரு. எல். பலராமன்:** வட ஆற்காடு மாவட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூறினார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே என்னென்ன கனிப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன என்பதுபற்றி அரசுக்குத் தகவல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டாம் நிலை பணியும் வட ஆற்காடு மாவட்டத்திலே நடத்தப்படும். என்னுடைய நினைவுக்கு வரும் வரையில், வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் கனிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

**Financial Assistance from the Tamil Nadu Industrial Investment Corporation**

* 133 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of unemployed Doctors who have so far availed the financial assistance from the Tamil Nadu Industrial Investment Corporation for setting up practice in rural areas;

(b) whether the number is small;

(c) if so, the reason therefor; and

(d) whether the scheme will be suitably revised to attract more unemployed Medical Graduates?

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதியுதவி**

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமப் புறங்களில் மருத்துவத் தொழில் புரிவதற்காகத் தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து இதுவரை நிதியுதவி பெற்றுள்ள, வேலை வாய்ப்பில்லாத மருத்துவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுடைய எண்ணிக்கை குறைவானதா?

(உ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(எ) வேலை வாய்ப்பற்ற பல மருத்துவப் பட்டதாரிகளை மேற்கொண்டும் ஈர்க்கும் வண்ணம் இந்தத் திட்டம் தக்கமுறையில் மாற்றியமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 9.

(இ) ஆம்.

(உ) நகரங்களில் தொழிலில் நிலைத்துவிட்ட மருத்துவர்களுக்கு கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய எளிதில் ஆர்வம் ஏற்படுவதில்லை.

(எ) கிராமங்களில் பணி புரியச்செல்லும் மருத்துவர்களுக்கு குறைகள் எவையேனும் ஏற்பட்டால், அந்த அனுபவத்தையொட்டி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத்திட்டத்தை தக்கவாறு திருத்தியமைக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர்களே, கிராமப் புறங்களுக்கு மருத்துவத் தொழில் புரிவதற்காக உதவி வேண்டி 9 பேர்தான் விண்ணப்பம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். நகர்ப்புறங்களிலே





ஏற்கெனவே இருப்பவர்களை கிராமங்களுக்குச் செல்லச் சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. படித்து வருகிறவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்வதற்கு வேண்டிய உதவி தருவதாக நான் நினைக்கிறேன். அப்படி இருக்கும்போது, 9 பேர் தான் வந்திருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம் என்ன? எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது? அந்தப் பணம் எப்படிக் கொடுக்கப்படுகிறது? அப்படிக் கொடுத்து வாங்குவதிலே ஏதாவது சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதை அரசு ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எண்ணிக்கை அதிகமாக வரவில்லை என்பதுதான் அரசாங்கத்தின் கவலையும் கூட. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, படித்து வருபவர்கள் கிராமங்களுக்குச் சென்றால், வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று தான் நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இப்போதுள்ள திட்டத்தின்படி நகராட்சி எல்லைக்கப்பால் அவர்கள் செல்வார்களானால், கட்டிடம், எக்விப்மெண்ட் வாங்குவதற்கு பணம் கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறோம். இதிலே பணம் போதாது என்ற நிலை ஏற்படுமானால் அல்லது திருப்பிக்கொடுக்கும் முடிவு ஏற்படுமானால், அதை மாற்றியமைக்கப் பரிசிலனை செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். அதற்காகத்தான் நமது மருத்துவத்துறையின் தலைமை அதிகாரி அவர்கள் டாக்டருக்குப் படிப்பவர்கள் அல்லது படித்து முடித்துவிட்டு வேலைக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் இதனுடைய மாற்றங்களுக்கு ஏதாவது ஆலோசனை கூறுவார்களானால் அதைத் திருத்தியமைத்து அதிகமான பேர் அதன் பயனை அடைவதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று அரசின் சார்பிலே கூறப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர்களே, இந்த மாதிரி மருத்துவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுக்கிறோம். அந்தப் பணத்தை 10 ஆண்டுகளிலே திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மாதத்திற்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. ஆகவே கிராமங்களில் எந்த இடத்தில் அவர்கள் வேண்டுமென்று கூறுகிறார்களோ, அந்த இடத்தில் அவர்களுக்கு கிளினிக் கட்டிக் கொடுக்க அரசு முன்வந்தால் நல்லது. இப்பொழுது கூட தொழில் பேட்டைகளிலே அரசு இடங்களைக் கட்டிக் கொடுத்து தொழில் நடத்த வருபவர்களிடம் வாடகைப் பணத்தை வசூல் செய்யும் முறை உள்ளது. இது போன்றே மருத்துவர்களுக்கும் கிளினிக் கட்டிக் கொடுத்து வாடகை வசூல் செய்யலாம். இப்படிச் செய்தால் அவர்கள் வாங்கும் கடன் 20,000 அல்லது 25,000 ரூபாய்களே ஆகும். இதை அரசு பரிசிலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழில் பேட்டையை ஏதாவது இடத்திலே கொண்டுவருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஒரு மட்டில் எல்லோரும் ஒரு இடத்திற்கு வர மாட்டார்கள். டாக்டர்களை பொறுத்த எந்தெந்த டாக்டர் தேர்ந்தெடுக்கிறாரோ, அந்த இடத்தில் நாம் கட்டிமுடித்த வுடன் பின்னாலே அந்த இடத்தில் அவர் இல்லாவிட்டால் என்ன ஆகும் என்ற பிரச்சினை வரும். ஆகவே கடன் போதாதென்றோ அல்லது திருப்பிக்கொடுப் பதிலே இன்னும் சுலபமாக 'Terms' போடலாமென்றும் சொல்வது பொருத்தமாக இருக்குமேயொழிய, நாமே போய் ஒவ்வொரு இடத்திலும் கட்டிக் கொடுப்பது என்பது சரியாக வராது என நினைக்கிறேன்.

*Sea-erosion along the Sea-shore of the Kanyakumari district,*

* 134 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the tenements of the people residing near the sea-shore have been affected due to the sea-erosion along the sea-shore of the Kanyakumari district; and

(b) the preventive steps taken?

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோர கரை அரிப்பு

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கடலோர கரை அரிப்பு காரணமாக மக்கள் குடியிருப்பு பாதிக்கப்பட்டுள்ளதா?

(இ) தடுப்பு நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பூத்துறையிலிருந்து குறும்பனை வரை அரிப்பு ஏற்பட்டு சுமார் 60 வீடுகள் சேதமடைந்தன. 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மற்றொரு அரிப்பு ஏற்பட்டு ஏனைய மதுரைப்பகுதியில் ஏற்பட்டு 38 வீடுகள் சேதமடைந்தன. மேற்கொண்டு அரிப்பு ஏற்படா வண்ணம் தற்காலிகத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (பொது) வகுத்துள்ள திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.



திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, தென் மேற்குப் பருவக்காற்று மழை வேகமாக இருக்கிறபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரங்களில் பல குடிசைகள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு விடுகின்றன. அதற்காக 'மாஸ்டர் பிளான்' ஒன்று தயாரித்து, நிரந்தரமான ஒரு திட்டத்தை உருவாக்க அரசு திட்டமிட்டிருக்கிறதா, அதற்கு மத்திய அரசு ஏதாவது உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ் நாடு அரபிக் கடல் ஓரமாக கடல் அரிப்பைத் தடுப்பதற்காக நிரந்தரமாக மூன்று கோடியே ஐம்பத்தோறு லட்ச ரூபாய் செலவில் அரண் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்த மதிப்பீடு மத்திய அரசின் பரிசீலனைக்காகவும், முழு மானிய உதவிக்காகவும் அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறது. இதில் 12 கிலோ மீட்டர் நீளத்திற்கு விளவங்கோடு தாலுக்காவில் திட்டம் அடங்கியுள்ளது. விளவங்கோடு தாலுக்காவில் கீழ்க்கண்ட கிராமங்கள் பயன்பெறும்; தூத்தூர், பூந்துறை, தேங்காய் பட்டணம், ராமன்துறை, கிருஷ்ணன் துறை, மிடாலம், ஏனயம், குறும்பனை ஆகிய இடங்கள். மாஸ்டர் பிளான் போடப்பட்டு மத்திய அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

*Pazhaiyar Kumari Dam, Kanyakumari District*

* 135 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether it is a fact that the Pazhaiyar Kumari Dam, Kanyakumari district was damaged due to the heavy rains in 1970;

(b) if so, the steps taken to carry out the repairs to this dam;

(c) the extent of land affected, as a result of the damage caused to this dam;

(d) whether any representations have been received by the Government regarding this; and

(e) if so, the action taken thereon?

கன்னியாகுமரி மாவட்டம் பழையாறு குமரியணை

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பழையாறு குமரியணை 1970 பெரு மழையால் உடைந்து பாழாகிவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதனைச் செப்பனிட எடுத்த நடவடிக்கை யாது?

(உ) இவ்வணை உடைந்ததால் பாதிக்கப்பட்ட நிலங்களின் பரப்பு எவ்வளவு?

(எ) இது பற்றி முறையீடுகள் ஏதும் அரசுக்கு வந்ததுண்டா?

(ஐ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம். பழையாற்றின் குறுக்கே உள்ள குமரி அணையின் மேல் பக்கத்தில் இடது கரையிலும் அணையின் கீழ் பக்கத்தில் வலது கரையிலும் வெள்ளத்தால் உடைப்பு ஏற்பட்டது.

(இ) உடைப்பு ஏற்பட்ட உடன், மணல் சாக்குகளைக் கொண்டும், கட்டைகளைக் கொண்டும், கரைகள் சீரமைக்கப்பட்டு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் விடப்பட்டது. நிரந்தர பாதுகாப்பு அளிக்க குமரி அணையை விஸ்தரிக்க ரூ. 8.04 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் இருக்கிறது.

(உ) வெள்ளத்தினால் பயிர் நிலங்கள் ஏதும் பாதிக்கப்படவில்லை.

(எ) இல்லை.

(ஐ) எழவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, 1970-ல் இந்த கன்னியாகுமரி மாவட்ட பழையாறு குமரியணை பெரு மழையால் பாழாகியிருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் நிரந்தரமாக ஒரு அணையைக் கட்டாமல் போனால், விவசாய வேலை பாதிக்கப்படும் என்ற அச்சம் இருப்பதால், அதற்கு ஒரு திட்டத்தை விரைவில் செயல்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தலைமைப் பொறியாளர் அறிக்கை கொடுத்திருக்கிறார். இது கவனிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Misappropriation of Funds of the Walajapet Town Co-operative Bank Limited, Walajapet.*

* 136 Q.—THIRU K. RAJARAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state:

(a) whether there was any misappropriation of funds of the Walajapet Town Co-operative Bank Limited, Walajapet;





(b) if so, when it was discovered and the action taken thereon;

(c) whether any officer was deputed to inquire into the affairs of the Bank, particularly into the conduct of the President and the Treasurer of the Bank and their present status; and

(d) whether the result of the inquiry will be placed on the table of the House?

### வாலாஜாபேட்டை நகர கூட்டுறவு வங்கியின் நிதி கையாடல்.

**திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாலாஜாபேட்டையிலுள்ள, வாலாஜாபேட்டை நகர கூட்டுறவு வங்கியின் நிதியில் கையாடல் ஏதேனும் செய்யப்பட்டதா?

(இ) ஆமெனில், அது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

(உ) வங்கியின் செயல் நிலவரம் பற்றி குறிப்பாக வங்கியின் தலைவர், பொருளாளர் ஆகியோர்களது நடத்தை, அவர்களின் தற்போதைய வாழ்க்கை நிலை ஆகியவை குறித்து விசாரணை செய்ய அதிகாரி எவராவது அனுப்பப் பட்டாரா?

(எ) விசாரணையின் முடிவுகள் அவை முன் வைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, (அ) & (இ) ஆம். வாலாஜாபேட்டை நகர வங்கியில் நடந்துள்ள கையாடல் 11—7—1972 அன்று ராணிபேட்டை துணைப்பதிவாளர் கவனத்திற்கு வந்தது. போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) & (எ) துணைப் பதிவாளர் விசாரணை செய்துள்ளார். விசாரணை அறிக்கையை தற்பொழுது வெளியிடுவது பொதுநலனுக்கு ஏற்றதல்ல.

**திரு. கே. ராஜாராம்:** இப்பொழுது கேஸ் போடப்பட்டிருக்கிறதா? யாரேனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? கேள்வியில் இது இருக்கிறது. கேஸ் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இது அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நாள் 11—7—1972. இதில் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னேன். இதில் கைது செய்யப்பட்டவர்கள் இந்த

கூட்டுறவு நகர வங்கியின் தலைவர் திரு. சி. எ. வரதராஜன், அந்தக் கூட்டுறவு நகர வங்கியின் பொருளாளர் மொகமது கௌஸ், எழுத்தர் எஸ். பு. நாராயணன், அட்டெண்டர் ராமகிருஷ்ணய்யா ஆகியோர். கைதுசெய்யப் படாதவர் வரதராகவன் என்ற செயலாளர். ஆனால் அவரைக் காணேம். அவர் காலம் ஆகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

திரு. கே. ராஜாராம்: காலம் ஆகிவிட்டதாகக் கூறப்படுபவர் சென்னை யிலேயே சுற்றித் திரிவதாக ஒரு தகவல். அதை அரசாங்கம் விசாரிக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது, நகைகள், வைக்கப்பட்டுள்ள இரும்புப் பெட்டியின் சாவி இந்த சி. ஏ. வரதராஜனிடம் இருப்பதாக ஒரு தகவல். அந்தச் சாவியை வாங்கி நகைகளை அரசாங்கத்தின் பாதுகாப்பில் வைத்துக்கொள்வதற்கோ, அல்லது உரியவர்களிடம் திருப்பிக் கொடுப் பதற்கோ ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்த காணுமல் போய்விட்டதாகக் கூறப்படுகின்ற செயலாளர் சென்னையிலே இருக்கிறாரா, அல்லது வேறு எங்கு இருக்கிறார் என்று போலீஸ் தரப்பில் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தேடிக்கொண்டிருக்கிறார்கள். அவர் காலமாகிவிட்டார், புதைக்கப்பட்டு விட்டார் என்று அவருடைய மனைவியார் சொல்லியிருக் கிறார். இந்த வங்கியிலுள்ள இரும்புப்பெட்டி திறக்கப்பட்டு, இப்பொழுது ஒரு தனி அதிகாரி வந்து அது கவனிக்கப்பட்டு வருகிறது. அதிலுள்ள நகைகள், மற்ற ரொக்கங்கள் இப்பொழுது தனி அதிகாரியால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அதிகாரியின் கவனத்திற்கு 11—7—1972-ல் வந்ததாகக் கூறுகிறார்கள். இந்த 8 மாதங்களில் அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? வழக்கு போடப்பட்டுள்ளதா? அவர் கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கிறாரா அல்லது ஜாமீனிலே விடுவிக்கப்பட்டிருக்கிறாரா என்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அவர்கள் ஜாமீனிலே வெளியே வந்திருக்கிறார்கள். ஆனல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது முதல் நான்கு பேர்களும் ஜாமீனிலே வந்திருக்கிறார்கள்.





திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, நகர கூட்டுறவு வங்கி களின் தலைவர்களும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைவர்களும் அவர்களே செக்கில் கையெழுத்துப் போட்டு பணம் எடுப்பதற்கான அதிகாரம் இப்பொழுது இருந்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, நகர வங்கிகளைப் பொறுத்தவரையில், அவர்களே செக்கில் கையெழுத்துப் போடுகிற அதிகாரம் இன்னும் இருந்து வருகிறது. அந்த அதிகாரத்தை மாற்ற வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆனல் மத்திய வங்கிகளைப் பொறுத்த வரையில், சில நாட்களுக்கு முன்னல் விதிகள் மாற்றப்பட்டு இதற்காக நிர்வாக அதிகாரி செக்கில் கையெழுத்துப் போடவேண்டுமென்று விதிகளில் மாறுதல் செய்யப் பட்டிருக்கின்றது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: திரு. கிருஷ்ணசாமி நாயுடு எழுந்திருப் பாரோ, எழுந்திருக்கவில்லையே என்று பார்த்தேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்டபொழுது அமைச்சரவர்கள், இந்த கோவாபரேடிவ் சென்ட்ரல் பாங்கின் பிரசிடென்ட் கையெழுத்துப் போடலாம் என்று இருக்கிறது, அது மாற்றப்பட வேண்டும் என்று சொன்னர்கள். அந்த மாதிரி பிரசிடென்ட் அவர்களே கையெழுத்துப் போடலாம் என்ற விதி இப்பொழுது உள்ளதா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சென்ற வாரம் அது மாற்றப்பட்டு விட்டதாக நான் ஏற்கெனவே தெரிவித்தேன். மத்திய கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்த வரையில், தலைவர்கள் இந்தச் செக்கில் இனி கையெழுத்துப் போட முடியாது. அதற்குப் பதிலாக அதிலே இருக்கிற நிர்வாக அதிகாரி கையெழுத்துப்போட வேண்டும் என்று விதி மாற்றப்பட்டு கெஜட்டிலே பிரசுரம் ஆகியிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether any audit is conducted by the Co-operative Department in respect of the Town Co-operative Bank, if so, when the last audit was conducted; and whether any defects were found in that audit?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, the audit is conducted by the Audit Section of the Co-operative Department. There are proposals to give an independent status to this Audit

Section. So far as this particular Urban Bank is concerned, there has been an audit. But, I am unable to say off-hand on what date the audit was finished.

MR. CHAIRMAN : I extend the time for questions under rule 22 of the Tamil Nadu Legislative Council Rules.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போல், சமீபத்தில் அதிகாரங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படும் காலம் வரையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தலைவர்களுக்கு செக்குகளில் கையெழுத்துப் போடுவதற்கு உரிமையோ அதிகாரமோ இருந்து வந்திருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :* தலைவர் அவர்களே, மத்திய வங்கிகளைப் பொறுத்தவரையில், விதிகள், அதாவது பைலாஸ்படி, கையெழுத்துப் போடலாம். இது வரையில் அப்படி இருந்து வந்தது. ஆனுல் சில தலைவர்கள் அவர்கள் கையெழுத்துப் போடுவது நல்லதல்ல என்று எண்ணி, தாங்களாகவே அந்த அதிகாரத்தை அதிகாரிகள் கையில் கொடுத்து வைத்திருந்தார்கள். ஆனுல் இப்பொழுது விதிகளின் திருத்தம் மூலமாக—பைலாசுக்கு மேற்பட்டது ரூல்ஸ்—தலைவர்கள் செக்கில் கையெழுத்துப் போடக்கூடாது என்று மாற்றப்பட்டிருக்கிறது. அதிகாரிகள்தான் பணத்திற்கும் மற்ற எல்லா சொத்துக்களுக்கும் முழுப்பொறுப்பு என்று மாற்றப்பட்டிருக்கிறது.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :* தலைவர் அவர்களே, விதிகள் மாற்றப்படும் வரையில், நம்முடைய மாநிலத்தில் எந்த மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர்களாவது செக்குகளில் கையெழுத்துப்போட்டு பணம் எடுத்திருக்கிறார்களா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :* தலைவர் அவர்களே, என் கையில் தற்போது விவரம் இல்லை. இப்பொழுது கேட்கப்பட்டுள்ள கேள்வி நகர வங்கிகளைப் பொறுத்தது.

*திரு. ஜீ. சுவாமிநாதன் :* தலைவர் அவர்களே, தஞ்சை வங்கியைப்பற்றி நான் கேள்வி கேட்டபோது, அந்தப் பணம் கையாடல் நடந்த நேரத்தில், தலைவர் அவர்களே கையெழுத்துப்போடும் நிலைமை இருந்த காரணத்தால், அந்தப் பணம் கையாடல் நடந்து விட்டது என்று அமைச்சர் சொன்னுர்கள் என்று கருதுகிறேன். அந்தத் தலைவர் கையெழுத்துப் போட்டாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அமைச்சர் கருத்து உண்மைக்குப் புறம்பாக இருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன்.





*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சை மத்திய வங்கியைப்பற்றிக் கேள்வி கேட்ட நேரத்தில், தலைவர்கள் செக்கில் கையெழுத்துப் போடலாம் என்று விதிகள் இருந்தன. அப்படி 'பை-லா' இருந்தது.

THIRU G. SWAMINATHAN : Sir, what I wanted to know was whether the President had actually signed the cheque and got the money and whether it was the reason for the misappropriation. I want to know whether the Hon. Minister's statement on the floor of the House in that respect is true.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, if I had made a statement in this House, then it ought to be true.

*திரு. எல். பலராமன் :* தலைவர் அவர்களே, வாலாஜா போன்று இதர நகர வங்கிகளில், இம்மாதிரியான ஊழல்கள் நடைபெறுது தவிர்ப்பதற்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆடிட் டிபார்ட்மெண்ட் ஆடிட் செய்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஆடிட் செய்யப்பட்டு அந்த அறிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க இப்பொழுது வழிமுறை இல்லையென்றுலும் எதிர்காலத்தில் அவ்வாறு அனுப்பிவைக்க வழிவகை செய்யப்படுமா ? வாலாஜா நகர வங்கியில் எவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :* தலைவர் அவர்களே, இதில் நடந்திருப்பது எவ்வளவு அல்லது கையாடல் எவ்வளவு என்பது பற்றி அறிக்கை தற்போது வெளியிடுவது பொது நலனுக்கு நல்லதல்ல என்று மாமன்ற விதி 40-ன் கீழ் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கமாக ஆடிட் செய்வது வருஷத்திற்கு ஒரு முறை.

* * * *

*Co-operative Urban Banks in the South Arcot District.*

@ * 76 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact that action was taken against the Co-operative Urban Banks in the South Arcot district, during 1970 for their improper functioning; and

(b) if so, the details thereof?

** Thiru C. V. Rajagopal's supplementary question was expunged as orders by the Chair.

@ 8-2-1973-ம் தேதி வினுப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

## தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அர்பன் வங்கிகள்

**புலவர் ஓ. அறிவுடைநம்பி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த 1970-ஆம் ஆண்டில் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு அர்பன் வங்கிகள் தவறுதலாகச் செயற்பட்டதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டில் தென்னார்காடு மாவட்டத்தைச் சார்ந்த மூன்று கூட்டுறவு நகர வங்கிகளில் கையாடல்கள் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மூன்று வங்கிகளாவன :—

(1) கடலூர் கூட்டுறவு நகர வங்கி.

(2) புதுப்பாளையம் கூட்டுறவு நகர வங்கி.

(3) திருக்கோவிலூர் கூட்டுறவு நகர வங்கி.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகளில் பல இடங்களில் கையாடல் நடைபெற்றதற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நான் குறிப்பிட்ட மூன்று வங்கிகளும் அர்பன் பேங்க், நகர வங்கிகள் செல்ப் ரிலையண்ட், தன் காலிலேயே நிற்பவை. அரசு உதவி பெறாதவை. எனவே அரசு கண்காணிப்பு ஆடிட் செய்வது ஒன்றில்தான் இருக்கிறது. மற்ற நேரங்களில் அரசாங்கக் கண்காணிப்பு போதிய அளவில் இல்லை. அப்படி முழு கண்காணிப்பு வைத்துக்கொள்ள வழி வகை செய்து சட்டம் கொண்டு வந்தால், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று இப்பொழுதே கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் இந்த நகர வங்கிகளில் காரியதரிசிகளாக இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தானா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அதைத்தான் விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இது வரையில் நகர வங்கிகளில் இருந்தவர்கள், அதாவது செயலாளர்களாக இருந்தவர்கள் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அல்ல. தலைவர்களுக்கு வேண்டியவர்களேதான் அந்த வங்கிகளின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆகையினால் பலவிதமான தவறுகள் நடந்திருப்பதற்கு வாய்ப்பு இருந்தது. ஆகையினால்தான் விதிகளில் மாறுபாடு செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத்தான் இப்பொழுது சொன்னேன்.

நான் இப்பொழுது சென்ற கேள்விக்கு பதில் சொன்னதில் வரதராஜனுக்கும் வரதராகவனுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அர்பன் பேங்க் தலைவர் பெயர் வரதராஜன். காணாமல் போன செயலாளருடைய பெயர் வரதராகவன்.

## *Abolition of Posts due to Decontrol of Foodgrains.*

* 137 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food be pleased to state the number of posts of (i) Gazetted and (ii) Non-Gazetted Officers abolished in—

(a) Food Department in Secretariat; and

(b) Office of the Commissioner of Civil Supplies from June 1970, till 23rd August 1971, consequent on the decontrol of foodgrains?

## உணவு தானியங்கள் கட்டுப்பாடு நீக்கத்தினால் நீக்கப்பட்ட பதவிகள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உணவு தானியங்களின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து 1970 ஜூன் முதல் 23—8—1971 வரை (அ) தலைமைச் செயலகத்தில் உணவுத் துறையிலும் (இ) உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலகத்திலும் நீக்கப்பட்ட (1) அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி பதவிகள் (2) அரசிதழ் பதிவு பெறா அதிகாரி பதவிகள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) தலைமைச் செயலகத்துறை—

எடுக்கப்பட்ட பதவிகளின் எண்ணைக்கை (1—6—1970 முதல் 23—8—1971 வரையில்)

(1) அரசிதழ் பதிவு பெற்றவை—இல்லை.

(2) அரசிதழ் பதிவு பெறாதவை—15.

(மேற்பார்வைப் பணியாளர்கள் உட்பட எழுத்தர் பதவிகள்.)

(இ) உணவுப்பொருள் வழங்கல்துறை ஆணையாளர் அலுவலகம் :

எடுக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை (1—6—1970 முதல் 25—8—1971 வரையில்.)

(1) அரசிதழ் பதிவு பெற்றவை—4.

(2) அரசிதழ் பதிவு பெறாதவை—

எழுத்தர் பதவிகள் (மேற்பார்வைப் பணியாளர்கள் உட்பட)—54.

தொழில் நுட்பப் பணியாளர் பதவிகள்—இல்லை.

கடைநிலை ஊழியர் பதவிகளும் அதற்கு நிகரான பதவிகளும்—13.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாற்று வேலை கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா, அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, சர்க்கார் உத்தரவு போட்டு அத்தனை பேருக்கும் மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் ஒருவருக்குக் காலி இடம் ஏற்பட்டாலும், புதியதாக ஆள் சேர்ப்பதானாலும், முதலில் சிவில் சப்ளை கமிஷனரிடத்திலிருக்கும் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுடைய பட்டியலை வாங்கி அதிலுள்ளவர்களுக்குக் கொடுத்த பிறகு தான் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் ஆள் எடுக்க வேண்டும் என்று 26—2—1970 அன்று சர்குலர் போடப்பட்டு, அதன்படி எல்லோருக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அப்படிக் கடைப்பிடிக்கச் செய்யப்பட்டது மட்டுமல்ல, எல்லோருக்கும் வேலை கொடுக்கப்பட்டு விட்டது. பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இப்பொழுது வேலையில்லாமல் இல்லை.



THIRU G. VASANTHA PAI : Sir, since Question No. 139 to be answered hereafter relates to the opening of wholesale and retail shops in the State by the Food Corporation of India, will the Government consider the possibility of employing these persons at least in the offices which are being created by the Food Corporation of India for the purpose of wholesale trade?

MR. CHAIRMAN : They have already been absorbed.

*Rice Millers in Thanjavur District.*

* 138 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether it is a fact that criminal proceedings for breach of trust have been instituted against some of the Rice Millers in Thanjavur District for arrears due to shortage in levy paddy;

(b) if so, the names of persons on whom such action has been taken;

(c) the amount payable by each of them as on 1st August 1972; and

(d) whether such action has been taken on all the Rice Millers who are in arrears and, if not, the reason therefor ?

*தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள்*

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுக்குக் கொடுக்கப்பட்ட விதிமுறைக் கொள்முதல் நெல்லின் அளவு குறைந்திருந்ததன் காரணமாக அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைக்காக தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர் சிலர் மீது நம்பிக்கை மோசடிக் குற்ற வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பெற்ற நபர்களின் பெயர்கள் யாவை ?

(உ) 1—8—1972 அன்றுள்ளபடி அவர்கள் ஒவ்வொருவரும் செலுத்தத் தக்க தொகை யாது ?

(எ) நிலுவையைச் செலுத்த வேண்டிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அனைவர் மீதும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? இல்லையெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) & (உ) குற்ற நடவடிக்கை தொடரப்பட்டுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களின் பெயரும் அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையும் பின்வருமாறு :—

| அரிசி ஆலை உரிமையாளரின் பெயர். | செலுத்தவேண்டிய தொகை. ரூபாய். | |
|---|---|---|
| திரு. கே. பி. சுந்தரம்பிள்ளை, அம்மாப்பேட்டை. | 1,06,858 | 33 |
| திரு. ஏ. எம். இராமையா முதலியார், அம்மாப்பேட்டை. | 3,78,899 | 03 |
| திரு. ஏ. காசிப்பிள்ளை, அம்மாப்பேட்டை. | 2,93,277 | 98 |
| திரு. வி. கே. என். பி. கோவிந்தராஜன், தஞ்சாவூர். | 1,38,033 | 00 |
| திரு. ஆர். தட்சிணாமூர்த்தி பிள்ளை, அந்தணப்பேட்டை. | 83,036 | 51 |
| திரு. எஸ். பி. முத்தையா செட்டியார், நர்சிங்கன்பேட்டை. | 13,656 | 11 |
| திரு. எஸ். ஜெயராமன், நாகராஜன் இடையிருப்பு, பாபநாசம் வட்டம். | 81,746 | 50 |

(எ) அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, புள்ளி விவரங்களின் அடிப்படையிலும் அந்தந்த நேர்வுகளின்
பி. ப. 5-10 சூழ்நிலைகளையொட்டியும் ஒவ்வொருவர் மீதும் நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய பணம் 1970-ம் ஆண்டு முதல் 1972-73 முடிய பல லட்சக் கணக்கான ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டிருக்கின்றன. அரிசி ஆலை உரிமையாளர்கள் அந்த நெல்லை லெவியாக வாங்கி, அதற்கு அரிசி கொடுக்காமலிருந்திருக்கிறார்கள். இதைக் கண்காணிக்க அரசுத் தரப்பிலே தாசில்தார்களும் மற்றும் அதிகாரிகளும இருக்கிறார்கள். இவ்வளவு பேர் இருந்தும், இப்படிப்பட்ட மோசடி நடப்பதற்கான ஒரு நிலைமை எப்படி உருவாயிற்று? இந்த நஷ்டத்திற்கு யார் பொறுப்பு என்பதையும் அறிய விரும்புகிறேன். இப்படி லட்சக் கணக்கான ரூபாய்கள் மோசடி செய்யப்பட்டும், இது நாள் வரையில் காலணா கூட வசூலாகாமல் இருக்கக்கூடிய நிலைமைக்கு என்ன காரணமென்பதையும், மோசடி செய்தவர்கள் குடும்பத்திலேயே மற்றவர்களுக்கு இந்த ஆண்டும் கொடுத்து, மறுபடியும் நஷ்டமாகியிருப்பது உண்மையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நீண்ட நாட்களாக நெல் வைத்திருந்தவர்களெல்லாம் ஏஜெண்டுகளாக இருந்து செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் பார்க்கிற முறை போக, கடைசியாக கணக்குப்பார்த்தபோதுதான் அவர்களிடம் ஸ்டாக் இல்லையென்று தெரிந்தது. ஒருசிலர் இப்படிச் செய்திருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ரெவின்யூ நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் சிலர் ஹை கோர்ட்டுக்குப் போய் 'ரிட்' வாங்கியிருக்கிறார்கள். எனவே அவர்கள் மீது கிரிமினல் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மற்றவர்கள் மேலும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அநேகமாக எல்லாம் வசூலாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, கிரிமினல் நடவடிக்கை எடுத்ததாகச் சொன்னார்கள். அந்தக் கிரிமினல் நடவடிக்கையும் குறைந்த பணம் கொடுக்க வேண்டியவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, நிறைந்த பணம், ரூ. 4 லட்சம் வரை கொடுக்க வேண்டியவர்கள் மீது எடுக்கப்படவில்லை. ஏன் எடுக்கப்படவில்லையென்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். தஞ்சையிலே மொத்தமுள்ள 6 அல்லது 7 பேர்களிலே, 3 பேர் மீதுதான் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அவ்வளவு பேர் மேலும் எடுக்கப்படவில்லை. ஏன் ஒருசிலர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டது, ஏன் ஒருசிலர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரமும் இல்லை. இதிலே குறைவாகக் கொடுக்க வேண்டியவர்கள் மீது இப்போது ரெவின்யூ முறைப்படி நடவடிக்கை மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. நான் இப்படிப் படித்தவைகளிலே மற்றைய வழக்குகள் இருக்கின்றன. அவர்களிடம் சொத்துக்கள் இருக்கிற காரணத்தால், முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சொத்தில்லாமல், மோசடி செய்துவிடுவார்களோ என்று எண்ணுகிறவர்கள் மேலே கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எல்லோர் மீதும் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. கிரிமினல் நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏதோ குறைவாகப் பாக்கியுள்ள ஒரு சிலர் மீது மட்டும் நடவடிக்கை எடுத்துவிட்டார்கள், அதிகமான பாக்கியுள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்ற ஒரு தவறான தகவலை அங்கத்தினரவர்கள் தந்தார்கள். மதுரை

[illegible]த்தில், திண்டுக்கல்லில் கூட ரூ. 10 லட்சம் பாக்கியிருந்த ஒருவரைக் கைது செய்து, கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதே போல், சேலத்தைச் சேர்ந்த திரு. ராமையா என்ற ஒருவர் மாண்புமிகு அமைச்சரவர்கள் படித்தார்கள்—கைது செய்யப்பட்டு, அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதில் சில அதிகாரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். டபுள் லாக்கர்களையெல்லாம் திறப்பதற்கு அவர்கள் உதவியாக இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளைக்கூட அரசாங்கம் தற்காலிக வேலை நீக்கம் செய்து, அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: தலைவரவர்களே, இந்த லெவி கொள்முதல் செய்பவர்களுக்கு அட்வான்சாக ஏதாவது பணம் கொடுக்கப்படுகிறதா என்பதையும், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறதென்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்த ஆண்டு அநேகமாக தஞ்சை மாவட்டத்திலும் மற்றும் மாடர்ன் ரைஸ் மில்கள் இருக்குமிடங்களில் கூட கொடுப்பதில்லையென்று முடிவு செய்திருக்கிறோம். அப்படிக் கொடுக்கப்படுகிற இடங்களிலும் லெவி நெல்லைத்தான் கொடுத்திருக்கிறோமே தவிர, அநேகமாக அட்வான்ஸ் பணம் கொடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கடந்த வாரம் நடந்த பொதுக் கணக்குக் குழு கூட்டத்தில்கூட மாண்புமிகு செவிலியன் அமைச்சரவர்கள் சொன்ன திண்டுக்கல் விஷயம் வந்தது. பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நெல்லை அந்த மில்லின் சொந்தக்காரர் வாங்கிக்கொண்டு, அரிசி கொடுக்காமல், நெல்லையும் திருப்பிக் கொடுக்காமல், வேறு வகையில்லாமல், அரசுக்குச் சேர வேண்டிய 3 அல்லது 4 லட்சம் ரூபாய் அவரிடமிருந்து பாக்கி ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றிப் பொதுக் கணக்குக் குழுவில்கூட அதிகமாக விவாதித்தோம். எங்களுக்குக் கடைசியாகக் கொடுக்கப்பட்ட பதில் 'கலெக்டர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்' என்பது தான். கூடிய சீக்கிரம் அந்தப் பணம் வசூலாகிவிடும். கிரிமினல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. நான் என்ன சொல்கிறேன் என்றால், கிரிமினல் நடவடிக்கை அவசியம்தான். அதே நேரத்தில் பணத்தை நாம் இழந்துவிடக்கூடாது. பணத்தை மோசடி செய்வதற்காக அவர்கள் பலவிதமாக மாற்றி, பிள்ளைகள் பேரிலும், மனைவி பேரிலும்



சொத்தை எழுதி வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. திண்டுக்கல் விஷயத்தில் கண்டிப்பாக வசூல் பண்ண வாய்ப்பிருக்கிறது. அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சொத்துக்கள் அத்தனையும் 'அட்டாச்' பண்ணி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஜப்தி பண்ணுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. அய்யணன் அம்பலம்: தலைவரவர்களே, அரசாங்கக் கொள்முதல் விலையான குறைந்தவிலையில் கொள்முதல் செய்கிறார்கள். அதை அரசாங்கத்திற்குக் கொடுக்காமல், தனியாக அதிக விலைக்கு விற்கிற காரணத்தால், அவர்களிடமிருந்து எந்த அடிப்படையில் அந்தத் தொகையை அரசாங்கம் வசூல் செய்கிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதிலே இரண்டு, மூன்று விதமான வழக்குகள் இருக்கின்றன. அரசாங்க நெல்லைக் கொள்முதல் செய்து, உள்ளே வைத்து, பிறகு அதை எடுத்து விற்றுவிட்டவர்களும் இருக்கிறார்கள். அரசாங்கம் அதை மறைக்க விரும்பவில்லை. ஆனால் சிலர் வைத்த ஸ்டாக்கில் குறைந்திருக்கிறதென்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து, அதை ஒத்துக்கொள்வதா, இல்லையா என்பது பற்றி முடிவு செய்திருக்கிறது. டபுள் லாக்கர்கள் போட்டு வைத்த இடங்களில், தாசில்தார்கள் அல்லது டெபுடி தாசில்தார்கள் உடந்தையாக இருந்து, திறந்து எடுத்து விற்று விட்டிருக்கிறார்கள். இப்படி விற்றுவிட்டவர்களிடமிருந்து அந்த நெல்லின் விலையையே வாங்குவது கிடையாது. அதற்குண்டான அபராதத்தையும் சேர்த்துத்தான் அவர்களிடமிருந்து வாங்குகிறோம். அவர்கள் எவ்வளவு லாபத்திற்கு விற்கிறார்களோ அதைவிட அதிகமாகத்தான் அபராதம் விதிக்கப்படுகிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த மோசடி வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஆலை அதிபர்களுடைய குடும்பத்தினருக்கே மறுபடியும் நெல் கொள்முதல் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி அமைச்சரவர்கள் விளக்கம் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, யார் என்று சொன்னால், உண்டா, இல்லையா என்று சொல்ல முடியும். 'தெரியப்படுகிறது, தெரியப்படுகிறது' என்று சொன்னால் நான் ஏது தெரியப்படுகிறது என்று பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒன்றை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் யாரும்மே மீண்டும் ஏஜண்டுகளாக நியமிக்கப்படவில்லை. அவர்கள் ஏஜண்டு களாக நியமிக்கப்படக்கூடாதென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவர்கள் 4 லட்சம், 5 லட்சம் ரூபாய் மோசடி செய்த பிறகு, அவர்களுடைய புதல்வர்கள் பெயருக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். பெயரைத் தனியாகச் சொல்கிறேன். என்னிடம் பெயர் இருக்கிறது. இந்த ஆண்டு மறுபடியும் அவர்களுடைய கிடங்குகளைத் திறந்து பார்க்கிறபோது அங்கு நெல்லே இல்லையென்ற நிலைமை இருக்கிறது. அமைச்சரவர்கள் கிரிமினல் குற்றமென்று சொன்னார்கள். சில பேர் மேலே கிரிமினல் குற்றம், சில பேர் மேலே கிரிமினல் குற்றமில்லையென்ற பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன். திண்டுக்கல் பார்ட்டியிலே கிரிமினல் வழக்கு போடப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். பழனியிலுள்ள பார்ட்டி 6 லட்சம் ரூபாய் அளவுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். தஞ்சா ஊரிலே உள்ளவர்கள் ரூ. 4½ லட்சம், ரூ. 5 லட்சம் கொடுக்க வேண்டியவர்கள் மேலே கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்படவில்லை. சில பேர் மேலே போட்டு, சில பேர் மேலே போடாமல் இருக்க என்ன காரணம் என்பதை அமைச்சரவர் கள் விளக்க வேண்டும். அதுவும் பூட்டி வைத்தது என்று சொன்னார்கள். லெவி நெல்லை வாங்குகிறபோது, உடனடியாக, 2 அல்லது 3 வாரங்களுக்குள்ளாக அரிசி கொடுக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளாக நெல் இல்லை என்று கண் காணிக்கிறபோது, தெரியவருகிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்படிப் பட்ட நிலைமை உருவானதற்கு அரசும் காரணம் என்பதையும் அறிய விரும்பு கிறேன். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கண்ட்ரோல் இருந்த நேரத்தில், சென்னைக்கும் மற்ற பகுதிகளுக்கெல்லாம் உடனடியான தேவைக்கு அரிசி வரவேண்டுமென்று கருதிய காரணத்தால், 'புரக்யூர்மெண்ட்' நடந்து கொண்டேயிருக்கும், அரிசியை அனுப்பிக்கொண்டே இருப்பார்கள். வருடா வருடம் எவ்வளவு அரிசி 'புரக்யூர்' செய்தீர்கள், எவ்வளவு லெவி உங்களிடத் திலிருக்கிறது, எவ்வளவு அரிசி கொடுத்தீர்களென்று கணக்குப் பார்ப்பதில்லை. நாம் கண்ட்ரோலை நீக்கியதற்குப் பிறகு, கணக்குப் பார்க்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைக்கு வந்தோம். எவ்வளவு மொத்தம் அவர்களிடத்தில் வந்தது, எவ்வளவு ஸ்டாக் இருக்கவேண்டுமென்று கணக்குப் பார்க்கும்போது,



இந்தத் தவறுகள் தெரிய வந்தன. 'சைக்கிள்' போல் நடந்துகொண்டு வந்ததை நாம் நிறுத்தினோம். நிறுத்திய பிறகு கணக்குப் பார்க்க வேண்டிய அவசியத்திற்கு வந்தோம். கணக்குப் பார்த்த பிறகு அரிசி, நெல் குறைந்திருப் பது உண்மை. அவர்கள் எல்லோர் மீதும் கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். பாரபட்சமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசு ஆணைகள் பிறப்பித்து, அதற்குண்டான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. எல்லோரும் கிரிமினல் நடவடிக்கைக் குள்ளாவார்கள்.

### *Food Corporation of India*

*139 *Q*.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the State Government have allowed the Food Corporation of India to open (1) wholesale and (2) retail shops in the State; and

(*b*) if so, the details thereof?

### இந்திய உணவுக் கழகம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் (1) மொத்த விற்பனைக் கடைகளையும் (2) சில்லறை விற்பனைக் கடைகளையும் திறக்க இந்திய உணவுக் கழகத்தை இம்மாநில அரசு அனுமதித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) வெளிச் சந்தை யில் நிலவுகின்ற விலைகளைக் கருத்திற்கொண்டு இந்திய உணவுக் கழகம் வரை யறுக்கும் விலைகளில் கோதுமை, சோளம், பருப்பு வகைகள் ஆகியவற்றை விற்பனை செய்ய அக்கழகம் சென்னை நகரில், மொத்த விற்பனை நிலையம் ஒன்றினைத் தொடங்கியிருந்தது. இவ்விற்பனை நிலையம் மூடப்பட்டு விட்டது.

### *House Building Societies*

*140 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to revive the House Building Societies; and

(*b*) if so, the details thereof?

### வீடு கட்டித் தரும் சங்கங்கள்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீடு கட்டித்தரும் சங்கங்களை மீண்டும் தொடங்கும் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து அதிகத் தொகையை கடனாகப் பெறுவதற்காக அனைத்து கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களையும் தமிழ்நாடு மத்திய கூட்டுறவு வீடு அடமான சங்கத்துடன் இணையவேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், சென்னை, மதுரை, சேலம், வட ஆற்காடு, தென்னாற்காடு போன்ற நகரங்களில் ஐந்து துணைப் பதிவாளர்களின்கீழ் கூட்டுறவு வீட்டு சங்கங்களை கவனிக்க மண்டலங்கள் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இத்துணைப் பதிவாளர்கள் கூட்டுறவு வீட்டு சங்கங்களை பரிசீலனை செய்து முடிந்த அளவு அவைகளை செயல்படச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** சங்கங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** கடன்கள் இந்த ஆண்டு நிறைய சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் 1971-72-ல் ஏறக்குறைய 2,63,00,170 ரூபாயும், பின் 1,85,28,170 ரூபாயும் கடனாக வழங்கப் பட்டிருக்கிறது.

**திரு. எஸ். வெள்ளபாண்டியன்:** தலைவரவர்களே, பிப்ரவரி 8, 9 தினங்களில் நான் . . . .

**திரு. கே. இராசாராம்:** இன்னும் கேள்வி நேரமே முடியவில்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, am I to understand from the answer that has been given now by the Hon. Minister that all these co-operative societies—the House Building Co-operative Societies in Madras which were in existence for the last 20 years and which have now become defunct—are being revived, and if so, for what purpose, Sir?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஏறக்குறைய 979 கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் தமிழ் நாடு பூராவும் இருக்கின்றன. அதிலே இப்போது கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் 410, மற்றவைகள் எல்லாம் சேர்ந்து 579 இருக்கின்றன. அவைகள் எல்லாம் கூட்டுறவு வீடு கட்டும் 5-20
சங்கங்கள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் என்று பல்வேறு பெயர்களிலே பி.ப.
இருக்கின்றன. மொத்தம் 979 சங்கங்கள். இதிலே, இந்த ஆண்டு பல சங்கங்கள் 3 வருடங்களாக கடன்களுக்கு விண்ணப்பித்துக்கொள்வதில்லை. அவைகள் எல்லாம் அங்கு இருந்து கொண்டிருப்பதற்குக் காரணம் 20 ஆண்டுக் கடன்களை வசூலிக்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. கட்டிடங்களைக் கட்டி முடித்துவிட்டார்கள். அவர்கள் மேற்கொண்டு எந்தச் செயல்களும் ஆற்றுவதில்லை. பணத்தை மட்டும் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். மற்றபடி, 3 வருடங்களாகக் கடனுக்கு விண்ணப்பித்துவரும் சங்கங்கள் 210. இந்த ஆண்டு 354 விண்ணப்பங்கள் வந்து அதிலே 33.76 லட்சம் ரூபாய் தரப் பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** கிராம வீடு கட்டும் சங்கங்கள் இந்த ஒருங்கிணைப்பில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அவைகளையும் சேர்த்துத்தான் 989 சங்கங்கள். கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மொத்தம் 410 இருக்கின்றன.

**திரு. எஸ். ஜி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** தலைவரவர்களே, இந்தக் கிராமக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்குத் தொகை நிர்ணயித்து அனுப்பவது சென்னையிலிருந்து என்று நினைக்கின்றேன். அந்தந்த மாவட்டத்திலேயே அந்தக் குறிப்பிட்ட தொகையை நிர்ணயித்து கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு நியாயமான தொகையைக் கொடுக்கின்ற அளவுக்கு வழிவகை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, எல்.ஐ.சி. மூலம் தான் நாம் பணத்தை சங்கங்களுக்கு, வாங்கி அனுப்புகின்றோம். ஒரு அபெக்ஸ் சொசைட்டியினுடைய தலைநகரமாக சென்னை இருக்கிறது. அதன் மூலம் பணம் கொடுப்பதுதான் முடிகிற காரியம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**MR. CHAIRMAN:** Questions are over

(திரு. எஸ். வெள்ளபாண்டியன் எழுந்து நின்றார்.)

[1973 பிப்ரவரி 28

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : நான் திரு. வெள்ளபாண்டியனுக்குச் சொல்லிக் கொள்வேன். நீங்கள் ஏதாவது படிப்பதாக இருந்தால், முதலில் தலைவரிடமிருந்து 'பெர்மிஷன்' பெற வேண்டும்.

Under Rule 81 of the Council Rules, a member may, with the permission of the Chairman, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward, and no debate shall be allowed on such explanation.

[குறிப்பு . . . ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. 1973-74 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

* THIRU V. ISVARMURTI : Mr. Deputy Chairman, Sir, I have great pleasure in welcoming the Budget presented by the Hon. the Chief Minister for 1973–74. Whatever may be one's views on several allocations that have been made, I am glad to note that this Budget is marked by boldness, courage and initiative and this Budget has some commendable features. The Budget has no new taxation proposals and also this Budget shows a marginal surplus. As such, I think, the people, as a whole, welcome the Budget rather than find fault with it.

At the outset, I would like to point out that indeed it is really a bold measure to take over the Aluminium Industry in our State. Any party which professes 'socialism' will naturally have to welcome this feature. But in taking over such a major industry, I would have expected the Government to come out with a clear statement of policy behind such a take-over, though it is made clear that this measure was taken with a view to making this material easily available to all industries and with a view to utilising the natural resources in our State in the public interest. But in the special circumstances that prevail in our State and in our country, there will be many who will find motives behind this measure. I, therefore, expect the Government to state clearly whether this industry will be run in the joint sector or whether it will be a full-fledged public sector industry, because the Hon. the Chief Minister, while speaking at the National Devel...



1973 பிப்ரவரி 28] [Thiru V. Isvarmurti]

Council, had made some pragmatic suggestions and also the Government of India have come out with a new Industrial Policy Statement in which it is clearly stated that the joint sector has a great role to play. When we look at the several industrial projects that have been sanctioned by this Government, we can see that most of those industries in the joint sector have equity share capital lent by the Industrial Development Corporation and the share of this capital is about 26 per cent. I think in one industry the share even goes to 49 per cent. While this has been the policy of the Government, people will be expecting why the Government should come forward to nationalise this industry which has only 20 per cent of the shares from the Industrial Development Corporation. In any case, this bold measure will set a new pace for further development of joint sector industries in our State.

I am also happy to note that the Government have come forward to set up a number of measures like the Land Financing Corporation. In this connection, I would like to suggest that this is not an easy thing and it will have to cover a whole lot of complex problems. Unless this measure is put through with clear principles, this will end up as a short-lived measures Therefore, I would suggest that while giving financial assistance to tenants to own the land that they cultivate, the Government should adopt a reasonable market price for the lands, so that there will be no new tensions in the rural set-up.

I also welcome the Harijan Housing Corporation, because this is one of the areas which we have neglected for long. Here again, the Government have to keep in mind the statement of the Hon. the Chief Minister before the National Development Council that 30 to 40 per cent of the population live below poverty line and the problem to be tackled is quite enormous. I hope this setting up of Harijan Development Corporation will lead to a fully comprehensive Scheme like the Slum Clearance Board. In other words, the Harijan Development Corporation means, in the ultimate analysis, the clearing of the slums in the villages. I hope the Government will pursue the scheme with vigour and for such a Scheme, I am sure all parties would support this Government. பி.ப 5-30

I also find a very interesting suggestion to set up Labour Legal Advisory Cell in some of our industrial cities. Just to make it purely a Labour Legal Advisory Cell, free from party politics, I

[Thiru V. Isvarmurti] [1973 பெப்ரவரி 28

would like to suggest to the Government somehow to invite the co-operation of the major Trade Unions to make this Scheme really useful to the labourers irrespective of their political affiliations.

On the whole, the Budget gives an encouraging picture about our revenues. But as a comment, I would like to look at the Budget in the prevailing power crisis and industrial stagnation which marks the economy at the moment. Though the Budget expects a revenue of Rs. 465 crores, I doubt whether in the current power crisis and consequent decline in industrial production the Government would be able to realise all the revenues estimated in the Budget. I would like to make one marked criticism and that is the fault that the Government have done. It has not come out with any short-term measures to tackle the power crisis that faces the State. This power crisis gives us an opportunity to understand the magnitude of the problem, and I am sure the Government will draw correct lessons and go about doing something worth while, so that we will not be faced with another major crisis which affects all sectors of our people.

I find from the figures provided by the Union Minister of Irrigation and Power that this power crisis is more marked in the southern region. It is found that out of 34.97 million units that are needed per day at the moment, the deficit is more marked in the southern region, where it is of the order of about 15 million units per day, while in the western and the eastern regions, they are 7 and odd million units and 6.5 million units respectively. So, we find that when the power crisis actually becomes intensive, it affects Tamil Nadu very much even among the southern States; and Tamil Nadu is more affected by a power crisis than any other State in India.

One suggestion I would like to make to tackle this periodical power crisis would be that we should take steps for the formation of a common power grid for all the southern States. I find here again the northern States going in for a common power grid and this is to make an equitable supply of the available power among all the northern States to put an end to the disparity in power supply. On the same lines, if we have a common power grid for the southern States, I think it will be easy for us to avoid a power crisis of this magnitude.



1973 பெப்ரவரி 28] [Thiru V. Isvarmurti]

Sir, speaking about socialism, I find the steps that have been announced in this Budget by the Government are not enough, when we take note of the fact that we are having a revenue of about 460 crores of rupees. I would have expected the Government to come out with some comprehensive measures to help the really weaker sections of the people. Of course, to introduce any such schemes designed to help the weaker sections, we have to keep in mind the financial stringency. But, as a first step, I would have expected the Government to come out with a realy comprehensive programme, for example, the feeding programme for children of pre-school age; and I think a scheme designed to help all the pregnant and lactating mothers with nutritious food would go a long way to help the weaker sections. In the same way, when we look at the education of the children in our State, there are lakhs and lakhs of children who are not able to attend the school for the very simple reason that they cannot afford to buy even the materials like books and slates and clothings. From the figures given for the year 1972–73, I find that the special Nutrition programme helps only 2,10,000 children in our State; and the number of mothers who are helped by this programme would come to only about 40,000. I would urge the Government to come out with a bold programme so that all the school-going children are at least supplied with their basic requirements like food, clothing and books and these children will take their right place in our society in the years to come.

Sir, I also find in the Budget that the Government have not come out with any bold programme to tackle the mounting problem of unemployment, especially among the educated. Speaking about the problem of the educated unemployed, I would like to draw the attention of the Government to the tension that is building up among the students of the Industrial Training Institutes and Polytechnics and among the trained teachers. Unless the Government step up the programme of giving employment to these people, I am afraid we will not be able to contain this problem of unemployment within proportions. Closely related to this problem of unemployment is the industrial stagnation in our State. I find from the Annual Plan for 1973–74 that our industrial production especially in the heavy and medium sectors is showing a declining trend. While in the Annual Plan for 1973–74 there is a statement showing the progress in other sectors during

பி.ப. 5-40

[Thiru V. Isvarmurti] [1973 பிப்ரவரி 28

the previous four years, the statement of progress of industrial development for the past four years has been left out of this Annual Plan, for the very obvious reason that we are not able to show any progress on this front. So, Mr. Deputy Chairman, I would like to urge the Government not to rest content with the nationalisation of industries like Aluminium and bus services but to spell out clearly their new industrial policy, so that more entrepreneurs come forward with certainty of mind to invest boldly in industries in our State. These periodical nationalisation measures, instead of helping to build up a sound base for industrial investment, rather proves to be an element of instablity in the policy of the Government.

While welcoming the Budget as a whole, I would like to make a special plea in that we cannot look at the Budget simply as an economic measure; and it is natural in a democratic set-up, different parties find different motives for the different proposals in the Budget. If the Government are serious about ensuring a democratic atmosphere, I would urge them to withdraw the recently introduced Public Men (Criminal Misconduct) Bill, because, by the introduction of that Bill, the atmosphere has become choked with a sense of fear and terror and uncertainty in the minds of the members of the Opposition parties; and that will not be conducive to the maintenance of cordial atmosphere both inside the Legislature and outside. With these remarks, I conclude. Thank you, Mr. Deputy Chairman.

* திரு. இரா. சாம்பசிவம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றத் தொடரிலே நமது முதல்வரும் நிதி அமைச்சருமான மாண்புமிகு கலைஞர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டு மிக மகிழ்ச்சியுடன் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன். உண்மையிலேயே அது மிகவும் நியாய உணர்வோடும் சமதர்ம நோக்கோடும் வெளியிடப்பட்டுள்ளது. ஆட்சியின் நோக்கம் மெல்ல மெல்ல என்றாலும், உறுதியாக சமதர்மப் பாதையிலேயே செல்வது என்றாலும், சொல்வதைவிட செயலில் அதிவேகமாகவே போகிறோம். எல்லாச் சீர்திருத்தங்களையும், கிடைத்த சந்தர்ப்பத்தை ஒழுங்காகப் பயன்படுத்திக்கொண்டு, விரைவிலேயே முடித்துவிடத் துடிக்கும் ஆட்சிதான் எங்கள் அண்ணாவின் வழி வந்த கலைஞர் ஆட்சி. எடுத்த எடுப்பிலேயே நாட்டின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயத்தின் வளர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்



1973 பிப்ரவரி 28] [திரு. இரா. சாம்பசிவம்]

பட்டிருப்பதை நாம் உணரலாம். எல்லோருக்கும் உணவு, உடை, இருப்பிடம் இவைகளுக்கு முதலிடம் என்கிற சமதர்ம தத்துவத்தைப் பேச்சளவோடு நிறுத்திவிடாமல் செயல்படுத்தும் அரசுகளில் நம் அரசு, கலைஞரின் அரசு, முதலிடம் வகிக்கிறது என்பதைவிட இந்தியாவில் ஒரே அரசு என்றுகூட துணிந்து சொல்லலாம்.

உணவுத் தன்னிறைவு வேண்டும் என்பதற்காக பசுமைப் புரட்சி கண்டு வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது வெண்மைப் புரட்சியையும் தொடங்கியிருக்கிறோம். வேளாண்மைத் திட்டங்களுக்கு அதிகரித்த ஒதுக்கீடும் முதலிடமும் கொடுத்து, மானியம், கடன் என்கிற வகைகளில் உதவி விவசாயிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்திட இந்த ஆண்டு மேலும் பல கோடி, ஏறத்தாழ 40 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்திட வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நன்றி உணர்வோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். விவசாயத்தை ஒட்டியுள்ள கால்நடை வளர்ப்பு, வளர்ச்சி ஆகியவைகளுக்கும் இந்த ஆண்டு வெண்மைப் புரட்சியின் வாயிலாக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் விவசாயிகளின் வாழ்வில் இன்னும் ஒளி காண வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

உணவை அடுத்து உடை வழங்கும் கைத்தறி உற்பத்தியாளருக்கும் இந்த ஆண்டு உதவ மேலும் பல லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் இருக்கும் சங்கடங்களைப் போக்க நியமித்துள்ள குழுக்களின் பரிந்துரைகளைப் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்கிற உறுதி இத் தொழிலில் உடையோருக்குப் பெரும் ஆறுதலாகவும் உதவியாகவும் இருக்கும். விவசாயிகளே மிகப் பெரும் பகுதியாக உள்ள கிராமப்புறங்களை ஒன்றிணைக்க இணைப்புச் சாலைகள் மிகமிக முக்கியம் என்பதை உணர்ந்த இந்த அரசு இந்த ஆண்டு மேலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது கிராமங்களின் வளர்ச்சிக்கும் நகரங்களின் நெரிசலைத் தவிர்ப்பதற்கும் பேருதவியாக இருக்கும். உணவு, உடை இவைகளுக்குப் பின் முதலிடம் வகிப்பது இருப்பிடம். எல்லோருக்கும் வீடு, குறிப்பாக தாழ்த்தப்பட்டோருக்கு, கல்வீட்டை மிதித்தே பார்க்காத பல லட்சம் குடும்பங்களுக்கு சொந்தத்தில் கல்வீடு கட்டித்தர முன்வந்திருப்பது இந்த உபகண்டத்தை ஆளுபவர்கள் எண்ணிக்கூட பார்க்காத திட்டம் என்றால், அது மிகையாகாது.

[திரு. இரா. சாம்பசிவம்] [1973 பிப்ரவரி 28

குடிநீர் வசதிகளுக்காக தனி வாரியம் அமைத்து ஏழை எளியவர்கள் குடிநீருக்காகச் செலவிடும் காலத்தையும் பணத்தையும் விரயமாக்காமலும் சுத்தமான நீரைப் பருகவும் ஏற்பாடுகள் செய்து வாரியம் தனித் திட்டங்களை விரைவாகவும், விரிவாகவும் செய்துவருவது வேறு எந்த மாநிலமும் செய்யாத பணி என்று சொல்வது மிகையாகாது. குடியிருப்பு மனைகளின் உரியவர்களுக்கும் அரசே இழப்புத் தொகையைக் கொடுத்து அவர்களுக்கென்று குடியிருக்கும் இடத்தைச் சொந்தமாக்கிக் கொடுத்திருக்கிறது.

அடுத்து, தேசிய மயம், பேருந்து, உணவு தானிய வியாபாரம், தனியார் மின் நிறுவனங்கள், அலுமினிய தொழிற்சாலையை எடுத்துக்கொள்வது, நிலச் சீர்திருத்தம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், பிற்பட்டோர் நலக் குழு ஆகியவை அமைத்தல், மனையைச் சொந்தமாக்கி அரசே இலவசமாகக் கொடுத்துவிடுவது, குடிநீர் வாரியம், கிராம கைத்தொழில், கதர் வாரியம் அமைத்தல் இவைகளையெல்லாம் செய்து நாம் வெகு வேகமாகவே சமதர்மப் பாதையில் செல்கிறோம். என்றாலும் நம் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆர்வத்தாலும் அவாவினாலும் மெல்ல மெல்லப் போகிறோம் என்கிறார்கள்.

மத்திய அரசின் மாற்றாந்தாய்ப் போக்கு, ஒத்துழைப்பு இன்மை, நிதி உதவி உரிய அளவிற்குச் செய்யாமை, அதுவும் காலத்தில் செய்யாமை ஆகியவை மின் விசைப் பற்றாக்குறைக்குக் காரணங்களாகும். மத்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாமையும் காலத்தில் திட்டங்களை அனுமதிக்காமையுமே காரணங்கள் ஆகும். வேஷ்டி, புடவை, துண்டு, பெட்சீட், சமக்காளம் இவைகளைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக வற்புறுத்தியும் மத்திய அரசு செவி மடுக்கவில்லை. இந்தியா முழுமைக்கும் 680 கோடி ரூபாய் மத்திய அரசு தொழில் துறை முதலீடு. நமக்கு இதில் 20 கோடி ரூபாய். நாம் அனுமதி கேட்டுள்ள தொழில்கள் அனைத்துக்கும் தேவை சுமார் 120 கோடி ரூபாய். இது எப்போது கிடைக்குமோ? சேது சமுத்திரத் திட்டத்தை 20 ஆண்டுகளுக்கு மேலாக வற்புறுத்தியும், அது வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் உறுதியும் இல்லை. வேலை வாய்ப்புத் தேடிக் கொடுக்கும் பணிக்கு செலவு செய்ய ரூ. 15 கோடிக்குத் திட்டம் தயாரித்திருந்தாலும், இதற்கும் மத்திய அரசின் ஒப்புதலும் உதவியும் பெற வேண்டியிருக்கிறது. பல்வேறு துறைகளிலும் எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் உதவியும் அனுமதியும் தேவைப்படுவதால் நம் பணியின் வேகம் குறைகிறது. அதனால் உற்சாகம் இழக்கிறோம். வேண்டுமென்றே பழி சொல்பவர்களுக்கு இது வசைவாகவும் இருக்கிறது.



1973 பிப்ரவரி 28] [திரு. இரா. சாம்பசிவம்]

இம்மாதிரிப் பெரும் தடைகள் இருந்தும் நமது கலைஞர் அவர்கள் தனக்கே உரிய திறமையினால் எவ்வளவு வேகமாகவும் உறுதியாகவும் சமதர்மப் பாதையை நோக்கிப் போகிறார்கள் என்பதை நல்லவர்களும் நடுநிலை மக்களும் உழைக்கும் வர்க்கமும் நன்கறியும் என்பது வெள்ளிடை மலை. ஆகவே உண்மையான சமதர்மம் வந்திட மற்ற நாட்டவர்களுக்குக் குறையாமலும் ஈடுகொடுத்தும் வர நாம் மாநில சுயாட்சி கோருவது எவ்வளவு நியாயம் என்பதனை காலம் விரைவில் அனைவருக்கும் உணர்த்தும்.

இதுவரை ஆட்சிப் பொறுப்பில் உள்ள கழகக் கொள்கைகளின் பக்கமே நாடும் இதர ஆட்சிகளும் வந்துகொண்டிருக்கிறதே தவிர நாங்கள் மற்ற கட்சிகளின் கொள்கைகளை ஏற்க அவசியமே இல்லாமல் இருக்கிறது. ஆகவே உண்மையிலேயே மக்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் பொது வாழ்வில் இருக்கிறோம் என்று சொல்லும் மாற்றுக் கட்சித் தோழர்கள் சற்று நிம்மதியாகச் சிந்தித்து இது வரை எங்கள் கொள்கைகளிலே, திட்டங்களிலே என்ன குறை கண்டார்கள் என்பதனைத் தெளிவாக உணர்ந்து எங்கள் பக்கம் வர வேண்டும், தமிழகத்தை தமிழனை தன் மானத்தோடு வாழவைக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். 'இதயம் பேசுகிறது' என்கிற கட்டுரையிலே மணியன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஒரு ரஷ்ய அறிவாளி உரையாடலின் போது ஒரு தத்துவத்தை வெளியிட்டாராம். அதாவது "எங்கள் நாட்டிலே கட்சியைப் பற்றிக் கவலையில்லை. மக்களைப்பற்றியே கவலை. காரணம் வேறு கட்சி பதவிக்கு வந்துவிடுமோ என்கிற கவலையும் போட்டியும் எங்கள் நாட்டிலே இல்லை" என்று ரஷிய அறிஞர் கூறினாராம். அதாவது "எங்கள் நாட்டிலே கட்சிக் கவலை இன்றி மக்கள் கவலையாக இருக்கிறோம்" என்று கூறினாராம். மக்களைப்பற்றி கவலைப் படாமல் மற்ற கட்சிகள் ஏதாவது இல்லாதது பொல்லாததைச் சொல்லி எப்படி 5—1 பி.
யாவது ஆட்சிக்கு வரவேண்டும் என்று நினைக்கின்றதே ஒழிய, மக்கள் நன்மைக்காக எதையும் பார்க்கக்கூட மனமில்லாமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டி, கலைஞர் அவர்களோ ஆட்சியைப்பற்றிக் கவலைப்படாமல் மக்களைப் பற்றியே கவலைப்படுவதால் தான் இன்று இந்த அளவிற்கு ஏழை எளியவர்களுக்கு இந்த அரசு நன்மைகள் செய்ய முடிகிறது. ஆகவே கடந்த கால சரித்திரத்தையும், நிகழ் கால சரித்திரத்தையும் நன்கறிந்துள்ள பொது மக்கள் எந்த ஆட்சி நீடித்தால் நன்மை என்று தெரியாத அளவிற்கு கருத்துக் குருடர்கள் அல்ல என்பதை எதிர்க் கட்சிகள் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கட்சி வேறு ஆட்சி வேறு அல்ல என்கிற சித்தாந்தத்தின் கர்த்தாக்கள் இந்த சித்தாந்தத்தால் தான் மக்களாட்சி செய்யமுடியும், மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று கூறுகிறார்கள்.

[திரு. இரா. சாம்பசிவம்] [1973 பிப்ரவரி 26

மேலும் இந்த பட்ஜெட்டிலே பக்கிங்ஹாம் கால்வாய் சீராக்கப்பட்டு போக்கு வரத்திற்கும் லாபமாக சிக்கனமான முறையில் பயன்படுத்தப்படும் என்று இருக்கிறது. அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

மேலும் நிலச் சீர்திருத்தச் சட்டம், ஏழை எளியவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகின்ற திட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்களுடைய நிலத்தை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய உரிமையை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதிலே என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், 'ஏழை சிறுநில உடைமையாளருக்குத் தீங்கு நேரா வண்ணம்' என்கிற வாசகம் அதிலே சேர்க்கப்பட வேண்டும் என்பதுதான். அதைக் கபேரூர் அவர்கள் செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் சமர்ப்பித்திருக்கிற பட்ஜெட்டைப் பாராட்டி, அரசையும் பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த பட்ஜெட் உரையில் என்னுடைய சில வார்த்தைகளைக் கூற பெருமகிழ்ச்சியடைகிறேன். பட்ஜெட் கூட்டமென்றாலே பயப்பட வேண்டிய ஒரு கூட்டம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பட்ஜெட் உரையை நிகழ்த்தி முடிக்கும் வரையில், கடைசியில் ஏதாவது ஒரு அடி வருமோவென்று காத்துக்கொண்டே, பயந்துகொண்டே கேட்டுக்கொண்டிருந்தோம். நல்லவேளையாக அவர்கள் எந்த விதமான வரியுமில்லையென்று விட்டுவிட்டார்கள். இந்த நேரத்தில் டெல்லியிலிருந்து பெரியதொரு அடி இடியென்று கிடைக்குமோவென்று ஐயமிருக்கிறது. இன்று ஒளிபரப்பில் அநேகமாகக் கிடைக்கக்கூடும். கட்டாயம் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். நமது பட்ஜெட்டில் புதிய வரிகள் இல்லையென்பதை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அவசர காலத்தினையொட்டி விதிக்கப்பட்ட சில வரிகளை ஏன் போக்கவில்லையென்று வருந்துகிறேன். நமது மாநிலம் அகதிகள் புனர்வாழ்விற்காக எந்தெந்த வரிகள் விதித்ததோ அவற்றையெல்லாம் போக்கியிருந்தால், இந்திய நாட்டிற்கே நமது தமிழ் நாடு முன்னோடியாக இருந்திருக்கக்கூடும். அந்த வரிகள் மாத்திரம் இன்னும் இருக்கின்றனவேயென்று வருந்துகிறேன். பட்ஜெட் கூட்டத்திற்கு அழைப்பு என்ற உடனேயே மற்றொரு பயம் இருந்தது. சென்னைக்குச் செல்கிறபொழுது 'டார்ச் லைட்', மெழுகுவர்த்தி முதலியவற்றைக் கொண்டுபோக வேண்டுமென்று கூறினார்கள். 'எங்கள் ஹாஸ்டலுக்கு அவையெல்லாம் தேவைப்படாது' என்ற இறுமாப்புடன் வந்தேன். வந்து இறங்கிய உடனேயே குளிப்பதற்கு வெந்நீர் கிடையாதென்ற ஒரு அறிவிப்பைப்



1973 பிப்ரவரி 26] [திரு. எம். ராஜா அய்யர்]

பார்த்தேன். அதை நியாயமற்ற அறிவிப்பாகக் கருதுகிறேன். 10 மணி நேரம் மின்சாரமில்லாமல் இருக்கிறது. அது ஒரு குறையாகத் தோன்றவில்லை. மின்சாரம் இல்லாமல் வாழ காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் மின்சாரம் இல்லாமல் வாழ முடியும். இன்னும் ஒரு மணி நேரம் மின்சாரத்தைக் குறைத்தாலும் ஒத்துழைக்கத் தயார். யுத்தகால நெருக்கடி நிலைமைபோல் அதை ஏற்றும் ஒத்துழைக்கத் தயார். ஆனால் இந்த வெந்நீர் கொதி கொண்டு எல்லோரும் ஒத்துழைக்கத் தயார். ஆனால் இந்த வெந்நீர் கொதி கொண்டு எல்லோரும் ஒரு அரை மணி நேரம்கூட மின்சாரம் கிடையாது, நீங்கள் கலன்களுக்கு ஒரு அரை மணி நேரம்கூட மின்சாரம் கிடையாது, நீங்கள் குளிர் நீரில்தான் குளிக்க வேண்டுமென்ற ஒரு அறிவிப்பு நியாயமற்றது. இதைப் பெரிதும் கண்டிக்கிறேன். இதனால் வயதானவர்களுக்கு ரொம்பவும் கஷ்டம். அதனாலேதான் கொதிநீர் இல்லையே என்ற கொதிப்பு வருகிறது. என் மீது சிறிது பரிதாபம் கொண்டு, 'கொதி நீர் இல்லையென்று சொல்லவில்லை, பழைய ஹாஸ்டலில் 2 ரூம்களில் இருக்கிறது. நீங்கள் அங்கு போய்க் குளிக்கலாம்' என்று சொன்னார்கள். நான் பழைய ஹாஸ்டலின் நிலையை நன்றாகத் தெரிந்தவன். அங்கு எல்லாக் குளிக்கும் அறைகளிலும் வெந்நீர் வரும்போது, ஒவ்வொருவருக்கும் 5 மணியிலிருந்து 5½ மணிவரைதான் கிடைக்கும். எனவே இப்போது வெந்நீர் இல்லாத நிலையை உடனே போக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஒரு ½ மணி நேரமாவது அந்த பாயிலருக் கெல்லாம் . . . (குறுக்கீடு) ஆர்டர் போட்டாகிவிட்டதா? நல்லவேளையாகப் போய்விட்டது. மின்சார அமைச்சரவர்கள் நாளைக் காலையாவது கொஞ்சம் கொதிப்பான காலையாக இருக்குமென்ற நற்செய்தியைத் தெரிவித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய நடவடிக்கைப் புத்தகங்களெல்லாம் முன்பு வெகு காலம் தாழ்த்தி வரும். இப் பொழுது நடவடிக்கைப் புத்தகங்கள் எல்லாம் அப்போதைக்கப்போது வருவதைப் பார்த்து, அந்தப் புதுமையை நான் பெரிதும் வரவேற்கிறேன். எந்தெந்தக் கூட்டங்கள் முடிவடைந்துவிட்டனவோ, அந்தக் கூட்டங்களில் நடவடிக்கைகள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு நமக்கு வந்துவிட்டன. அவைகளையெல்லாம் தேடித் திரிவது மிகவும் கஷ்டமாக இருக்குமென்று நினைத்தேன். அதை அவர்கள் மனதில் கொண்டு, 17 ஆண்டுகளாக எந்தெந்தப் பொருள் பற்றி, எந்தெந்த நாளில் பேசப்பட்டதென்ற புத்தகத்தைக் கொடுத்தார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். இது பொருள்பற்றிய புத்தகமாக அல்லவா இருக்கிறது; நாம் என்ன கேள்வி கேட்டோம்; அதற்கு அமைச்சரவர்கள் என்ன பதில் சொன்னார்கள்; அதைத் தொடர்ந்து அமைச்சரவர்களுக்கு

எடுத்துக்கூற விரும்புகிறோமே; எனவே எங்கள் பெயருக்கு ஒத்த ஒரு புத்தகத்தைத் தந்தால் நன்றாயிருக்குமென்று நினைத்தேன். அதே எண்ணம் அவர்களுக்கும் பிரதிபலித்திருக்கிறது. 'நேம் இண்டக்ஸ்' ( Name Index ) என்ற ஒரு அருமையான புத்தகத்தைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். நமது சட்டமன்றங்கள் செயல்படுவதற்காக நாம் 44 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். இவ்வளவு நன்றாக சட்டமன்ற நடவடிக்கைகளை அச்சடித்துக் கொடுக்கும் அதிகாரிகள் எல்லோரையும் நான் இந்த மன்றத்தின் சார்பிலே பாராட்டுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வரவு மிகுதியுள்ள இத்திட்டத்தை நமக்கு அளித்திருக்கிறார்கள். ஒரு விதத்தில் அது நமக்குச் சந்தோஷமானாலும், வரவு மிகுதியென்ற ஒரு மிகுதி வரவரக் குறைந்துகொண்டே வருகிறதைக் கண்ணால் பார்க்கிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 6½ கோடி ரூபாய் மிகுதியாக இருந்தது. சென்ற ஆண்டு 2½ கோடி ரூபாய் மிகுதியாக இருக்குமென்று கருதினோம். ஆனால் 1.8 கோடி ரூபாய் தான் மிகுதி. இந்த ஆண்டு ½ கோடி ரூபாய்தான் மிகுதியாக இருக்குமென்பதைப் பார்க்கும்போது இப்படிப் போய்க்கொண்டிருந்தால் ஏதோ பற்றுக்குறை பட்ஜெட் பின்னால் வந்து, வரி விதிப்பு என்ற பூதமும் வந்துவிடுமோவென்ற கவலை ஏற்படுகிறது. எனினும் வரவு மிகுதியாக இருக்கக்கூடிய இந்த பட்ஜெட்டைப் பாராட்டுகிறேன்.

கல்விக்காக 97 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைவிட 1½ கோடி ரூபாய் அதிகம் என்பதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஓய்வு ஊதியம், ஓய்வு கால நலன்கள் மூலமாக 41 லட்சம் ரூபாய் வரவு வருவதாக குறிப்பு இருக்கிறது. எனக்கு அது ஒரு மனக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது. ஓய்வு ஊதியம் மூலமாக எப்படி வரவு அரசாங்கத்திற்கு இருக்குமென்று தேடிப் பார்த்தேன். யாரோ நம்முடைய அதிகாரிகள் வேறு துறைகளில் இருக்கும்போது, அவர்களுடைய ஓய்வு ஊதியத்திற்குக் கொடுக்கப்படும் ஈட்டுப் பணமென்று அறிந்தேன். அதனால் 41 லட்சம் ரூபய் வருமானம் வருகிறது. ஆனால் ஓய்வு ஊதியத்திற்கு ஓய்வு கால நலனுக்கும் நம்முடைய அரசு 6 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்கிறது. அதற்காக அரசை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இதற்குக் காரணத்தையும் எடுத்து உரைத்திருக்கிறார்கள். இந்த அரசில் பணியாற்றும் எல்லா சிப்பந்திகளுக்கும், பிற ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு கால ஊதியத்திற்கு முப்பது ஆண்டுக் காலம் சர்வீஸ் இருக்க வேண்டும் என்பதை 25 ஆண்டுக் காலமாகக் குறைத்திருக்கிறார்கள். மூன்று



ஆண்டுக் கால சராசரி வருமானம் என்பது ஓராண்டுக் கால சராசரி வருமானம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. தாராள ஓய்வு ஊதியத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது. அது ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கூடியிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் இந்த தாராள ஓய்வு ஊதியத் திட்டம் கல்லூரி ஆசிரியர்களுக்கு விஸ்தரிக்கப்படாததற்கு வருந்துகிறேன். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு இதை விஸ்தரித்துவிட்டு நூற்றுக் கணக்கான கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் இல்லை என்று சொல்வானேன்? இதுவே ஒரு பெரிய முரண்பாடு. பெரிய கல்லூரிகளின் முதல்வர்கள் வாங்கக் கூடிய ஓய்வு ஊதியம் ரூபாய் 150-க்கு மேல் போகக்கூடாது என்று உச்ச வரம்பு இருக்கிறது. சென்னையிலுள்ள லயோலா கல்லூரி, ஜெயின் கல்லூரி முதல்வர்கள் நாளைக்கு ஓய்வு பெறும்போது, மிக அதிகபட்ச ஓய்வு ஊதியம் பெறக்கூடியது ரூபாய் 150 தான். ஆனால் ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் ஓய்வு பெறும்போது அவருடைய ஓய்வு ஊதியம் ரூபாய் 250 முதல் ரூபாய் 270 வரையில் போகலாம். இந்தப் பாகுபாடு இல்லாமல் இந்தத் தாராள ஓய்வு ஊதியத் திட்டத்தை உடனடியாகக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆசிரியர்களுக்கு ஊழியப் பாதுகாப்புக்காக இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இப்பொழுது ஒரு மசோதாவே வர இருக்கிறது. தனியார் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, அதுவும் குறிப்பாக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு ஓரளவு தற்பொழுது உள்ளது என்று கருதுகிறேன். அவர்களை வேலையிலிருந்து நீக்குவது அவ்வளவு சுலபமில்லை. ஓராண்டுக் காலம் புரொபேஷனில் வேண்டுமானால் வைக்கலாம். அதுவும் நிரந்தரமான ஸ்தானத்தில் டெம்பரரியாகவே அமர்த்தக்கூடாது. பெர்மனென்ட் போஸ்டில் டெம்பரரியாக வைக்கக்கூடாது என்பது உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கின்றது. ஆனால் கல்லூரியில் இல்லை. பெர்மனென்ட் அதாவது நிரந்தரமாக இருக்கும் ஒரு பேராசிரியர் அந்தப் பதவியில் பல ஆண்டுக் காலம் பணியாற்றி தகுதி பெற்றிருப்பார். இருந்தாலும் அவரைத் தாற்காலிகமாகவே ஆண்டுதோறும் நியமித்து வரும் அவல நிலையைப் போக்க வேண்டும். பள்ளிகளில் ஓராண்டுக் காலம் புரொபேஷனாக இருக்கலாம். அந்த ஓராண்டுக் காலம் முடிவாவதற்குள் உங்களுடைய புரொபேஷன் காலம் ஓராண்டு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, நீடிக்கப்பட்டிருக்கிறது என்று கூற வேண்டும். அப்படிக் கூறிவிட்டால் அவர் பெர்மனென்ட் ஆக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். அப்படிப் பாதுகாப்பு அவர்களுக்கெல்லாம் இருக்கிறது.

ஆனால் அந்தப் பாதுகாப்பு கல்லூரி ஆசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் இல்லை. உண்மையில் கல்லூரிக்குச் சென்ற பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நாம் என் பள்ளிகளுக்குச் செல்லவில்லை என்று வருந்துகிறார்கள். பள்ளி ஆசிரியர்களுடைய நிலை பல விஷயங்களில் உயர்வாக இருக்கிறது. அவர்களுடைய நிலைமை பொறாமைக்கு உகந்ததாக இருக்கிறது. இது தான் அதற்குக் காரணம். இந்தப் பாகுபாட்டை இந்த அரசு உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக டியூட்டர்ஸ், டெமான்ஸ்ட்ரேட்டர்ஸ், 10, 15 ஆண்டுகளாக டெம்பரரியாக இருக்கிறார்கள். குழந்தை, குட்டிகள் பெற்று அந்தக் கல்லூரியில் டியூட்டராகப் பணியாற்றும் ஒருவர் 10, 15 ஆண்டுக் காலம் டெம்பரரியாகவே வைக்கப்பட்டிருக்கின்றார் என்றால், அது எவ்வளவு பரிதாபத்திற்குரிய நிலைமை என்பதை நினைத்துப் பார்த்து அதற்கு உடனடியாகப் பரிகாரம் தேட வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, மற்றொரு முக்கியமான விஷயத்தை அவைக்கு எடுத்து வைக்கிறேன். அதற்கு முன்னர் ஆசிரியர்கள்பற்றி ஒன்று கூறி அந்த விஷயத்திற்கு வர விரும்புகிறேன். அகவிலைப் படி எல்லோருக்கும் பத்து ரூபாய் உயர்த்தியிருப்பதற்கு நன்றி. நமது அரசு சிப்பந்திகள், ஆசிரியர்கள் எல்லோருக்கும் தலைக்கு பத்து ரூபாய் உயர்த்தினாலேயே ஆறு கோடி ரூபாய் செலவாகிறது என்று புள்ளி விவரம் இருக்கும்போது, எத்தனை பேர் இதனால் பயன் பெறுகிறார்கள்; நாம் சம்பள விகிதத்தைத் திருத்தும்போது எவ்வளவு பெரிய பிரச்சினைகளுக்கு முன் நின்று செயல்பட வேண்டியிருக்கிறது என்பது நமக்குப் புரிகிறது. ஆனால் இந்தத் தொகை பிராவிடன்ட் பண்டில் சேர்க்கப் பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பிராவிடண்ட் பண்ட் அக்கவுண்ட் இல்லாதவர்களுக்கு இது ரொக்கப்பணமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லோருக்கும் டீச்சர்ஸ் பிராவிடண்ட் பண்ட் அக்கவுண்ட் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஆகையினால் அவர்களுக் கெல்லாம் ரொக்கமாக இது கொடுக்கப்பட வேண்டும்.

அகவிலைப்படியானது எவ்வெப்போது உயர்த்தப்படுகிறதோ அப்போ தெல்லாம், அதில் பாதி பென்ஷனர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இப்பொழுது நம்முடைய சிப்பந்திகளுக்கு பத்து ரூபாய் உயர்வு கொடுக்கின்றபோது, அவர்களுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பென்ஷனர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமையாக இருக்கிறது. அதைப்பற்றி நான் பன்முறை பேசியிருக்கிறேன்.





அவர்களுடைய நிலைமையில் பரிதாபம் காட்டி அரசு உடனடியாக உத்தரவு போட்டு, 50 சதவிதம், அதாவது ஐந்து ரூபாய் அவர்களுக்குக் கிடைக்கும் படியாக இந்த ஓய்வுதியத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பின் தங்கிய வகுப்பினர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் அரசு செய்துள்ள நல்ல காரியங்களை எல்லோரும் பாராட்டினார்கள். அவ்வளவு பாராட்டுதல்களும் தகும் என்பதை நான் உண்மையாக உணர்வேன். பின் தங்கியவர்களை அதிகமாகக் கொண்ட பிராந்தியத்திலிருந்து வருகின்ற நான் இன்று அந்தப் பிராந்தியம் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கின்றது, குறிப் பாகப் பின் தங்கியவர்களுக்கு இந்தச் சமூக நீதி வழங்கப்பட்ட பின், நல்ல பல திட்டங்களால் எவ்வளவு மேம்பாடு அடைகிறார்கள் என்று நான் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்கெல்லாம் நன்றி. ஒரு சிறிய குறையை நமது அமைச்சருக்குச் சொன்னேன். பிற்போக்குச் சமூகத்தினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்தக் குறையை உடனடியாக ஆராய்ந்து பார்த்து, அதைப் போக்குவதற்கு உத்தரவு போட்டார்கள். எங்கள் பக்கத்தில் உள்ள விரக்கொடி வெள்ளாளர்கள் பிற்பட்ட சமூகத்தினர் அல்ல, திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பகுதியில் இருக்கிறவர்கள்தான் பிற்போக்கு நிலைமையில் உள்ளவர்கள் என்று 'பேக்வேர்ட் கிளாஸஸ் கமிஷன்' செய்திருந்த பரிந் துரையை மாற்றி, இவர்களையும் சேர்த்துக்கொண்டார்கள். அரசு இந்த விஷயத்தில் உடனடியாக வேலை செய்தது. ஜீ.ஓ. நம்பர் 437-ல் முதலில் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் ஜீ.ஓ. எம்.எஸ். நம்பர் 1082, தேதி 21—11—1972 என்பதில் விரக்கொடி வெள்ளாளர்கள் நம்முடைய தமிழ் நாட்டில் எங்கிருந் தாலும் பிற்போக்குச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று உத்தரவு போடப் பட்டது. அத்துடன் ஒன்று சேர்ந்து விட்டது. பணிசெய்வோர் என்போர் பிற்போக்குச் சமூகத்தினர் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இது தனியாக இரண்டு அரசு ஆணைகளாக இருந்திருந்தால், இன்று ஏற்பட்டுள்ள அவல நிலை ஏற்பட்டிருக்காது. அந்தப் பணிசெய்வோர் சமூகம் இப்பொழுது உயர் நீதி மன்றத்திற்கு, நாங்கள் பிற்பட்ட சமூகத்தினர் அல்ல, நாங்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் என்று ஒரு வழக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பணி செய்வோர் சமூகம் வழக்குப் போட்டதால், அந்த அரசு ஆணையையே நிறுத்தி வைக்க உயர் நீதி மன்றம் ஆணையிட்டிருக்கிறது. 'ஏ' அண்ட் 'பி' ஐ இணைத்து ஒரு உத்தரவு போடுகிறோம். 'பி' என்பவர் உயர் நீதி மன்றத்தில் வழக்கு செய்திருப்பார். அதனால் 'ஏ' என்பவர் பாதிக்கப்படுவார். அந்த மாதிரி ஒரு நிலைமை இப்பொழுது ஏற்பட்டு விட்டது. அந்த உத்தரவை பணி செய்வோர் சம்பந்தப்பட்டவரை நிறுத்தி வைப்பதற்கான வகையில் ஒரு

திருத்தத்தைச் செய்வோமானால், அது மிகவும் நல்ல முறையில் அமைந்ததாக இருக்கும். அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, பிற்போக்குச் சமூகத்தினர் பட்டியலில் இருக்கும் என்று நம்பி பலர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பிற்போக்கு சமூகத்தினரில்லை என்று தெரிகிறது. அப்படிப் பிற்பட்ட வகுப்பினர் சமூகத்தில் இல்லையென்று பிற்காலத்தில் வந்தால், அந்தப் பையன் கல்லூரிப் படிப்பு முழுமையாக முடியும் வரையில் படிக்க உரிமை கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்ற ஒரு அதிர்ச்சி ஏற்படாது என்ற எண்ணத்திலேயே அவன் கல்லூரியில் சேருகிறான். வடஆற்காடு மாவட்டத்தில் வட பலிஜா இனத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அப்படி அவர்கள் கல்லூரிகளில் சேர்ந்திருப்பார் களேயானால், கொடுக்கப்பட்டு வரும் ஸ்காலர்ஷிப் மறுபடியும் 'ரின்யூ' பண்ணும் போது கட்டாயமாகப் பாதிக்கப்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு உடனடியாக அரசு ஆணையிட்டுப் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். படிப்புக்கு உதவிப் பணங்களை நாம் பெருவாரியாகக் கொடுக்கிறோம். மத்திய அரசும் கொடுக்கிறது. 'நேஷனல் மெரிட் ஸ்காலர் ஷிப் ஸ்கீம்' இருக்கிறது. நம் மாநிலத்தைச் சேர்ந்த பல மாணவர்கள், அந்த

–10 பி.ப. 'நேஷனல் மெரிட் ஸ்காலர்ஷிப்' திட்டத்தின் படி பயன் அடைகின்றனர். ஆனால் அதில் ஒரு குறை இருக்கிறது. மெரிட்-கம்-மீன்ஸ் டெஸ்ட்' என்று வைத்திருக்கிறார்கள். 6,000 ரூபாய்க்கு அதிகமாகப் பெற்றோர்களின் ஆண்டு வருவாய் இருக்குமானால், அவர்கள் எவ்வளவு அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் கூட, அந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்காமலிருக்கிறது. இது மாணவர்களுடைய தகுதியைக் கொண்டு கொடுக்கக்கூடிய உபகாரச் சம்பளம். 600-க்கு 570 மார்க் வாங்கியிருந்தும், அவர்களுடைய பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்களாக இருப்பார்களானால், அவர்களது வருமானம் 6,000 ரூபாய்க்கு மேலிருக்கும். எவ்வளவு அதிகமான மார்க்குகள் பெற்றாலும்கூட, இருவருடைய மொத்த வருமானம், குறைந்த வருமானம், மறைக்க முடியாத வருமானம் 6,000 ரூபாய்க்கு அதிகமாக இருக்கிறதென்ற ஒரு குற்றத்திற்காக அந்த மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் மறுக்கப்படுகிறது. ஆனால் அவர்களுடைய பெற்றோர்கள் வியாபாரிகளாகவோ அல்லது கண்ட்ராக்டர்களாகவோ இருந்து, தெரிந்த இடங்களிலிருந்து மாதச் சம்பளம் பெறுதவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுடைய பிள்ளைகள் இந்த உபகாரச் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் தாயும், தந்தையும் வேலை பார்த்து, சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போட்டுப் பெறுகிற வருமானம்



ஆண்டுக்கு ரூ. 6,000-க்கு அதிகமாக இருக்குமானால், அவர்களுக்கு முற்றிலும் இல்லையென்று சொல்வது நியாயமாகத் தோன்றவில்லை. இந்த மெரிட் ஸ்காலர்ஷிப் என்ற திட்டத்தின்படி, இருக்கிற மீன்ஸ் டெஸ்டை விலக்கிவிடுவது நல்லது. அவர்கள் எவ்வளவு பணக்காரர்களாக இருந்தால் என்ன? தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு, படிப்பில் முற்போக்கான மாணவர்களுக்கு, அறிவுள்ள, பிரகாசமான மாணவர்களுக்கு, அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் எவ்வளவு இருந்தபோதிலும், அதை முற்றிலும் புறக்கணித்து, ஸ்காலர்ஷிப் கொடுப்பது நியாயமென்று கருதுகிறேன். மற்றொன்று, ஆயிரக் கணக்காக 'நேஷனல் லோன் ஸ்காலர்ஷிப்' கொடுக்கிறோம். இது வெறும் கடன். இந்தக் கடனைக் கொடுத்துவிட்டு திரும்பப் பெறுகிறோம். இதிலும் இம்மாதிரியான விதிகளால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த ஆண்டு இந்தக் கடன் கொடுக்கும் திட்டத்தின்கீழ் 600-க்கு 470 மார்க் பெற்றவர்களுக்குத்தான் கொடுக்க முடிகிறதேயொழிய, அதற்குக் குறைந்த மார்க்குகளைப் பெற்ற மாணவர்களுடைய மனுக்களை பரிசிலிக்க முடிய வில்லை. 600-க்கு 470 என்றால் 78.3 சதவிகிதம். மொத்தத்தில் 78.3 சதவிகிதம் எடுக்கும் மாணவர்களுக்குத்தான் கடன் உதவி அளிக்க முடிகிறது. 469 மார்க்குகள் பெற்றவர்களுக்குக் கடனில்லாமல் போய்விடுகிறது. 78.29 சதவிகிதம் சராசரி மார்க்குகள் பெற்றவர்களுடைய மனுக்களைக்கூட பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. மத்திய உதவி ஓரளவுக்குத்தான் கிடைக்கிறதென்றாலும், மாநில அரசு 'மாநில கடனுதவித் திட்டம்' என்பதன் மூலமாக 75 சதவிகிதத்திற்கு மேலே யார் யார் மார்க்குகள் எடுத்து, கடன் வேண்டுமென்று கேட்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். வறுமை இருக்கிறது, ஏழ்மை இருக்கிறதென்றாலும், இவ்வளவுதான் வருமானம் இருக்க வேண்டுமென்று விதிகளிருக்கின்றன. இந்த லோன் ஸ்காலர்ஷிப் திட்டத்துக்கு வருமானத்திற்கு உச்ச வரம்பு இவ்வளவுதான் இருக்க வேண்டுமென்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மிகவும் அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கு நாம் கடன் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இம்மாதிரி 75 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்ற எல்லோருக்கும் ஒரு கடனுதவித் திட்டத்தை நமது மாநில அரசு கொண்டு வந்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு, அதனுடைய சிப்பந்திகளுக்கெல்லாம் என்ன நலன்களைச் செய்திருக்கிறதென்பதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் செய்ய வேண்டிய நலன்கள் மிகக் குறைவாகத் தானிருக்கின்றன. ஒரு காலத்தில் 'செய்வதற்கு ஒன்றுமே இல்லையே' என்று அறிவிக்க வேண்டிய நிலை வந்து விடும். வீட்டு வாடகைக்காகப் படியாகக் கொடுக்கிறோம். சென்னை

மாநகரத்தில் 12 சதவிகிதம் கொடுக்கிறோம். அதை 15 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறோம். அது வரவேற்கத்தக்கதுதான். அதே சமயத்தில் அரசுக் கட்டிடங்களில் இருக்கிறவர்களுக்கெல்லாம் அவர்களுடைய ஊதியத்தில் 10 சதவிகிதம் விட்டு வாடகையாகப் பெறுகிறோம். அது நியாயம்தான். வாடகை பெற வேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்கு விட்டு வாடகைப்படி கிடையாதென்று கூறுகிறோம். அவர்கள் 10 சதவிகிதம் வாடகை கொடுக்கிறார்கள். மேலும் 15 சதவிகிதம் விட்டு வாடகைப் படியை இழக்கிறார்கள். ஆக அவர்களுடைய ஊதியத்தில் 25 சதவிகிதம் கொடுக்கிறார்கள். இந்த 25 சதவிகிதமென்பது ஒரு குறிப்பிட்ட தொகையாக இருப்பதல்ல. அடுத்த ஆண்டு அவர்களுடைய சம்பள விகிதம் கூடிக் கொண்டு போகும்போது, அவர்கள் கொடுக்கும் வாடகையும் கூடிக்கொண்டு போகிறது. விட்டு வாடகைப் படியும் கூடிக்கொண்டு போகிறது. இது நியாயமல்ல. ஒரு விட்டிற்கு ஒரு தொகை தான் வாடகையாக இருக்க முடியும். அதற்கு மேலாக ஆண்டுதோறும் கொடுத்துக் கொண்டே போவதென்றால், அவர்களுடைய சம்பளத்தோடு இணைத்து வைத்தால், அவர்கள் மேலும் மேலும் இழந்துகொண்டே போகக் கூடிய நிலையிருக்கிறது. அரசு குடியிருப்பில் இருப்பவர்களுக்கு இந்த விட்டு வாடகைப் படி கிடையாதென்று இருக்கக்கூடிய நிபந்தனையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வாடகை விட்டில்தான் இருக்கிறார்களா என்று பார்த்துக் கொடுப்பதில்லை . . . .

* மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்தால் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு, அலுவலாளர்கள் மிகத் தீவிரமாகப் போட்டி போட்டுக்கொண்டு, அந்த வீடுகள் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். உயர்திரு ராஜா அய்யர் அவர்கள் பேசுவதைக் கேட்டாவது, அதிக வசதிகள் வெளியே போனால் இருக்குமென்று அவர்கள் அரசாங்க வீடுகளைக் கேட்காமல் வேறு இடங்களுக்குச் சென்று குடியிருக்கக்கூடிய மனம் வருமேயானால், அந்த லாபத்தை அவர்கள் பெரிய அளவுக்கு அனுபவிக்கலாம்.

திரு. எம், ராஜா அய்யர் : நான் முற்றிலும் தப்பான கருத்தை உண்டு பண்ணிவிட்டேனென்று கருதுகிறேன். வெளியே அவர்கள் போகவே முடியாது. வெளியே போனால் வீடுகளும் கிடையாது, இந்த வசதிகளும் கிடையாது. ஆனால், தன் சிப்பந்திகளுக்கு நியாய வாடகைக்கு வீடு கொடுப்பது அரசினுடைய கடமை. ஒரு மாதத்திற்கு 55 ரூபாய் வருமானமுள்ள வீடுகளை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 15 ரூபாய்க்குத்தான் கொடுக்கிறோமென்று பெருமையுடன் முதல்வரவர்கள் கூறினார்கள். அதை வரவேற்கிறேன். அதற்கு ஒப்ப விட்டு வாடகை அமைய வேண்டுமென்று கேட்கிறேனேயொழிய,



வேறொன்றுமில்லை. எப்படி குடிசை மாற்று வாரியம் நியாயமான வாடகை ரூ. 55 என்று இருந்தாலும்கூட 15 ரூபாய் தான் வாங்குகிறதென்று முதலமைச்சரவர்கள் சொன்னார்களோ, அதுமாதிரி ஒருநாள் இந்த அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வீடு உண்டு என்ற முறையில் பல அரசுக் கட்டிடங்கள் வர வேண்டுமென்று விரும்புகிறேன். இல்லையென்றால், தனியார் விட்டு அதிபர்களுடைய, 'டெண்டர் மெர்சி' என்று சொல்வார்களே, அப்பொழுது அப்படி அவர்களுடைய தயவுக்கு அனுதாபத்திற்கு ஆளாவார்கள். ஆண்டுக் கணக்காக வீடுகளும் கிடைக் அவர்களால் வேலை பார்க்க முடியாது. நியாயமான ஒரு வாடகைத் காது. எனவே இந்த விட்டு வாடகையானது ஒரு குறிப்பிட்ட வாடகைத் தொகையாக தொகையாக இருக்க வேண்டும்; ஆண்டுதோறும் மாறிக் கொண்டிருக்கக் கூடாது என்று இருக்க வேண்டும்; அப்படி அமையுமானால், அதை 'எகனமிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படியொரு நிச்சயமான நியாயமான ரென்ட்' என்று சொல்லுவார்கள். அவர்களுக்குரிய விட்டு வாடகைப் படியைக் தொகையை நிர்ணயித்து விட்டு, வேண்டிக்கொள்கிறேன். எனவே அரசு அவர் கொடுக்க வேண்டுமென்று விட்டுவாடகைப் படியைக் கொடுக்க களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு வேண்டும்.

(மாண்புமிகு சட்டமன்ற உதவித் தலைவர் உரையை முடிக்குமாறு ஜாடை மூலம் தெரிவிக்கிறார்.)

மன்னிக்க ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். வேண்டுகிறேன். இந்த விட்டு வாடகைப் படியைக் கொடுக்கும்போது அவர்கள் வாடகை விட்டில்தான் இருக்கிறார்களா என்பதைப் பார்ப்பது கிடையாது. 4 அல்லது 5 வீடுகளின் சொந்தக்காரர்களும் 15 சதவிகிதம் பெறுகிறார்கள். எனவே அரசு வீடுகளில் உள்ளவர்களுக்கும் இந்தச் சலுகை வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு துணைத் தலைவர் உரையினை முடிக்குமாறு ஜாடை மூலம் தெரிவிக்கிறார்.)

சிறிது துணைத் தலைவரவர்களே, தயவு செய்து விரும்பி வேண்டிக்கொள்கிறேன். அவகாசம் வேண்டும். ஒன்றிரண்டு முக்கியமான விஷயங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ஆனால் புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக்குவதுபற்றி மகிழ்ச்சி. அந்த மாவட்டத்தில், இராமநாதபுரத்தின் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறேன். அதனால் ஒரு குறையுமில்லை. அந்தப் பகுதிகளில்

[திரு. எம். ராஜா அய்யர்] [1973 பிப்ரவரி 28

பெருவாரியான கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளெல்லாம் இப்போது மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருக்கின்றன. புதிய புதுக்கோட்டை மாவட்டம் வரும்போது, அது மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைய வேண்டுமென்று விரும்புகிறேன். புதுக்கோட்டை சோழ நாட்டைச் சேர்ந்ததென்று சொல்வதைவிட, பாண்டிய நாட்டுடன் அதிகத் தொடர்புடையதென்று கருதுகிறேன். இப்போது மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழ் 4 மாவட்டங்கள் இருக்கின்றன. புதுக்கோட்டையை 5-வது மாவட்டமாக மதுரைப் பல்கலைக்கழகத்துடன் சேர்க்க வேண்டுமென்று கூறிக்கொண்டு, அத்துடன் சேர்த்து இராமநாதபுரம் மாவட்டத்திற்கு தலைமைக் காரியாலயம் எவ்விடமிருக்க வேண்டுமென்பதையும் அரசு ஆராய வேண்டுமென்று விரும்புகிறேன்.

முதலமைச்சரவர்கள் தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசிய பேச்சினை முற்றிலும் படித்து, நான் மகிழ்ந்தேன். அவர்கள் கூறியிருக்கக்கூடிய கருத்துக்களை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லை. குறிப்பாக, நாம் குடும்ப நலத் திட்டத்தை இவ்வளவு தீவிரமாக அனுஷ்டிக்கிறபடியால், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதென்று கூறினார்கள். அந்த வாதத்தை வரவேற்கிறேன். அந்த வாதத்தைச் சிறிது பள்ளிகளுக்கு விஸ்தரிக்க வேண்டுகிறேன். குடும்ப நலத் திட்டம் இப்போது தீவிரமாக அமுலாக்கப்படுகிற காரணத்தால், பள்ளிகளுக்குப் போகிற வயதுள்ள பிள்ளைகளேயில்லை. ஆகவேதான் கேள்வி நேரத்தில் அமைச்சரவர்களை அவ்வளவு விளக்கமாகக் கேட்டேன். "புதுப் பள்ளிகளை ஆரம்பிக்கும்போது, பழைய பள்ளிகள் பாதிக்கப்படுகின்றனவே, ஏன் புதிய பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதிக்கிறீர்கள்" என்று கேட்டபோது கூட, மாண்புமிகு அவைத் தலைவரவர்கள் 'சப்ளிமென்டரி ஷார்ட்டாக இருக்க

6–20 பி.ப. வேண்டும், லெக்சர் பண்ணக்கூடாது' என்று சொன்னார்கள். நான் இதை மனதில் கொண்டுதான் அதைச் சொன்னேன். பள்ளிக்கு வரக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை இல்லாததினால் பல பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலையை இழக்கின்றார்கள் என்பதைத் திட்டவட்டமாக, புள்ளிவிவரங்கள் மூலமாக என்னால் கூற முடியும். நாம் பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய நிலையினை வைத்து தமிழ்நாடு முழுவதையும் எண்ணக் கூடாது. பல பள்ளிகள் தோன்றுகின்றன. குடும்ப நலத் திட்டத்தினால் பள்ளிக்கு வரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைகின்றது. இது ஒன்றுக்கொன்று நேர் மாறாக இருக்கின்றது.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மிகப் பெரிய அளவுக்கு ஆசிரியராக இருந்த அனுபவம் எல்லாம் பெற்ற உயர்திரு ராஜா அய்யர் அவர்கள் அண்மையிலே 2, 3 ஆண்டுகளில் குடும்ப நலத் திட்டம் தீவிர



1973 பிப்ரவரி 28] [திரு. க. அன்பழகன்]

மாக இருப்பதினாலே, 6 வயதிலே பள்ளிக்கு வந்து சேரவேண்டிய குழந்தைகள்
எண்ணிக்கை குறைந்துபோய்விட்டது என்று சொல்லுகிறார்கள். எப்படி இந்த
இரண்டையும் ஒன்றாக இணைக்க முடிந்தது என்று எண்ணுகின்றேன். என்ன
காரணத்தாலே 'குழந்தைகட்கு 3 வருடத்தில் ஆறு வயதாகியிருக்கும்' என்று
கருதுகிறார்களோ தெரியவில்லை. உள்ளபடியே இந்த 2 ஆண்டுகாலமாகத்தான்
3,45,000 பேர்களிடையே ஒரு ஆண்டுக்கு அந்தத் திட்டம் நடைபெற்றிருக்
கிறது. அதற்கு முன்னாலே 5 ஆண்டுகளிலும், 40 ஆயிரம், 50 ஆயிரம் பேர்
களிடையேதான் அந்தத் திட்டம் நடைபெற்றிருக்கிறது. இதனால் எப்படிப்
பள்ளிக்கு வரும் குழந்தைகள் குறையும்? உண்மையாகக் குறிப்பிட வேண்டு
மானால், குடும்ப நலத் திட்டம் ஏற்பட்டதினாலே பள்ளிகளுக்குப் பிள்ளைகள்
வருவது குறைந்துவிட்டது என்பது தவறு. ஒருவேளை ஆசிரியர்களிடத்திலே
பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற அன்பும் பாசமும் குறைந்து போய்விட்டதோ
என்னவோ. அதைத்தான் தெரிவிக்கக் கோருகிறேன்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய மனக்
குழப்பத்தை நீக்கியதற்காக நன்றி. இப்போது இந்த குடும்ப நலத் திட்டம்
காரணமாக, அதைத் தீவிரப்படுத்தியதன் காரணமாக பள்ளிகளுக்கு வரக்
கூடிய மாணவர்களின் எண்ணிக்கை குறைவதைக் காண்கின்றேன். அதை
இத்துடன் இணைத்தது தவறுதலாக இருக்கலாம். ஆனால் மாணவர்களின்
எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது. பள்ளிகளின் எண்ணிக்கை
அதிகரிக்கப்படுகிறது என்பது உண்மையான நிலைமையாக இருக்கின்றது என்ற
படியினாலே தான் கேட்டுக்கொள்வதெல்லாம் அதற்கும் இதற்கும் தொடர்பு
இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட, 5 ஆண்டுகள் நிரந்தரமாகப் பணியாற்றி
யிருக்கின்ற ஒரு ஆசிரியர் அங்கு பள்ளியில் சேரக்கூடிய மாணவர்களின்
எண்ணிக்கை குறைந்துவிட்டது என்ற ஒரு காரணத்தால், வேலையிலிருந்து
நீக்கப்படக்கூடாது என்று அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒரு பள்ளிக்கூடத்
திலே ஆசிரியர்கள் குழந்தைகளை எந்த அளவுக்கு அக்கறையோடு நடத்து
கிறார்களோ, எந்த அளவுக்கு குழந்தைகளுக்கு படிப்பில் அக்கறை காட்டிச்
சொல்லிக்கொடுத்து நடத்துகின்றார்களோ, அந்த அளவுக்கு அந்தப் பள்ளி
களில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவதில்லை. அங்கு போட்டிப் போட்டுக்
கொண்டு மற்ற பள்ளிக்கூடத்திலிருந்தும் போகின்றார்கள். எந்தப் பள்ளிக்
கூடத்தில் ஆசிரியர்கள் படிப்பில் அக்கறை காட்டவில்லையோ அங்கே பிள்ளைகள்
வருவது குறையும். அந்த ஆசிரியர்கள் வேலை போவதைத் தடைப்படுத்த
வேண்டுமா? ஆசிரியர்கள் காட்டுகின்ற அக்கறையைப் பொறுத்துத்தான்

பிள்ளைகள் அந்தப் பள்ளிக்கு வரும் எண்ணிக்கை இருக்கின்றது என்பது உண்மையல்லவா என்பதை அனுபவமுள்ள ஆசிரியர் திரு. ராஜா அய்யர் அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாணவர்கள் வராது இருப்பது ஒரு குறிப்பிட்ட ஆசிரியருடைய குறையாக இருக்குமாளுல், அந்த ஆசிரியர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களைப்பற்றி கடைசியாக ஒரு சில வார்த்தைகள் பேசி முடித்துக்கொள்கிறேன். அது மிகவும் முக்கியமான விஷயம்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : எத்தனை நிமிஷங்கள் ஆகும்?

திரு. எம். ராஜா அய்யர் : 5 நிமிடங்கள் ஆகும். நான் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களை மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நான் அந்த விஷயமாக கடைசியாக வரவேண்டுமென்று நினைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய எண்ணத்தைக் கூறி விட்டுவிட்டதனாலே இதைக் கூறுகிறேன். எங்காவது ஆசிரியர்கள் குற்றம் குறை செய்திருப்பார்களானால், அதை 'கன்டோன்' செய்ய வேண்டும், அதை மன்னித்துவிட வேண்டுமென்ற எண்ணமே ஆசிரியர்களுக்கு இருக்கலாகாது. இந்த நிலையில் நான் கூறுவது என்னவென்றால், சிறிய ஊர்களில் புதுப்புது உயர்நிலைப் பள்ளிகள் தோன்றுகின்றன. அங்கு அப்படி இருக்குமானால், அங்கிருக்கக்கூடிய பள்ளிகளே இருக்கும் மாணவர்களை பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. என் அனுபவத்தைப் பொறுத்த வரையில், இராமநாதபுரத்தில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் தான் இருந்தன. இப்பொழுது சுற்றியுள்ள சிற்றூர்களிலே பல பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் இன்று சிறிய இராமநாதபுரத்திலே மட்டும் 5 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த ஒரு காரணத்தாலே 10 ஆண்டுகள் அனுபவமுள்ள ஆசிரியர்கள் வேலை இழக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த நிலை இருக்கக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொண்டேன்.

நான் கடைசியாகப் பேச விரும்பும் விஷயமானது, இன்று என் மனதிற்கு மிகவும் கவலையைத் தரக்கூடியது ஆசிரியர்களுடைய ஒத்துழையாமை இயக்கம் என்று செய்தித் தாள்களில் பார்த்ததுதான். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சைப் பார்த்தபோது, கல்விக்காக அரசு இவ்வளவு செலவழிக்கிறது. நாம் எல்லோரும் இந்த மாணவர்களின் நலனில், அவர்களது எதிர் கால வாழ்வில் பொறுப்புள்ளவர்களாக கல்விக் கூடங்கள் எல்லாம்



நன்முறை நடைபெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கல்வியைப்பற்றி அவர்கள் கூறிய கருத்துக்கள் எல்லாம் உள்ளத்தைத் தொடக்கூடிய கருத்துக்களாக இருக்கின்றன. சமுதாயத்தில் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசியல் வாதிகளுக்கும் மாணவர்கள் நலனில், அவர்கள் எதிர்கால வாழ்வில், பொறுப்பு இருக்கிறது. மாணவர்களைத் தனியாக விட்டுவிட்டு, அவர்களுடைய நடவடிக்கைகளில் எந்தவிதமான இடையூறும் இல்லாது, தடையும் இல்லாது கல்விச் சாலைகள் நன்றாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய அந்த வார்த்தைகளானது உருக்கமானவை என்று கருதுகிறேன். அதைப் பார்த்து விட்டு ஆசிரியர்கள் ஒத்துழைக்கமாட்டோம், வன்முறையில் இறங்குவோம், எங்களுடைய கோரிக்கைகளைத் தெரியப்படுத்த போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இருப்பதைப் பார்த்து நான் மிகவும் கவலையடைந்தேன். ஆசிரியர்கள் கோரிய நலன்களுக்காகப் பெற்ற சலுகைகள் எல்லாம் போராடிப் பெறவே இல்லை, வாதாடியே பெற்றோம். அவற்றை நியாயம் என்று அரசு ஏற்றுக்கொண்டு பெற்ற சலுகைகள் ஆகும். அதற்காகப் போராடத்தான் வேண்டுமா என்று ஆசிரியர்கள் மறுபரிசிலனை செய்துபார்க்க வேண்டுமென்று இன்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏன் போராடுகின்றார்கள்? ஒரு சிலர் போராட வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஏனெனில், இல்லாவிடில் கோரிக்கைகள் ஏற்கப்பட மாட்டா என்ற எண்ணம் நிலவுகிறது. இந்தப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பிக்கவே கூடாது. அதுவும் ஆரம்பிக்கக்கூடிய காலத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போது பள்ளி மாணவர்கள் எல்லாம் எஸ.எஸ்.எல்.ஸி. இறுதித் தேர்வுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த இறுதித் தேர்விற்கு ஏதாவது பங்கம் விளைவிப்போமானால், அது நம்மால் மாணவர்களுக்கு ஏற்படப்போகும் பெரும் குறையாகும். ஒரு ஆசிரியர் பணியாற்றும் போது அவருடைய வாழ்க்கை லட்சியம் மாணவர்கள் நலனுக்காக என்று தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு வாழவேண்டியது ஆகும். எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சை 1,83,000 பேர்கள் எழுதப்போகிறார்கள். அந்த 1,83,000 பேர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் 18 ஆயிரம் பேரும் சிறிது பொறுமையுடன் இருந்து ஒத்துழைத்து அவர்களுக்கு எந்தவிதமான பங்கமும், அமைதிக் குறைவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கல்வியமைச்சர் அவர்களையும் நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன். பெரிய மனதுடன் அவர்கள் மனம்விட்டு ஆசிரியர் பிரதிநிதிகளையும், அந்தச் சங்கத்தினுடைய தலைவர்கள், செயலாளர் ஆகியவர்களைக் கூப்பிட்டு வாதாட வேண்டுமென்று கருதுகிறேன். இதை கவுரவப் பிரச்சினையாக நினைக்கக்கூடாது. ஆசிரியர்களுக்கு உண்மையை எடுத்துச்

[திரு. எம். ராஜா அப்பர்] [1973 பிப்ரவரி 28

சொன்னால், அவர்களுக்குப் புரியும். தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் அல்ல அவர்கள். இதில் இருக்கக்கூடிய பொருளாதாரத்தையும் நியாயத்தையும் அறிந்து கொள்ளக்கூடியவர்கள். ஆசிரியப் பிரதிநிதிகளும், மற்றத் தலைவர்களும், பெரு மனதுடன், பெரு நோக்குடன் நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் இதை கவுரவப் பிரச்சினையாகக் கருதாது உடனடியாக அவர்களை அழைத்து அவர்களுடன் பேசி, எப்போதும் ஆசிரியர்களுடைய குறைகள் வாதாடியே தீர்க்கப்பட்டன என்ற நம்முடைய சரித்திரத்திற்கு ஒப்ப, இந்தக் குறைகளை நீக்குவதற்கு அவர்கள் வழி செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் எதிர்பார்த்த மிகப் பெரிய காரியங்கள் முதலமைச்சர் அவர்களால் இங்கே நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல பேர்கள் சோஷலிஸம் என்பதை மேடையிலும், பத்திரிகையிலும், மாலைநேரப் பொதுக் கூட்டங்களிலும் மக்களை மயக்குவதற்கான ஒரு மாயாஜால வார்த்தையாக உபயோகிக்கிற இந்த நேரத்தில், தமிழ்நாட்டிலே வாழ்கிற லட்சக்கணக்கான, ஏன் கோடிக்கணக்கான மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகிற வகையில், பல சலுகைகள் கொடுக்கிற திட்டம் நிறைந்த ஒரு சாசனமாக இந்த அறிக்கை விளங்குகிறதென்று நான் கருதுகிறேன். இங்கே வீற்றிருக்கிற பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் அருள் கூர்ந்து தமிழ் நாட்டின் எதிர்கால அரசியலை ஒரு புதிய கண்ணோட்டத்தோடு உற்று நோக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புரட்சி என்றும், அதே நேரத்தில் போராட்டம் என்றும், இப்படிப் புரட்சி, போராட்டம் மூலமாகத்தான் சோஷ
—30 லிஸத்தை உருவாக்க முடியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள்
பி.ப இருக்கிற இந்த நிலையில், புனிதமான சோஷலிஸ நடவடிக்கைகளை ஆரவாரமில்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல் மேற்கொண்டு, அண்ணா வழியில் இன்றைய தினம் முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டை நடத்திச் செல்கிறார்கள். நான் மெத்தப் பணிவோடு இங்கே வீற்றிருக்கிற எதிர்க் கட்சிக்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மத்திய சர்க்காரை எதிர்பார்த்து நீங்கள் உங்களின் எதிர்ப்பை இங்கே காட்ட வேண்டுமென்று நினைத்தால், அதைத் தயவுசெய்து விட்டு விடுங்கள். ஏனென்றால் நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் " we are in the Parliament not to play games. We are in the Parliament to build the Nation " என்று சொல்லியிருக்கிறார்கள். பல பேர்கள் வேடிக்கையாக, விளையாட்டாகத் தெருவில்



1973 பிப்ரவரி 28] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

நின்று கொண்டு ஒரு பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்று நினைக்கிறார்கள். அது அல்ல பிரச்சினை. அப்படி இல்லாமல் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், சுமுகமான முறையில் கலந்து பேசித் தீர்க்க வேண்டுமென்று பிரதமர் அவர்கள் கூறினார்கள். ஆனால், அதிகாரத்தால் அல்ல, மிக்க பணிவோடு நம்முடைய முதல்வர் அவர்கள் எப்படி எதிர்க் கட்சிக்காரர்களைக் கூட்டிவைத்துப் பேசி எந்தப் பிரச்சினையிலும் முடிவு எடுக்கிறார்கள் என்பதை நாடு அறியும், இங்கே வீற்றிருக்கிற எதிர்க் கட்சித் தலைவர்களும் அறிவார்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் ஒரு புதிய சூழ்நிலையை எதிர்க் கட்சிக்காரர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதை ஒரு 'அன்ஹோலி அலையன்ஸ்' என்று கூடச் சொல்லலாம். இன்றைக்கு மத்திய சர்க்கார் சோஷலிஸத் திட்டத்தை உருவாக்குகிறபோது, அதை வரவேற்கிற காங்கிரஸ், சுதந்திராக் கட்சிக்காரர்கள் போன்றவர்கள் இங்கே அப்படிப்பட்ட திட்டங்களை நாம் தீட்டுகிறபோது, அவற்றை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு எதிர்க்கிறார்கள். இப்படிப்பட்ட மாறுபாட்டை நீக்கினால் ஒழிய, நாம் தமிழ் நாட்டில் உண்மையான முன்னேற்றத்தைக் காண முடியாது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்தத் திட்டங்களில் எந்தத் திட்டம் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு முரணானது என்று கேட்கிறேன். நான் மதிப்பிற்குரிய சுதந்திரா கட்சி அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கிறவர்கள் அரசியல் நுணுக்கம் தெரிந்தவர்கள். அவர்களுக்கும் அரசியல் அறிவாற்றல் இருக்கிறது. எதிலுமே நல்ல கருத்துக்களைச் சொல்கிற இராஜாஜியை தலைவராகப் பெற்றிருந்த கட்சியைச் சேர்ந்த அன்பர் திரு. சுவாமிநாதன் போன்றவர்கள் அதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சிக்காரர்களும் சரி, மதிப்பிற்குரிய ஆர்.கே. அவர்களின் கட்சியான ஸ்தாபன காங்கிரஸும் சரி, அவர்கள் எந்த அளவுக்கு சோரம் போகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு புதிய ஒரு கட்சி தோன்றியிருக்கிறது. ஏற்கெனவே அராஜகத்திற்குத் துணை போகிற கம்யூனிஸ்ட் கட்சியோடு இன்றைக்குத் தோன்றியிருக்கிற புதிய கட்சியும் சேர்ந்திருக்கிறது. இதை எண்ணுகிறபோது, எனக்கு ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. அமெரிக்க நாட்டிலே ஒரு பெரிய திருடன் தான் தான் அமெரிக்காவிலேயே பெரிய திருடன் என்று சொல்லிக்கொண்டு இறுமாந்திருந்தான். அப்படிப்பட்ட அவன் ஒரு நாள் ரயிலில் போகிறபோது அவனுக்குப் பக்கத்தில் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தாள். அவளிடம் இவன் நான் தான் அமெரிக்காவிலேயே பெரிய திருடன் என்று சொல்லி தன்னைப் பற்றி அவளிடம் பெருமையடித்தான். அதைக் கேட்டு அந்தப் பெண்மணியும் சிரித்துக்கொண்டே வந்தாள். கொஞ்ச தூரம் சென்ற அவர்கள் இரண்டு பேருமே ஒரு ரயில் நிலை

...ரத்தில் இறங்கினார்கள். அப்போது அந்தத் திருடன் தன்னுடைய பாக்கெட்டுக் குள் கையை விட்டு தன்னுடைய மணிபர்சைத் தேடினான். ஆனால் அங்கே மணி பர்சைக் காணோம். அப்போது அந்தப் பெண்மணி அது தன்னிடம் இருக்கிற தென்று எடுத்துக் காட்டியிருக்கிறாள். தான் அதை ரயிலில் வரும்போதே எடுத்துவிட்டதாகக் கூறியிருக்கிறாள். உடனே அந்தத் திருடன் பார்த்தான், இவள் தன்னை விடப் பெரிய திருடியாக இருப்பாள் போலிருக்கிறதே என்று எண்ணினான். இரண்டு பேர்களும் மனம் விட்டுப் பேசினார்கள். அப்போது அவன், "நாம் இரண்டு பேரும் சேர்ந்து திருமணம் செய்துகொண்டால், நமக்குப் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இருந்தால், அவன் உலக மகாத் திருடனாக வருவான்" என்று சொல்லியிருக்கிறான். கடைசியில் இரண்டு பேருக்கும் திருமணமானது. கொஞ்ச காலம் கழித்து அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. ஆனால் பிறந்தும் அவர்களுக்குப் பிரயோஜனம் இல்லாத குழந்தையாகப் பிறந்தது. ஏனென்றால், அது பிறக்கிறபோதே கையை மூடிக்கொண்டே பிறந்தது. ஆகவே, அவர்கள் மிகவும் வருத்தப்பட்டு, கடைசியில் ஒரு மனோதத்துவ வைத்தியரிடம் அந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு சென்றார்கள். அந்த மனோதத்துவ வைத்தியர் சிறிது யோசனை செய்துவிட்டு கடைசியில் தன்னுடைய கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியை எடுத்து அதனுடைய டாலரை அந்தக் குழந்தையின் முன்னால் ஆட்டிக் காட்டினார். உடனே அந்தக் குழந்தை கையை விரித்து அதைப் பிடிக்கப் பார்த்தது. அப்படி விரிக்கிறபோது அதன் கையைப் பார்த்தால் அதிலே ஒரு தங்க மோதிரம் இருந்தது. அது எப்படி வந்ததென்றால், அந்தப் பெண்ணுக்கு மருத்துவம் பார்த்த நர்ஸிடம் இருந்த மோதிரம் தான் அது. அவள் அந்தக் குழந்தையை எடுக்கிறபோது, அவளின் கையிலிருந்து அந்த மோதிரத்தை அந்தக் குழந்தை எடுத்திருக்கிறது. இப்படி இன்றைக்குப் புதிதாகப் பிறந்திருக்கிற ஒரு கட்சியும் அதற்கு மனைவியாக இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சியும் இன்றைக்கு அராஜகத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட கட்சிகளின் அராஜகத்திற்கு நீங்கள் துணை போக வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்திரா காங்கிரஸ் நல்ல கட்சியா என்று அறிய நம்முடைய உறுப்பினர்கள் ஆவலாக இருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: அதைப்பற்றி அவர்களே யோசிக்க வேண்டிய நேரம் வரும். நான் இதைச் சொல்வதற்குக் காரணமே இன்றைக்கு எந்த ஒரு மாநிலக் கட்சி மெஜாரிட்டியுடன் ஆட்சியில் வீற்றிருக்கிறதோ அப்படிப் பட்ட ஆட்சியை பலாத்காரம் மூலமாகவோ, அல்லது குறுக்கு வழியிலோ



[illegible] நீக்கக் கூடாதென்று நான் [illegible] கவிழ்க்க வேண்டுமென்று அவர்கள் [illegible] இருக்கிற இந்த ஆட்சியைக் [illegible] சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாட்டிலே [illegible] நினைத்தால், அது வெறும் கொல்லைப் புறமாக ஆற்ற வேண்டுமென்று அவர்கள் [illegible] பகல் கனவாக முடியும் என்பது அகில இந்திய காங்கிரஸைச் சேர்ந்த நண்பர் திரு. ஆறுமுகசாமிக்கும் தெரியும், அவர்களின் கட்சியின் தலைவருக்கும் அது தெரியும்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசுவதைப் பார்த்தால், ஆளும் கட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிகளே எதுவும் நடத்தக் கூடாதென்று சொல்வது போலத் தோன்றுகிறது. இப்போது அதிகாரத்தில் இருக்கிற கட்சி 1967-க்கு முன்னால் எந்தக் கிளர்ச்சியும் செய் யாமல் இருந்ததா என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நான் அரசியல் கட்சி ஆட்சியில் மாறுதல் ஏற்பட வேண்டும் என்பதற்காக மக்கள் கவனத்தை ஈர்ப்பதைத் தவறு என்று சொல்லவில்லை. 1967-க்கு முன்னால்—நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும்—இவ்வளவு பெரிய பலாத்காரம், அராஜகம் நடந்தது உண்டா, தமிழ் நாட்டில் உருவாகியதுண்டா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக அண்ணா அவர்கள் இருந்த போது இப்படிப்பட்ட அராஜகம் நடந்தது உண்டா என்று அருள்கூர்ந்து 6-40 பி.ப. எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்க் கட்சிகள் தங்களுக்குள்ளாகவே ஒரு வரைமுறையை உருவாக்கிக்கொள்ள வேண்டும். பலாத்காரத்துக்கு யாராவது தூண்டிவிட்டால் அதற்கு நாம் ஆளாக வேண்டிய சூழ்நிலை உண்டாகிவிடுகிறது. எந்த ஒரு கட்சியினரும் தங்களை ஆட்சி மாற்றத்துக்குத் தகுதி படைத்தவர் களாக ஆக்கிக்கொள்வதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. தேர்தல் அதை முடிவு செய்யும். அந்தத் தேர்தலின் தீர்ப்பை, நாட்டு மக்கள் கொடுக்கிற அந்த நல்ல தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பலாத்காரத்தைத் தூண்டிவிடும் ஒரு நிலைமை தமிழ் நாட்டிலே உருவாகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அதுவும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். நாட்டிலே ஏதாவது ஒரு பொருளுக்குத் தட்டுப்பாடு வந்தால், அதைப் பயன்படுத்திக் கொண்டு சமூக விரோதிகள் தமிழ் நாட்டு மக்களுக்கு நெருக்கடியை உருவாக்குகிறார்கள். அதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணமாக தமிழ் நாட்டிலே மண் ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்சார வெட்டின் காரணமாக இது இருக்கிற மண்ணெண்ணெயை நாம் விநியோகிப்பதிலே கால ஏற்பட்டது.

தாமதம் ஏற்பட்டு, அந்த விநியோக முறையிலே குறைகள் இருக்கின்றன என்று சொன்னுல், அதைச் சில வியாபாரிகள், சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொண்டு 10 பைசாவுக்குக் கொடுக்க வேண்டிய மெழுகுவர்த்தியை 35 பைசாவுக்கு விற்றுக்கொண்டு, 'பார், இந்த அக்கிரம ஆட்சியை' என்று சொல்கிருர்கள். 65 பைசாவுக்கு விற்கவேண்டிய இந்த மண்ணெண்ணெயை ஒரு லிட்டர் 3 ரூபாய்க்கு விற்றுக்கொண்டு, 'பார், இந்த அக்கிரம ஆட்சியை' என்று சொல்கிருர்கள். இப்பேர்ப்பட்ட சமுதாய விரோதிகள் அரசியலைப் பயன்படுத்திக்கொண்டிருக்கும்பொழுது, அதற்கு நம்முடைய எதிர்க் கட்சிக்காரர்களும் பலியாகிருர்களே என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு விஷயங்கள் இங்கே சொல்லப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகம் புறக்கணிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். இந்த மாற்ருந்தாய் மனப்போக்கு மாற வேண்டும் என்பதே எல்லாக் கட்சிகளின் ஒருமித்த கருத்தாக இருக்கிறது. மத்தியிலே எந்தக் கட்சி, மாநிலத்திலே எந்தக் கட்சி என்று அரசியல் நோக்கில்லாமல் அரசியல் சட்டத்திலே நமக்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். மத்தியிலேயும் சரி, மாநிலத்திலேயும் சரி, மாற்றுக் கட்சிகள் மாறி நிர்வாகத்துக்கு வரலாம். ஆனுல் நிரந்தரமாக நமக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். உதாரணத்துக்குச் சொல்வேன். வறட்சி மகாராஷ்டிர மாநிலத்திலே வந்தது. அங்கே கொடுக்கப்பட்ட தொகை 70 கோடி ரூபாய். தமிழ் நாட்டிலே சென்ற ஆண்டு வறட்சி வந்தது. நமக்குக் கொடுத்த தொகை 17 கோடி ரூபாய் தான். அஸ்ஸாமிலே இந்த ஆண்டு வெள்ளத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 50 கோடி ரூபாய்க்கு மேலே. ஆனுல் தமிழ் நாட்டிலே . . . .

திரு. எம். ஆறுமுகசாமி : அங்கெல்லாம் ஏற்பட்ட சேதத்தின் அளவையும் கவனிக்க வேண்டும். ஆகையினுலே அதனுடைய விபரங்களையும் நம் உறுப்பினர் அவர்கள் சேர்த்துச்சொன்னுல் நன்ருக இருக்கும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தமிழ் நாட்டிலே ஏற்பட்ட வெள்ளச் சேதம் குறைவானது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிருர்கள் என்று நினைக்கிறேன். ஆனுல் நாம் தஞ்சை மாவட்டத்திலும் சேலத்திலும் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை உணர வேண்டும். நான் சொல்கிறேன். அப்படி இருந்தும்கூட 17 கோடி ரூபாய் தான் கொடுத்திருக்கிருர்கள். ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, மத்திய அரசில் இருக்கிறவர்கள் இந்த அரசாங்கம் மட்டும் ஏதோ மத்தியிலே இருக்கிற அரசாங்கத்திற்குக்





கட்டுப்படாத அரசாங்கம் அல்லது தனித்த அரசாங்கம் என்று எண்ணக்கூடிய காரணத்தால், அரசியல் அமைப்புப் பிரகாரம் நமக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

இன்னென்று. இங்கே பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய ஒன்பது புதிய திட்டங்கள் இந்த அவையின் மூலமாக தமிழ் நாட்டு மக்களுக்கு வெளியிடப்பட்டிருந்தன. அந்தப் பிரகடனத்தின் மூலம் நாம் பல உண்மைகளைப் பெறுகிறேம். கூவத்தை அழகு செய்வது தேவையா என்று கேட்டார்கள். கூவத்தை மட்டும் சீர்செய்துவிட்டால் போதுமா? பக்கிங்காம் கால்வாயைச் சீர்திருத்த வேண்டாமா என்று கேட்டார்கள். இப்போது பக்கிங்காம் கால்வாயை இணைத்து அதையும் சீர்திருத்த இருக்கிருர்கள்.

நீண்ட காலமாகவே தஞ்சை மாவட்டத்திலும் சரி, எங்களுடைய ராமநாதபுரம் சீமையிலும் சரி, ஜமீந்தார்களுக்கு உட்பட்ட பகுதியில் நூற்றுக்கணக்கான குத்தகைதாரர்கள் பல மிட்டாக்களுக்கும் மிராசுகளுக்கும் அடிமையாக இருந்தார்கள். அதிலே நமது திரு. ஆறுமுகசாமி அவர்களும் திரு. சுவாமிநாதன் அவர்களும் ஒன்று சேரமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். அந்த மிராசுதாரர்களிடமிருந்து அவர்களை விடுவித்து, உழுகிறவன் நியாயமாக ஒப்புக்கொண்ட அந்தப் பணத்தை நிலச் சொந்தக்காரருக்குக் கொடுத்துவிட்டு, அவர்களை மீட்டு அவர்களுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக்குகிற இந்த நல்ல காரியத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் காத்திருக்கிறேன்.

* திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த டெனன்ட்ஸ் ஃபைனன்ஸ் கார்ப்பரேஷன் என்று சொல்கிற திட்டத்தைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். உச்ச வரம்புக்கு உட்பட்ட நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிறேம். அந்த நிலங்கள் குத்தகைதாரர்களிடமும் இருக்கலாம். அரசாங்கம் நிலச் சுவாந்தார்களிடமிருந்து நிலத்தை வாங்கி குத்தகைதாரர்களிடம் கொடுக்கப் போகிறதாக அங்கத்தினர் அவர்கள் கருதுகிருர்களா அல்லது நிலச்சுவான்தாரர்களும் குத்தகைதாரர்களும் கலந்து பேசி விலையை முடிவு செய்து பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கருதுகிருர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்ருல் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், உச்ச வரம்புக்கு உள்ளாக இருக்கும் நிலங்களைக் கூட அரசாங்கம் எடுத்துக்கொண்டு குத்தகைதாரர்களிடம் கொடுத்துவிடும் போலத் தோன்றுகிறது. அரசாங்கம் இதுமாதிரி நினைக்கிறதா அல்லது இது அங்கத்தினர் அவர்களின் சொந்தக் கருத்தா என்று அறிய விரும்புகிறேன். இதை அங்கத்தினர் அவர்கள் தெளிவாக்க வேண்டும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவரவர்களே, நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஏதோ நேரடியாக பொறுப்பை என் தலையிலே சுமத்துவதுபோலச் சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், சட்டமன்றத்திலே விவாதிக்கப்பட்டு அது விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் பாதுகாப்புத் தருவதாகத்தான் இருக்கும். நீங்கள் எந்த முற்போக்குத் திட்டத்தை வரவேற்றிருக்கிறீர்கள்? நான் இன்னொன்றைச் சொல்கிறேன். மிகப் பெரிய திட்டம் பஸ்கள் தேச உடைமை ஆக்கப்பட்ட திட்டம். பஸ்களைத் தேசிய மயமாக்கினோம். அதைக்கூட யார் வரவேற்றார்கள்? பல பேர் வரவேற்க வேண்டும், அல்லது சில கட்சிக்காரர்களுக்குப் பல்லக்குத் தூக்க வேண்டும், அல்லது ஆலவட்டம் போட வேண்டும், அதற்குப் பிறகுதான் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் தமிழ் நாட்டு அரசாங்கத்திற்குக் கிடையாது. எந்த ஒரு புரட்சிகரமான திட்டமும் மக்களுக்குப் பயன்படுகிற திட்டமாக இருந்தால், அதை விவாதித்து முறைப்படி எல்லோருடைய எண்ணத்தையும் தெரிந்துகொண்டுதான் அது கொண்டுவரப்படும். அந்த முறையிலே என்னைப் பொறுத்த வரையிலும், குத்தகைதாரர்களுக்கு, நீண்டகாலமாக நிலத்தை வைத்திருப்பவர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கொடுக்கும் அளவுக்கு இந்தச் சட்டத்திலே வரைமுறை இருக்கிறது. விரிவான விளக்கங்கள் பின்னால் இந்த மன்றத்திலே தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, புதுக்கோட்டை பின் தங்கிய பகுதி. திருச்சியில் இணைத் திருந்தது. ஏதோ சில அரசியல் கட்சிக் காரர்கள் நீண்ட காலமாகக் கேட் டார்கள், ஆகவே கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அந்த ஒரு எண்ணம் இருக்க வேண்டும். நான் அடிக்கடி சொல்வதுண்டு. Appreciation is a kind of civilization என்று. ஆகவே பாராட்டுவதற்கு உரிய பக்குவத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் கேட்டதை இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் அறிக்கை விட்டார்கள். அவர் பக்கத்தில் உள்ள மாவட்டம் கான் திருச்சி மாவட்டம். பட்ஜெட்டிலே இப்படியும் 10 கோரிக்கைகளிலே 11-வது விடுபட்டிருக்கலாம். அதைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதைவிட பாராட்டியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

* திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசாங்கம் செய்வதைப் பாராட்டுவதற்கு அநேக அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். குறைபாடுகளைச் சொல்வதற்கு நாங்கள் சிலர் தான் இருக்கிறோம். நாங்களும் அரசாங்கத்தைப் பாராட்டிவிட்டால், ஜனநாயகம் நடைபெறாது என்பதை அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மகிழ்ச்சி. அப்படி இந்த அடுக்கடுக்கான காரியங்களுக்குப் பின்னால், ஏற்கெனவே அரசாங்கம் பொறுப்பேற்றிருக்கிற பல்வேறு துறைகளில் பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். மதிப்புக்குரிய நீண்டகால அனுபவமிக்க திரு. ராஜா அய்யர் அவர்கள் கல்வியைப்பற்றி முழு விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் கல்விக்காகச் செலவழிக்கிற நூறு கோடி ரூபாயின் பலன் சமுதாயத்தில் மாணவர்களுக்கு முறைப்படி சேர்க்கப்பட்டாக வேண்டும். புதிய கண்ணோட்டத்தில் இந்தக் கல்வியின் திட்டங்களும் சரி, பாடமுறைகளும் சரி, அமைக்கப்பட்டாக வேண்டும். ஆனால் அதற்கு மத்தியில் இப்போது ஒவ்வொரு மாவட்டத்தில் 4 கல்வி மாவட்டங்கள், 3 கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஆரம்பத்தில் இருக்கிற கிளார்க்குகளிலிருந்து ஹெட்மாஸ்டர் வரையில் உள்ள அத்தனை வேலை மாற்றங்களையும் கல்வி இயக்குநர்தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. இதை மாற்றி 3, 4 ரீஜன்கள், மண்டலங்கள் என்று பிரித்தால், கல்வி சிறப்பாக இருக்கும். இன்னொன்றைச் சொல்கிறேன். நான் இந்த மாறுதலைப்பற்றி அடிக்கடி சொல்வதற்குக் காரணம் நாம் ஒரு சட்டம் போடுகிறபோது அது எளியதாக இருக்க வேண்டும். இந்த ஊராட்சி மன்ற ஆசிரியர்கள் மாறுதல் பி.டி.ஓ. கையில் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது முழுக்க முழுக்க வரவேற்கத் தக்கது. ஆனால் அதே நேரத்தில் பி.டி.ஓ. போடுகிற மாறுதலுக்கு டி.இ.ஓ. விடம் 'கன்கரன்ஸ்' வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இரண்டு அதிகாரிகளுக்குமிடையே சண்டையை உருவாக்குகிற நிலைமை இருக்கிறது. தானே ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர். ஒருவர் இன்னொருவருடன் ம்யூசுவல் டிரான்ஸ்ஃபர் விரும்புகிறார்கள். நாம் உடனடியாகப் போடுகிறோம். இந்த இரண்டு பேரும் இணைந்து போவதற்குக்கூட டி.இ.ஓ. கன்கரன்ஸ் கொடுக்க வேண்டும். நாம் போடுகிற சட்டம் முழுமையாக முறைப்படுத்தி நிறைவேறுகிறதா என்பதை நாம் கண்காணித்துப் பார்க்க வேண்டும். அந்த அளவிற்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையிலே நான் ஒன்றைப் பெருமையாகச் சொல்ல முடியும். இந்த ஆண்டு மிக அதிகமாக உணவு உற்பத்தியிலே குறிப்பாக நெல் உற்பத்தியிலே தமிழகம் தலைசிறந்து இருப்பதற்குக் காரணம் ராமநாதபுரம் மாவட்டம் தான். ராமநாதபுரம் மாவட்டத்திலே பஞ்சம் இல்லாவிட்டால், தமிழ் நாட்டிலே பஞ்சமே இருக்காது. இந்த ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலே மழையே பெய்யவில்லை. அந்த ஒரு தாலுகாவைத் தவிர, எங்கள் மாவட்டத்தில் மற்ற இடங்களில் நல்ல விளைச்சல். நான் இன்னும் இந்த விளைச்சலை அதிகப் படுத்துவதற்கு திரும்பத் திரும்ப நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்

முதல் அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுகிறேன். இருக்கன்குடி நதி அணைக்கட்டு முதலகுளத்தூர், அருப்புக்கோட்டை தாலுக்காக்களில் நிரந்தரமான நீர்ப்பாசன வசதி பெறுகிற ஒரு திட்டம். அந்தத் திட்டத்தை நாங்கள் பல முறை வலியுறுத்தியிருக்கிறோம். அதைப்போல அருப்புக்கோட்டை தாலுக்காவுக்குப் பயன்படுகிற செண்பகம்பட்டி அணைக்கட்டுத் திட்டம் மிகவும் சிறப்பான திட்டம். இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு போலீஸ் துறையிலே ஒவ்வொரு தாலுக்காவில் இருக்கிற இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீசுக்கும் உடனடியாக வேன்கள் வழங்க வேண்டும். குற்றங்கள் நடந்துவிட்டால், உடனடியாகப் போய்ச் சேருவதற்குச் சரியான வாகன வசதியில்லை. குற்றம் நடந்த உடனே அவர்கள் இடத்துக்குப் போய் விட்டால், பின்னாலே தப்பு துலக்குவதற்கு 'இன்வெஸ்டிகேஷன்' செய்வதற்கு நல்ல ஆதாரம் கிடைக்கும். அவர்களுக்கு வாகன வசதி இல்லாத காரணத்தால், சட்டம் ஒழுங்கைக் காப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. ஆகவே தாலுகாவில் உள்ள எல்லா இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீசுக்கும் வாகன வசதி உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த உபரி பட்ஜெட்டை, மக்கள் எல்லோரும் வரவேற்கக் கூடிய இந்த பட்ஜெட்டை, நானும் வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

50 ம. மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

### 3. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

45. Notification issued with G.O. Ms. No. 1850, Rural Development and Local Administration, dated the 6th September, 1972 in regard to exclusion of certain areas from Kandiankuppam village, South Arcot district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

46. Order issued with G.O. Rt. No. 81, Revenue, dated the 9th January 1973 exempting from liability to entertainment tax, show tax and additional surcharge, one cinematograph film show to be held by the Y.W.C. Association, Madras on 20th January, 1973, at Devi Theatre, Madras to raise funds for their service projects. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]



47. Order issued with G.O. Rt. No. 2713, Revenue, dated the 22nd December, 1972 exempting from liability to entertainments tax, show tax and additional surcharge, one cinematograph film show organised by the Rotary Club, Pudukkottai to raise funds for school building at Thirumalairayasamudram in Alangudi taluk, Tiruchirappalli district. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

48. Notification issued with G.O. Ms. No. 363, Excise and Prohibition, dated the 25th December, 1972 in regard to closure of all liquor shops (including toddy and arrack shops) in the whole of the State of Tamil Nadu on the 26th December, 1972. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

49. Notification issued with G.O. Ms. No. 273, Excise and Prohibition, dated the 3rd October 1972 making the Tamil Nadu Brewery Rules, 1972. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

50. Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Industrial Development Corporation Limited, Madras, for the year ended 31st March 1972 together with copies of annual reports and statement of accounts. [Laid on the table of the House under section 619A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### *B. Reports, Notifications and Other Papers.*

32. Notification issued with G.O. Ms. No. 1324, Labour and Employment, dated the 28th October 1972 in regard to amendment to rule 15 of the Tamil Nadu Plantation Labour Rules, 1955.

33. Notification issued with G.O. Ms. No. 1334, Labour and Employment, dated the 7th November, 1972 in regard to amendment to rule 50(1) of the Tamil Nadu Plantation Labour Rules, 1955.

* 34. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister of Tamil Nadu at the National Development Council meeting on 19th and 20th January, 1973 at New Delhi.

* Circulated to all M.L.Cs. on 26th February, 1973.



## இணைப்பு

[ 237 ஆம் பக்கத்தில் 124 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

1972-ம் ஆண்டு புதிதாகத் திறக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் :—

| | | |
|---|---|---|
| அரசு உயர்நிலைப் பள்ளிகள் | .. | 43 |
| உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள் | .. | 12 |
| மொத்தம் | | 55 |

1972-73-ல் துவக்கப்பட்ட உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல் :—

1. உதவிபெறும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை-7.
2. உதவிபெறும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தி. நகர், சென்னை-17.
3. ஜெனரல் கரியப்பா உயர்நிலைப் பள்ளி, சாலிக்கிராமம், சென்னை.
4. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர், தஞ்சை மாவட்டம்.
5. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, அம்பிளிக்கை, மதுரை மாவட்டம்.
6. டி.டி.டி.ஏ. உயர்நிலைப் பள்ளி, இடையர்காடு, திருநெல்வேலி மாவட்டம்.
7. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, சின்னதண்டா, சேலம் மாவட்டம்.
8. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, கோவிந்தபுரம், கோவை மாவட்டம்.
9. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, மணிமைபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
10. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, வாலிவிழு, நீலகிரி மாவட்டம்.
11. உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, அபிசேகபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். (திறக்கப்படவில்லை)
12. உதவிபெறும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோபிசெட்டிப்பாளையம், கோவை மாவட்டம். (திறக்கப்படவில்லை)

1972-73-ல் திறக்கப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளிகளின் பட்டியல் :—

1. அரசினர் உயர்நிலைப் பள்ளி, காளிகாபுரம், செங்கை மாவட்டம்.
2. அரசினர் உயர்நிலைப் பள்ளி, மஹேந்திரவாடி, வட ஆர்க்காடு மாவட்டம்.
3. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பாந்தூர், செங்கை மாவட்டம்.

4. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அய்யம், தஞ்சை மாவட்டம்.
5. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மதுராந்தகம், செங்கை மாவட்டம்.
6. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கோட்டேர் மல்லாண்டிப்பட்டினம், தேரவை மாவட்டம்.
7. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கண்ணக்குருக்கை, வட ஆற்காடு மாவட்டம்.
8. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பரமனந்தல், வட ஆற்காடு மாவட்டம்.
9. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பொருளூர், மதுரை மாவட்டம்.
10. அரசினர் உயர்நிலைப் பள்ளி, வீராணக்குன்னம், செங்கை மாவட்டம்.
11. அரசினர் உயர்நிலைப் பள்ளி, உப்பிலியாபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
12. அரசினர் உயர்நிலைப் பள்ளி, சேப்பாநத்தம், தென்னாற்காடு மாவட்டம்.
13. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அலமாதி, செங்கை மாவட்டம்.
14. அரசினர் உயர்நிலைப் பள்ளி, நெடும்பிறை, வட ஆற்காடு மாவட்டம்.
15. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பச்சைப் பெருமாள்பட்டி, திருச்சிராப் பள்ளி மாவட்டம்.
16. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பெரியகோளப்பட்டி, வட ஆற்காடு மாவட்டம்.
17. அரசினர் உயர்நிலைப் பள்ளி, சித்தனூர், இராமநாதபுரம் மாவட்டம்.
18. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பாலாமடை, திருநெல்வேலி மாவட்டம்.
19. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பள்ளத்தூர், தஞ்சை மாவட்டம்.
20. அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஆலத்தூர், தர்மபுரி மாவட்டம்.
21. அரசினர் உயர்நிலைப் பள்ளி, கண்ணத்தாங்குடி, தஞ்சை மாவட்டம்.
22. அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஆவியூர், இராமநாதபுரம் மாவட்டம்.
23. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருத்துறையூர், தென்னாற்காடு மாவட்டம்.
24. அரசினர் உயர்நிலைப் பள்ளி, நாட்டுச்சாலை, தஞ்சை மாவட்டம்.
25. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பாலூர், தென்னாற்காடு மாவட்டம்.
26. அரசினர் உயர்நிலைப் பள்ளி, மணலி, செங்கை மாவட்டம்.
27. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பாண்டேஸ்வரம், செங்கை மாவட்டம்.
28. அரசினர் உயர்நிலைப் பள்ளி, இளையனூர், தஞ்சை மாவட்டம்.



29. அரசினர் உயர்நிலைப் பள்ளி, பனையபுரம், தென்னாற்காடு மாவட்டம்.
30. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மேல் கொடுக்கலூர், வட ஆற்காடு மாவட்டம்.
31. அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஆச்சாங்குட்டப்பட்டி, சேலம் மாவட்டம்.
32. அரசினர் உயர்நிலைப் பள்ளி, நெகனூர், தென்னாற்காடு மாவட்டம்.
33. அரசினர் உயர்நிலைப் பள்ளி (மகளிர்), அம்பத்தூர், செங்கை மாவட்டம்.
34. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருப்பாலக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
35. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.
36. அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருப்புறம்பியம், தஞ்சை மாவட்டம்.
37. அரசினர் உயர்நிலைப் பள்ளி, நல்லமநாயக்கன்பட்டி, மதுரை மாவட்டம்.
38. அரசினர் உயர்நிலைப் பள்ளி, குள்ளஞ்சாவடி, தென்னாற்காடு மாவட்டம்.
39. அரசினர் உயர்நிலைப் பள்ளி, அணைப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.
40. அரசினர் உயர்நிலைப் பள்ளி, புதுப்பட்டினம், தஞ்சை மாவட்டம்.
41. அரசினர் உயர்நிலைப் பள்ளி, சேந்தநாடு, தென்னாற்காடு மாவட்டம்.
42. அர[illegible]ர் உயர்நிலைப் பள்ளி, பிச்சானூர், கோவை மாவட்டம்.
43. அரசினர் உயர்நிலைப் பள்ளி, இரச்சக்குளம், கன்னியாகுமரி மாவட்டம்.

## தமிழ்நாடு சட்ட மன்றம்

---

**வியாழக்கிழமை, 1973 மார்ச் 1.**

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி.பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.*

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Mid-day Meals Programme.*

* 143 Q.—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of schools in Tamil Nadu in which the mid-day meals programme is in vogue;

(b) the number of schools in which food is served by the Central Kitchen;

(c) the number of centres functioning under the control of teachers; and

(d) the number of places where separate cook is not available for cooking?

### மதிய உணவுத் திட்டம்

**திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு பூராவும் மதிய உணவு எவ்வளவு பள்ளிகளில் வழங்கப் படுகிறது?

(ஆ) மைய உணவுக் கூடங்களின்மூலம் எவ்வளவு பள்ளிகளில் உணவு வழங்கப்படுகிறது?

(இ) ஆசிரியர் பொறுப்பிலே இயங்கும் மையங்கள் எவ்வளவு?

(ஈ) இவற்றில் சமையலுக்கு தனி ஆள் இல்லாத இடங்கள் எத்தனை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) 29,507 பள்ளிகள்,

(இ) 1,810 பள்ளிகள்.

(உ) 27,482.

(எ) 9,272.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, இந்த மைய உணவு தயாரிக்கும் நிலையங்களை அமைக்கும் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா? அதை எப்போது செய்வதாக உத்தேசம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மதிய உணவு வழங்குகிற திட்டத்திற்கு அமெரிக்க நாட்டு 'கேர்' ஸ்தாபனம் உதவி செய்ய முன் வந்தது. அவர்கள் ஒவ்வொரு சமையல் கூடத்திற்கும் 2 லட்சம் ரூபாய் உதவி செய்ய முன்வந்தார்கள். நிலம் வழங்குவது, மின்சார வசதிகள் ஏற்படுத்துவது, இணைப்புச் சாலைகள் போடுவது ஆகியவற்றை நாம் மேற்கொண்டுள்ளோம். கட்டிடங்கள் கட்டும் பொறுப்பை அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 91 மையச் சமையற்கூடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, இப்போது 31 சமையற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு 30 சமையற்கூடங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. இதற்கிடையில் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட குழு, 'கேர்' உதவியை நிறுத்திவிட வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அது பரிசீலனையில் உள்ளது. மேற்கொண்டு 30 சமையற்கூடங்கள் அமைப்பதற்கான செயற்குறிப்பு பரிந்துரை செய்த நிலையில், அனுமதி வழங்கக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் படிப்படியாக மையச் சமையற்கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் 'கேர்' நிறுவனத்தினுடைய நோக்கம்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, மையச் சமையற்கூடங்களை விஸ்தரிக்கும்போது, மிகவும் பின் தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 'கேர்' நிறுவனத்திடம் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிலவற்றை இப்படி எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னோம். செங்கற்பட்டிலிருந்து தொடங்கினால் வேலைகளைச் சரியாக கவனிக்கலாமென்ற முறையில், அங்கிருந்து தொடங்கி





வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. அந்த வகையில் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் 91 சமையற்கூடங்கள் அமைக்கப்படும்.

**திரு. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, இந்த மதிய உணவு மத்திய சமையற்கூடங்கள் பரிசார்த்தமாக எந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன? அவை எந்த அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முதலில் சொன்னபடி, இந்தத் திட்டம் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மற்றைய மாவட்டங்களில் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

THIRU D. SANTOSHAM: Sir, at least in future when applications for recognition are received from private parties for starting private schools. will Government insist that kitchen arrangements for cooking should be made for the provision of midday **meals?**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, புதிய பள்ளிகளைத் திறக்கும்போது, அனுமதியளிப்பதற்கான நிபந்தனைகளில் இதை வைக்கப்பட வேண்டுமா என்று, அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்தக் 'கேர்' ஸ்தாபனத்தின் உதவியை மத்திய அரசாங்கம் நிறுத்திவிடவேண்டுமென பரிந்துரை செய்திருக்கிறது. அதற்கான காரணங்களைத் தெரிவித்திருக்கிறதா? பஞ்சாயத்து யூனியன் நிர்வாகங்கள் இதற்கு ஏதேனும் பங்குகள் வழங்குகின்றனவா? முன்பு அளித்தது போல 2 பைசா வீதம் கிடைக்கிறதா? பஞ்சாயத்து யூனியன் ஏதேனும் நன்கொடை வழங்குகிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, பழைய முறை அப்படியே இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில் 6 காசு, பஞ்சாயத்து யூனியன் சார்பில் 2 காசு, பொதுமக்கள் சார்பில் 2 காசு, ஆக மொத்தம் 10 காசு தரவேண்டுமென்று இருந்து வருகிறது. அத்தோடுகூட 'கேர்' நிறுவனம் 6 கோடி ரூபாய் அளவுக்கு உணவுப் பண்டங்களை வழங்கி வருவதால், இந்த 10 காசிலேயே சமாளித்து வருகிறோம். இந்தக் 'கேர்' நிறுவனத்தினுடைய

உதவியை மேலும் பெற முடியுமா, முடியாதா என்பது, இந்திய அரசாங்கத்திற்கும், அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையேயுள்ள நட்புறவின் அடிப்படையிலே எடுக்கப்படுகின்ற முடிவைப் பொறுத்ததாகும். அதில் நாம் தலையிடவோ அல்லது வற்புறுத்தவோ முடியாது. அது தனியாக மக்களுக்குப் பணியாற்றுகிற ஒரு நிறுவனம். அரசாங்க ரீதியில் இல்லை. அவர்களுடைய உதவியைப் பெறுவதில் ஒன்றும் ஆட்சேபணையில்லையென்ற கருத்தும் வருகிறது. இந்திய அரசுதான் இதில் முடிவு எடுக்க வேண்டும். பொதுவாக அரசாங்க ரீதியில் இல்லாமல், ஒரு 'சாரிட்டி' என்று சொல்லுமளவுக்கு ஒரு அறச்செயலாக இந்தப் பணியை அந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளதால், இந்த உதவிகளை மேற்கொள்ளுவதில் அரசியல் இடர்ப்பாடு எதுமிருக்காதென்ற முடிவைத்தான் நாம் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவரவர்களே, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து—வடக்கிலிருந்து—நிறை வேற்றிக்கொண்டு வருகிறோமென்று சொல்கிறார்கள். எல்லா மாவட்டங் களிலும் இதை ஏற்படுத்த எவ்வளவு நாளாகும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 'கேர்' நிறுவனத்தினுடைய திட்டப்படி 4 அல்லது 5 ஆண்டுகளில் செய்து முடிக்க லாம் என்றிருக்கிறது. இப்பொழுது இதில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதால், எவ்வளவு காலத்தில் முடியுமென்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்பதைக் கவனத்தில் வைத்திருக்கி றார்கள்.

**திரு. எல் பலராமன் :** தலைவரவர்களே, இந்தக் 'கேர்' ஸ்தாபனம் தங்களுடைய இருப்புக்களை, கோதுமையை வைப்பதற்கு 'கோடவுன்' கட்டு கிறார்கள். மேலும் சமையற்பாத்திரங்களைக் கொடுக்கிறார்கள். அதற்காக தமிழ் நாடு அரசாங்கம் ஏதாகிலும் மானியம் வழங்குகிறதா, அல்லது பங்குத் தொகை கொடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது முழுத் தொகையையும் 'கேர்' ஸ்தாபனமே கொடுக்கிறதா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நிர்வாகத் தைப் பொறுத்த வரையிலும், சமையலுக்கு ஆள் போடுவது போன்றவற்றை யெல்லாம் நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும். சமையல் செய்வதற்கான



பெரிய பாத்திரங்களை அவர்கள் கொடுக்கிறார்கள். அவர்கள் தருகிற உணவுப் பண்டங்கள் தவிர, அரிசி போன்றவற்றை நாம் தான் தர வேண்டும். அவர்கள் கோதுமை போன்ற கலப்புணவுப் பொருள்களை 'ந்யூடிரிஷியல் டயட்' என்கிற சத்துணவை அவர்கள் தருகிறார்கள். மற்றவற்றை நாம் தான் தர வேண்டும். ஆண்டு ஒன்றுக்கு நாம் 2 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்குகிறோம். இந்த நிதியைப் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையிலேதான் மற்றைய உணவுப் பொருள்கள் திரட்டப்பட வேண்டும்.

* 144 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that some students belonging to a School in Bathalapalli were admitted in Hosur Hospital with symptoms of food poisoning during the last week of July 1972;

(b) if so, whether the same was due to defect in Midday Meals supplied by the school; and

(c) the action proposed to be taken by the Government to avert similar incidents in future?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1972, ஜூலைத் திங்கள் இறுதி வாரத்தில், பத்தலப்பள்ளியில் உள்ள பள்ளியொன்றினைச் சேர்ந்த மாணவர்கள் நச்சுப் பொருள் கலந்த உணவினை யுண்ட அறிகுறிகளுடன் ஓசூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம், பள்ளியால் வழங்கப்பட்ட கெட்டுப்போன நண்பகல் உணவா?

(இ) எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்ச்சிகளைத் தவிர்ப்பதற்கு அரசு எடுக்கக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1972 ஜூலை இறுதியில் மதிய உணவில் நச்சுப் பொருட்கள் கலந்து விட்டதாக ஒரு செய்தி பத்தல பள்ளி ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலிருந்து பெறப்பட்டது.

(ஆ) இல்லை.

(உ) இது விசாரிக்கப்பட்டபோது நச்சுப் பொருட்கள் எதுவும் கலந்து விடவில்லை என்பது தெளிவாகியது. எனவே இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உணவுப் பொருட்கள், சமையலறை, கிடங்கு முதலியன தூய்மையாகப் பாதுகாக்கப்படுவதை வலியுறுத்தி அடிக்கடி அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. பொது நலத்துறை, கல்வித்துறை அலுவலர்கள் அடிக்கடி மதிய உணவு மையங்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பத்தலப்பள்ளியில் உள்ள பள்ளியிலிருந்து செய்தி கிடைத்தது என்று சொன்னார்கள். அங்கு பாதிக்கப்பட்ட மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்களா ? எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்களே, 12 மாணவர்கள் பிற்பகல் ஒரு மணியளவில் வாந்தி எடுத்ததன் காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். பிறகு, அவர்கள் நலம் பெற்று, 2, 3 நாட்களில் வீடு திரும்பி விட்டார்கள். உணவுப் பொருட்கள், பாத்திரங்கள் கிண்டிக்கு அனுப்பப்பட்டு சோதனை செய்யப்பட்டதில், நச்சுப் பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. வழங்கீட்டு முறையில் ஏதாவது தவறு நடந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை. அதற்காக இப்போது கடுமையான உத்தரவிடப்பட்டிருக்கிறது. அடிக்கடி கண்காணிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எப்படி உணவில் விஷம் கலந்தது என்று கண்டு பிடிக்க வேண்டும். ஆகவே, அது எப்படிக் கலந்திருக்கும் என்று ஏதாவது முடிவு எடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன். பாத்திரத்தில் கோளாறு அல்லது தண்ணீரில் கோளாறு, எதை வைத்து முடிவெடுத்தார்கள் என்று தெரிய வேண்டும். அப்படிப்பட்ட சம்பவத்திற்காக யார் பேரிலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** வந்திருக்கிற தகவல்படி, சோதனைக்கு அனுப்பிய பாத்திரங்களில் நஞ்சு எதுவும் காணப்படவில்லை என்று கிண்டி நிலைய பரிசோதனை அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கையை நம்பி நாம் செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. கே. ராஜாராம் :** பாத்திரத்தில் களிம்பு ஏறி விஷமாக மாறலாம். அதைப் பரிசீலனை செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கிண்டிக்கு அனுப்பப்பட்ட பாத்திரங்களிலும் உணவுப்பொருளிலும் எந்தக் கோளாறும் இல்லையென்று அறிக்கை வந்திருக்கிறது. குழந்தைகள் யாரும் பாதிக்கப்படவில்லை. யாருக்கும் கேடு ஏற்படவில்லை. ஆகையினால், இதனை எச்சரிக்கையாகக் கொண்டு எதிர்காலத்தில் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 10, 15 நாட்களுக்கு, முடிவு தெரிகின்ற வரையில், அந்த உணவுப் பண்டங்களை வழங்கக்கூடாது என்று மாவட்டக் கல்வி அதிகாரி நிறுத்தி வைத்து விட்டார்.

* 145 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is regular inspection by the Health authorities of the sanitary and hygienic condition of the places where food is prepared in bulk for midday meals to school children and also the vessels and food articles used for the same; and

(b) if so, the details thereof?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக் குழந்தைகளுக்காகப் பெருமளவில் நண்பகல் உணவு சமைக்கப்படும் இடங்களின் சுகாதார-தூய்மை நிலைமைகளையும் அதற்குப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றையும் சுகாதார அதிகாரிகள் தவறாமல் பார்வையிடுகின்றனரா?

(ஆ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) சுகாதாரத்துறை அலுவலர்கள் மதிய உணவு மையங்களைப் பார்வையிடுமாறு சுகாதாரத் துறை இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட அறிவுரைகளின் விவரம் பின்வருமாறு :—

(1) சுகாதார ஆய்வாளர் நியமிக்கப்படும் பேரூராட்சியிலுள்ள மதிய உணவு மையங்கள் சுகாதார ஆய்வாளரால் அடிக்கடி அல்லது வாரத்திற்கு ஒரு முறையாவது பார்வையிடப்பட வேண்டும்.

(2) ஊராட்சி ஒன்றியம். ஆரம்ப சுகாதார நிலையங்களோடு இணைந்த உடல் நலத்துறை ஆய்வாளர், தன் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குப் பார்வையிடச் செல்லும்போது மதிய உணவு மையங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். ஒரு மாதத்திற்கு எட்டு மையங்கட்குக் குறையாமல் அவர்கள் பார்வையிட

திரு. டி. சந்தோஷம்: இந்த மதிய உணவு சமைக்கக்கூடிய சில இடங்கள் மோசமாகவும், பூச்சி, பல்லி முதலியவை விழக்கூடிய நிலையிலும் அங்கு உணவு சமைப்பவர்கள் நோயுள்ளவர்களாகவும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாவட்டங்களைப் பொறுத்த அளவில், அம்மாதிரி இடங்களை யாராவது ஒரு அதிகாரி போய்ப் பார்த்து, அத்தகைய மோசமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறார்கள் என்பதை நாம் அவர்களிடமிருந்து வருகின்ற அறிக்கையின் மூலம்தான் அறிய வேண்டும்.

## Services of Teachers and Students for Collection of Funds.

* 146 Q.—THIRU K. S. GANAPATHY (on behalf of THIRU S. MUTHUSWAMY): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the collections for which the services of teachers and students were utilised during the last academic year;

(b) the schemes to implement which the services of teachers were utilised; and

(c) the benefit derived by the Government on account of this?

## நிதி திரட்டும் பணியில் ஆசிரியர்கள், மாணவர்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்ற கல்வி ஆண்டில் மட்டும் என்னென்ன வசூல்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மூலம் நடைபெற்றன?

(இ) அதோடு, என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்த ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்?

(உ) இதன் மூலம் அரசுக்கு எவ்வளவு பயன் கிட்டியது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) (1) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி.

(2) தேசிய பாதுகாப்பு நிதி.

(3) கொடிநாள் விற்பனை நிதி.



(இ) செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டனர்.

(உ) (1) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக ரூ. 6½ லட்சம் சேர்க்கப்பட்டது.

(2) தேசிய பாதுகாப்பு நிதிக்காக சுமார் ரூ. 14 லட்சம் சேர்க்கப்பட்டது. இந்நிதி திரட்டுவதில் கல்வித்துறையில் பணிபுரியும் அலுவலர்களும் பங்கு கொண்டனர்.

(3) கொடி நாள் விற்பனை நிதி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, செஞ்சிலுவைச் சங்கம், கொடி நாள் என்று ஒவ்வொரு ஆண்டும், இங்கேயிருந்து அந்தக் கொடிகளை எல்லாம் சலித்து 'டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீசருக்கு' அனுப்பப்பட்டு பள்ளிகளில் கட்டாயமாக பணம் வேண்டுமென்று கேட்கப்படுகின்றது. மாதந்தோறும் இம்மாதிரிப் பணம் சேர்ப்பது ஒரு தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாக பள்ளிகளில் ஆகிவிட்டது. அதைத் தடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உத்தரவில் யாரையும் கட்டாயப்படுத்திச் செய்ய வேண்டும் என்பது இல்லை. யாராவது பொறுப்பேற்றுக் கொள்ள போது நலத் தொண்டு என்ற முறையில் வேண்டுமென்று வேண்டும். எந்த ஒருவரும் கட்டயமாக ஏற்றுக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

## Malayalam Teachers

* 147 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that three I Grade Malayalam teachers working in Kanyakumari District High School have not received their salaries for the last four months as they have been reverted as II Grade teachers;

(b) if so, the reason therefor;

(c) whether any petition has been received in this regard; and

(d) the action taken thereon?

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்று அங்கே கிராம அதிகாரிகள் மூலம் வரி வசூலிக்கப்படாமல் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பஞ்சாயத்துக்குப் பாக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா? இது குறித்து பஞ்சாயத்துத் தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்களும் அந்த முறையை மாற்ற வேண்டுமென்றும் வேறு திட்டம் அமைக்க வேண்டுமென்றும் அரசுக்கு அபிப்பிராயம் கூறியிருந்தார்களே, அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் புகார்கள் மீது இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கர்ணம்-கிராம அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இடையே ஒரு நல்ல சுமுகமான உறவு நிலவ வேண்டுமென்ற அடிப்படையில் தான் இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் புகார்களைக் குறித்து விசாரணை செய்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டிவரும்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பஞ்சாயத்து வரிகளை கிராமதிகாரிகளே வசூலிக்கும் திட்டத்தை எந்தெந்த மாவட்டத்தில் கலெக்டர்களும், ரெவின்யு டிவிஷனல் ஆபீசர்களும் மிக்க சிரத்தையோடு கவனிக்கிறார்களோ, அங்கு நன்றாக வசூலாகின்றது. இந்தத் திட்டத்தைப் பற்றிக் குறைபாடுகள் எதுவும் அந்த மாவட்டங்களில் இருப்பதாகத் தெரியவில்லை. சில மாவட்டங்களில் கலெக்டர்களும், ஆர்.டி.ஓ.-க்களும் அதிக சிரத்தையுடன் கவனிப்பதில்லை. அந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. அன்றாட வரவு-செலவுக்குக்கூட பணமில்லாமல் கஷ்டப்படுகின்றன. ஆகவே வசூலைத் துரிதப்படுத்த அரசாங்கம் கலெக்டர்களை வற்புறுத்தி இதற்கு முதலிடம் கொடுத்து நிலவரிக்கு முன் இதை வசூலிக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தாக்கீது கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பஞ்சாயத்து வரி வசூலிப்பதிலே ஒரு சுணக்கம் ஏற்பட்டது. முந்தைய அரசவில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தாக்கீது அனுப்பியிருந்தப் பணிகளை கட்டாயமாகச் செய்வனே செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டதன் காரணமாக, ஓரளவுக்கு ஏற்பட்ட சுணக்கம் மாற்றப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இந்தத் தகராறுகள் இருக்கின்றன. இதை விட்டுவிட்டு வேறு ஒரு முறையைக் கையாளுவது என்றால், அந்த முறையெல்லாம் சரியாக வராது. கிராம அதிகாரிகள் வசூல் செய்தால்தான் ஓரளவுக்காவது வசூலாகும்,



இல்லாவிட்டால் அந்த அளவுக்குக்கூட வசூல் ஆகாது என்ற காரணத்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப்போன்று, இந்த முறையை இன்னும் செம்மையுடையதாக்கி வசூலைத் தீவிரமாக்குவதற்கான நடவடிக்கைகள் முறைப்படி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது மேலும் தீவிரப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த வாகன வரி, தொழில் வரி போன்றவை காலாகாலத்தில் வசூலிக்கப்படாமல் அந்தப் பஞ்சாயத்து யூனியன்களிலே நிலுவையாகவே இருக்கின்றன. இதைத் தனிப்பட்ட முறையிலே தலைவர் அவர்கள் செய்திருந்தால் அவர் மீது சர்சார்ஜ் முறையில் அபராதம் விதிக்கலாம். கர்ணம், மணியம் போன்றவர்கள், வசூலிக்காமல் இருந்தால் அவர் மீது அபராதம் விதிக்கலாம் என்று இருந்தும், அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலை இருப்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரி வசூலைச் செம்மையாக நடத்த வேண்டும். அவர்கள் வசூலித்துக் கொடுத்தால் தான், நாம் ஈட்டு மான்யம் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்க முடியும். நாம் மான்யம் வழங்குவதற்கு போதுமான அளவுக்கு வசூல் ஆகாத காரணத்தால், அதை அரசாங்கம் வழங்க முடியாத சூழ்நிலை காரணமாக, பல ஊராட்சி ஒன்றியங்கள், மன்றங்கள் கஷ்டப்படுகின்றன. அந்த முறையிலே நான் இந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்து, அவர்கள் வசூலித்துக்கொடுத்தால் தான் அரசாங்கம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மான்யம் வழங்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### *Teachers' Training College*

* 149 Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any Teachers' Training College in Madurai University area run by the Government; and

(b) if not, whether there is any proposal to start such a college there ?

## ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரைப் பல்கலைக்கழகப் பகுதியில் அரசால் நடத்தப்படும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஏதும் உள்ளதா?

(இ) இல்லையெனில், அத்தகைய கல்லூரி ஒன்றினை அங்கு தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இல்லை.

THIRU D. SANTOSHAM: In the present situation, there are a large number of unemployed Graduate teachers and this is definitely extraordinary. When the situation returns to normal, it is very necessary that there should be a Government Training College available. Will the Government bear this in mind and start it as soon as the situation returns to normal?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது மொத்தம் 23 பயிற்சிக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே 9 பயிற்சிக் கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய பகுதியிலே இருக்கின்றன. ஆனால் இப்போதிருக்கின்ற பயிற்சிக் கல்லூரிகள் போதுமானவை என்று கருதுகிற காரணத்தினாலேதான், புதிய பயிற்சிக் கல்லூரிகள் எதுவும் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அப்படி கல்லூரி வைக்கவேண்டிய கட்டம் வந்தால், அப்போது மதுரைப் பக்கத்தில் அரசாங்கத்தின் சார்பாக வைக்க நாம் முயற்சி செய்யலாம். இப்போது தேவையில்லை என்ற அளவுக்குத் தான் இருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மதுரைப் பல்கலைக் கழக எல்லையிலுள்ள 9 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் அத்தனையுமே தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளாக இருக்கிற காரணத்தால், பெரும்பாலானவர்களுக்கு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டாலும் அந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலே இடம் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது. அருள் கூர்ந்து ஏதாவது ஒரு கல்லூரியை அரசாங்கத்தின் சார்பாக எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுதே பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கின்ற பி.டி. ஆசிரியர்கள்



பல பேர்கள் இருக்கின்றார்கள். இப்பொழுதே 2,000, 3,000 பேர்களை வேலைக்கு எடுக்கவேண்டிய இடத்திற்கு 9,000 பேர்கள் விண்ணப்பித்திருக்கின்றார்கள். அந்த வகையிலே இருக்கின்றபோது, மேலும் பயிற்சிக் கல்லூரிகள் வைப்பதற்கில்லை. இதனுடைய எண்ணிக்கையை மெல்ல மெல்லக் குறைக்கலாமா என்ற எண்ணமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே ஏதேனும் ஓரிரு கல்லூரிகளை தனியார் விட்டுவிடுகின்ற நிலைமை ஏற்பட்டு, அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அப்போது அரசாங்கம் யோசிக்கலாம்.

THIRU M. RAJAH IYER: Sir, I would like to know whether the Government have examined the proposal of making admissions into the Training Colleges through a Central Agency as for the Training Schools earmarking a particular quota of seats for private managements by which most of the seats could be filled according to certain standards in order to see that there is no complaint of whimsical admissions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசாங்கப் பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்த வரையிலே, அந்த முறைதான் கையாளப் படுகின்றது. ஆனால் தனியார் பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, அவை அந்த முறைக்கு ஒத்து வர மறுக்கின்றன. அவர்கள் சட்டத்தின் கீழ் தங்களுக்கு அந்த உரிமையிருக்கின்றது என்று வாதிடுவதன் காரணமாகத்தான் அந்தக் குறை ஏற்படுகின்றது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுகின்ற யோசனை நல்ல யோசனை. அதை நானேகூட எடுத்துத் தெரிவித்தேன். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கக் கல்லூரிகளில் அந்த முறை கையாளப்படுகின்றது. தனியார் பயிற்சிக் கல்லூரிகளிலும் இந்த முறை கையாளப்படுமேயானால், ஓரளவுக்கு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு வசதி ஏற்படும். அதுபற்றி மேலும் பல்கலைக் கழகத்தின் மூலமாக முயற்சி செய்யலாம் என்ற எண்ணமும் இருக்கின்றது.

### *Service by the Trained Graduate Teachers*

*150 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether service as Headmaster or Assistant in a Middle School put in by a trained Graduate teacher will count for appointment as Headmaster of a Secondary School as per G.O. Ms. No. 91, Education, dated 22nd January 1968; and

(b) if not, the reasons therefor?

பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் பணி

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 22—1—1969-ம் நாளிட்ட 91-ம் எண் அரசாணையின்படி, பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியரால் இடைநிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவோ, உதவியாசிரியராகவோ ஆற்றப்பட்ட பணி, உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்படுவதற்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) தமிழ்நாடு கல்வி-விதிகளில், விதி 12 (2) (ஏ)-ன் படி பி.டி. பட்டம் பெற்றபின் அங்கீகாரம் பெற்ற இடைநிலைப் பள்ளிகளில் 5 ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் பணியாற்றியவர்கள் மட்டும்தான் உதவிபெறும் உயர்நிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியராக நியமனம் செய்யப்படத் தகுதியுடையவராகிறார்கள்.

**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவரவர்களே, இந்த விதியைக் கட்டாயமாகத் திருத்த வேண்டுமென்று அரசு நினைக்கின்றதா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால் பி.டி. பட்டம் பெற்று அவர்கள் 5 ஆண்டுகள் மிடில் ஸ்கூலில் தலைமையாசிரியராக இருந்தால், அந்தப் பணிக்காலம் முழுவதையும் எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்பது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. பி.டி. ஆசிரியராக உயர்நிலைப் பள்ளியில் அவர் பணியாற்றினாலும், மிடில் ஸ்கூல் தலைமையாசிரியராக இருந்தாலும், அந்த 5 ஆண்டுக் காலத்தை பணியாற்றிய காலமாக ஏற்றுக்கொண்டு அவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமிப்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லாதபடி அரசு இந்த விதியைத் திருத்தியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும். தனியாகப் பரிசீலிக்கலாம்.

*Government Arts College for Men in Madurai*

* 151 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether there is any proposal to start a Government Arts College for Men in Madurai; and

(b) if so, the stage at which the matter now stands?



மதுரையில் அரசு ஆண்கள் கலைக் கல்லூரி

**திரு. டி. சந்தோஷம்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில், அரசு ஆண்கள் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், இவ்விஷயம் இப்போது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM: There are nine Colleges in greater Madurai area and among them there is not even a single Government College. This really leads to some problems. Will the Government bear this in mind and rectify it when occasion arises?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மதுரை நகரிலும் மதுரை சுற்றுப் பக்கத்திலும் கிட்டத்தட்ட 12 கல்லூரிகள் இருக்கின்றன. ஆகையால் தான் நமது அரசினர் கல்லூரிகளுக்கு அவசியமில்லை. ஆண்களுக்கு இங்கு பெண்கள் அரசினர் கல்லூரிகள் இருந்து வருகின்றன. இருக்கின்ற காரணத்தால், மதுரையிலும் மதுரை சுற்றுப் பக்கத்திலும் இருக்கும் மட்டுமே 12 கல்லூரிகள் புதிய கல்லூரிகள் அவசியமில்லை என்று கருதப்படுகின்றது.

**திரு. அய்யணன் அம்பலம்:** தலைவரவர்களே, மதுரையிலும், மதுரையைச் சுற்றியும் அதிகமான ஆண்கள் கல்லூரிகள் இருப்பதால், இன்னும் ஒரு அரசினர் பெண்கள் கல்லூரி ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போதே, 3 பெண்கள் கல்லூரிகள் மதுரை நகரில் இருக்கின்றன. அவைகளே அங்குள்ள தேவையை [illegible] பூர்த்தி செய்து கொள்கின்ற அளவுக்கு அமைந்திருக்கின்றன.

*Micro-wave Network*

* 141 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether any Micro-wave Network is to be undertaken by the Tamil Nadu Police with Japanese collaboration;

(b) whether the Union Government have undertaken to finance this project; and

(c) if so, the details thereof?

### நுண்ணலை அமைப்புப் பணி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஜப்பானிய உடனுழைப்புடன் தமிழ்நாடு காவல் துறையினரால் நுண்ணலை அமைப்புப் பணி (Micro-wave Network) ஏதும் மேற்கொள்ளப் படவிருக்கின்றதா?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதியுதவி ஏதும் அளிக்க ஒப்புக் கொண்டுள்ளதா?

(உ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) இல்லை.

(உ) இந்த வினாவிற்கு இடமில்லை.

### *The Tamil Nadu Towns Nuisances Act, 1889*

* 142 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether Rules have been framed under the Tamil Nadu Towns Nuisances Act, 1889; and

(*b*) if not, the reasons therefor?

### தமிழ்நாடு 1889-ம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு 1889-ம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்தின்கீழ் விதிகள் இயற்றப்பட்டுள்ளனவா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) தமிழ்நாடு 1889-ம் ஆண்டு நகர் தொல்லைகள் சட்டத்தின்கீழ் எவ் விதிகளையும் இயற்ற அச்சட்டத்தில் வகை செய்யப்படவில்லை.



### *Tuberculosis Hospital at Asaripallam of Kanyakumari District*

* 152 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) whether there is any proposal to expand the Tuberculosis Hospital at Asaripallam of Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

### கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் காசநோய் மருத்துவமனை

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் காசநோய் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்காக ரூ. 31,500 செலவில் நான்கு படுக்கைகள் கொண்ட காசநோய்ப் பகுதி கட்டும் திட்டம்—தொழிலாளர் நல நிதித் திட்டத்தை ஆலோசித்து வருகிறது. பெண் நோயாளிகளுக்காகவும் குழந்தைகளுக்காகவும் முறையே 26 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுவதற்கான திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிபள்ளம் காசநோய் மருத்துவ மனை திறந்த வெளியிலும், காற்று வருகின்ற பகுதியிலும், தமிழ்நாட்டில் இருக்கின்ற இதர காச நோய் மருத்துவ மனைகளைவிட சிறப்பாக அமைந்திருப்பதால், அதிலே நவீன அறுவைச் சிகிச்சை இயந்திரங்களைப் பொருத்தி, மாநில அளவில் பெரிய மருத்துவ மனையாக்க அரசு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட சில ஆலோசனைகளே இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. ரூபாய் 31,500 செலவில் நான்கு படுக்கைகள் கொண்ட கட்டிடம் ஒன்று கட்ட திட்டமிருக்கிறது. அதற்கு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்காக தோட்ட உரிமையாளர்கள் நன்கொடை ரூ. 18,900 தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் அதற்கான வேலை தொடங்கி, கட்டிடம்

ஆரம்பித்த பிறகு; தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் முடிவான பதில் இன்னும் வரவில்லை. அதேபோல் 26 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று பெண்களுக்கும் குழந்தைகளுக்குமாகக் கட்ட வேண்டும் என்று ஆலோசனை இருக்கிறது. அதற்கான விரிவானதொரு வரைபடம் ஒன்றையும் கட்டத்தில் இருக்கிறோம். இவைகளை அரசாங்கம் செய்ய உத்தேசித்திருப்பதால், இதை நிறைவேற்றிய பிறகு, வேறு திட்டங்களைச் செய்ய முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## C.I.T. Union Workers

* 153 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether the labourers belonging to C.I.T. Union have decided to demonstrate before the Textile Mills, Namanasamudram, Pudukottai, to ventilate their grievances; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

## சி.ஐ.டி. யூனியன் தொழிலாளர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சி.ஐ.டி. யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது குறைகளைத் தெரிவித்துக்கொள்வதற்காக புதுக்கோட்டை, நமணசமுத்திரம் நூற்பாலைக்கு முன்பு ஆர்ப்பாட்டம் செய்ய முடிவு செய்துள்ளனரா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) அப்பகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. காடுவெட்டி தியாகராசன் அவர்கள் தலையிட்டதன் பலனாக, 1969-ம் ஆண்டுக்கான மிகுதிக் கொடை நிலுவை, எடுத்துக்கொள்ளாத கட்டாய விடுப்பு, கட்டாய விடுப்பு இவற்றிற்கான ரொக்க இழப்பீட்டுத் தொகை அனைத்தையும் கோருதல் போன்ற பிரச்சினைகளுக்கு உடன்பாடு காணப்பட்டது. தொழிலாளர்கள் போராட்டம் நடத்தவில்லை.



திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தப் போராட்டம் நடத்த வேண்டுமென்று முடிவு செய்தபோது, ஆடையற்ற நிலையில் போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, பொதுவாக கோரிக்கைகளுக்கு 15 நாட்களுக்குள் இணங்காவிட்டால், கடைசி கட்டமாக ஆடை அணியாத போராட்டம் உள்பட 11 விதமான போராட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளதாக 22—9—1972 நாளிட்ட கடிதம் ஒன்று சங்கத்திலிருந்து கிடைத்தது. அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. காடுவெட்டி தியாகராஜன் தலையிட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. ஆகவே ஆடை அணியாத போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்தது நடைபெறவில்லை.

## Entertainments Tax for the Madras Cricket Club

* 154 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) the Entertainments Tax assessments made on the Madras Cricket Club during the calendar years 1970, 1971 and 1972; and

(b) the tax collected from it for these years?

## சென்னை கிரிக்கெட் கழகத்துக்கு கேளிக்கை வரி

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970, 1971, 1972-ம் ஆண்டுகளில், சென்னை கிரிக்கெட் கழகத்துக்கு விதிக்கப்பட்ட கேளிக்கை வரி எவ்வளவு?

(இ) இந்த ஆண்டுகளில் அதனிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிடும்போது, ஆசிரியர்களுடைய நிலைமையைப் பற்றிக் கூறினார்கள். ஏற்கனவே 3 ஆயிரம் பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு, அவர்கள் அரசாங்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு, தேர்வு ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்ற நிலையிருக்கின்ற காரணத்தினால், அப்படி ஒருவேளை அவர்களைத் தேர்வு ஆணைக் குழு தேர்ந்தெடுக்கப்படாத நிலைமை ஏற்பட்டால் என்ன ஆகும் என்ற பீதி ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். நீண்ட காலமாகப் பணியாற்றியுள்ள ஆசிரியர்கள் தேர்வு ஆணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், அவர்களுக்கு நிவாரணம் தரும் வகையில் தொடர்ந்து பணியில் அமர்த்துகின்ற முறையில் தேர்வு ஆணைக் குழுவைக் கலந்துகொண்டு ஆவன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் குறிப்



1973 மார்ச் 1] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிட்டமாதிரி ஏற்கனவே எடுக்கப்பட்ட 3 ஆயிரம் பேர்களையும் ஆசிரியர் பதவியில் அமர்த்துவதற்கும் இனிமேல் வந்து சேருபவர்களை மட்டும் தேர்வு ஆணைக் குழுவிற்கு அனுப்பவும் சட்டம் இடம் தருமானால், தேர்வுக் குழுவையும், சட்டத்துறையையும் கலந்துகொண்டு இறுதி முடிவு எடுக்கத் தயாராக இருக்கின்றோம். அதற்கு சட்டத் துறை அனுமதியளிக்கிற ஒரு தன்மை இருக்க வேண்டுமென்ற காரணத்தாலேதான் சொல்லுகின்றேன். ஏனென்றால் இனி அதிலே எந்தவிதமான சங்கடங்களும் வரக்கூடாது. தேர்வு ஆணைக் குழு அரசாங்கத்தைப் பற்றியோ, இந்தத் துறையைப் பற்றியோ தவறாகக் கருதக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன். ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களை, 3 ஆயிரம் பேர்களை நிரந்தரமாக்குவதைத் தவிர இனிமேல் வருபவர்களுக்கு தேர்வு ஆணைக்குழு மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

திரு. எம். ராஜா அய்யர்: இந்த செலக்ஷன் கிரேடு சம்பள விகிதம் சம்பந்தமாக அரசினுடைய முடிவு எப்படி இருக்கும் என்று குறிப்பிட்டால் ஆசிரியர்களுடைய இந்தப் போராட்டம் அநேகமாக இருக்காது என்றும் அவர்கள் நல்ல வருங்காலத்தைக் காண முடியும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபோன்ற நிலைமைகளை ஆசிரியர்கள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய கடமையிலே இருப்பவர்கள் என்பதை இந்த அவையிலுள்ள மாண்புமிகு அங்கத்தினர்கள் அனைவரும் அறிவார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு அங்கத்தினர் திரு. ராஜா அய்யர் அவர்கள்கூட பேசியபோது, எடுத்ததற்கெல்லாம் ஆசிரியர்கள் போராட்டங்கள் நடத்தக்கூடாது, அது நல்லது அல்ல, என்ற கருத்துப்படப் பேசினார். பிரச்சினைகளைப் பேசியே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்துப்பட அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அரசாங்கம் ஆசிரியர்களுக்குச் செய்திருக்கின்ற நலன்களையும் உணர்ந்து வருகின்ற மாண்புமிகு அங்கத்தினர்களும் இந்த அவையிலே இருக்கின்றார்கள் என்கின்ற காரணத்தால்தான், அவர்கள் அரசாங்கம் நெருக்கடியான சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கின்ற நேரத்தில், ஆசிரியர்கள் இப்படிப்பட்ட போராட்டங்கள் செய்யக்கூடாது என்று சொல்லும் அந்த நல்ல மனப்பான்மையைப் பெற்றிருக்கிறார்கள். அதற்காக நான் அரசின் சார்பில் அத்தகைய மாண்புமிகு அங்கத்தினர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த 3 ஆயிரம் ஆசிரியர்கள் இந்தத் தேர்வு ஆணைக் குழுவிற்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டுமென்ற சங்கடத்திலேயிருந்து அவர்களை விடுவிப்பதற்கு சட்ட இலாக்காவைக் கலந்துகொண்டு ஏற்ற முடிவு எடுக்கப்படும் என்று கூறிக்கொள்கின்றேன். அநேகமாக

அதிலும் பச்சைக் கொடி காட்டப்பட்டு விட்டது என்றுதான் அர்த்தம் என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு அதற்கேற்ற வகையில் வழி முறைகளை ஏற்றுக்கொள்ள ஆராய்ந்து அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தேர்வு நிலைபற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப்பற்றி நான் செயலாளரிடத்திலும், இயக்குநரிடத்திலும் பல மாதங்களாகச் சொல்லியிருக்கின்றேன். அதைப்பற்றி புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தரும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே கல்வி மான்ய கோரிக்கையைச் சட்ட மன்றத்திலே வைக்கும்போது, அதற்கான முடிவை வெளியிடுகிறேன் என்று இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கின்றேன். அதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். இந்தப் போராட்டங்கள், மற்றவைகள் எல்லாம் கூடாது. இவைகளைப்பற்றி பத்திரிகைகளைப் பார்த்துத்தான் நான் அறிகின்றேன். அதற்காகத்தான் அறிக்கை வெளியிட்டிருக்கின்றேனே தவிர, கல்வி இயக்குநருக்கோ, செயலாளருக்கோ, எனக்கோ, விண்ணப்பமோ, வேண்டுகோளோ, முறையீடோ எதுவும் இதுபற்றி வரவில்லை என்று தெரிவித்துக்கொள்கின்றேன். பத்திரிக்கைகளைப் பார்த்துத் தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்று அறிந்து அந்த அறிக்கையை வைத்தேனே தவிர, அவர்கள் நேரடியாக எனக்கு அனுப்பவில்லை. இயக்குநரையும் கேட்டேன். அவர்களுக்கும் அனுப்பவில்லை, செயலாளருக்கும் அனுப்பவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சங்கடங்களைத் தீர்த்திட வேண்டுமென்பதுதான் நமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும், வேறு அல்ல என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

* திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவிக்கின்றபோது, நமது அவையின் முன்னால் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரி எதுவும் இல்லாமல், பழைய வரிகளை உயர்த்தாமல், உபரி நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வரும் நிதியமைச்சருமாகிய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாநிலத்திற்கு அளித்திருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று பாராளுமன்ற நிதிநிலை அறிக்கையின்மீது பல தலைவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள்.

" A hesitant and nervous surgeon attempting to do major operation ".



என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். கொஞ்சம் நடுக்கமும், சந்தேகமும் உள்ள ஒரு மருத்துவர் ஒரு பெரிய ஆபரேஷனைச் செய்ய முயல்வதாக காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளரான திரு. சந்திரசேகரன் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே பாணியில் நமது முதல்வர் அளித்திருக்கும் பட்ஜெட்டை நான் சொல்வதானால்

" a o3reful, generous and strong and experienced surgeon suceed-ing in a major operation with adequate surgical instruments ".

என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆகவே ஒரு பெரிய அறுவைச் சிகிச்சை செய்வதற்கு என்ன என்ன கருவிகள் தேவையோ அந்த கருவிகளில் முக்கியமான கருவி இல்லாமலேயே ஒரு சிறந்த ஆபரேஷனை, அறுவைச் சிகிச்சையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றிகாமாக முடித்திருக்கின்றார்கள். ஆனால் மத்தியிலே இருப்பவர்கள் நடுக்கத்தோடும், சந்தேகத்தோடும் அந்த மாதிரி அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். வெற்றியோ, தோல்வியோ அதைப்பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. இதை எதற்காக நான் இப்போது குறிப்பிட விரும்புகின்றேன் என்று கேட்டால், நம் வருவாயை உயர்த்துவதற்கு மத்திய அரசிலிருந்து நாம் எதிர்பார்த்த நிதியுதவி வராமலிருந்தாலும், இந்த நிதிநிலை அறிக்கை எந்தவிதமான புது வரியும் இல்லாமல் உபரி நிதிநிலை அறிக்கையாக அமைந்துள்ளது. நம் நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசால் அளிக்கப்பட்ட நிதியாதாரங்கள் பற்றிய விவரங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. முதலில் 10.8 சதம் என்று தொடங்கி, பிறகு அது 9 சதமாக மாறி, 7.4 சதமாக பின்பு மாறி இப்போது 4.7 சதமாகக் குறைந்துகொண்டே வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். உண்மையில் முதல் 3 ஐந்தாண்டுத் திட்டங்களிலே உருக்காலை போன்ற பெரிய ஆலைகளுக்காக நம் பகுதிகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்படாது, நம் மாநிலம் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. நமது மாநிலத்திலே எந்தவிதமான புது ஆலையும் திறக்கப்படவில்லை. இப்போதும் பெரும் ஆலைகள் அமைப்பதில் ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாநிலம் புறக்கணிக்கப் படுகின்றது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலும்கூட நாட்டு எவ்வளவு பணம் வரவேண்டுமோ அந்த அளவுக்கு வரவில்லை. நமது மாநிலத்திற்கு 575 கோடி ரூபாய் கேட்டிருந்தோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் 546 கோடி ரூபாய் அளவில் தான் நாம் பெற முடிந்திருக்கிறது. நாம் கேட்ட அளவிற்குப் பணம் வராவிட்டாலும் என்பதையும் அறிகிறோம். நாம் கேட்ட அளவிற்குப் பணம் வராவிட்டாலும் கூட நாட்டுக்குத் தேவையான அளவுக்கு அரசு போராடி மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த நிலையில் நிதி ஆணைக்குழு எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை நமது நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் அமைப்புச்

சட்டம் 280வது பிரிவின்படி நிதி ஆணைக் குழு ஒன்றை குடியரசுத் தலைவர் அவர்கள் நியமிக்க வேண்டும் என்றும், தலைவரும் நான்கு பேர்களை உறுப்பினர்களாகவும் மொத்தம ஐந்துபேர் அடங்கிய ஒரு நிதி ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டுமென்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் இரண்டாவது உட்பிரிவில் பாராளுமன்றம் அந்த நிதி ஆணைக் குழுவையும் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சட்டத்தை இயற்றிக்கொளள வேண்டுமென்று தெளிவாகக் கூறியிருக்கிறது. அதன்படி 1951-ல் ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. பைனுன்ஸ் கமிஷன் மிஸலேனியஸ் புரோவிஷன்ஸ் ஆக்ட் என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. நான் இதிலே சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், நிதி ஆணைக் குழுவில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பதில் மூன்று உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவரும் இரண்டு உறுப்பினர்களை மாநில முதலமைச்சர்களும் நியமிப்பதாக இருக்க வேண்டும். மாநில முதலமைச்சர்கள் மொத்தமாகச் சேர்ந்து நிதி ஆணைக் குழுவுக்கு இரண்டு பேரை நியமிக்க வேண்டும். அந்த முறையில் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டத்தை மத்திய அரசு திருத்த வேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் மத்திய மாநில உறவு, ஒரு சமஷ்டி உறவாக இருக்குமே தவிர இப்பொழுது இருக்கின்ற ஒற்றை ஆட்சி அமைப்பு முறை அதற்கு ஏற்றதாக இருக்காது. ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை இருக்க வேண்டுமானுல், 1951-ம ஆண்டு பைனுன்ஸ் கமிஷன் சட்டத்தை திருத்தி நிதி ஆணைக் குழுத் தலைவரும் இரண்டு உறுப்பினர்களும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு எஞ்சிய இரண்டு உறுப்பினர்களும் மாநில முதலமைச்சர்களால் தேர்ந்து அனுப்பப்பட வேண்டுமென்று இருக்க வேண்டும். நிதி ஆணைக் குழு நிதியினைப் பங்கிட்டுக் கொடுக்கும் முறைபற்றிய முடிவு இறுதித் தீர்ப்பாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநில வருவாயில் 24 சதவீதம் கல்வித் துறைக்குச் செலவு செய்யப்படுகிறது. நமது மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமான ஒரு அறிக்கையில் மற்ற மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் கல்வித் துறையில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்கு பலவிதமான வசதிகளும் சம்பள உயர்வும் கொடுத்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆசிரியர் சமூகம் அதை நன்றி உணர்வோடு ஏற்று, ஆசிரியர்களுக்கு நன்மை செய்து வருகின்ற இந்த அரசுக்கு அவர்கள் பாராட்டு தெரிவித்து அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, இன்னும் பல நன்மைகளைப் பெற்று, தங்களை உயர்வு படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசிரிய நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (அவை





யைப்பற்றி) எனக்கு முன்னுல் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள், "பி இனத்தில் 3,000 ஆசிரியர்கள் 10-ஏ (1) விதிப்படி பணியாற்றி வருகிறார்கள், அவர்களெல்லாம் அரசுப் பள்ளிகளுக்கு மாற்றப்படுகிறபோது மீண்டும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குப் போகும் நிலைமை இல்லாமல் செய்தால், இனி வரப்போகின்ற ஆசிரியர்களுக்கும், இப்பொழுது இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் கஷ்டம் இல்லாமல், இருக்கின்ற பிரச்சினைகளில் ஒரு பெரும் பகுதி தீர்ந்த மாதிரி", என்று சொன்னுர். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மனமுவந்து வரவேற்று, அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைத் தெளிவுபடுத்தியதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல் அதிலே ஒரு சிக்கல் ஏற்படுகிறது. 10-ஏ(1) என்ற விதி, வெள்ளையன் ஆளுகின்றபோது, கல்வித்தரம் உடையவர்கள் இல்லாத காரணத்தால், இயற்றப்பட்டது. அப்படி நிலைமை இருந்ததால், தற்காலிகமாக நியமிப்பதற்காக 10-ஏ (1) என்ற விதி வைத்திருந்தார்கள். இப்பொழுது கல்வித் தரம் உடையவர்கள் எல்லாத் துறைகளிலும் கிடைக்கிறார்கள். செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கு பி.டி. பட்டதாரிகள் வருகிறார்கள். பி.டி. டிரேய்னிங் படித்துவிட்டு அனுபவம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள். 10-ஏ (1) அப்பாயிண்ட்மெண்டு இனியும் இருப்பது தேவையில்லை என்பது எனது கருத்து கல்வித் துறையிலும் மற்றெல்லாத் துறைகளிலும் 10-ஏ (1) அபபாயிண்ட்மெண்ட் இல்லாமல் செய்யலாம். டெம்பாரி போஸ்ட், புரோபெஷனரி போஸ்ட் என்ற முறையில் நாம் வைப்பதானுல் அவற்றுல் நன்மை ஏற்படாது. 10-ஏ (1) அப்பாயிண்ட் மெண்ட் பல வருஷங்களுக்குத் தொடர்ந்துகொண்டு போய் இந்த மாதிரியான சங்கடங்கள் பின்னுல் ஏற்பட ஏதுவாகிறது என்று நினைக்கிறேன். அது போலவே செலக்ஷன் கிரேடைப் பொறுத்தவரையில், பத்து வருஷப் பணிக் காலத்தை அடிப்படையாக வைத்துக் கொடுத்தோமானுல். ஆசிரியர்களுடைய குறைகள் தீரும். அதனுல் அரசினுடைய நிதிப் பங்கீடு பெருமளவில் அதிகமாகிவிடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைப் பரிசிலனை செய்து, சட்டப்படி ஒரு உத்தரவு பிறப்பிக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தமிழக ஆட்சி அமைப்பு முறையிலேயே ஆசிரியர்களுக்கு அதிக அளவுக்கு உதவியும் பாதுகாப்பும் அளித்து வருவது நமது மாண்புமிகு கல்வி அமைச்சர்தான் என்பதை நான் மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்வேன். சாதாரணமாக பள்ளி ஆசிரியர்கள், அல்லது கல்வியில் சம்பந்தப்பட்டவர்கள் மாநாடுகள் போட்டால், அங்கே, அவர்களைப் பாராட்டிப் பேசிவிட்டு வருவதுதான் மரபு. ஆனுல் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்படி அல்ல. அண்மையில் பள்ளி நிர்வாகிகள் மாநாட்டில் பேசுகிறபோது, யாராக இருந்தாலும், ஆசிரியர்களைப்

பயமுறுத்தி நடத்துகின்ற பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டும், ஆசிரியர்களை நீங்கள் மதித்து நடத்த வேண்டும் என்று பேசியிருக்கிறார். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்காக, பாதுகாப்புச் சட்டம் வர இருக்கிறது. அத்தகைய நிலைமையில் ஆசிரியர்கள் இந்த அரசை தங்களுடைய அரசாகக் கருதி, ஆசிரியர்களுடைய அரசாகக் கருதி, அவர்களுடைய நன்மைக்காக இருக்கின்ற அரசாகக் கருதி, அவர்கள் பல நன்மைகளைப் பெற வழிவகை செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்களில் பெரும் பகுதியினர் அவ்வாறு உணருகிறார்கள் என்பதை நான் அறிவேன். அதுவே என்னுடைய கருத்து 100-க்கு 85 பேர் உணருகிறார்கள் என்பதை அவர்கள் என்னுடன் பேசுகிறபோது நான் அறிகிறேன். ஆனால் எப்படியோ ஒரு தருணத்தில் போராட்டம் என்று ஒருவர் சொன்னால் அதற்கு எதிராகச் சொல்வது அப்பொழுது அவ்வளவு முறையா என்று நினைக்கிற நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். யாராவது ஒருவர் போராட்டம் என்று சொல்கின்றபோது அதற்கு எதிராகச் சொன்னால், தன்னைப் பிற்போக்கு வாதி என்று சொல்லி விடுவார்கள் என்ற எண்ணம் பரவலாக இருந்து வருகிறது. பலர் கருத்துக்கு மாறாக எதையும் சொல்லக்கூடாது என்ற எண்ணம் ஒரு காலத்தில் இருந்து வந்தது. என்னுடைய தந்தை அவர்கள் வைக்கம் போராட்டத்தில் பெரியார் ஈ.வெ.ரா.வுடன் சிறை சென்றவர் அவர் வெளியே வந்த நேரத்தில்—அப்பொழுதெல்லாம் இந்த ஜனநாயகம் இல்லை அந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தவர்கள், ரொம்ப பயந்தார்கள். ஊரிலே ஒரு வம்பு நடந்தால், அவர்கள் எந்தப் பக்கம் நீதி இருக்கிறதோ அந்தப்பக்கம் ஆதரவு கொடுத்து அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கொள்வார்கள். நாம் எல்லாம் எப்படி இருக்கிறோம், எந்தப் பக்கம் ஆள் அதிகமாக இருக்கிறதோ அந்தப் பக்கம் நீதி சொல்லும் பழக்கத்தில் இருக்கிறோம். என் தந்தையாரிடம் நான் சொல்வதுண்டு "உங்களுக்கு என் இந்த ஊர்ப்பகை, பலர் உங்களை ஏதாவது சொல்வார்கள்", என்று சொல்வோம். ஆனால் அவர், உண்மையைச் சொல்வதற்கு நான் பயப்படவில்லை என்று சொல்வார். உண்மையைச் சொல்லாதவன் ஊரில் குடியிருக்கக்கூடாது என்பார்கள். அதுபோல் இந்தச் சமுதாயத்தில் போராட்டங்கள் தேவையாக இருந்தால் மக்கள் சேர்ந்து அவற்றை ஆதரிக்க வேண்டும். தேவையற்ற வைக்கும் போராட்டம் தொடங்கி நாட்டில் ஒரு அமைதியின்மை ஏற்பட வேண்டுமென்ற குறிக்கோளோடு, ஒரு அரசியல் சார்புடையவர்கள் தூண்டி விட்டு மற்றவர்கள் எல்லாம் அதற்குத் தலை அசைத்துக்கொண்டிருக்கும் சூழ்நிலை இருக்குமானால், அவர்கள் தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ள, 'அலர்ட்' செய்துகொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும் என்று நான் அழுத்தம் திருத்தமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.





நான் ஆளும் கட்சியைச் சேர்ந்தவன், அப்படித்தான் நான் சொல்லவேண்டும் என்று சிலர் நினைக்கலாம். உண்மையைச் சொல்ல வேண்டுமானால், நடு நிலைமையோடு சொல்வதானால், உண்மையைத் திறந்து சொல்ல வேண்டுமானால், எந்த மாநிலத்திலும் இந்த அரசை விட ஆசிரியர்களுக்கு இவ்வளவு குறுகிய காலத்தில், இவ்வளவு வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை என்று சொல்ல முடியும். அதற்காக நான் பெருமைப்படுகிறேன். உண்மையாக இப்பொழுது எனக்குத் தெரியும்—பாங்குகளில் இருக்கின்றவர்களோ மற்றவர்களோ சத்தியாகிரகம் போன்ற போராட்டங்களை ஆரம்பித்தால், பொதுமக்களுடைய வெறுப்புதான் ஏற்படும். ஏதோ ஒரு சாரார் ஏதும் வேலையில்லாமல் இருக்கின்றவர்கள் இப்படியெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பொதுமக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவது கூடாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்வது ஒரு கசப்பான உண்மைதான். நான் இதைப் பேசாமல் விட்டிருக்கலாமே என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் கடமை என்னை உண்மையை எடுத்துச் சொல்லத் தூண்டியதால், நான் இந்த உண்மைகளை எடுத்துக் கூறினேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், இப்பொழுது நம்முடைய நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறைபற்றி கூற விரும்புகிறேன். இது நாடு தழுவிய பற்றாக்குறையாக இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளால் நிலைமை ஓரளவுக்குச் சமாளிக்கப்பட்டு வருகிறது. இந்த மின்சாரப் பற்றாக்குறை ஒரு இயற்கைக் கோளாறினாலே தவிர ஒரு பகுதியில் மட்டும் வந்ததல்ல. மஹாராஷ்டிரத்தில் இருக்கிறது. குஜராத்தில் இருக்கிறது. இந்தியாவிலே கேரளாவைத் தவிர எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. கேரளாவைப் பொறுத்த வரையில், அது பிற மாநிலங்களுக்கு அதிகமாக விலைக்குக் கொடுத்து வந்த நிலை இப்போது இல்லை. அவர்களே விற்க முடியாத அளவிலே இருக்கிறார்கள். ஆகவே, மின்சாரப் பற்றாக்குறை என்பது இந்தத் துணைக் கண்டம் முழுவதும் இருக்கிறது. அது இயற்கைக் கோளாறால், மழைக் கோளாறால் வந்தது. ஆகவே அதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதி, அதை நிவர்த்தி செய்ய எல்லோரும் தங்களின் கடமையைச் செய்ய வேண்டும். இதை அரசியல் பிரச்சினையாக ஆக்க வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். அதே நேரத்தில் நாம் நீர் மின்சாரத்தை அதிகமாக நம்பாமல், அணு மின்சாரத்தை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக மணவாளகுறிச்சியில் 'தோரியம்' இருக்கிறது. இது மத்திய சர்க்காரின் கீழ் இருக்கிறது. அங்கேயிருந்து 'மனோசைட்டை' எடுத்து கேரளாவுக்குக் கொண்டு போய் அதைத் தோரிய

மாக மாற்றி, அதை பம்பாய்க்கு அனுப்புகிறார்கள். அதை நாமே இனிமேல் பயன்படுத்த வேண்டும். இப்போது தோரியத்தை கேரள அரசு எடுத்து ஆல்வாய்க்குக் கொண்டு செல்கிறார்கள். இன்றைக்கு கேரள அரசு அதைப் பயன் படுத்துகிற அளவிற்கு நமக்குத் துணை புரிய வேண்டும்.

அடுத்து, இந்த மாநில அரசினுடைய முழு முயற்சியால் விவசாயத் துறையில் உற்பத்தியாகிற நெல்லுக்கு விலை அதிகமாக ஏறவில்லை. நெல்லைப் பொறுத்தவரையில், விலை அதிகமாக ஏறியதாகச் சொல்ல முடியாது. விவசாயிகளுக்கு விலை பற்றாக்குறையாக இருக்கிறதென்று சொல்லலாம். தஞ்சையில் விலை ரூ. 35.40 இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்குக் கீழே கூட இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆக, விலை ஏறவில்லை. திருநெல்வேலி, கன்யாகுமரி ஆகிய மாவட்டங்களில் மூட்டை ரூ. 40 ஆக விற்கிறது. பார்டரில் கூட 15 ரூபாயாகத்தான் விற்கிறது. ஆகவே மாநில அரசைப் பொறுத்த வரையிலே, அதனுடைய அதிகாரத்திற்குள் இருக்கிற, விளைகிற நெல்லுக்கு விலை ஏறவில்லை. ஆனால் மற்றப்பொருள்களின் விலை ஏறுகிறது என்று சொன்னால், மத்திய அரசிற்கு அதில் பங்கிருக்கிறது. ஆகவே இங்கே விலை ஏறுகிறதென்று சொன்னால், அதற்கு மாநில அரசு பொறுப்பல்ல உதாரணமாகப் பார்த்தால், எனக்கு முன்னால் பேசிய திரு. தாமோதரன் அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். விவசாயத் துறை மாநில அரசு முழு உரிமை பெற்ற ஒரு துறை. அதில் மத்திய அரசுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அது ஸ்டேட் சப்ஜெக்டாக இருக்கிறது. விவசாயத் துறையில் வருகிற வருமானத்திற்கு வரி விதிக்கவும், அந்தவரியைப் பெறவும் மாநில அரசிற்கு முழு உரிமையிருக்கிறதென்ற நிலை இருக்கிறது. இப்போது மத்திய அரசு போட்டிருக்கின்ற பட்ஜெட்டில் விவசாய வருமானத்திற்கென தனிவரி போடவில்லை என்றாலும், அந்த விவசாய வருமானத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு இதர வருமானத்திற்கு வரி போடுகிறார்கள். அப்படி ஏதோ சொல்வதாக இருந்தால், மாநில அரசே அதற்கு வரி போட வேண்டுமென்று சொல்வது போல அமையும். அப்படி நான் சொல்லவில்லை. விவசாயிகள் இப்போது ஏற்கெனவே விவசாய வருமான வரியாக அதிக வரியைக் கொடுக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு இப்படி வரியைப் போடுகிறார்கள் என்று சொன்னால், அது விவசாயிகளுக்குச் செய்கிற பெரிய அநீதி. உதாரணமாகச் சொன்னால், ஒருவருக்குப் பத்தாயிரம், அல்லது பதினைந்தாயிரம் ரூபாய் வருமானம் வருவதாக வைத்துக்கொள்வோம். அதில் பத்தாயிரம் ரூபாய் இதரத் துறையிலிருந்து வருகிறது. மீதி ஐயாயிரம் ரூபாய் விவசாயத்திலிருந்து வருகிறது. ஆக இந்த ஐயாயிரத்திற்கு விவசாய வருமான வரியின் கீழ் மாநில அரசிற்கு வரி கொடுத்து வருகிறார்கள். மத்திய அரசு இன்கம்டாக்ஸ்



என்ற பெயரில் அந்தப் பத்தாயிரத்துக்கு வரி போடவேண்டும். ஆனால் இன்றைக்கு அந்த ஐயாயிரத்திற்கு வரி போடாவிட்டாலும் கூட கணக்கில் எடுத்துக்கொண்டு, பத்தாயிரம் ரூபாய் வருகிறவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வரி என்று சொன்னால், இப்போது போடப்பட்டுள்ள சட்டப்படி இந்த ஐயாயிரத் திற்கும் சேர்த்து இன்றைக்கு 1,400 ரூபாய் வரி போடுகிற நிலை ஏற்படுகிறது. இது விவசாயிகளுக்குச் செய்கிற பெரிய கொடுமை. அதே நேரத்தில் மாநில அரசுக்கே உரித்தாகிய ஒரு துறையில் மிக நுணுக்கமாக, ஏமாற்று முறையில் பிறர் அறியாவண்ணம் பதுங்கிப்பாய்ந்து உள்ளே செல்வதாக இது அமைகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே நம்முடைய அரசு நல்ல முறையில் மத்திய அரசோடு போரிட்டு நம்முடைய உரிமையைப் பெறுவதில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அவர்கள் போட்டிருக்கிற வரியில் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வந்தால், அதற்கு வருமான வரியும், இன்னொரு 5 ஆயிரம் ரூபாய் வருமானம் வந்தால் இந்த 5 ஆயிரம் வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு அந்தப் பத்தாயிரத்துக்குப் போடுகிற வரியை விட இன்னும் கொஞ்சம் அதிகமாகப் போடுகிறார்கள். அப்படிப் போடுவது தவறு, நான்-அக்ரிகல்சுரல் இன்கம் என்று சொல்லக் கூடியதோடு இதையும் இணைத்து வரிபோடாதே என்று சொல்கிறோம். ஆனால் இதை எப்படிக் கணக்கிடுவது என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, மத்திய அரசு இதைச் சொல்லித் தப்பித்துக்கொள்கிற வழி என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் மத்திய அரசு இதைக் கணக்கில் எடுப்பதற்கு உரிமை கிடையாது என்பது தான் பிரச்சினை. உதாரணமாக வருமான வரி போடுகிறார்கள். 5 குழந்தைகள் உள்ள குடும்பத்துக்கு சற்று வரி விலக்கு இருக்கிறது. அதே நேரத்தில் குழந்தைகளே இல்லாத குடும்பத்துக்கு அந்த வரி சற்று கூடுதலாக இருக்கிறது. அதே மாதிரி விவசாய வருமானம் உள்ளவர்களுக்கு கூடுதல் வரி போட இப்போது வகை செய்திருக்கிறார்கள். மாநிலங்களுக்குள்ள விவசாயத் துறையில் இப்படி வரி போடுவது என்பது சட்டச் சிக்கல் பிரச்சினையாக இருந்தாலும், ஒரு சாதாரண விவசாயியான எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இப்போது அக்ரிகல்சரல் இன்கம் என்பதைப் பெறுவதற்கு இன்கம்-டாக்ஸ் ஆக்டில் வகை செய்திருக்கிறார்கள். இந்த அக்ரிகல்சரல் இன்கம் எவ்வளவு என்று கேட்டு அதைப் பொறுத்து அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸ் கேட்கிறார்கள். விவசாய வருமானத்

தின் மீது வரியை நீங்கள் வசூலிப்பதோடு நாங்களும் வாங்குவதற்கு உரிமையிருக்கிறதென்று சொல்கிருர்கள். ஆகவே இதைத் தவிர்ப்பது எப்படி என்று தான் இங்குள்ளவர்கள் ஆலோசனை சொல்ல வேண்டும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போது இதைத் தவிர்ப்பதற்காக எனக்குத் தெரிகிற ஒரே ஆலோசனை என்னவென்ருல், இன்றைக்கு தமிழக அரசு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய-மாநில உறவில் என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறதோ அதை நாங்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று இங்குள்ள மற்றக் கட்சிகளும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். இதைச் செய்தால், மத்திய சர்க்கார் அதைக் கைவிட்டு விடும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதை நீங்களும் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, நமது இந்த நிதிநிலை அறிக்கையில் நமது முதல்வர் அவர்கள் குடியிருப்பு மனைச் சட்டம் என்ற ஒன்றைக் கொண்டுவந்து, இதன் மூலம் ஒரு லட்சத்து ஐம்பத்தி ஏழாயிரம் மக்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்படவிருக்கிறது என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த நாட்டில் 1,57,000 ஏழை மக்களுக்கு நிம்மதியாக தங்களுடைய சொந்த மனையில் குடியிருக்கிறோம் என்ற நிலை ஏற்படவிருக்கிறது. இதை எல்லாப் பகுதிகளுக்கும் பரவலாகப் பரப்ப வேண்டும். மலையோரப் பகுதிக்கு விதி விலக்கு இருப்பதாகத் தெரிகிறது. அதை மாற்றி அங்கே வசிக்கிறவர்களுக்கும் அவர்கள் குடியிருக்கிற இடங்களுக்கும் மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

நமது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் புதிய புதிய கார்ப்பரேஷன்களை ஏற்படுத்தி, போக்குவரத்தை மிகச் சிறப்பாக ஆக்கி, நல்ல வழித்தடங்களை ஏற்படுத்தி, லைட்னிங் எக்ஸ்பிரஸ்களை விட்டிருக்கிருர்கள். அதைக் கூடுதலாகப் பயன்படுத்துகிறவர்கள் தென் மாவட்டத்தில் உள்ளவர்கள் என்னைப் போன்றவர்கள் கல்லூரி வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு மாலை 4 மணிக்கு அங்கே பஸ் ஏறினுல் மறு நாள் காலை 7 மணிக்கு இங்கே வந்துவிட முடிகிறது. இரயிலில் வர வேண்டுமானுல் பகல் 1½ மணிக்கே புறப்பட வேண்டும். ஆனுல் இந்த லைட்னிங் எக்ஸ்பிரஸில் அதைவிட சீக்கிரமாக வர முடிகிறது. இன்னும் கொஞ்சம் இருப்பதற்கு வசதியாக, இப்போதிருக்கிற இந்த லைட்னிங் எக்ஸ்பிரஸில், ஏரோப்ளேனில் வருகிற மாதிரி, கொஞ்சம் சாய்ந்து இருப்பதற்கு 'அட்ஜஸ்ட்' பண்ணினுல், நாம் அதை மின்னல் வேக வண்டி என்று சொல்வதற்குப் பதிலாக 'விமான வண்டி' என்று சொல்ல வசதியாக இருக்கும். இதற்காக கட்டணத்தைக் கொஞ்சம் உயர்த்தினுல்





கூடப் பரவாயில்லை. ஏனென்று சொன்னுல், அரசுத் துறை இப்படி பஸ் விடவில்லையென்ருல் இந்தப் பஸ் கட்டணம் எவ்வளவு உயர்ந்திருக்கும் என்பதைச் சொல்ல முடியாது. உதாரணமாக சென்னைக்கு 25 ரூபாய் கட்டணத்தில் நாம் வருகிறோம். அரசுத் துறை ஈடுபடாமல் இருந்தால், 40 ரூபாய்க்குக் குறைந்த கட்டணத்தில் வர முடியாது. இந்த அளவுக்கு அரசுத் துறை ஈடுபட்டு, தனியார் துறையில் இருக்கிறவர்கள் ஏகபோக முறையில் கட்டணத்தை உயர்த்தாமல் தடுத்து நிறுத்தியிருப்பதற்காக நான் நமது அரசுப் போக்குவரத்து அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். இருந்தாலும் இன்னும் நன்ருகப் பாராட்டுவதற்காக இருக்கைகளில் சாய்வு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இப்போது பாண்டியன் கார்ப்பரேஷன், பல்லவா கார்ப்பரேஷன் என்றெல்லாம் தொடங்கியிருக்கிருர்கள். தென் மாவட்டங்களாகிய கன்யாகுமரி மாவட்டத்தையும் திருநெல்வேலி மாவட்டத்தையும் சேர்த்து நாஞ்சில் கார்ப்பரேஷன் என்று ஏற்படுத்தினுல், இன்னும் சிறப்பாக அமையும் என்று நான் கருதுகிறேன். இதிலேயுள்ள நன்மை, ஒரு சின்ன சின்ன யூனிட்டாக வந்தால் அவர்களே அதைக் கவனித்து சிறப்பாக அமையும்.

இன்னென்றை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மொத்தமாக டிரான்ஸ்போட் துறையிலே இருக்கிற ஊழியர்களின் சம்பளத்தை மாநில அளவிலே நிர்ணயம் செய்து கொண்டு அவர்களுக்கு போனஸ் வழங்குவது, அதிக ஊழியம் கொடுப்பது ஆகியவைகளுக்கு எல்லாம் அந்தந்த கார்ப்போரேஷன் இலாபத்தில் ஒரு விகிதத்தைக் கொடுக்க வேண்டும். இது அவர்கள் போட்டி மனப்பான்மையோடு செயல்படுவதற்கு ஒரு வழியாக இருக்கும். செக்கிங் இன்ஸ்பெக்டர், டிரைவர், கண்டெக்டர் இவர்களுக்கெல்லாம் ஸ்டேட் வைடு சம்பளத்தை நிர்ணயம் செய்துவிட்டு, அதற்கு மேலும் 'இன்சென்டிவ் போனஸ்' மற்றதெல்லாம் அந்தந்த கார்ப்பரேஷனின் இலாபத்தை ஒட்டியதாக ஆக்கிவிடலாம். இதிலே எவ்வளவு லாபம் வருகிறதோ அதை ஊழியர்களுக்குக் கொடுப்பது என்று சொன்னுல் அவர்கள் இப்போது ஆள் ஏற்ருமல் பேருந்தை வேகமாக ஓட்டுவது தவிர்க்கப்பட்டு நிறைய ஆட்களை ஏற்றிச் சென்று, அரசுக்கு நல்ல லாபத்தைத் தேடித்தரும் வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறியைப் பொறுத்தவரையிலே, இன்று கைத்தறி நெசவாளர்கள் நூல் விலை ஏற்றத்தினுல் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆனுல் கூட்டுறவு ஆலைகளின் மூலம் கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகிற

கைத்தறியாளர்களுக்கு இன்று குறைந்த விலைக்கு நூல் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் தனியார் ஆலைகளை நடத்திக்கொண்டு வருபவர்கள் மத்திய அரசின் பாதுகாப்பில் இருந்துகொண்டு சென்ட்ரல் எக்சைஸ் உதவியோடு நூறுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பேல்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு, 3 மாதங்களுக்கு அப்பால் அவர்கள் எதிர்பார்த்தபடி விலை உயர்ந்த பிறகு, விலைக்கு விற்க எடுத்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஏழை மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையிலே ஒரு ஆலை செயல்படாமலிருந்தால், அவர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கொடுக்கப்படாமலிருந்தால், இந்தத் தமிழ் நாட்டின் நெசவாளர்களின் நிலை என்னவாக இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே நாம் ஒவ்வொருவரும் இந்தக் கூட்டுறவுத் துறையிலும், பப்ளிக் செக்டாரிலும் என்னென்ன தவறுகள் இருந்தாலும், அந்தத் துறைகளின் மூலம்தான் தனியார் செய்யும் தவறு களைத் தடுக்க முடிகிறது. எனவே அந்தத் துறையைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்திக்கொண்டு இந்தக் கூட்டுறவுத் துறையைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே நமது தொழில் துறையைப் பொறுத்தவரையில் நாம் பெரிய அளவிற்கு அதை வளர்த்திருக்கிறோம். உதாரணமாக தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு பல கார்ப்பரேஷன்களை ஏற்படுத்தி நிதி உதவி செய்து வருகிறார்கள். இப்போது தமிழ் நாட்டிலேயே கன்யாகுமரி மாவட்டத்தில் தான் ரப்பர் அதிகமாக உற்பத்தியாகிறது. அங்கே அரசாங்க ரப்பர் தோட்டம்தான் 4-ல் 3 பங்கு உற்பத்தி செய்கிறது. அது மூலப்பொருளாக இருப்பதனால், அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலையை பொதுத் துறையிலே தொடங்குவதற்கு மத்திய அரசின் உதவியோடு மாநில அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கே ஒரு டெக்னிகல் யூனிவர்சிட்டி (தொழிற் கல்வி பல்கலைக் கழகம்) ஏற்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் தொழிற் கல்வியைப் பொறுத்தவரையிலே, வேலைக்கு ஏற்ப வருஷந் தோறும் அதன் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. இப்போதே பி.டி. ஆசிரியர்களில் வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அடுத்த வருஷமும் ஒரு 500 அல்லது 600 பேரை உற்பத்தி செய்துவிட்டு வேலையில்லாத் திண்டாட் டத்தை, நெருக்கடியைப் பெருக்குவதைவிட எண்ணிக்கையைக் குறைப்பது தான முறையாகும் என்று நினைக்கிறேன். இப்போது செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் பயிற்சியை நாம் நிறுத்தி வைத்திருக்கிறோம். அதேபோல அடுத்த ஆண்டு பி.டி. ஆசிரியர்களின் பயிற்சிக்கு 50 பர்செண்ட் மாநிலம்



முழுவதும் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளலாம். அதேபோல ஒவ் வொரு துறையிலும் எவ்வளவு டெக்னிகல் ஹேண்ட்ஸ் அவசியப்படுகிறதோ அந்த அளவுக்கு அதை ரெகுலேட் பண்ணினால், அது முறையாக அமையும். இவ்வாறு இந்த நிதிநிலை அறிக்கையை, வரி இல்லாமலும் பழைய வரிகளை உயர்த்தாமலும் ஒரு உபரி பட்ஜெட்டாக தமிழக அரசு அதுவும் குறிப்பாக தமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மூலம்—அளித்திருப்பதை நான் முதலில் குறிப்பிட்டதைப் போல, ஒரு திறமையான அறுவை மருத்துவர் நிதானத்தோடும் மிகத் திறமையுடனும் கண்ணும் கருத்துமாக, மிகுந்த இரக்க சிந்தனையோடும் தகுதியான உயர் கருவிகள் இல்லாத நிலையிலும் இந்தத் தரமான அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள் என்று தான் பட்ஜெட்டைப்பற்றி நான் கருதுவது என்று கூறி முடிக்கிறேன்.

* THIRU S. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I welcome this opportunity of speaking on the State Budget for 1973–74. My first object is to congratulate the Chief-*cum*-Finance Minister on presenting a Budget which is completely free of tax burdens during the year. It is possibly due to his awareness that we have reached at least on the front of sales tax and on the front of transportation, fairly high levels of taxation in this State. It is not necessary for me to discuss motivations. But it is necessary to bestow praise where praise is needed. The Budget, perhaps more than the Central Budget, reveals a great economic awareness of the distressing days through which the country and in particular the State is passing. My second object is to congratulate the Hon. the Chief Minister on the remarkable practical speech that he has made at the National Development Council. It requires a lot of courage to say what he said on that occasion, because no other Chief Minister dared follow what he has said on that occasion. For the first time in the history of the National Develop- ment Council, the Chief Minister of our State took courage to do some plain speaking about the need for a pragmatic approach in the economic development of the country. The particular reason for expressing my satisfaction in this regard is this. It is because Tamil Nadu is to give a lead on many matters to the Centre. After going through the Central Budget last night, I can say we are the direct victims. I switched on the radio and sat near the radio only with a sense of nervous frustration. I am concerned because I am one of those victims. I am concerned with it because I am a Stock Broker. I am concerned with the share

market and I wanted to know whether it would go up or come down. I am critical about what is going on. I want to know whether it has worsened or aggravated the situation. The State as well as the Central Budget have to have the same economic troubles because the areas are the same and because the principles that govern the economic problems are the same, but remedies can be sensible. Therefore, the State of Madras, as such, is a victim of the increase in excise duty on steel, increase of import duty on cotton, excise duty on import of copper, excise duty on import of ever-silver and so on. Some may think that it is somebody else's business. You should know that even a small little electrical appliance that you buy contains copper; it contains eversilver; and contains some of these things and the prices tend to go up. The prices of machines which we build in the country tend to go up, because of the higher rate of excise duty on steel. The excise duty on steel has been increased from 50 to 75 per cent. All these things have happened in the Central Budget. Therefore, the State Budget has become a refreshing contrast. I, therefore, particularly want to congratulate the Government on the substantial allocation for education. A sum of Rs. 97.1 crores has been earmarked therefor. I am particularly happy that this allocation has been made. But I want one important thing to be done. I want a follow-up—" in depth follow-up "—as to the effective utilisation of the money that has been allotted for education. My hon. Friend, Thiru Damodaran, expressed some doubt on the allocation for education and expressed misgivings about producing too many people who would be educated beyond their opportunities. I fully agree with that. It is not enough if they are educated. But others must also get education. Nobody should be denied education. By follow-up measures, I hope steps will be taken to see that the funds are not dissipated because it will have an impact on the money used. The money used for this purpose should be beneficial to the State. A sum of Rs. 10 lakhs has been allocated to creation of employment opportunities.

It is just a coincidence that the Hon. the Chief Minister and the Minister for Industries are sitting together. They can discuss among themselves and find a solution. The Central Government have made the same mistake. They have allocated Rs. 100 crores but they have not spelt out the exact employment opportunities.



How are these employment opportunities going to be created? You are not going to start a number of State enterprises, but you are going to afford opportunities to the normal, efficient entrepreneurs. An ordinary merchant can become an industrialist in a small way; a small scale industrialist may become a medium scale industrialist, a medium-scale industrialist may become a large-scale industrialist. There is no harm in helping them. Every one participates in economic activities and helps in production of goods and services. They help in increasing the revenue and produce employment opportunities; they utilise electric power and utilise transport system; they use water and such like things. He is contributing to increase the bulk of the economy. Therefore, the Government must consider the question of how they are going to make use of these Rs. 10 crores in providing employment opportunities. This the Government can effectively do only when they can create opportunities where they can hold permanent jobs. Otherwise, the Government have to continue some concealed relief measure. I repeat concealed measure because ultimately if you stop the doles, they will become more discontented and frustrated than ever before. Therefore, I would like to issue a gentle warning that whenever the Government create employment opportunities, it must be followed by creation of industries in the small-scale, medium-scale and large scale sectors. I am sure there is need to help the entrepreneur to go on with his work.

Sir, much has been said about the Finance Commission's recommendations. I am glad to note that the Government have distributed the copies of the memorandum of the Tamil Nadu Government submitted to the Finance Commission to the Members. It is a courageous document. It is a clear document. Finally at the end of the Memorandum a chapter has been written in which three objectives of devolution of revenue to the States have been mentioned. Yesterday, a most interesting exercise has appeared in the Central Budget. There is a total Book Entry deficit of Rs. 500 and odd crores, out of which Rs. 421 crores is a deficit for converting State overdrafts with the Reserve Bank into Central Ways and Means advances. For the last two years, I have been saying that the State Overdrafts with the Reserve Bank are a provisional deficit financing. The Reserve Bank Governor has grudged this description. But finally he agreed that I was right. If you convert these overdrafts into Ways and Means advances,

then it amounts to deficit financing. Now it is all very well. Anybody with a sense of financial rectitute who reads this paragraph of Thiru Chavan's Budget speech two times, will know it is a piece of financial jugglery, and every intelligent person will know that it is not worth the paper on which it is written. Therefore, it is essential that you and the Centre should agree on transfer of some heads of resources. You will get directly taxes and levies. You are getting Central doles. I know it is not in your hands. I do not want to take up the time of the House by reading the Memorandum. If you can get the Central assistance, get it. If you get the amount, you use it purposefully. I am going to make an unpopular suggestion. There is the Pay Commission Report of the Centre and when the scale of pay of Central Government employees is revised, there will be impact on the State employees. A major part of the taxes and loans collected is going to be spent on this. The whole amount is to be dissipated in salaries and wages. We shall finally have in this State as well as in the rest of India a Government which the people cannot afford. The poor man cannot afford this. I will give an illustration of what I mean. I do not want to be abstract. The other day, the Chief Commercial Superintendent of the Southern Railway came and talked to me because I had something to say about the Railway Budget which appeared in the newspapers. He told me this: "When I got down from my saloon at Sirkali, I saw a young man walking with terelyne shirt and fine pant. I asked the Station Master who he was. The Station Master replied that he was the Station sweeper. Then I asked the Station Master: "Look here, how can he sweep without spoiling his apparel?" The Station Master replied that he had employed two people on Rs. 30 for the station to be cleaned. "His salary is Rs. 280 and he can afford to employ two people. So, he is not spoiling his apparel by sweeping the Station."

Now, the farmer in Madras State—I do not know of other places though I can speak of Kerala in a small way—owning 5 acres or less—and I do not know whether the hon. Member Thiru R. Krishnaswami Naidu will contradict me, because it may be different in Ramanathapuram district—gets only Rs. 500 to Rs. 600 in a year with a reasonable monsoon after all the outlay. This is equal to two months' salary of a sweeper and one month's salary of a Chaprasi in the State Bank of India, Madras. This





tious plans and we were all very glad to see that the Cement Factory had made a gross profit of Rs. 84 lakhs before deduction was made for interest and depreciation and that a number of letters of intent have been obtained for manufacture of tyres, cycle tubes, chemicals, polyester fibre and so many products. Considering the constraint on resources, one should have thought that it would have been more desirable to invest in new fields of activity rather than take over an existing field of activity. In view the shock that is given to the industrial world and in view of the far-reaching effects it is likely to have upon future investments in our State—I am not trying to frighten away investments—but naturally if there is a certain amount of fear and anxiety that their industries are also likely to share the same fate—it may result in capital shying away from our State. This is something which we do not want, not because it will help the private sector but because industrialisation would necessarily mean more employment of skilled personnel and the lack of it would result in greater unemployment.

Sir, one word more and I have done. That is in relation to a medical check-up that was done in the town of Kancheepuram about 10 days ago. I am mentioning this, because, although a provision has been made in the Budget for leprosy relief work, out of 20,000 children who were subjected to medical attention in the town of Kancheepuram 10 days ago, from a report that I read in the Hindu and the Indian Express, 897 children were found to be suffering from leprosy. Out of 20,000 children in an urban town of Kancheepuram, 897 children were found to be suffering from leprosy. Sir, I repeat this, because if there is going to be any minimum health programme required in our State, I strongly plead that we must have a minimum health programme for all school children up to the primary stage at least, because it requires a lot of money. But, I am deeply concerned to note that in the districts of Chingleput, South Arcot, North Arcot and possibly Salem, leprosy is increasing at a rapid pace and this finding of a medical team in Kancheepuram produced a great shock on me. If I were the Health Minister, I would not have been able to sleep at all. I hope that the Hon. the Health Minister will also lose some sleep over this matter, because it is a matter that concerns the children. If I were a parent in Kancheepuram, I would immediately withdraw my children from that school. Perhaps I am over-exaggerating the picture. But, if 4½ to 5 per cent of children of school-going

the right in the right way and create wealth. Why do you call him by suspicious names? Kindly don't do it. It is not right at all.

I now come to the two things which are very important. One is the take-over of Private Electricity Undertakings. I am making only an appeal in this regard. It is too late in the day for me to say "Don't take them". We have passed an Act in the year 1955, viz., Acquisition of Electricity Undertakings Act and we know that acquisition of such undertakings will come about at some time. But it was very slow in coming. Now that it has been announced in the Budget that within this year there will be the take-over of seven Undertakings, I suggest that the guide-lines on which this is going to be done might be spelt out soon. In so doing, the Government should remember one thing, namely, that it is not the licensee that is going to get all the money but it is the share-holders that are going to get the money. The majority of such share-holders—about 93 per cent of the share-holders—in South India have invested less than Rs. 3,000 as shares in those undertakings. Therefore, the Government should be careful not to expropriate them but to give them a reasonable compensation which will compensate them, for what they did not get, at least their capital back with a little sum as solatium. I am not appealing on behalf of the licensees. Anything they get by way of solatium is going to be taxed by the Centre and they are not very keen on that. But what is important is that the small share holders, on whose behalf I am appealing because I have sold shares to thousands of such small people, should not be expropriated; and the Government should not make them go away with the feeling that they have been let down or that they have been deprived. I am not at all saying that the Government are going to do it. I appeal to the Government to see that they are paid appropriate solatium and that an early announcement is made in this regrad. The question of finance will always be there. But, what is important is that the Government should do what is fair by him and not necessarily what is generous by him. I think when the Government can afford to be generous to small people, they can be generous to these small share-holders also. Therefore I would request the Government to stretch a point in his favour and make an early announcement.

Sir, I then come to the take-over of the Madras Aluminium Company. I know the Hon. the Chief Minister is aware, and the Hon. the Industries Minister is aware, that I did not hesitate, as



President of the Chamber of Commerce, to issue a statement in the Press. I did so only for one reason. I think this State, perhaps alongside the only other State that I know of, Gujarat, and also Maharashtra perhaps, are the only States which have respect for the capacity of the common man to produce industries and to set up small industries and they have faith in the human beings that surround them. If this Government still have that faith, I add 'living faith'; I would request the Government not to do anything which will disturb his confidence in the future of the industries that he starts. MALCO is a very useful industry. I was in Delhi at the time when the licence for MALCO was being finalised. I know the struggle Thiru Venkataraman had to put up for the purpose of getting that licence for this State. People from three States were putting spanners in the work of our getting the licence. I do not want to mention their names; but they occupied very high positions as Ministers in the Central Government. They were putting spanners in the work against Madras State getting this licence. I know how hard we had to work to get this licence. Some of the materials and statistics which I had were also supplied by me. At that time I did not want to have that for myself. I did not have the means and my hands were already full with other industries. We wanted to get it for our State. Later on, MONTECATINI, the Italian firm was introduced and inducted into this and I think that the MONTECATINI and the present management have done a good work. I know one thing which the Hon. the Chief Minister is going to say, namely, that all this success is only because the Government supplied electricity at ridiculously reduced rates to this industry. It is true. But, Sir, electricity is never supplied at the rate at which electricity is produced. In a generating set of mine in my premises we produce energy at 50 paise per unit. Without that, I will not be able to live in the industry, because I will have to put up the prices beyond the reach of the consumer. Therefore, electricity is a public utility article. In the Consultative Committee meeting yesterday, one gentleman representing some Labour Unions asked me, "Why not you supply electricity to all the industrialist fellows at the rate at which you generate plus over-head charges which, in the case of the Electricity Board, would come to over 35 paise per unit?". In my own case, we generate electricity at 50 or 60 paise per unit and at present, due to excise duty on furnace oil, it may go up to 65 or 70 paise. That is the position. I know that you are subsidising electricity supplied to industries. I

know the handicaps to which the State Government have been subjected. I do not want to be insensible to the difficulties and embarrassment the Government are facing. But it was the first metallurgical industry in this State. I was born in Salem and I have heard Mr. Dickens say about the bauxite in Salem. The earliest report I saw 35 years ago when I was a young fellow. We were all very proud that the industries had come to exploit the Salem bauxite. Therefore we were very of it. We were proud that it worked well. So, the announcement came to us as a blow. I do not want to conceal it. The two repercussions which I think are very important for this State Government to remember are these. I, therefore, appeal to the State Government - not because of any bitterness because I am not bitter at all and if for any reason. I have to be bitter, it will be against the Central Government which have done more things like this—that they should remember that we still want entrepreneurs to come up in this State.

We still want outside entrepreneurs. With all our resources we can do a lot with outside money. We want outside money. Mysore is attracting outside money. The only place which is not attracting outside money is Kerala. Mysore is attracting and Andhra Pradesh, when the trouble subsides, will attract more outside money. That is No. 1. No. 2 is this. We do want foreign collaboration and foreign collaborators. What happened to MONTECATINI should not happen to others. I am speaking of the psychology of other people who may get the same idea that they will get the same treatment as MONTECATINI. Therefore, the psychology of the new entrepreneurs outside should not be the same. It is for this reason I appeal to you to reconsider the suggestion of taking over of MALCO. I know that it is a tall order. I am appealing to you in the interest of the industries that may come up in our State. Otherwise, it is going to be quite difficult. This action seemed to run contrary to the speech made in the National Development Council. I want to be frank. It seemed to go contrary. I do not want to take more of your time. I want to say only this.

Reference has been made to the power cut. I have been very much involved in the power cut. I want to say this. I was appointed Chairman of a Committee to go into the availability of power resources. Accusation has been made by political parties that they were withholding energy as if withholding energy is a



| 10 Wellington .. .. .. | 1,34,393·34 | 3,745 | 1,34,393·34 | 5,617·50 | 34,192·70 | 3,12,341·88 |
| 11 Midland .. .. .. | 1,46,535·73 | 3,655 | 1,46,535·73 | 5,482·50 | 32,024·10 | 3,34,233·06 |
| 12 Odeon .. .. .. | 1,09,169·31 | 3,760 | 1,07,569·31 | 5,640·00 | 25,404·35 | 2,51,542·97 |
| 13 Shanthi .. .. .. | 2,15,988·85 | 3,665 | 2,15,988·85 | 5,247·50 | 49,082·50 | 4,89,972·70 |
| 14 Devi .. .. .. | 2,74260·61 | 3,595 | 2,74,260·61 | 5,392·50 | 47,774·65 | 6,05,283·27 |
| 15 Deviparadise .. .. .. | 3,02,856·65 | 3,575 | 3,02,856·55 | 5,362·50 | 58,523·75 | 6,73,174·35 |
| 16 Devi Bala .. .. .. | 1,22,786·90 | 4,640 | 1,22,786·90 | 6,960·00 | 23,032·30 | 2,80,206·10 |
| 17 Other shows conducted by sabhas. | 9,485·04 | 145 | 10,061·44 | 217.50 | 2,271·20 | 22.180·18 |
| **Total** .. | 24,96,563·03 | 61,955 | 24,91,075·64 | 92,805·00 | 5,25,659·06 | 56,68,057·73 |

# ZONE VI.

## PROFORMA.

### 1971.

*Revenue realised during calendar year.*

| Name of the Cinema House. | T.N.E.T. ACT. Entt. Tax. | T.N.E.T. ACT. Show Tax. | T.N.L.A.F. ACT. S.C. on Entt. Tax. | T.N.L.A.F. ACT. S.C. on Show Tax. | |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (AMOUNT IN RUPEES.) | | |
| 1 Rajakumari .. .. .. | 1,66,319 | 5,740 | 1,66,319 | 8,973 | 3,47,351 |
| 2 Krishnaveni .. .. .. | 1,68,865 | 5,705 | 1,68,865 | 8,572 | 3,52,007 |
| 3 Sun .. .. .. .. | 1,05,530 | 5,485 | 1,05,530 | 8,228 | 2,24,773 |
| 4 Kamadhenu .. .. .. | 1,74,615 | 5,830 | 1,76,614 | 8,745 | 3,63,804 |
| 5 Pilot .. .. .. .. | 1,70,91[illegible] | 5,640 | 1,70,192 | 8,460 | 3,54,484 |
| 6 Kapali .. .. .. | 28,109 | 4,240 | 28,049 | 6,360 | 66,758 |
| Total .. | 8,13,630 | 32,640 | 8,13,569 | 49,338 | 17,09,177 |

### 1972 (up to 31st August 1972.)

*Revenue realised during calendar year*—cont.

| Name of the Cinema Houses. | T.N.E.T. ACT. Entt. Tax. | T.N.E.T. ACT. Show Tax. | T.N.L.A.F. ACT. S.C. on Entt. Tax. | T.N.L.A.F. ACT. S.C. on Show Tax. | T.N.L.A.F. ACT. Addl. S.C. on Entt. Tax. | Total. |
|---|---|---|---|---|---|---|
| | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | (AMOUNT IN RUPEES.) | | | |
| 1 Rajakumari .. .. .. | 1,18,501 | 3,705 | 1,17,511 | 5,556 | 19,654 | 2,64,927 |
| 2 Krishnaveni .. .. .. | 1,05,404 | 3,845 | 1,05,404 | 5,767 | 29,565 | 2,49,985 |
| 3 Sun .. .. .. | 68,126 | 3,695 | 69,126 | 5,543 | 19,153 | 1,64,643 |
| 4 Kamadhenu .. .. .. | 1,16,420 | 3,955 | 1,16,420 | 5,932 | 29,941 | 2,72,668 |
| 5 Pilot .. .. .. .. | 1,05,274 | 3,475 | 1,02,890 | 5,270 | 17,289 | 3,34,198 |
| 6 Kapali .. .. .. .. | 30,316 | 3,790 | 29,373 | 5,685 | 10,440 | 79,604 |
| Total .. | 5,44,041 | 22,465 | 6,39.724 | 33,753 | 1,26,042 | 13,66,025 |

## REVENUE REALISED DURING THE CALENDAR YEAR 1971 AND 1972 IN RESPECT OF MADRAS CITY THEATRES IN ZONE VII MADRAS FOR THE YEAR 1971.

| Name of the Cinema houses. | T.N.E.T. ACT, 1939. Entt. Tax. | T.N.E.T. ACT, 1939. Show Tax. | T.N.L.A.F. ACT, 1961. S.C. on E.T. | T.N.L.A.F. ACT, 1961. S.C. on show Tax. | Total. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | (AMOUT IN RUPEES) | | | |
| 1 Eros, Adyar .. .. .. | 26,524·94 | 5,765·00 | 26,524·94 | 8,010·00 | 66,824·88 |
| 2 Jayaraj, Saidapet .. .. | 89,541·78 | 5,620·00 | 89,541·78 | 8,180·00 | 1,92,883·56 |
| 3 Kamala, Vadapalani .. .. | .. | .. | .. | .. | .. |
| 4 Liberty, Kodambakkam .. | 1,21,385·78 | 5,770·00 | 1,19,217·33 | 8,490·00 | 2,55,863·11 |
| 5 Noorjahan, Saidapet .. .. | 1,35,749·58 | 5,770·00 | 1,25,749·58 | 8,325·00 | 2,85,594·16 |
| 6 National, W. Mambalam .. | 62,163·28 | 5,480·00 | 60,567·25 | 8,085·00 | 1,36,295·53 |
| 7 Ram, Vadapalani .. .. | 1,68,564·81 | 5,940·00 | 1,57,762·59 | 8,553·00 | 3,40,820·40 |
| 8 Srinivasa, W. Mambalam .. | 98,968·13 | 4,790·00 | 96,815·16 | 7,020·00 | 2,07,593·20 |
| Total .. | 7,02,898·50 | 39,135·00 | 6,86,178·63 | 56,663·00 | 14,84,874·93 |



| Name of the Cinema Houses. | T.N.E.T. Act, 1939. Entt. Tax. | T.N.E.T. Act, 1939. Show Tax. | T.N.L.A.F. Act, 1961. S.C. on Entt. Tax. | T.N.L.A.F. Act, 1961. S.C. on show Tax. | T.N.L.A.F. Act, 1961. Addl. S.C. on Entt. Tax. | Total. |
|---|---|---|---|---|---|---|
| | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | (AMONNT IN RUPEES.) | | | | |
| 1 Eros, Adyar .. .. .. | 20,212·00 | 3,890·00 | 20,211·94 | 5,540·00 | 5,422·15 | 56,276·05 |
| 2 Jayaraj, Saidapet .. .. | 60,416·91 | 3,785·00 | 60,416·91 | 5,677·00 | 18,323·25 | 1,48,619·07 |
| 3 Kamala, Vadapalani .. .. | 76,696·09 | 2,945·00 | 79,696·09 | 4,260·00 | 22,853·80 | 1,86,450·98 |
| 4 Liberty, Kodambakkam .. | 76,045·84 | 3,880·00 | 76,045·84 | 5,820·00 | 20,903·40 | 1,82,695·08 |
| 5 Noorjahan, Saidapet .. .. | 90,712·39 | 3,795·00 | 90,712·30 | 5,685·00 | 24,703·65 | 2,15,607·43 |
| 6 National, W.Mambalam .. | 42,340·09 | 3,690·00 | 42,342·34 | 5,535·00 | 15,169·95 | 1,09,077·88 |
| 7 Ram, Vadapalani .. .. | 83,021·74 | 3,795·00 | 85,504·83 | 5,355·00 | 25,744·40 | 2,03,420·97 |
| 8 Srinivasa, W. Mambalam .. | 83,227·96 | 3,845·00 | 89,666·04 | 6,167·50 | 23,004·00 | 2,05,910·50 |
| Total .. | 5,32,673·02 | 29,625·00 | 5,44,596·88 | 44,039·50 | 1,57,123·60 | 13,08,058·60 |

## இணைப்பு III.

[336-ம் பக்கத்தில் 22 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

(*a*) and (*b*) :—

A Statement is placed on the table of the House.

STATEMENT SHOWING THE NUMBER OF CASES FILED DISPOSED OF AND PENDING DURING THE LAST FIVE YEARS.

| Year. | Opening balance. | Receipt. | Total. | Number of cases disposed of. | Pending. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1967 | 342 | 185 | 527 | 194 | 333 |
| 1968 | 333 | 288 | 621 | 118 | 503 |
| 1969 | 503 | 181 | 684 | 404 | 280 |
| 1970 | 280 | 129 | 409 | 264 | 145 |
| 1971 | 145 | 132 | 277 | 157 | 120 |

# தமிழ்நாடு சட்ட மன்றம்

---

**வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 2.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. கெ. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Missing Revolver*

*156 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether revolvers in the Police Station at Adiaman-kottai in Dharmapuri district were missing in August 1971; and

(*b*) if so, the details thereof?

### காணாமல் போன சுழல் துப்பாக்கி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சுழல் துப்பாக்கிகள் காணாமற் போய் விட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) ஆம். தருமபுரி மாவட்டம் அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் 20—8—1971-ல் இருந்து 12 சுற்று குண்டுகளடங்கிய சுழல் துப்பாக்கி ஒன்றும், ரு. 4-ம் காணாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தச் சுழல் துப்பாக்கியும், வெடிக்கப் படாத 6 தோட்டாக்களும் 7—9—1971-ல் திருச்சி ரயில்வண்டி நிலையத்தில் பெங்களூரிலிருந்து அனுப்பப்பட்ட பழைய பயணச்சீட்டுகள் அடங்கிய கட்டில் சேர்ந்து காணப்பட்டன. இப்பொருள்கள் தருமபுரி துணை மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் கையடை செய்யப்பட்டுள்ளன. புலனாய்விற்குப் பிறகு குற்றவாளி தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு தருமபுரி துணை மாஜிஸ்ட்ரேட் முன்னனிலையில் அந்த நபர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கில் குற்றவாளிக்குத் தண்டனை தரப்பட்டது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, இந்த நிகழ்ச்சிகளுக்கும், நக்சலைட்டுகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த நிகழ்ச்சிக்கும் நக்சலைட்டுகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை,

*Southern Zonal Council*

* 157 Q.—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of times the Southern Zonal Council met during 1970-71; and

(*b*) the main decisions that were taken?

**தென் மண்டலக் குழு**

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தென் மண்டலக் குழு 1970-71 ஆம் ஆண்டில் எத்தனை தடவை கூடியது?

(இ) எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஒரு முறை கூடியது பெங்களூரில்.

(இ) மண்டலக்குழு ஒரு ஆலோசனை மன்றமேயாகும். மண்டலக்குழு பின்வருவன குறித்து விவாதித்துப் பரிவுரைகள் செய்யலாம்:—

(1) பொருளாதாரம், சமூக நலத்திட்டம் ஆகியவற்றில் அனைவருக்கும் அக்கறையுள்ள பொருள்.

(2) எல்லைத்தகராறுகள், சிறுபான்மை மொழியினர், அல்லது மாநிலங்களுக்கிடையேயான போக்குவரத்துகுறித்த பொருள்.

(3) மாநிலச் சீரமைப்புக்குத் தொடர்பான அல்லது மாநிலச் சீரமைப்பின் விளைவாக எழும் பிற பொருள்கள்.

மண்டலக் குழு கூட்டங்களில் செய்யப்படும் பரிந்துரைகள் 5 மாநிலங்களையும், மத்திய அரசையும் சார்ந்திருப்பதால், பொதுவாக அந்த முடிவுகளை வெளியிடுவது நலமாக இராது எனத் தீர்மானிக்கப்பட்டது.





திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, இந்த மண்டலக் குழு ஒருமுறை கூடியதென்று கேள்விப்படுகிறேன். அதற்குப் பிறகு கூடவேயில்லை என்று பொருள்படுகிறது. இதை அடிக்கடி கூட்டுவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டால், என்ன நன்மை கிடைக்குமென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நன்மைகள் கிடைக்குமென்று நம்பினால் அடிக்கடி கூட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகிறார்கள். அந்தக் கூட்டத்தில், 6 மாதத்திற்கு ஒருமுறை அதைக் கூட்டுவது நல்லது என்று தமிழ் நாடு அரசின் சார்பில் சொல்லப்பட்டதை பிரதமரவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை.

*Gazetted Headmasters*

* 158 Q.—Thiru M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any posts of Gazetted Headmasters of Government (Board) Secondary Schools;

(*b*) if so, the details thereof;

(*c*) whether any representations have been received from the Headmasters Association of Madurai, Ramanathapuram and Tirunelveli districts in this regard; and

(*d*) if so, the action taken thereon?

அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்கு அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகள் எதற்கும் அரசு அனுமதிப்பு வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இது குறித்து, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள தலைமை ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து முறையீடுகள் ஏதும் வந்ததா?

(எ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) கல்வித்துறையின் 20—2—1971 நாளிட்ட அரசாணை நிலை எண் 289-ல் 1000-க்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் பயிலும் பள்ளிகள் 80 அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அரசு ஆணையில், இந்த மாநிலம் முழுவதும் ஒரு யூனிட்டாகக் கருதப்பட்டு, 80 தலைமை ஆசிரியர்கள் "On the basis of seniority taking the State as a whole" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையில் இப்படி இருந்தும்கூட ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு யூனிட்டாக வைத்து, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் ஒருவர் அல்லது இருவருக்குத்தான் இந்தப் பதவி அளிக்கப்பட்டிருக்கிறதென்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மற்றைய துறைகளில் இப்படிப்பட்ட அரசிதழ் பதவிகள் வரும்போது, மாநில அளவில் பார்த்துக் கணக்கிடப்படுகிறது. ஆனால் இந்தக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரிகிறவர்களுக்கு மாவட்ட அளவில் கணக்கிடப்படுகிறது. மாநில அளவில் 1,000, 1,200, 1,500 மாணவர்களுக்கு மேற்பட்ட கழக உயர்நிலைப்பள்ளிகள் அதிகமில்லாத காரணத்தால், ஆசிரியர்கள் ஒரு இடத்திலிருப்பவர் மற்றொரு இடத்திற்குப் போக வேண்டிவரும். எனவே அதற்கு இசைந்திருப்பவர்களையும் மாற்ற வேண்டிவரும். மாநில அளவில் அவர்கள் மாற்றத்திற்குத் தயாராக இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டால், அந்த நிலைமையைக் கவனிக்கலாம்.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, what I am anxious to point out is that the G.O. itself says that the posts will be filled up, taking into consideration the seniority and merit of headmasters now working in all the Government Board Schools on a State Level basis. Now the anomaly is that a headmaster with 25 years of service in Ramanathapuram district does not get, while one with hardly 10 years of service in Salem or North Arcot district gets it. Is it not the duty of the Government to see to it that such disparities do not exist and for filling up such



Gazetted posts the State is taken as a unit, as has been categorically laid down in the Government Order which the Hon. Minister himself has referred to?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்கே என்னிடத்தில் தரப்பட்டுள்ள குறிப்புப்படி

"For all Gazetted posts in the Tamil Nadu State Service, seniority is generally reckoned on a State-wide basis. However, in the case of Gazetted posts of Headmasters of Government (Board) High Schools, the Government in concurrence with the TNPSC have decided to adopt Revenue district-wise seniority and to fill up the posts in each District from persons belonging to that District unit."

என்று தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷனோடு கலந்து கொண்ட பிறகு முடிவுக்கு வரப்பட்டதாகத் தெரிகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இதை அரசு மறுபடியும் புனராலோசனை செய்யுமாவென்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் ஒன்றிரண்டிக்கு மேல் இருக்க முடியாது. ஆகவே அந்த மாவட்டத்தில் எவ்வளவு அனுபவம் முதிர்ந்தவர்களாக இருந்தாலும், ஒருவர் இருவருக்குத்தான் கிடைக்கும். ஆனால் பிற மாவட்டங்களில் 10, 12 பதவிகள் கிடைக்கின்றன. எனவே இதை மறு பரிசிலனை செய்ய முடியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநில அளவில் கணக்கிடுகிறபோது, எல்லோரையும் சேர்த்துக் கணக்கிடலாம். அப்பொழுது அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாறுதல் பெற ஒத்துக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொண்டால், அதற்கான ஒரு முறையை வகுக்க அரசுக்குக் கஷ்டமிருக்காது. வேண்டியானால் ஆசிரியர்கள், மற்றவர்களோடு கலந்தாலோசித்து அத்தகைய முடிவை எடுக்கலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் கெஜட்டட் ஹெட்மாஸ்டர்களைப் போடுவதற்கு, குறைந்தபட்சம் ஒவ்வொரு பள்ளியிலும் இத்தனை மாணவர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அதற்குக் குறைவாக எத்தனை பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் என்றிருக்கிறது. அந்த வகையில் 80 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், வட ஆற்காடு மாவட்டத்தில் 1,000, 1,500 மாணவர்கள் கொண்ட பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. 7 அல்லது 8 பேர் இங்கே வருகிறார்கள். அங்கே ஒருவர்கூட வர முடியாத நிலையிருக்கிறது. மாநில அளவில் வைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் மாநில அளவில் மாறுதல் முதலியவைகளுக்குத் தயாராக இருக்க வேண்டும்.

Thiru M. Rajah Iyer rose.

MR. CHAIRMAN : The hon. Member is repeating the question. Let him give chance to other hon. Members.

THIRU M. RAJAH IYER : Yes, Sir.

**திரு. க. அறிவழகன் :** தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களை நியமிப்பதில் நேற்றைய தினம் கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆண்டுக்கணக்கை எடுத்துக்கொண்டு—10, 15 ஆண்டுகள் என்று எடுத்துக் கொண்டு—மற்ற கிராஜுவேட் ஆசிரியர்கட்கு தேர்வு பதவி கொடுக்கலாம் என்ற நிலைமை இருப்பதுபோல், தலைமை ஆசிரியர்களுக்கும், 10, 15 ஆண்டுகள் வேலை பார்த்தவர்களுக்கு அரசிதழ் பதவி—கெஜட்டட் ஹெட்மாஸ்டர்கள் என்று அறிவிக்கின்ற முறையை ஏற்படுத்த முடியுமா? இன்றைய தினத்தில் எல்லாத் தலைமை ஆசிரியர்களும் மற்றத் துறையில் இருக்கின்ற அலுவலர்களைப் போல் கெஜட்டட் பதவி சம்பளம் வாங்குகின்ற நிலை பெற்று விட்டார்கள். நாடு எங்கும் ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி கெஜட்டட் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், மற்ற கெஜட்டட் அலுவலர்களைப் போல் இவர்களும் சம்பளம் 4-10 பி.ப. பெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தால், இவர்களை கெஜட்டட பதவி உள்ளவர்கள் என்று அறிவித்து, அவர்களில் அதிக ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் செலக்ஷன் கிரேட் ஹெட்மாஸ்டர்கள் என்று அரசு அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன் . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** வினா நீளமாக இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பள்ளிகளுடைய மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் தலைமை ஆசிரியர்கள் எண்ணிக்கை அமையமுடியும். ஆக இத்தனை ஆண்டுகள் பணி



புரிந்தவர்களைத் தான் நியமிப்பது என்ற தன்மை வராது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அதிகமான மாணவர்களைப் போட வேண்டி வரும். இவைகள் எல்லாம் கொள்கை பற்றிய பிரச்சினையாக இருப்பதனாலும், நிதிப்பிரச்சினை அடங்கியிருக்கின்ற காரணத்தாலும், அத்தனையையும் ஒன்றாகப் பரிசீலிக்க வேண்டும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாவட்டக் கழகப் பள்ளிகள் அரசாங்கத்தினுடைய நேரடி நிர்வாகத்துக்கு வந்து பல ஆண்டுகளாகியும் மாவட்டக் கழகப் பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்களுக்கும் அல்லது தலைமை ஆசிரியர்களுக்கும் அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் ஏதோ ஒரு ஜாதி வேறுபாடு இருப்பது போல் இருக்கின்றது. இந்த இரண்டையும் தத்துவபூர்வமாக இணைத்து விடுவதற்கு அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றி நேற்று நான் விளக்கம் தந்தேன். 1966லிருந்து அரசாங்கப் பள்ளிகள் தனித்தனியாக இருந்து வந்தன. இந்த ஆசிரியர்களில் பலபேர் தலைமை ஆசிரியர் பதவியிலிருந்து தங்களுடைய பதவியை இழக்க வேண்டிவரும் என்ற காரணத்தால், 'பி' விங் என்று வைத்துக்கொண்டார்கள். ஆகவே அந்த இரு சாராரையும் கலந்துகொண்டு ஒரு ஒத்த முடிவுக்கு வருகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், ஒரே 'விங்' ஆக வைப்பது அரசுக்கு நல்லது கூட. நிர்வாகத்துக்கும் நல்லது. அவர்களுடைய நிலைமையை உத்தேசித்துத் தான் 'பி' விங் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த இரு சாராரையும் கலந்துகொண்டு ஒரு முடிவு எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இரு சாராரையும் கலந்து ஆலோசிக்கின்ற பணியில் கல்வி இயக்குநர் ஈடுபட்டிருக்கிறார்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, ஒரு பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கை 1,000 என்று விதித்திருக்கிறபோது, சில சந்தர்ப்பங்களில் 1,000-க்குச் சிறிது குறைந்து விட்டால், அந்தத் தலைமை ஆசிரியர்களுடைய சம்பளம் பாதிக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது பற்றி என்ன விதி என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரமாகக் கூற முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, அரசாங்க 'எ' விங், 'பி' விங் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபற்றி ஒரு முடிவுக்கு வர

கல்வி இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இந்தத் தேதிக்குள்ளாக முடியும் என்று தேதி குறிப்பிட்டுச் சொல்லி முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயலுவார்களா என்று அறிய விரும்புகிறேன். நீண்ட காலமாகப் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் ஒருவேளை நீண்ட காலம் ஆகும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது. அதை மாற்றி, ஒரு ஆண்டு, 6 மாதம் என்று காலவரையறை—சுதந்திரத்திற்கே கால வரையறை வைத்தார்கள்—ஏதாவது வைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கால வரையறை எதுவும் அறிவிக்க முடியாது. எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. அரசுக்கு நல்லது என்று எடுத்துச் சொன்னேன். கழக உயர்நிலைப்பள்ளிகளைச் சேராத வேறு அமைப்புகள் இருக்கின்றன. இரு சாராரில் ஒரு சிலர் விட்டுக் கொடுக்க வேண்டி வரும். அந்த மாதிரி நிலைமைகள் வருகின்றபோது தான், ஏற்கெனவே 1966-ல் சேர்ந்திருந்தாலும் 1970 வரை முடிவு எடுக்காமல் போனது. அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவை இப்போது மாற்ற வேண்டுமென்றால், அதில் கலந்துகொண்டு ஒரு ஒருமித்த முடிவுக்கு வந்தால், விரைவில் கூடி முடிவு எடுக்கமுடியும்.

THIRU G. VASANTHA PAI : Cannot the date of their entry into service be taken into consideration and 'A' and 'B' wings abolished, because it is an invidious distinction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத் தான் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டேன். அதனால் பல பேர் ஏற்கெனவே சர்க்கார் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியில் உள்ளவர்கள் கீழே இறங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 'ஏ' விங்கில் பல ஆண்டுக் காலம் பணி புரிந்தவர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுவும் பெரும்பாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கம் பள்ளிகளாகவே தொடர்ந்து இருந்துவந்த காரணத்தால், 13, 14 ஆண்டுக் காலம் பயிற்சி புரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக வரவேண்டிய நிலைமை ஏற்படும். அந்தச் சிக்கலை ஒரே அளவுக்குத் தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்த இணக்கமான பிரச்சினையில் இப்போது எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் தலைமை ஆசிரியர்கள் என்று நினைக்கிறார்கள். மற்ற பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கையில் ஒரு காலத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இப்போது அவர்கள் இணைத்துக்கொள்ளலாம் என்று வந்திருக்கிறார்கள். என்னுடைய யோசனை ஒரு



நாளைக் குறிப்பிட்டு அதற்குப் பின்னால் இனி வருகின்ற தலைமை ஆசிரியர்கள் பதவிகளைத் தான் இந்த இணைப்பு பாதிக்கும். இது வரை தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்களை இது பாதிக்காது என்று வைத்துவிட்டால், இந்தப் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடும். ஒரு தேதியைக் குறிப்பிட்டு, பின்னால் வரக்கூடிய ஆசிரியர்களைத் தான் இது பாதிக்கும் என்று வைத்துவிட்டால் பிரச்சினைக்குச் சுலபமாகத் தீர்வுகாண முடியும் என்று நினைக்கிறேன். . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த அளவில் தான் இனிமேல் புதிதாக வருகின்ற உயர்நிலைப் பள்ளிகளை எல்லாம் 'பி' விங் பள்ளி என்று ஆக்கியிருந்தோம். அவற்றை 'பி' விங் பள்ளிகள் ஆக்குவதில் ஒரு சங்கடம் இருக்கிறது. ஆகவே தான் தலைமை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். தலைமை ஆசிரியர்கள் தனித்தனியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதனால் நான் மூன்று சாராரையும் கூட்டி வைத்துப் பேசவேண்டுமென்று சொல்லுகிறேன். .

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இப்போது பட்டதாரி ஆசிரியர்கள் 'ஏ' விங், 'பி' விங் என்ற இரண்டையும் சேர்ப்பதில் தான் பிரச்சினை இருக்கிறது. மற்றபடி ஆசிரியர்களுக்குப் பிரச்சினை இல்லை. இப்போது 'பி' பிரிவில் இருக்கின்ற பள்ளிகளில் குறைந்த ஊதிய காலம் புரபேஷன் 'டிக்ளேர்' செய்யப்பட்ட தலைமை ஆசிரியர்களுடைய ஊதிய காலத்தை எடுத்து, 'ஏ' விங்கில் அதே ஊதிய காலத்தில் இருக்கின்ற பி.டி. ஆசிரியர்களுக்கும், 'பி' விங்கில் இருக்கிற மற்ற பி. டி. ஆசிரியர்களுக்கும் ஒரு அடிப்படையில் சம்பளத்தை நிர்ணயித்து, அதிலே ஒரு செலக்ஷன் கிரேடு கொடுப்பதன் மூலம் தான் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அதற்குக் கூப்பிட்டு ஆலோசனை கேட்க வேண்டும். இந்த ஆலோசனையை மேற்கொண்டால், 'கம்பிளீட் இன்டக்ரேஷன்' வருவதற்குச் சாதகமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கூப்பிட்டு வைத்துப் பேசும் முறையில், இந்த ஆலோசனையை எடுத்துச்சொல்லி, ஒரு ஒருமித்த முடிவுக்கு வந்து ஒரு அறிக்கை தந்தால், அதன்படி நடக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : இந்த இரு சாராரிடமும் ஒரு ஒப்புதல் ஏற்படவில்லை என்றால் அவர்களுக்கு, டி. ஈ. ஓ., சி. ஈ. ஓ. போன்ற பதவி புரமோஷன் கொடுத்து டைரக்டர் அளவுக்கு ஒரு விங் வைப்பதற்கு அரசு யோசனை செய்யுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த இரண்டையும் இணைப்பது ஆகாது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : எதையும் 'நெகட்டிவ்' ஆக யோசனை பண்ண வேண்டாம். 'பாசிட்டிவ்' ஆக யோசனை பண்ண வேண்டும். ஆகா விட்டால் அப்புறம் பார்ப்போம்.

*Teachers with Post-Graduate Degrees.*

*159 Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of teachers serving in the 'B' Wing of High Schools, who have secured Post-Graduate Degrees, viz., M.A. and M.Sc.;

(b) among them, the number of persons who have applied to colleges through the Department and got themselves appointed; and

(c) whether steps will be taken to provide employment in colleges to those who remain unselected even though they have applied for the same?

மேற் பட்டப்படிப்பு பெற்ற ஆசிரியர்கள்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் 'பி' பிரிவில் பணியாற்றும் ஆசிரியர்கள் மேல் படிப்புப் படித்து தேர்வு எழுதி எம். ஏ., எம்.எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் உள்ளனர் ?

(இ) இவர்களில் கல்லூரிகளுக்கு இலாக்கா மூலம் விண்ணப்பித்து பதவி பெற்றோர்கள் எவ்வளவு ?

(உ) விண்ணப்பித்து, இதுவரையில் பதவி பெறாத, மீதமுள்ளவர்களுக்கும் கல்லூரிகளில் வேலை கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 475 பேர்கள்.

(இ) 39 பேர்கள்.

(உ) கல்லூரிகளில் பதவிகள் காலியாயிருப்பதைப் பொருத்தும் அப்பதவிகளுக்கேற்ப பாடங்களில் தகுதி பெற்றுள்ளதைப் பொருத்தும் விண்ணப்பதாரர்களை அவ்வப்போது தேவைக்கேற்ப தற்காலிக நியமனத்திற்காக தேர்வு செய்யப்படுகிறது.



திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரிகளில் 'அப்பாயின்ட்மென்ட்' ஆகும்போது எம். ஏ. (லிட்டரேச்சர்) படித்தவர்கள் இருக்கும்போது பி. ஏ. படித்தவர்களை 'அப்பாயின்ட்' செய்திருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் மட்டும் துளகம்பட்டியில் இரண்டு பேர் எம். ஏ. (லிட்டரேச்சர்) படித்தவர்கள் இருக்கும்போது, பி.ஏ. படித்தவர்களைக் கல்லூரியில் 'அப்பாயின்ட்' செய்திருக்கிறார்கள். உடனடியாக இல்லையென்று கல்லூரியில் பி.ஏ. (லிட்டரேச்சர்) படித்தவர்களைப் போட்டிருக்கும் போது எம்.ஏ. (லிட்டரேச்சர்) படித்தவர்களைப் பயன்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்தத் தனிப்பட்ட பிரச்சினையில் எந்த முடிவு எடுக்க வேண்டுமென்று தெரியவில்லை. தனியாகக் கவனத்துக்குக் கொண்டுவந்தால், எந்த விவர அடிப்படையில் அவர்கள் எடுக்கப்படவில்லை, மற்றவர்கள் எடுக்கப்பட்டார்கள் என்று கூற முடியும். விண்ணப்பிக்கின்ற அளவில் தற்காலிகப் பதவிகள் என்று ஏற்படுத்தி வருகிறார்கள். தேர்வு ஆணைக் குழுவுக்குப் பிறகு சென்று அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமை பெறுகிறார்கள்.

THIRU D. SANTOSHAM : Hon. Chairman, Sir, I would like to know whether the B.T. Teachers with Post-Graduate qualifications are treated without any distinction when selected for appointment in Colleges. I understand that 'B' Wing teachers with Post-Graduate qualifications who have been recently appointed in College service have been appointed under rule 10 (a) (i), whereas 'A' Wing teachers with the same qualifications have been appointed under rule 39 (a) (i) treating them as promotees. Will this discrimination be rectified by the Hon. Minister ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 'ஏ' விங்கில் இருப்பவர்கள் நேரடியாக எடுத்துக்கொள்ளப்படுகிறார்களா என்று தெரியவில்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால், இரண்டுக்கும் காரணங்களை ஆராய்ந்து சொல்ல முடியும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏ-விங்கில் பணியாற்றுகிறவர்கள் டைரக்டர் அலுவலகம் மூலமாகவும், ஸ்கூல் எஜுகேஷன் மூலமாகவும் விண்ணப்பித்து எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். பி-விங்கில் இருக்கிறவர்கள் டைரக்டர் மூலம் அப்ளிகேஷன் அனுப்பி எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஏ-விங்கில் இருப்பவர்கள் அரசுத் துறையில் இருந்த காரணத்தால், அவர்களுக்கு

சர்வீஸ் கமிஷன் தேர்வு இல்லையென்றும் பி-விங்கில் இருப்பவர்கள் முழுத் தகுதியிருந்தும் அரசுத் துறையில் இல்லையென்ற காரணத்தால், சர்வீஸ் கமிஷனுக்குச் செல்ல வேண்டிய நிலைமையும் இருக்கிறது. இந்த பி-விங் என்ற நிலையில் இருப்பவர்கள் நிலைமையை அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதன் முழு விவரத்தையும் சொல்ல முடியும். பொதுவாக அவர்கள் ஏ. விங்கில் இருக்கும்போது முதலில் தேர்வு ஆணைக்குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பி-விங்கில் இருப்பவர்கள் தேர்வு ஆணைக்குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தனிக் கேள்வி போட்டால், அதன் விவரத்தைச் சொல்லுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: கல்லூரிகளிலே டியூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் போஸ்டுகளுக்கு போஸ்ட் கிராஜுவேட் குவாலிபிகேஷன் தான் தேவை. பி.ஏ., பி.எஸ்.ஸி.க்களை எடுக்கக்கூடாது என்று சமீபத்தில் அரசு உத்தரவிட்டதாக அறிகிறேன். அப்படி உத்தரவு இருக்கிறதா? அப்படி இருந்தும் பி.ஏ., பி.எஸ்.சி. க்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றனரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எம். ஏ., எம்.எஸ்.ஸி., பட்டதாரிகளைத்தான், மேற்படிப்புப் படித்தவர்களைத்தான் எடுக்க வேண்டுமென்று இப்போது இருக்கின்றது. ஏதாவது குறிப்பிட்ட ஒரு துறைக்கு எம். ஏ., எம். எஸ். ஸி. படித்தவர்கள் இல்லை என்ற நிலை ஏற்படுகின்ற காலத்தில், பி.ஏ. பர்ஸ்டு கிளாஸ், பி.எஸ்.ஸி. பர்ஸ்டு கிளாஸ், செகண்ட் கிளாஸ் ஆக இருப்பவர்கள் அதிலே யாரும் கிடைக்கவில்லை என்ற நிலைமை வரும் போது, இவர்களை டெமான்ஸ்ரேட்டராகப் போடலாம் என்று இருக்கின்றது.

## *Promotion of Grade II School Assistants*

* 160 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of School Assistants Grade II promoted as Grade I School Assistants under Rule 39 (a) (i) of the Tamil Nadu State and Subordinate Service Rules, during 1971–72;

(b) whether their previous services are taken into account; and

(c) if so, in what manner?



## இரண்டாம் நிலை பள்ளி ஆசிரியர்கள் பதவி உயர்வு

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72-ல் தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சார் நிலைப் பணியாளர் பணி விதிகளின் 39 (a) (1) விதியின் கீழ் II நிலை பள்ளி ஆசிரியர்கள் எத்தனை பேர் I நிலை பள்ளி ஆசிரியர்களாகப் பதவியுயர்த்தப் பட்டனர்?

(இ) அவர்களது முந்தைய பணிக் கால அளவுகள் கணக்கில் கொள்ளப் படுகின்றனவா?

(உ) ஆமெனில், எந்த முறையில் அவை கணக்கில் கொள்ளப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. சந்தோஷம்: தலைவரவர்களே, முன்பெல்லாம் இப்படி செகண்ட் கிரேட் அசிஸ்டெண்டுக்கு, புரோமோஷனுக்கு என்று ஒரு சரியான பர்சென்டேஜ் ஒதுக்கி வைக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் சமீப காலத்தில்தான் அது விடப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால், மீண்டும் அந்தப் பழைய முறையை அரசு மீண்டும் கொண்டுவருவதன் மூலம் அவர்களுக்கு நீதி வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்கள் கேள்வி கேட்டபடி, 1971-72-லே யாரும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. ஆனால் அதை அடுத்து 136 பேர்கள் அந்த வகையிலே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

THIRU D. SANTOSHAM: Sir, my question is whether a certain percentage of Grade I posts would be reserved for promotees?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து தெரிவிக்கிறேன்.

### *Hostels for Government Arts Colleges*

*161 Q.—THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have taken any step to construct hostels for the Muthurangam Government Arts College and Wallajah Anna Arts College for Women, North Arcot District; and

(b) if so, when the work will be taken up for execution?

### அரசினர் கலைக் கல்லூரிகளுக்கு விடுதிகள்

*திரு. என். வில்சன் அப்பலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:*

*(அ) வட ஆற்காடு மாவட்டம் முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி, வாலாஜா அண்ணா பெண்கள் கலைக்கல்லூரி, இவைகளுக்கு விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*(இ) ஆமெனில், எப்போது வேலை துவங்கப்படும்?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) குறிப்பிட்ட இரண்டு கல்லூரிகளுக்கும் விடுதிகட்டிடம் கட்ட அரசு ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.*

### *Fee Grant for the Pre-University Students*

*162 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been received from the Private College Managements Association that the fee grant for the Pre-University students should be given uniformly for all colleges; and

(b) if so, the action taken thereon?



### புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு கட்டண மானியம்

*திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:*

*(அ) தனியார் கல்லூரி நிர்வாகிகள் சங்க சார்பில் புகுமுக வகுப்பு மாணவர்க்காக அளிக்கும், கட்டண மான்யம் எல்லா கல்லூரிகளுக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளதா?*

*(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.*

*(இ) இதனை ஏற்றுக்கொண்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*

### *Promotions to Selection Grade Posts*

*163. Q.—THIRU D. SANTOSHAM: (on behalf of Thiru A. R. DAMODARAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether promotions to selection grade among B.T. Assistants in Government (Board) High Schools are made strictly in accordance with seniority in South Arcot District;

(b) whether there has been any deviation; and

(c) if so, the reasons therefor?

### தேர்வு தரப் பதவி உயர்வு

*திரு. டி. சந்தோஷம் (திரு. ஏ. ஆர். தாமோதரன் சார்பில்): மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசு (B) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி.டி. பட்டதாரி ஆசிரியர்களிடையே தேர்வு தரப் பதவி உயர்வு அவர்களுடைய பணி முதுநிலையையொட்டியே தரப்படுகின்றதா?*

*(இ) இந்த விதியிலிருந்து பிறழ்ந்து எந்த நேர்விலேனும் சலுகை தரப்பட்டுள்ளதா?*

*(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தேர்வுநிலை பதவிகளுக்கு தகுதி முதுநிலை என்ற கொள்கை அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்தத் தேர்வு நிலை பற்றிய ஒரு கோரிக்கையும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால், இந்த நேரத்தில் 7 ஆண்டுகள் வேலை செய்தவர்களுக்கு, தேர்வு நிலை என்று கொடுத்துவிட்டால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான பண நஷ்டமும் ஏற்படாது. நிதிப் பிரச்சினையே எழுவதில்லை. ஏனென்றால் 7 ஆண்டுகள் அவர்கள் பணி செய்துவிட்டால், அவர்கள் சம்பளம் ரூ. 450 வாங்குகிறார்கள். ஆனால் செலக்‌ஷன் கிரேட் என்றால் ரூ. 400-ல் தொடங்குகின்றது. இதனால் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நிதிப் பிரச்சினையும் இல்லை. ஆகவே அதே நேரத்தில் 7 ஆண்டுகள் பணி செய்த பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை என்பதை அரசாங்கம் அறிவித்துவிடலாம். அதை அறிவிக்க அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றித்தான் நான் ஆராய்ந்து கல்வி மான்யக் கோரிக்கை வரும்போது, முடிவான முடிவைத் தெரிவிக்கின்றேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

## *Shift System in High Schools.*

* 164 *Q.*—Thavathiru Kundrakkudi Adigalar : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with Government to introduce shift system in High schools ; and

(*b*) if so, whether there is any proposal with the Govern-ment to provide for industrial training for the students during the rest of the day ?



## உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு வேளைப்படிப்பு நடைமுறைத் திட்டம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு வேளைப் படிப்பு நடைமுறைத்திட்டம் கொண்டு வருவது பற்றிய செயல் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

(இ) ஆமெனில், மற்ற வேளையில் மாணவர்கள் தொழிற் பயிற்சி பெற ஏற்பாடு செய்வது பற்றி அரசுக்குத் திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இம்மாதிரி செயல் திட்டம் தற்போது ஏதும் அரசிடம் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, அப்படி ஒரு எண்ணமாவது அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எண்ணம் இருக்கின்றது. அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தருவார்களேயானால், காலை 7½ மணிக்கு பள்ளியைத் துவக்கி 12 மணி, 1 மணி அளவுக்கு முடித்துவிட்டு, அவர்கள் வேறு தொழில் பார்க்கவோ, வேறு தொழில் பயிற்சி பெறவோ வாய்ப்பு ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், அதற்கான முயற்சிகளைச் செய்யலாம். அதற்காக 'ஷிப்ட் சிஸ்டம்' -ல் தான் அனுமதி அளிக்கப்பட்டு ரொம்ப நெருக்கடி இருக்கின்ற சென்னை போன்ற நகரங்களில் இரண்டு ஷிப்ட் இந்த முறைக்குப் பயன்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியதைப் போன்று, ஒரு வேளை படித்துவிட்டு வேறு ஏதேனும் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்றுதான் இருக்கிறோம். அதற்கு வருவார்களேயானால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ராஜாஜி அவர்களுடைய காலத்திலே இது மாதிரி ஒரு ஷிப்ட் சிஸ்டம் கொண்டுவந்தார்கள். அதற்கும் இப்போது பேசியதற்கும் வேறுபாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்போது சொல்லப்பட்டது ஒரு வேளை படிப்பு, ஒரு வேளை தங்களுடைய சொந்தத் தொழில் என்பது. இப்போது முழு வேளைப் படிப்பிலே ஏதும் குறைவு ஏற்படாமல் ஒரு பகுதி நேரத்தில் கற்றுக்கொண்டுவிட்டு, பிறகு அவர்கள் விரும்பிய வேலைகள் செய்வதற்கு ஏதாவது வாய்ப்பு அளிக்க முடியுமா என்பது தான் கேள்வி.

## Accommodation for Kalaignar Karunanidhi Government Arts College, Salem.

* 165 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether it is fact that students belonging to Kalaignar Karunanidhi Government Arts College, Salem are being taught at Salem Government College for want of even temporary accommodation; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

### கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரிக்கு இடவசதி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்காலிக இடவசதி கூட கிடைக்காத காரணத்தால் சேலம், கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களுக்கு, சேலம் அரசினர் கல்லூரியில் பாடம் கற்பிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசால் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ)-வும், (இ)-யும்: இக் கல்வியாண்டுத் துவக்கத்தில் சேலத்திலுள்ள கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரியின் வகுப்புகள், சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் நடைபெற்று வந்தன. ஆனால் 18—9—1972 லிருந்து சேலம் மாவட்ட ஆட்சியாளரால் கொடுக்கப்பட்ட 'புத்துணர்வு கலைமன்றம்' என்ற கட்டிடத்தில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: ஆரம்பத்தில் எத்தனை மணி நேரம் ஒரு நாளைக்கு வகுப்புகள் நடைபெற்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவ்வளவு மணி நேரம் என்று குறிப்பிடவில்லை. இதற்கு என்று ஒரு தனிக் கட்டிடம் ஏற்படுகின்ற வரையில், சேலம் கல்லூரியிலே ஒரு பகுதியிலே இதனுடைய வகுப்புகள் எல்லாம் நடத்தப்பட்டன. 'புத்துணர்வு கலை மன்றம்' என்ற ஒரு கட்டிடத்தில், அதில் தங்கியிருந்த வேறு ஒருவரை அனுப்பிய பிறகு, இப்போது கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ரூ. 9 லட்சம் செலவில் இப்போது கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. 1973 ஆம் ஆண்டின் துவக்கத்தில் இந்தக் கல்லூரி இந்தப் புதிய கட்டிடத்திற்கு நகரக்கூடும்.



திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தப் புதிய கட்டிடத்தில் எல்லா வகுப்புகளும் ஒரு நாளில் எல்லா மணி நேரமும் சேர்ந்து நடைபெற்று வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் குறைந்த மணி நேர அளவுக்குத்தான் நடத்துகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரங்கூட வகுப்புக்கள் நடத்த முடியவில்லை என்றும் சொன்னார்கள். இந்தக் கட்டிடத்திலே எல்லா மாணவர்களுக்கும் வேண்டிய வசதி இருக்கின்றதா? ஒரு நாளைக்கு 4 மணி, 5 மணி நேரமாவது மற்றக் கல்லூரிகளில் நடைபெறுவது போல. இந்தக் கல்லூரியில் நடைபெற வசதிகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய குறைபாடு, விண்ணப்பம் அரசுக்கு வரவில்லை. வந்தால் அது பற்றிய விவரங்கள் அறிந்து சொல்லப்படும்.

## Prices of Government Text Books

* 166 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have increased the prices of the Text-books by 200 per cent when compared with the prices prevailing last year;

(b) if so, the reason therefor; and

(c) the profit and loss accounts of the Government Text-book Committee for the financial years 1970–71 and 1971–72?

### அரசுப் பாடப் புத்தகங்களின் கிரயம்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு பாடப் புத்தகங்களின் கிரயத்தைக் கடந்த ஆண்டைவிட இரு மடங்கு உயர்த்தியுள்ளதா?

(இ) ஆமெனில், காரணமென்ன?

(உ) அரசுப் பாடப்புத்தக நிறுவனத்தின் 1970-71, 1971-72 நிதி வருடங்களுக்கான லாப நஷ்டமென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1972-73-க்கான புதிய பாடத் திட்டத்தின்படி இயற்றப்பட்ட 1-5 வகுப்புகளுக்குரிய தமிழ்ப் பாடநூல்களின் விலை மட்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) இவ்வாண்டு 1 முதல் 5-வது வகுப்பு வரையுள்ள தமிழ்ப் புத்தகங்கள் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டன. சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு புத்தகங்கள் அளவில் பெரியன. அச்சிடப் பட்ட புத்தகங்களின் தாள் உயர்தரமானது. புத்தகத்தின் முகப்பு அட்டையும், பாடத்தின் விளக்கப்படங்களும் பயிலும் சிறுவர்களின் ஆவலைத் தூண்டும் வண்ணம் பல நிறங்களில் அச்சிடப்பட்டுள்ளன. இக்காரணங்களால் அப்பாடப் புத்தகங்களின் அடக்கவிலை கூடியதால் விற்பனை விலையையும் உயர்த்த வேண்டியதாயிற்று.

(உ) 1970-71 நிதி வருட லாபம் சுமார் 17 லட்சம். 1971-72-க்கான கணக்கு தணிக்கையில் இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, அரசு சார்பிலே வெளியிடப்படும் பாடப் புத்தகங்களை "நோ லாஸ் நோ பிராபிட் பேஸிஸ்" ( No loss-no profit )-ல் வெளியிடுவது அரசின் கொள்கை என்று அறிவிக்கப்பட்டது என்று எனக்கு நினைவு இருக்கிறது. அந்தக் கொள்கையை அரசு மாற்றிக்கொண்டதா? 17 லட்சம் ரூபாய் லாபம் வந்ததாகச் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். அந்தக் கொள்கை மாற்றப்பட்டதா அல்லது அது பின்பற்றப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நிறுவனமே கடனும் முன் பணமும் வாங்கித்தான் நடந்து வருகின்றது. கடனை ரூ. 75 லட்சமும், முன் பணமாக ரூ. 23,83,000-ம் பெற்றிருக்கின்றது. மொத்தம் 98,83,000 கடன், முன் பணம் ஆகியவற்றைச் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு வந்த தொகையே வருகின்ற ஆண்டுக்கும் அதற்கும் அடுத்த ஆண்டுக்கும் வருமா என்பது தெரியாத காரணத்தால் தனிப்பட்ட புத்தகங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இது ஓரளவுக்கு குறைதான். சென்ற ஆண்டிலே ஒரு கலரிலே, 'பிளாக் அண்டு ஒயிட்'-லே மட்டும் போட்டு அட்டையிலே எவ்விதமான வண்ணங்களும் இல்லாமலே ஓரளவுக்குப் போடப்பட்டிருந்தது. ஆகவே அந்தக் கணக்கெல்லாம் பார்த்து ரூ. 17 லட்சம் வந்தாலும்கூட, இது கல்வித் துறையினுடைய பணிகளுக்கு மட்டுமே செலவழிக்கப்பட வேண்டுமென்று மட்டும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதில் வருகின்ற லாபத்தையெல்லாம் வேறு எந்தத் துறைக்கும் செலவழிக்க



முடியாது. ஆகவே, 1972–73-ல் மதிய உணவு பெறுகின்ற மாணவர்களுக்கு 1, 2, 3 வது வகுப்புகள் வரையிலும் படிக்கின்ற மாணவர்களுக்கான புத்தகங்கள் அத்தனையும் இலவசமாகத் தருகின்ற வகையில இந்த நிதியிலிருந்து 15 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பல பணிகளைச் செய்வதற்கு இந்த லாபத் தொகை பயன்படுத்தப்படுகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : 1972-ம் ஆண்டிலே 17 லட்சம் ரூபாய் லாபம் பெறப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது புத்தகங்கள் குறைவான விலையில் கொடுப்பதற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்றும் கூறினார்கள். இந்த ரூ. 17 லட்சத்தில் ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த ரூ. 17 லட்சத்திலிருந்துதான் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அது தவிர, கடனைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைக்கவும் வட்டி கட்டிக்கொண்டு வருவதற்கான சூழ்நிலையும் ஏற்கப்படுகின்றது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் புத்தகங்களை இந்த நிறுவனம் வெளியிடும்போது 'காண்ட்ராக்ட்' ஆக பல கம்பெனிகளுக்குத் தருகிறார்கள். சில நேரங்களில் புத்தகங்களின் வெளி அட்டைப் பகுதி மிக அழகான முறையிலே இருக்கின்றது. அச்சிடும்போது சில கம்பெனிகள் சரியான அடிப்படையில் அச்சடிக்காமல் கொடுத்திருக்கின்றார்கள். அதில் விரைவிலே அரசு கவனம் செலுத்தி, சரியான முறையிலே அச்சிடுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது நாம் விரைவாகக் கிடைப்பதற்காக, எப்ரல் மே இறுதிக்குள்ளாக எல்லாப் புத்தகங்களும் வெளிவர வேண்டுமென்று கூறியதன் காரணமாக, 50, 60 கம்பெனிகளுக்கு, அதனுடைய தார தம்மியங்களைப் பொறுத்து, பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கூடுமான வரையில் அதனுடைய அட்டை மற்றவைகள் எல்லாம் கவனிக்கப்படுகின்றன. எந்த ஒரு கம்பெனியிலும் கவனிக்கப்படாமல் சரியாக இல்லையென்றால், அது உடனே மாற்றப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இப்போது மின்சார வெட்டின் காரணமாகக் கூட, மேற்கொண்டு 20 கம்பெனிகளுக்கு விரைவிலே அச்சடித்துத்தர வேண்டுமென்ற முறையிலே அவர்களுக்குத் தனியாக வழங்கப்பட்டிருக்கின்றது. அரசாங்க அச்சகத்திலே அச்சடிப்பதற்கு போதுமான நேரம் இல்லை. அது மட்டுமல்லாமல், தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்படுவதன் மூலமாக ஓரளவுக்கு இந்தப் புத்தகக் குழுவிற்கு லாபம் இருக்கிறது. ஆனால் அதிக

நாட்கள் எடுக்கப்பட்டன. ஆகவேதான் 60 கம்பெனிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பெரும்பாலான கம்பெனிகள் நல்ல முறையில் இருக்கின்றன. ஒன்றிரண்டு சரியாக இல்லாது இருக்குமானால், அதை மாற்ற வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கின்றது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு ரூபாய் விற்பனையில் இந்த ரூ. 17 லட்சம் லாபம் கிடைத்தது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய மொத்தத் தன்மைகள் தெரியவில்லை. கிட்டத்தட்ட 2 கோடி புத்தகங்களுக்கு மேல் நாம் வெளியிடுகிறோம். தனிக் கேள்வி போட்டால், அதனுடைய முழு விவரம் தருகிறோம்.

திரு. டீ. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசுத் துறையிலே எடுத்து அச்சடித்து வருகிற இந்தப் புத்தகங்கள் மிக நல்ல முறையிலே இருக்கின்றன என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்கள். அரசுத் துறையிலே நடத்துகின்ற நிறுவனங்கள் லாபகரமாக நடக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் இங்கு இருக்கிறது. அந்த முறையில் சிறப்பாக லாபமும் வந்திருக்கின்றது. இன்னும் அதிக லாபம் வரக்கூடிய அளவிலே அமைச்சர் அவர்கள் முயலுவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதே புத்தகங்களை தனியார் கம்பெனிகள் வெளியிடுவதாக இருந்தால், நாம் எண்பது காசுக்குக் கொடுப்பதை அவர்கள் ரூ. 1-50 அல்லது ரூ. 1-75-க்கு விற்பார்கள். அந்த அளவுக்கு அதில் பக்கங்கள் கூடுதல் படுத்தி, அளவை இரண்டு மடங்காக்கியிருக்கிறோம். அப்படிச் செய்தால், அதிகமாக லாபமும் எடுக்க முடியும். குழந்தைகளுக்கு எளிதில் புரியும் வண்ணம் நான்கு வண்ணங்களில் முகப்பு அட்டைகள் போடப்பட்டிருக்கின்றன. உள்ளேயிருக்கின்ற படங்கள் எல்லாம் மூன்று, நான்கு வண்ணங்களில் போடப்பட்டிருக்கின்றன. மற்றவர்கள் விற்கக்கூடிய அளவுக்கு விற்றால், இன்னும் அதிக லாபம் வரும். உறுப்பினர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால், இன்னும் லாபத்தை அதிகரிக்க இயலும்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, இந்த அரசுப் புத்தகங்களை வாங்கி விற்கின்றவர்கள் தாலுக்காவிற்கு ஏறக்குறைய ஒருவர் என்று இருக்கின்ற காரணத்தால், பள்ளிகளுக்குப் புத்தகங்கள் குறித்த நேரத்தில் கிடைக்கவில்லை. அதையே தலைமை ஆசிரியர்கள் வாங்கி விற்பதற்கு அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை, செங்கற்பட்டைப் பொறுத்த வரையில், அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். மற்ற இடங்களில் ஹோல்சேல் ஏஜண்டுகளுக்கு பத்து சதவீதம் கமிஷன் கொடுக்கப்படுகிறது. அதிலே அவர்கள் சப்-ஏஜண்டுகளுக்கு ஐந்து சதவீதம் கொடுக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பள்ளி ஆசிரியர்கள் அவர்களிடமிருந்து பணம் கட்டி வாங்கிக்கொண்டு பயனடையலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, பள்ளிகளில் மாணவர்களுக்காக மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டங்களுக்கும் தாலுக்காக்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஏஜண்டுகளிடமிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுக்கொள்ளலாம். தனியார் பெறுகின்ற அந்த ஐந்து சதவீதம் கழிவை அந்தச் சங்கங்கள் பெறலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, பள்ளிகளுக்குப் பயன்படுகின்ற காரணத்தால், ஹோல்சேல் ஏஜண்டுகளுக்குக் கொடுக்கின்ற அந்த 10 சதவீதம் பள்ளிகளுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளும் நேரடியாகப் பெறுவது என்ற முறை வந்தாலும், சில பள்ளிகள் பெற்றுக்கொள்ளக்கூடும், சில பள்ளிகள் அந்த வசதி இல்லாத நிலைமையில் இருக்கும். ஆகையினால் ஒரு ஏஜண்டு ஏற்படுத்தவேண்டிய அவசியம் இருக்கிறது. ஹோல்சேல் ஏஜண்டுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். சென்னை-செங்கற்பட்டைப் பொறுத்த வரையில், இப்பொழுது நேரடியாகப் பெற்றுக் கொள்ள வசதி இருக்கிறது. அங்கு இப்பொழுது அரசாங்கம் விற்பனைக்கூடம் அமைத்து, விற்பனை செய்ய வசதி இருக்கிறது. அதை மேலும் விரிவு படுத்தலாமா என்ற எண்ணமும் இருக்கிறது. நடைமுறையில் ஏற்படக்கூடிய பல வசதிகளையும் பொறுத்து அது ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## Statutory Board for Polytechnic

* 167 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the All India Technical Education Council has requested the State Government to set up a Statutory Board for Polytechnic in this State; and

(b) If so, the action taken thereon ?

### பல்தொழில் நுட்பக் கல்விக்கு சட்டப்படிக்கான வாரியம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் பல்தொழில் நுட்பக் கல்விக்காக சட்டப்படிக்கான வாரியம் ஒன்றை ஏற்படுத்தும்படி அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகம் இம்மாநில அரசைக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு மாதிரிச் சட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் இப்பிரச்சினை பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான பாலிடெக்னிக் பள்ளிக்கூடங்களையெல்லாம் ஒரு வாரியம் அமைத்து அதன் கீழ் கொண்டுவரப்படுமானால், தனியார் துறையில் உள்ளனவும் சேர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு வாரியம் அமைப்பதாக இருந்தால் இவைகளும் அதிலுள்ளடக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றித்தான் மத்திய அரசு ஒரு மாதிரிச் சட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டம் வந்த பிறகு, அதில் எந்த அளவுக்குப் பரிந்துரை இருக்கிறது என்பதைப் பார்த்து நடைமுறைப் படுத்தப்படும்.



திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, டெக்னிகல் அதாவது தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த ஒரு குறிப்பு இருக்கிறது. அப்படி ஏற்படுமேயானால், இந்த பாலிடெக்னிக்குகளும் அதிலே சேர்க்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று மூன்று நான்கு ஆண்டுகளாகவே தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். அது மத்திய சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது. அடுத்த ஆண்டு துவக்கத்திலாவது இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் வர வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். அப்படி வந்தால், அந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் இந்தப் பாலிடெக்னிக்குகள், தொழில் சம்பந்தப்பட்ட கல்வித் துறைப் பள்ளிகள் எல்லாவற்றையும் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டுவந்த பிறகு, இப்படி ஒரு வாரியம் வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்யலாம். மாதிரிச் சட்டத்தை மத்திய அரசு தயாரித்துக்கொண்டிருக்கிறது.

## National Highways

* 168 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the basis on which the roads were selected for being recommended to be classified as National Highways?

### தேசிய நெடுஞ்சாலைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேசிய நெடுஞ்சாலைகள் என்று வகைப்படுத்தப்படலாம் எனப் பரிந்துரை செய்யப்படுவதற்கு எந்த அடிப்படையில் சாலைகள் தெரிந்தெடுக்கப்படுகின்றன ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Government of India have laid down the following criteria for classification of roads as National Highways :—

(i) The road should be a main highway running through the length and breadth of the country ;

(ii) it should connect major ports and large industrial or tourist centres;

(iii) it should connect capitals of States;

(iv) it should connect foreign highways; and

(v) it should meet strategic requirements.

While agreeing to the above criteria, the Planning Commission suggested that in the choice of additions to the National Highways system, emphasis should be placed on economic considerations also. While endorsing these criteria, recently, the Steering Group on Roads for the Fifth Five-Year Plan suggested some further aspects to be kept in view, while considering proposals for new additions to the National Highways system as indicated below :—

(i) They should be roads which open up backward or underdeveloped areas as also roads which serve economic needs.

(ii) Roads which will reduce travel distance, especially between capitals of States.

(iii) Roads which would provide facilities to isolated areas.

THIRU V. ISVARMURTI : Sir, I would like to know the names of the Roads recommended by the State Government to the Central Government and the names of the roads that have been accepted by the Central Government for classification as National Highways.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, proposals were sent to the Government of India for upgrading the following roads in the State as National Highways :—

Nagapattinam–Thanjavur– Tiruchirappalli –Coimbatore–Ooty–Gudalur– Mysore border.

Cuddalore–Vridhachalam–Salem Road.

Madurai–Cochin Road.

Palayamkottai–Tuticorin Road.

East Coast Road.

Cuddalore–Chittoor Road.

Thiruvannamalai–Krishnagiri Road.

Vaniambadi–Tirupathur–Dharmapuri Road.

Tiruppur–Mettur–Bhavani Road.

Ulundurpet–Salem Road.



Madurai–Tenkasi–Quilon Road.

Tirunelveli–Shencottah Road.

Madurai–Tuticorin Road.

Dindigul–Palani–Udumalpet–Pollachi–Coimbatore Road.

Madurai – Ammayanaickanur – Ganguvarpatti – Kodaikanal Road.

But the Government of India have so far upgraded only Palayamcottai–Tuticorin Road as National Highways.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government press for the East Coast Road at an early date?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, the Government have been pressing very often. But, unfortunately, the Government of India have not accepted it.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, how many miles are covered by the Highways in Tamil Nadu?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I do not have the particulars now. The hon. Member may put a separate question.

MR. CHAIRMAN : No 'miles' now. Only 'kilometres'.

### *Sri Srivilliputhur Andal Temple*

* 169 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any team of engineers of the Government has examined the Tower of Sri Srivilliputhur Andal Temple; and

(*b*) if so, the details thereof?

### *ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில்*

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலின் கோபுரத்தை அரசின பொறியாளர்கள் குழு ஒன்று ஆய்வு செய்ததா?*

*(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த பத்து லட்சம் ரூபாய் திட்டம் மாநில அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அ[illegible]ரப்பின் வருவாய்ப் பணத்திலிருந்தும், அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்தும் செய்யப்படுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, இந்தக் கோபுரவேலைத் திட்டத்திற்கு கிராவுட்டிங் இன்ஜின்கள் பெறுவதிலே தாமதம் ஏற்படுகிறது. பொதுப் பணித் துறை அதிகாரிகள் அந்த வேலையைப் பூர்த்தி பண்ணுவதற்கு அந்த இன்ஜின்களைச் சீக்கிரம் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பத்து லட்சம் ரூபாய் நிதி போதுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி வேலையைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே பொதுப் பணித் துறையில் ஒரு அஸிஸ்டெண்ட் இன்ஜினியர், இரண்டு ஜூனியர் இன்ஜினியர்கள், அதற்குத் தேவைப்படும் பணியாளர்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வேலையைத் தொடங்குவதற்கு முன்னால் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், நானும் நேரடியாக அந்தக் கோவிலைச் சுற்றிப் பார்த்து வந்தோம். அப்பொழுது பொதுப் பணித் துறை அதிகாரிகளும் கூட இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கூட இருந்து அப்பொழுது அதைப்பற்றிப் பேசினார். மேலும் அந்தப் பணியைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டாள் கோயில் திருப்பணி வேகமாக நடைபெறாத காரணத்தால், கடந்த 4 ஆண்டுக் காலமாக திருவில்லிப்புத்தூரிலே மழையில்லையென்று குறைப்படுகிறார்கள். ஆகவே, இந்தக் குறையை நீக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 482–484 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, இன்னும் வெகு வேகமாக இந்தப் பணியினைச் செய்ய வேண்டுமானால், பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது. திருவில்லிப்புத்தூர் வட்டாரத்திலே மழைகுறைவாக இருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறைப்பட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மற்ற வட்டாரங்களில் அதிக மழைபெய்து செழித்திருப்பதால், அந்தப் பகுதியிலிருந்து பணம் வசூல் செய்து தருவார்களேயானால், அந்தப் பணியை விரைவில் முடிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** ஸ்ரீவில்லிப்புத்தூர் முன்பு வசதியாக இருந்ததாக ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். இப்போது தான் கெட்டுப் போய்விட்டது.

வருவாரம் [illegible] நாடு வாழியே
வண்புதுவை நகர் கோதை [illegible] பதங்கள் வாழியவே
ஆண்டாள் வாழி, [illegible] வாழி சடகோபன் தண்டமிழ் வாழி
கடல் சூழ்ந்த மன்னுலகம் வாழி
மணவாள மாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும்.

இப்போது என்னமோ, திரு. கிருஷ்ணசாமி நாயுடு, பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

**2. 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.**

MR. CHAIRMAN : Now the general discussion on the Budget will be resumed. Thiru R. Krishnaswamy Naidu will continue his speech.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய பேச்சின் இறுதியிலே ஆப்ரஹாம் லிங்கன் அவர்களின் அறிவுரைகளை நான் சொன்னேன். அந்த அறிவுரைகளை நான் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இந்த அறிவுரைகளை தக்கவாறு பாடப் புத்தகங்களிலும், மற்றும் ஆசிரியர்களுக்கான புத்தகங்களிலும் அச்சிடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1973-74-ம் ஆண்டுக்காக 97 கோடி ரூபாய் கல்விக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலமைச்சர் அவர்களுடைய பிரசங்கத்திலே 1966-67-ம் ஆண்டுடன் இதை ஒப்பிட்டு, அந்த ஆண்டிலே 44 கோடி ரூபாய் கல்விக்கென 1966-67-ல் ஒதுக்கப்பட்டது என்றும், 1973-74-ல் அதிகத் தொகை 97 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி இரண்டையும் ஒப்பிடுவது பொருத்தமாக இருக்குமா என யோசிக்க வேண்டுகிறேன். அன்று வருமானம் 194 கோடி ரூபாய். அன்று வருமானத்தில் 4½-ல் ஒரு பங்கு 44 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால், இன்று வருமானம் 465 கோடி ரூபாய். இதிலே 97 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுகூட இந்த விகிதாச்சாரத்திலே 4½-ல் ஒரு பங்கு என்ற அளவிலே தான் வருகிறது. ஆகையினாலே அன்று 4½-ல் 1-ம் இன்று மொத்த வருமானத்தில் 4¾-ல் ஒரு பங்கும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 1966-67, 1973-74-க்கு ஒதுக்கப்பட்ட தொகைகளுக்குள்ளே எந்தவித வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இதை ஒரு சாதனையாகக் கொள்வதற்கில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். நாராயணசாமி தலைமை)

கல்வி சீர்திருத்தம் சம்பந்தமாக அறிஞர்களும், வல்லுநர்களும், நிபுணர்களும் பல ஆண்டுக்காலமாக நம்முடைய நாடு முழுவதும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப் பேசுவதில் தான் காலம் கடந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு மாநில அரசிற்கு கல்வித் துறையில் சில அறிவுரைகளை, யோசனைகளைச் சொல்கிறது. ஆகவே, இதில் மாநில அரசு ஒரு நல்ல முடிவெடுத்து அதன் மூலம் நாட்டுக்கு ஒரு நல்லது ஏற்பட ஒரு பொறுப்பேற்றுக்கொண்டு, அதிலே துரிதமாக ஆர்வத்தோடு காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்விச் சீர்திருத்தம் காலம் கடந்து போகாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறைக்கு என இப்போது ஆண்டுதோறும் செலவழிக்கிற தொகை அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதிகமாவதை, அதிகமில்லை என்று சொல்வதாக இருந்தாலும்கூட, காவல் துறைக்கு பொது மக்கள் மத்தியிலும், மற்றவர்கள் மத்தியிலும் இருந்துவந்த ஒரு மதிப்பீடு கடந்த சில வருடமாக குறைந்துகொண்டே வருவதைப் பார்க்கிறபோது, மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இன்றைக்கு அவர்களின் செயல்களை மதிப்பாரே இல்லை யென்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு பொதுமக்களிடம் ஒரு 'அந்து' இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. இதை யோசித்துப் பார்க்க



வேண்டும். அவர்கள் உசிதம்போல, சட்டப்படி வேலை செய்ய அவர்களுக்கு நிறைய குறுக்கீடுகள் இருக்கின்றதென்பதைச் சொல்லித் தெரிவித்துக்கொள்ள வேண்டியதில்லை. அதை இந்தச் சந்தர்ப்பத்திலே பலபேர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேள்வி எழுந்தால், அதற்கு நான் பதில் சொல்ல முடியும். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் போலீஸ் துறைக்கு பல வருடங்களுக்கு முன்னால் இருந்த அந்த மதிப்பினை, கௌரவத்தை அவர்கள் பெறக் கூடிய வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

டௌன் நியூஸன்ஸ் ஆக்ட் சம்பந்தமாக நேற்று இங்கே கேள்வி கேட்கப்பட்டது. அதிலே உப-விதிகள் தயாரிக்கப்படவில்லை என்று கூடச் சொல்லப்பட்டது. இன்றைக்கு இந்த டௌன் நியூஸன்ஸ் ஆக்ட் அமுலில் இருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னாலே ஒரு 15 நிமிட நேரத்தில் 37 சைக்கிள்கள் போயின. அவைகளில் 2 சைக்கிள்கள் தவிர மற்ற எல்லாமே 'லைட்' இல்லாமலே போயின. அதிலே ஒன்று கூட என் மீதே மோதியும் விட்டது. இதுபற்றி நான் அங்கே உள்ளவர்களிடம் கூடத் தகவல் சொல்லியிருக்கிறேன். ஆனால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இது வரை தெரியவில்லை.

புலவர் ஓ. அறிவுடை நம்பி: மறு முறையும் மோதியதா? ஏனென்று பி.ப. 4-05
கேட்டால் உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இல்லை. ஏற்கெனவே நடந்ததைத்தான் திரும்பச் சொல்கிறேன். அங்கே, ஜில்லா டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்திற்கு போலீஸ்காரர்களும் வருகிறார்கள்; எஸ்.பி.-யும் வருகிறார். துணை போலீஸ் அதிகாரிகளும் வருகிறார்கள். கலெக்டரின் முன்னால் வைத்து இதை அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இப்படி போலீஸ்காரர்கள் செயல்படாத நிலையில் அவர்கள் செயலிழந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் அதற்கு இது வரை பரிகாரமில்லை. ஆகவே இதைப்பற்றிக் கவனிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை வளர்ச்சிக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை சென்ற ஆண்டை விட 186 லட்ச ரூபாய் குறைந்திருக்கிறது. இது குறைந்திருந்தாலும், அவசியம் ஏற்பட்டால், அரசு அதை உயர்த்தலாம் என்பதில் சந்தேகமில்லை.

தொழில்களுக்கு மின்சாரம் கொடுப்பதிலும் சப்ஸிடி கொடுக்கப்படுகிறது. அது போன்று விவசாயத்துக்கு இணைப்புக் கொடுத்ததன் மூலமாக 14 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. எப்படி

பி.ப. 4-50 தொழில் துறையிலே சப்சிடி கொடுக்கப்படுகிறதோ அதே போல விவசாயத் துறைக்கும் அதை விஸ்தரித்து மற்ற தொழில்களைப் போலத் தான் விவசாயத்தையும் கருத வேண்டுமே தவிர, இதனால் மின்சாரத் துறைக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று கருத வேண்டியதில்லை என்பது என்னுடைய கருத்து. அதைப்பற்றியும் அரசு ஆலோசிக்க வேண்டும். மின்சார வெட்டின் விளைவாக ஏற்பட்டிருக்கிற கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதை விவரித்து இங்கே நேரத்தை வீணடிக்க வேண்டிய அவசியமில்லை. அதன் மூலமாக அதிகக் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக கரும்பு, வாழை, மிளகாய், நீண்ட இழைப் பருத்தி, இரண்டாம் போக நெல் இவைகளின் மூலமாக விவசாயிகளுக்கு வரவேண்டிய வருவாயைப் பெறுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் ஆயில் எஞ்சின்கள் வாங்க வேண்டுமென்று சொல்லி பல இடங்களிலும் அலைந்து 3,000 ரூபாய், 2,500 ரூபாய் பெறுமானமுள்ள எஞ்சின்களை 4,000 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள். சில இடங்களில் பழைய எஞ்சின்களை அது ஓடுமா, அதை ஓட்ட முடியுமா, அது தகுதி உடையதா என்றுகூடத் தெரியாமல், அதிகப்படியான விலை கொடுத்து வாங்கியும்கூட, அவர்களுக்கு அதை ஓட்டுவதற்கு டீசல் ஆயில் கிடைப்பதில்லை.

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதில் "எங்களுக்கு டீசல் ஆயில் கிடைக்கவில்லை, டீசல் ஆயிலுக்காக டின்களைத் தெருவிலே தூக்கிக்கொண்டு விவசாயிகள் அலைகிற நிலை இருக்கிறது" என்று அவர்கள் கூறுகிறார்கள். இப்போது மின்சாரம் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துவருவதாகத் தெரிகிறது. அதே போல மின்சாரம் கிடைக்கிற வரையில் காத்துக் கொண்டிராமல் விவசாயிகளுக்கு டீசல் ஆயில் கிடைக்கச் செய்வதற்கு அரசு முனைந்து அதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய வில்லையானால், விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சில வருஷங்களிலே ஏற்பட்ட கஷ்டத்தினால் கடன்கள் உயர்ந்து விட்டன. உரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. இப்போது விவசாயத்துக்கு சில மணி நேரம், இவ்வளவு மணி நேரம் என்று ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எந்த ஊரிலே பார்த்தாலும்கூட, குறிப்பிட்ட நேரத்தில், அந்த மணி அளவிலே மின்சாரம் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்களே தவிர, மின்சாரம் கிடைக்கவில்லையென்று புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இது அவர்களுக்கு மிகமிகக் கஷ்டத்தைத் தருவதாகும் ஆகவே இதை நன்கு



சிந்தித்து அந்தந்த ஸ்தலங்களிலே உள்ள மின்சார வாரிய அதிகாரிகள் அதிலே கண்ணும் கருத்துமாக இருந்து குறிப்பிட்ட பகுதிகளிலே ஒவ்வொரு பகுதிக்கும் மின்சாரம் ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியமும் அரசு அதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினாலும், வறட்சி ஏற்பட்ட காரணத்தினாலும், அந்த வறட்சி ஏற்பட்ட பகுதிகளிலே அதற்காக அரசு வேண்டிய நிவாரணம் அளிக்க முன்வர வேண்டும். அரசு கொடுத்துள்ள கடன்கள், நிலவள வங்கி, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுத்துள்ள கடன்களை அவர்கள் திருப்பித் தருவதிலே அவர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருப்பதால், அவர்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகளை பின் வருஷங்களில் அபராத வட்டியின்றி செலுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இது மிக மிக அவசியமாகும். அதுதான் தர்மம் ஆகும். கோர்ட் அந்தக் கடன்களை வசூலிப்பதற்காக டிக்ரி உட்பட, ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளில் கள், சாராயம் போன்ற மது பானங்கள் விற்கவே கூடாது என்று தடை செய்ய வேண்டும். இதன் காரணமாக பற்றாக்குறை, வறட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளிலே மதுபானக் கடைகளை தற்காலிகமாகவாவது இல்லாமல் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி சம்பந்தப்பட்ட வரையில் அரசு போதிய முயற்சி எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு 10 கோடி ரூபாய்க்கு அதிகமாக கைத்தறித் துணிகளை கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1966-67-ல் 3 கோடியே 75 லட்சம் ரூபாய்க்குத் தான் கொள்முதல் செய்யப்பட்டதாகவும் இப்போது 8 கோடியே 10 லட்சம் ரூபாய்க்குக் கொள்முதல் செய்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. 1966-67-இலும் இப்போது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகும் உள்ள வித்தியாசத்தை ஒவ்வொரு துறையிலும் எடுத்துக்காட்டுவது முறையாகாது. இப்போது கூட கல்வி, சுகாதாரம் முதலிய துறைகளில் 1966-67-ஐ ஒப்பிட்டுப் பேசுவது அவசியமில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படி இருந்தாலும் கூட 1966-67-ல் கொள்முதல் செய்யப்பட்ட துணியின் நீள அகலத்தை இப்போது கொள்முதல் செய்வதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பணம் தான் அதிகமாகிறதே தவிர, துணியின் அளவு ஒன்றாகத்தான் இருக்கும்.

இப்போதுகூட சந்தானம் குழு என்ற ஒரு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவின் ஆலோசனைகள் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்றன. அதன் படி அவர்களுக்குத் துரிதமாக நிவாரண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு தறிக்கும் குறைந்த பட்சம் இவ்வளவு நூல் தேவைப்படுகிறது என்று நமக்குத் தெரிகிறது. அவ்வாறு அவர்களுக்குத் தேவையான நூலைக் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி ஒரு நல்ல முடிவு ஏற்பட வேண்டும். இது டெக்ஸ்டைல் கமிஷனருடைய அதிகாரத்தின் கீழ் இருப்பதாக பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட தமிழ் நாட்டிலே உள்ள 13 கூட்டுறவு நூற்பாலைகள் இந்த நூல் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே அமைக்கப்பட்ட ஆலைகள். அந்த ஆலைகளிலே கூட நூற்ற நூல்களிலே இத்தனை சதவிகிதம் தான் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்டு பாக்கி நூலை மார்க்கெட்டிலே பிறருக்குக் கொடுக்கும் நிலை அமுலில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த அரசு எப்படி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று புரியவில்லை. கைத்தறி நெசவாளர்களின் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் யோசிக்க வேண்டும். அவர்களுக்கு நூல் கொடுப்பதிலே இந்தக் கஷ்டம் இருப்பது சரியல்ல. அதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சந்தானம் கமிட்டியின் யோசனைகளைப் பரிசீலிக்க வேண்டும். கூட்டுறவுத் துறையிலே சந்தானம் கமிட்டி, நூற்றுக் கணக்கான சிபாரிசுகள், 3 அறிக்கைப் புத்தகங்கள் 2, 3 தடவை சமர்ப்பித்திருக்கும்போது, அதிலே சரியாகச் செயல்படாமலிருப்பதைப்போல் இதுவும் இருந்துவிடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலை வாய்ப்புகள் சம்பந்தமாக பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்று நமது முதலமைச்சர் உரையிலே காணப்படுகிறது. செலவிடும் பணம் அவ்வப்போது வேலை இல்லாத காலத்தில் அதைத் தன்னக்கட்டுவதற்காக தற்காலிகமான பரிகாரமாக குறைந்துவிடக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை இல்லாதவர்களுக்கு எதிர்காலத்தில் நிரந்தரமான பரிகாரம் காண்பதற்கான அஸ்திவாரமாக அந்தச் செலவினங்கள் அமைய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதை அரசு சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை ஒரு ஜில்லாவாக அமையப்போகிறது என்பதைப்பற்றி நாம் எல்லோரும் சந்தோஷப்படுகிறோம். ஜில்லா புனரமைப்பு விஷயமாக இத்தகைய யோசனைகள் முன்பும் இருந்தன. மத்திய அரசு ஜில்லா புனரமைப்புபற்றி தமிழ் நாட்டின் கருத்தைக் கேட்டிருந்தது. அதற்காக ஏற்பட்ட குழுவில் நானும் ஒரு அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அப்போது எப்படி அமைப்பது என்று சொல்லி அதற்கான யோசனைகளைத் தெரிவித்திருக்கிறோம்.



அந்த முடிவுகள் என்னவாயிற்று என்பது தெரியவில்லை. புதுக்கோட்டையை பி.ப.
எப்படி ஒரு ஜில்லாவாக அமைக்கிறோமோ அதே போல மற்ற ஜில்லாக்களையும் 5-00
அதனதன் நிலைமையிலே நிர்வாகத்துக்குச் சவுகரியமாக அமைக்கலாம் என்று எல்லோருக்கும் ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே தொடர்ந்து மற்ற ஜில்லாக்களையும் புனரமைப்புக்கான சீர்திருத்தத்துக்காக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். பக்கிங்காம் கால்வாய் சம்பந்தப்பட்டமட்டில், அரசு தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன். அப்படி எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் நல்ல பலனை அளிக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். கூவம் சீர்திருத்தம் சம்பந்தமாக, அதில் இருக்கக்கூடிய கஷ்டங்களை நிவர்த்தி செய்திருந்தாலும், எடுத்த முயற்சிகளில் பல குறைகள் சொல்லப்பட்டன. அவை சரியா, தப்பா என்பது ஒருபுறமிருக்க, நாம் அவைகளை நன்றாகக் கண்காணிக்க வேண்டும். பக்கிங்காம் கால்வாய் வேலைகளையும் நல்ல முறையில் நிர்வகிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் மின்சாரத் நிறுவனங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்வது பொருத்தம்தான். அதே போன்று முனிசிபல் மின் நிறுவனங்கள் சில இருக்கின்றன. அதுபற்றி அரசினுடைய கருத்து என்னவென்று தெரியவில்லை. முனிசிபாலிடிகள் தனியாக நடத்திக்கொண்டிருக்கின்றன. அதனுடைய முடிவு என்ன? அதற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். சமீப காலத்தில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில், மின் வாரியத்தில் உள்ள ஊழியர்களில், 16 000 பேர்களுக்கு வேலையில்லை என்றும், 24,000 பேர்களுக்கு தினம் ஒன்றுக்கு 2 அல்லது 3 மணி நேரம்தான் வேலையிருக்கிறதென்றும் சில நிபுணர்கள். . . .

VICE-CHAIRMAN (THIRU S. NARAYANASWAMY): The hon. Member may finish his speech in two or three minutes.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: நிபுணர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். அதுபற்றியும் அரசு ஆலோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட விடுதிகளைப் பற்றிய விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். அதை நன்கு கவனிக்கவேண்டும். அதனுடைய சுற்றுப்புற சுகாதாரச் சூழ்நிலை நன்றாக இல்லை. அங்கு ஈக்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே எருமை

மாடுகள் கூட வருகின்றன, ஹாஸ்டலுக்குப் பின்புறம் கேண்டீன்கள் இருக்கின்றன. கேண்டீன்களைச் சுற்றியுள்ள ஆபாசங்கள் சொல்லத் தரமில்லை, தெருக்களில் சுண்ணாம்பு போடுவார்கள். அதுகூட அங்கே போடுவதில்லை. அத்தகைய நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்த இரண்டு கேண்டீன்களிலும் வேலை செய்பவர்கள் நூறு பேர் இருக்கிறார்கள். ஒவ்வொரு கேண்டீனுக்கும் ஒரு 'பாத்ரூம்', ஒரு 'லெட்ரின்' தான் இருக்கிறது. அது போதவில்லை. விடுதிக்கு முன்புறம் ஒரு பாத்ரூம், லெட்ரின் கிச்சனுக்கு முன்னால் உள்ளதால் மிகுந்த அசுத்தம் ஏற்படுகிறதென்று, அந்த பாத்ரூமையும், லெட்ரினையும் மூடிவிட்டார்கள். சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கிறதென்று அதை மூடிவிட்டார்கள். அது இப்போது ஸ்டோர் ரூமாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால் அந்த கேண்டீனிலுள்ள பாத்ரூமுக்கும், லெட்ரினுக்கும் மற்றவர்களெல்லாம் செல்கிறார்கள். எனவே இதைப்பற்றி யோசிக்க வேண்டும். சீக்கிரமாக இதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட நிர்வாகம் முறையானதும், திருப்திகரமாகவும் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிர்வாகத்தைச் சரிவர இயங்கச் செய்ய வேண்டும். நல்ல, அழகான கட்டிடங்களை, வசதிகளோடு கட்டியும், சுகாதாரக் கேடுகள் அங்கு நீடித்திருப்பது சரியல்ல. அதுபற்றி யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது சம்பந்தமாக ஒவ்வொரு குறையையும்பற்றிச் சொல்ல நேரம் அதிகமாகும். 'ஹவுஸ் கமிட்டி' என்று ஒன்று இருக்கிறது. இது இந்த யோசனைகளையெல்லாம் சொல்லலாம் என்றாலும்கூட, அது சொல்லும் யோசனைகளை சம்பந்தப்பட்ட இலாகாக்கள் கவனத்தில் கொள்கிறதா என்பதைப் பற்றி நானே சந்தேகப்படுகிறேன். அதுபற்றி அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சரவர்கள் முடிவுரையிலே, எந்தகைய முன்னேற்றகரமான காரியங்களைச் செய்வதிலேயும், ஆதிக்கபுரியின் எதிர்ப்பையும், மற்ற நடைமுறைகளையும் கவனித்து நாம் காரியங்களைச் செய்துகொண்டு போக வேண்டியிருக்கிறதென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆதிக்கபுரியின் எதிர்ப்பு என்பது, பல காலமாக அனுபவித்துக்கொண்டு வந்தவர்களுடைய எதிர்ப்பு. அது இருந்துகொண்டுதான் இருக்கும். இராது என்று நினைக்கக்கூடாது. அவர்களும் இந்த நாட்டில் வாழக்கூடியவர்கள்தான். அத்தகைய மனப்பான்மை உள்ளவர்கள் திருந்திக்கொள்வார்கள். நாம் அவர்கள் சொல்லும் நியாயத்தையும் கவனித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயகம் என்பதில்கூட சர்வாதிகாரம் வரும். சோஷலிச அரசாங்கம் கூட சர்வாதிகார அரசாங்கமாக ஏற்பட்டுவிடலாம். எல்லாத் தொழில்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டாலும், நடைமுறையில் அது ஒரு சோஷலிச சர்வாதிகாரமாக ஆகி



விடக்கூடாது. முதலமைச்சரவர்கள் கூறியது போல, நாம் எடுத்துக்கொண்டுள்ள காரியங்களைச் செய்யும்போது, வேறுவிதமான சர்வாதிகாரம் அதில் நுழைந்துவிடாமல், மிக ஜாக்கிரதையாகக் கவனித்துச் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அடிப்படைக் கொள்கைகளில் கருத்து வேறுபாடின்றி, பிரத்யட்ச நடைமுறைகள் குறித்த கருத்து வேற்றுமைகளில் எதிர்ப்பு வந்தால், வியப்பு அடையும் விரோதக் கலைகள் என்றும், முற்போக்கு, பிற்போக்கு என்று திசை திருப்புவதும் சரியல்ல என்று மத்திய, மாநில அரசுகளுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கும் கூட இந்தப் பேச்சுக்கள் அடிக்கடி வருகின்றன. இப்படிப்பட்ட பொதுப்படையான பிரச்சினைகளிலே கருத்து வேறுபாடுகள் வரும்போது, உடனே வாயை அடக்க, முற்போக்கு, பிற்போக்கு என்பதை ராமபாணமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகளோ, அபிப்பிராயங்களோ எதன் அடிப்படையில் எழுகின்றன என்பதைப்பற்றி யோசித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதை மனதிலே கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. எஸ். டி. ஆதித்யன்: தலைவரவர்களே, இன்று தமிழ் நாட்டிலே எல்லா இடத்திலும் பரவலாகப் பேசப்பட்டு வருவதும், எல்லோருடைய கவனத்தை ஈர்த்துக்கொண்டு வருவதும் இந்த மின் வெட்டுப் பிரச்சினைதான். மின்வெட்டு சம்பந்தமாக பல பேர் பலவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள், நானும் அதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விழைகிறேன். நமக்குக் கிட்டதட்ட 2,000 மெகாவாட் அளவிலே உற்பத்தி சாதனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 2,000 மெகாவாட்டிலே 600 மெகாவாட்டை நாம் நெய்வேலியிலிருந்து நம்பிக்கொண்டிருக்கிறோம். நெய்வேலி சம்பந்தப்பட்ட மட்டில், நாம் சொல்லிக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அது நம் கையில் இல்லை, இந்த மாநில அரசின் கையில் இல்லை என்பதுதான். நெய்வேலியிலிருந்து நாம் மின்சாரத்தை விலைக்கு வாங்குகிறோம். மின்சாரத்தை அவர்கள் விலைக்குத் தருகிறார்கள். மின்சாரத்தைத் தயாரித்து அவர்கள் விற்கிறார்கள். ஆகவே அவர்கள் செய்வது இரண்டு வேலைகள், ஒன்று நிலக்கரியைத் தோண்டி எடுப்பது; இன்னொன்று அதிலிருந்து மின்சாரத்தை தயார் செய்வது. அப்படித் தயாரிக்கும் மின்சாரத்தை நாம் விலைக்கு வாங்குகிறோம். இப்படி 600 மெகாவாட் தயாரிக்க வேண்டியதற்குப் பதிலாக, அவர்களுடைய கேபாசிடி, அவர்களுடைய திறன் 450-க்கு மேல் எட்டிப்பிடித்ததாகத் தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து 50 மெகாவாட் அளவுக்குக்கூட வந்திருக்கிறது. இப்போது திடீரென்று கொஞ்சம் அதிகமாகக்

கொடுக்கப்பட்டிருக்கிறது. 350 மெகாவாட் வரை கொடுத்ததாகத் தெரிகிறது. 300 மெகாவாட் திட்டமாகக் கொடுக்கிறார்கள். இன்று உயர்த்திக் கொடுக்கும் சக்தி இருக்கும்பட்சத்தில், ஏன் அதை கொஞ்ச நாளைக்கு முன்னால் கொடுத்திருக்கக்கூடாது என்ற கேள்வி எழுகிறது. நீங்கள் ஏன் ஞாபகப்படுத்தவில்லையென்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு ஒரு தாசில்தார் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் தினமும் காலை 10 மணிக்கு வருகிறார். 5 மணி வரையில் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிவிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அதை தினமும் பங்கா இழுப்பவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். பைல்கள் மலை போல், குவிந்து விட்டது. பிறகு தாசில்தார் அந்த பங்கா இழுப்பவனைக் கூப்பிட்டு, "ஏண்டா, என்னை எழுப்பவில்லை, உன்மேல் தான் தப்பு என்று குற்றச்சாட்டை சுமத்தி, சஸ்பெண்டு பண்ணுகிறேன், டிஸ்மிஸ் பண்ணுகிறேன்" என்று சொன்னால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது இது. இங்கிருந்து மத்திய அரசாங்கத்திற்குச் சென்றவர்கள் "நீங்கள் ஏன் எங்களுக்கு ஞாபகப்படுத்தவில்லை" என்கிறார்கள். "இன்னொரு சுரங்கம் வெட்டுவதற்கு 8 வருடங்களுக்கு முன்பு ஞாபகப்படுத்தி இருக்க வேண்டாமா" என்று இன்று மத்திய அரசாங்கத்திற்குச் சென்றவர்கள் சொல்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. நமக்குள்ளே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கலாம். நமக்குள்ளே பேசிக்கொண்டிருப்பதிலும் ஒரு விஷயம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கடிதத்தை வாசித்துக் காட்டினார்கள். 'தேவையில்லை' என்று பதில் வருகிறது. நல்லவேளை, இப்போதாவது ஞாபகப்படுத்தினீர்களே என்று பதில் இல்லை. ஞாபகப்படுத்தினால் நாங்கள் செய்திருப்போம் என்று பதில் இல்லை. தேவையில்லை என்று பதில் வருகிறது. இதை 1972-ல் எழுதியிருந்தாலும் அந்தப் பதில் தான் வந்திருக்கும். அதற்கு முன்னால் எழுதியிருந்தாலும் அந்தப் பதில்தான் வந்திருக்கும். அவர்கள் கொடுக்கத் தேவையில்லை என்று கருதியிருந்திருப்பார்கள், எந்த வருஷம் என்ற கேள்வி எழவேயில்லை.

நம்முடைய அமைச்சர்கள் அடிக்கடி பதில் சொல்லுவது போல்—'அ' தேவையில்லை, 'இ' இந்தக் கேள்வி எழவில்லை—ஆகவே தேவையில்லை என்று 'அ' என்ற கேள்விக்குப் பதில் சொல்லி விட்டு, அதற்குப் பின்னாலே அந்தக் கேள்வி எழவில்லை என்பது போல், ஏன் முன்னால் எழுதவில்லை, பின்னாலே எழுதினீர்கள் என்ற கேள்வி எழவேயில்லை. நான் திட்டவட்டமாய்க் குற்றம் சாட்டுகிறேன், ஞாபகம் ஊட்டுவது மாநில அமைச்சர்களுடைய கடமை அல்லவே அல்ல, முதல் போட்டிருக்கிறவர்கள் அவர்கள். ஆட்களை உத்தியோகத்திற்கு அமர்த்துகிறவர்கள் அவர்கள், மேற்பார்வையிடுவதும் அவர்கள் பொறுப்புக்கும் அவர்களே. நமக்கும் அவர்களுக்கும் இருக்கிறது ஒரே ஒரு ஒப்பந்தம் தான்.



இத்தனை பைசா விதம் அவர்கள் உற்பத்தி செய்கிறதை வாங்குகிறோம் என்பது தான் ஒப்பந்தம். இந்த அவையில் உள்ளவர்களில் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். நெய்வேலி மத்திய சர்க்காருடைய நிறுவனம். அதன் மின் சக்தியை ஆந்திரா 'எங்களுக்குக் கொடு', வேறு சில மாநிலங்கள் 'எங்களுக்குக் கொடு' என்று கேட்டதும், அப்போது நாம் கிளர்ச்சி செய்து, முடிவு எடுக்கப்பட்டது. அவர்கள் உற்பத்தி பண்ணுகிற மின் சக்தி நம்மைச் சேர்ந்தது. விலை இவ்வளவு என்று நிர்ணயம் பண்ணியது தான் அப்போது நடந்த ஒப்பந்தம். அதற்கு மேல் நாம் தலையிடமுடியாது. நமக்கு வர வேண்டிய மின்சாரத்தில், கால் பங்கு விலைக்குத் தர வேண்டுமென்றால், 8 வருஷங்களுக்கு முன்னாலே அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும், இன்னொரு சுரங்கம் வெட்ட வேண்டிய கடமை அவர்களுடையது, முதல் போட வேண்டியது அவர்களுடைய கடமை, இயந்திரங்கள் வாங்க வேண்டியது அவர்களுடைய கடமை. 8 வருஷமாகச் சொல்லுகிறோம். சரியான இயந்திரம் வாங்கவில்லையென்றால், அது அவர்களுடைய பொறுப்பு. சரியான இயந்திரம் இல்லையென்றால், வேறு இயந்திரம் வாங்கியிருக்க வேண்டாமா, அதற்குரிய காரியங்களைச் செய்திருக்க வேண்டாமா? அதற்கு உரிய திட்டத்தை உரிய காலத்தில் வகுத்துக்கொள்ளாத தவறு மையத்தில் இருக்கிற மத்திய சர்க்காரின் தவறு. இது நம்முடைய பொறுப்பு அல்ல. நம்முடைய பொறுப்பு போல் சொல்லுகிறார்கள், குற்றம் சாட்டுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாது. திட்டவட்டமாகச் சொல்லுகிறேன், இது மத்திய சர்க்காரின் குற்றம். மத்தியில் உள்ள நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் சமீபத்தில் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது.

சமயநல்லூர் மின் நிலையத்தை விற்று விட்டார்கள், ஆகவே மின்சார உற்பத்தி குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். இது விஷயம் சற்றேனும் அறியாதவர்கள் சொல்லுகிற கூற்று ஆகும். சமயநல்லூரில் உற்பத்தி பண்ணிய மின்சாரம் 14 மெகா வாட் அளவு தான், அதுவும் ஏகப்பட்ட செலவில், ஏகப்பட்ட கஷ்டத்தில் தான். அதை விற்று விட்டதால், உலகம் மாறி விடப் போகிறதில்லை, தலைகீழாகப் புரண்டு விடப்போவதில்லை. அது ஏதோ ஒட்டகத்தின் மேல் உள்ள பாரத்தில் '[illegible]'த் தூக்கிப்போட்டது போலத்தான். ஆனால், வருங்காலத்தில் செய்ய வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. நமக்கு இப்போது உள்ள நிலைமை ஒரு பெரிய பாடமாக அமைந்து விட்டது. நாம் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. வானம் பொய்த்து விட்டது. நமக்கு மின்சாரம் கொடுத்துக் கொண்டிருந்த கேரளா, மைசூர் போன்ற இடங்களில் அவர்களுக்கே பற்றாக்குறை, தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. இப்படிப்பட்ட நிலைமையில் எதிர்காலத்தில் நமக்குள்ள தேவை என்னவென்று

கவனிக்க வேண்டும். நமக்கு வேண்டிய உற்பத்தி சாதனங்கள் என்னவென் புதை ஆராய்ந்து, அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். சில அந்நிய வழியமான தொழில்கள் இருக்கின்றன. உதாரணமாக, நெல் அரைக்கும் ஆலை இருக்கிறது. அது சம்பந்தப்பட்டவரை, உமியை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ, அதைப் பயன்படுத்தி, நீராவி உற்பத்தி பண்ணி ஆலையை ஓட்ட முடியும் என்று ஒரு கோவாப்பரெட்டிவ் சொசைட்டி செய்து காண்பித்துக் கொண்டிருக்கிறது. அதை அனுசரித்து மற்ற சொசைட்டிகளும் செய்ய வேண்டும். மற்றும் நெல் அரைப்பு இயந்திரங்கள் வைத்திருக்கிறார்கள், அவர்களும் அப்படியே செய்ய வேண்டும். எதற்கும் நாம் மின் சக்தியையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. காற்று விசைத் தண்ணீர் ஏற்றம் எவ்வளவு உபயோகிக்க முடியுமோ அந்த அளவுக்கு அதை உபயோகிக்க வேண்டும். எந்த, இடத்தில் சூரிய வெப்பத்தைப் பெற முடியுமோ, அந்த இடத்தில் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வளவையும் செய்வதற்குப் பின்னாலே இன்னொன்றும் சொல்லலாம். நாம் ஏன் டீசல் இஞ்சின்களைப் பயன் படுத்தக் கூடாது, பஞ்சாப், ஹரியானா போன்ற இடங்களில் செய்கிறார்களே என்று சொல்லலாம். எனது நண்பர் திரு. நாராயணசாமி மிக அழகாகச் சொன்னார்கள். எவ்வளவுதான் சுருக்கமாகக் கணக்கிட்டுப் பார்த்தாலும், 6, 7, 8, 10 முதல் 12 பைசாவுக்கு வந்துவிடுமா? அதையே தொழில் துறையில் உபயோகித்தால், என்ன செலவாகும் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். செலவைக் குறைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அதற்குக் குறைந்த பட்சமாகக் கணக்குப் போட்டாலும், டீசலை உபயோகித்தால் 32, 33 பைசா ஆகும். திரு. நாராயணசாமி அவர்கள், 60, 65, 70 பைசா வரும் என்று சொன்னார்கள். அது இரண்டொரு வருஷங்களுக்கு முன்பு 33 பைசாவாக இருந்தது. இப்போது 50, 60 பைசா ஆகிறது என்றால், நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. இந்த நிலைமையில் நாம் போட்டா போட்டித் தொழில் செய்ய முடியுமா, அதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். போட்டிபோட்டுக் கொண்டு நாம் தொழில் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக கேரளத்தில் ஒரு தொழில் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். 70 பைசா செலவு செய்து நாம் தொழில் நடத்தினால், அவர்களோடு எப்படி போட்டி போட முடியும் என்று யோசிக்க வேண்டும். நாம் சம்பந்தப்பட்டமட்டில், டீசல் இஞ்சினை நம்பி போட்டிபோட முடியும் என்பது பகல் கனவாகத் தான் இருக்கும். ஆகவே, டீசல் இஞ்சின் நமக்குச் சாத்தியப்பட்டு வராது. இன்னொன்றும் நான் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். 3, 4 தொழில் அதிபர்கள் சேர்ந்து ஒரு தொழில் செய்கிறார்கள், அவர்கள் எங்களுக்கு வேண்டிய மின்சாரம் உற்பத்தி பண்ணிக்கொள்ளுகிறோம் என்கிறார்கள் என்றால் அதை அனுமதிக்கலாம். இதுபற்றி இந்த மாநில அமைச்சரவை இவை



காலத்திற்கு முன்பு சொல்லும்போது, கொள்கை ரீதியாக மத்திய அரசிலிருந்து உத்தரவு கிடைக்கவில்லை என்று சொன்னதை இந்த அவையில் உள்ள மூத்தவர்கள் அறிவார்கள். அதே யோசனை திரும்பவும் சொல்லப்படுகிறது. இது மிகவும் வரவேற்கத்தக்க யோசனையாகும். தனிப்பட்ட ஒருவர் தனக்குத் தேவையான மின்சக்தியை உற்பத்தி செய்துகொள்வதானால், அதற்கு உதவி அளிக்க வேண்டும், ஊக்கம் அளிக்க வேண்டும். 2, 3 பேர் சேர்ந்துகொண்டு, கோவாப்பரேடிவாகவோ, தனிப்பட்ட முறையிலோ மின் சக்தி நாங்கள் உற்பத்தி செய்துகொள்ளுகிறோம் என்று கேட்கும்போது, அவர்களுக்கு அந்த உதவி கொடுப்பது மட்டுமல்ல, அவர்களிடம் மின்சாரம் மிச்சப்பட்டாலும் படலாம் அல்லது பூராவும் தேவைப்பட்டாலும் படலாம். அதை ஒரு 'காமன் கிரிட்' ஆக வைத்து, அதற்குள் 'ஃபீட்' பண்ணுவதற்கு வேண்டிய காரியங்கள் செய்யலாம். இன்னொன்று, கங்கையை யும் காவிரியையும் இணைப்பதுபற்றி இஞ்சினியர்கள் சொல்லி வருகிறார்கள். இந்தியா பூராவுக்கும் ஒரே 'கிரிட்' ஏற்படுத்த வேண்டுமென்ற பிரச்சினை அடிக்கடி சொல்லப்பட்டு வருகிறது இஞ்சினியர்களால். அதை எந்த மாநில அரசாவது ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அகில இந்திய ரீதியில் ஏற்றுக்கொண்டார்களா என்று தெரியவில்லை. ஆனால், கங்கையையும் காவிரி யையும் இணைக்க வேண்டும் என்ற பேச்சிலே, அதே மூச்சிலே இந்தியா பூரா வுக்கும் ஒரே 'கிரிட்' இருக்க வேண்டும். அப்போது தான் ஒரு இடத்தில் மட்டும் மின்சாரத் தட்டுப்பாடு இருக்காது, இருந்தால் எல்லோருக்கும் இருக்கும் அல்லது ஒருவருக்கும் இருக்காது. எல்லோருக்கும் நல்லது அல்லது எல்லோருக்கும் கெட்டது . . .

**திரு. எஸ். நாராயணசாமி:** 10 ஸ்டேட் ஒத்துக்கொண்டிருக்கிறது . . . .

**திரு. எஸ். டி. ஆதித்யன்:** திரு. நாராயணசாமி அவர்கள் சொன்னதற்கு நன்றி. நான் ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். மத்திய மாநில உறவு சம்பந்தப்பட்ட மட்டில் நாம் ஒரு அடிப்படையான விஷயத்தை மறந்துவிடக் கூடாது. அது என்னவென்றால் இந்த நாடு, தென்னாடு, இந்தத் தமிழ் நாடு நமது, இது நம்முடைய நாடு, இதிலே உண்டான வளம், செல்வம், வரிப் பணம் நம்முடையது. என்னவோ மத்திய சர்க்காரிடத்தில் நாம் பணம் கேட்பது போலவும், அவர்கள் நமக்கு இனமாக கடனைத் தருவது போல் ஒரு 'பிரமை' இருக்கக்கூடாது. கணக்கு எடுத்துப் பார்க்கும்போது, நாம் கொடுக்கிற வரி எவ்வளவு, அவர்கள் திரும்பத் தருவது எவ்வளவு, 10-ல் ஒரு பங்கு இருக்குமா, 20-ல் ஒரு பங்கு இருக்குமா என்று பார்க்கும்போது, இந்த இரண்டுக்கும் இடையில் இருக்கும் என்று கணக்குப் பார்த்ததாக

ஞாபகம். வரி நம்முடையது, அந்தப் பணம் நம்முடையது, அந்த நம்முடைய
பணத்தில் நமக்கு எவ்வளவு தருவது என்பது பிரச்சினையல்ல.
நம்முடைய பணத்தில் நாம் எவ்வளவு வைத்துக்கொள்வது, எவ்வளவு மத்திய
சர்க்காருக்கு 'கப்பம்' ஆகக் கட்டவேண்டியது என்பதுதான் விஷயம். ஏதோ
வரி அவர்களுடையது போலவும், பணம் அவர்களுடையது போலவும், அவர்கள்
நமக்குப் 'பிச்சை' தருவது போலவும் உள்ள மனப்பான்மை, நமக்கு இருக்கிற
தோல்வி மனப்பான்மை அடியோடு போக வேண்டும். இந்தத் தோல்வி மனப்
பான்மை, இந்தப் பிச்சைக்கார மனப்பான்மை ஒழிந்தாக வேண்டும். வரிப்
பணம் நம்முடையது, நம்முடைய பணத்தில் அவர்கள் எடுத்துக்கொண்டு
போகிறார்கள். இவ்வளவுதான் தருவோம் என்று சொல்ல வேண்டும்.
ஆனால் இன்று வரி வசூலிப்பது மத்திய சர்க்கார். பின்னால் தருவது அவர்கள்.
வரி வசூல் எல்லாவற்றையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்கம் டாக்ஸ்
வரியில் நமக்குப் பங்கு உண்டு. அதே பிரகாரம் எக்ஸைஸிலே நமக்குப் பங்கு
உண்டு. எஸ்டேட் டியூட்டி நம்மைச் சேர்ந்தது. ஆனால் அதையெல்லாம்
மத்திய சர்க்கார் வசூலிக்கின்றார்கள். இது நம்முடைய பணம் என்ற எண்
ணமே இல்லாமல் போகிறது. இந்த வரி வசூல் பண்ணுவதை நாமே வசூலிக்க
வேண்டுமென்பதைக் குறித்து நாம் வாதாட வேண்டும். இது நம்முடைய வரிப்
பணம். நாம் வசூலித்து அவர்களுக்குத் தர வேண்டுவதாக ஏற்பட வேண்டுமே
தவிர, ஏதோ அவர்கள் வசூலித்து நமக்குத் தருவதாக இருக்கிற எண்ணம்
அடிப்படையிலேயே மாறியாக வேண்டும். நானும் அடுத்த சபையிலே
கேட்டிருக்கிறார்கள் என்று அறிவேன். மத்திய சர்க்காரிடத்திலே பிச்சைப்
பாத்திரத்தை ஏந்திக்கொண்டிருக்கின்றார்களே என்றெல்லாம் கேலி செய்
கிறார்கள். நம்முடைய உரிமையைக் கேட்கப் போகிறோமே தவிர, அவர்
களிடத்திலே யாசகம் கேட்பது போன்ற உணர்ச்சியைக் கட்டாயமாக நீக்கியாக
வேண்டும்.

இன்னொன்று, நான் கடைசியாக சொல்லுகின்ற விஷயம். நான் ஏற்கனவே
பல தடவை இந்த அவையின் முன்னாலே அந்த எண்ணத்தைச் சமர்ப்பித்
திருக்கின்றேன். இன்று பண வீக்கம் என்று சொல்லப்படுகின்ற இன்பிளேஷன்
இருக்கிறதல்லவா? இதை நான் ரூபாயினுடைய மெலிவு என்றுகூட சொல்
வேன். இது ஏற்படுவதற்கு முக்கிய காரணம் மத்திய சர்க்கார் சம்பளங்களைத்
திடீரென்று உயர்த்திவிடுகிறார்கள். அவர்கள் பட்ஜெட், பற்றாக்குறை பட்ஜெட்
டாக இருக்கிறது. ரூபாய் 85 கோடி, ரூ. 100 கோடி பற்றாக்குறை பட்ஜெட்
டாகப் போடுகிறார்கள். பற்றாக்குறை பட்ஜெட் என்றால் என்ன? பற்றாக்குறை
எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு தாள் நோட்டை அச்சடித்து அனுப்பு
கிறோம் என்பதுதான் பற்றாக்குறை பட்ஜெட். ஆகவே தாளை அச்சடித்து





ரூ. 85 கோடிக்குக் கொடுக்கப்போகிறார்கள். இதுதான் பற்றாக்குறை பட்ஜெட்
என்பது. 85 கோடி ரூபாய்க்கு இந்தத் தாள் நாணயங்களை அச்சடித்துக்
கொடுக்கின்றபோது, அந்தத் தாள் என்ன செய்யும் என்றால், பொருளை
விரட்டும், பொருளை நோக்கி ஓடும், பொருளை நாம் பெறமுடியாது, தாள் அதிக
மாக மெலிந்துவிடுகிறது. தாள் அதிகமாக மெலிந்தவுடனே விலைவாசி உயரு
கிறது. ஏற்கனவே ஒன்று சொன்னேன். இப்போது திரும்பவும் நான் சொல
கின்றேன். இதை நான் மத்திய சர்க்கார் மீது குற்றச்சாட்டாகச் சொல்
கின்றேன். அவர்கள் தான் இன்று இன்பிளேஷனுக்குக் காரணமாக இருக்
கிறார்கள். இந்த இன்பிளேஷன் காரணமாக விலை உயர்வு ஏற்படுகிற
தல்லவா? இன்பிளேஷன் ஏற்படுவதற்கு முன்னாலே அவர்கள் மாநில அரசு
களைக் கேட்டுச் செய்யவேண்டும். மத்திய அரசு அலுவலாளர் ஒப்பந்திகளுடைய
சம்பளங்களைத் திடீர் திடீரென்று உயர்த்துகின்ற போது, அதற்கு முன்னாலே
மாநிலத்தைக் கேட்க வேண்டும். அது மாத்திரமல்ல. மாநிலமும் அவ்வாறே
சம்பளங்களை உயர்த்துவதற்கு வேண்டிய வழிவகைகளை அவர்கள் செய்து
கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, தலைவரவர்களே, எனக்கு
அளித்த வாய்ப்பிற்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.
வணக்கம்.

**திரு. எஸ். சுந்தரேசத் தேவர்**: மாண்புமிகு சட்டமன்றத் தலைவரவர்களே,
1973-74-வது ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் முதல்வர்
அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதிலே சில கருத்துக்களைக் கூறுவதற்கு
நான் ஆசைப்படுகின்றேன். இந்த பட்ஜெட்டிலே சமதர்மம் இருக்கிறது.
சமதர்ம பட்ஜெட் என்று வருணனை செய்யப்பட்டிருக்கின்றது. நாட்டிலே
சமதர்மம் நிலவக்கூடிய நிலையில் பட்ஜெட்டிலே வகை செய்யப்பட்டிருக்
கின்றதா என்று ஆராய்ந்து பார்த்தால், அப்படிப்பட்ட நிலைகளையெல்லாம்
இதிலே காண முடியவில்லை. ஆனால் பட்ஜெட் சமதர்ம பட்ஜெட் என்று கூறப்
பட்டிருந்தபோதிலும்கூட, ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே எந்தவிதமான
காரண காரியங்களும் செய்யப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். வரிகள் அதிகமாக விதிக்காவிட்டாலும்கூட நாட்டினுடைய வரு
வாய் வெகுவாக உயர்ந்திருக்கின்றது. வரி விதிக்கவில்லை என்றாலும்கூட,
நாட்டினுடைய வருவாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உயர்ந்திருக்
கின்றது. ரூ. 465 கோடிக்கு மேலே நம்முடைய வருமானம் பெருகியிருக்
கிறது. வருமானப் பெருக்கம் இருக்கின்றதே தவிர, அந்த வருமானப் பெருக்
கத்தைப் பயன்படுத்தி, பல வரிகளைக் குறைத்திருப்பார்களேயானால், நல்ல
விதமாக இருந்திருக்க முடியும். வரிகளைக் குறைக்க முடியாத ஒரு பட்
ஜெட்டை இன்று சமர்ப்பிக்கின்ற நிலையில் இந்த அரசாங்கம் இருப்பதை நாம்
பார்க்கும்போது, இதை நான் எப்படிப் பாராட்ட முடியும் என்று கேட்டுக்

சொல்கின்றேன். தேவையான அளவு வருமானம் வந்திருக்கும்போது, வருமானம் அதிகமாக இருக்கும்போது, வரியைக் குறைத்தால்தான் என்ன கஷ்டம் என்று எனக்குத் தெரியவில்லை. வருமானம் குறைந்தால், வரி போட வேண்டியதுதான். பட்ஜெட்டிலே வரி போடுவதோ அல்லது போடாமலிருப்பதோ தேவையைப் பொறுத்திருக்கிறது. வரி போடவேண்டிய அவசியமிருந்தால், போடலாம். தேவையில்லை என்றால், வரியைக் குறைக்கலாம். ஆனால் இப்போது அரசாங்கத்தினுடைய வருவாய் ரூ. 465 கோடி. இத்தொகையினைப் பார்க்கின்றபோது, கொஞ்சம் சிக்கனத்தைக் கையாண்டு நாட்டிலுள்ள மக்களுக்கு வரியைக் குறைத்திருந்தால், பாராட்டக்கூடியதாக இருந்திருக்கும் என்று கூற ஆசைப்படுகின்றேன். பங்களா தேச அகதிகளுக்காக டெம்பரரியாகப் போட்ட வரியையாவது எடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். அதைக் கூட எடுக்கவில்லை. நிலவரியை எடுக்க வேண்டும், எடுக்க வேண்டும் என்று நாம் சோஷலிஸம் பேசுகிறோம். சோஷலிஸத் தத்துவத்திற்காக நில உடைமைக்கு 15 ஏக்கர் சீலிங் வைத்திருக்கிறோம். நிலவரியைக் கொஞ்சம் உயர்த்தியதால், விவசாயிகள் அந்த வரியால் கஷ்டப்படுகிறார்கள். நில வரியை நீக்க வேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம் அந்தக் காலத்திலே சொல்லிக்கொண்டு வந்தது. நிலவரியை நீக்குவதற்கு வேண்டிய காரியங்களை காங்கிரஸ் அரசாங்கம் செய்துகொண்டு வந்தது. ஆனால் இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது நீக்கப்படவில்லை. தொகை தேவையாக இருந்தபோது, வேண்டுமானால் நீக்காமல் இருந்ததுபற்றிக் குறை கூறவில்லை. ஆனால் இன்றைய தினம் நல்ல வருமானம் வரும்போது நிலவரியை நீக்கலாம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் அரசாங்கம் நீக்கிய நில வரியை இந்த அரசாங்கம் போட்டுவிட்டதா?

திரு. என். சுந்தரேசத் தேவர்: நான் புதிதாகப் போட்டதாகக் கூறவில்லை. நிலவரியை நீக்க வேண்டுமென்றுதான் கூறுகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் நிலவரியை நீக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து நீக்கியிருக்கலாம். அதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து நீக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிலவரியை நீக்குவதற்கு என்ன பெரிய முயற்சி செய்ய வேண்டும்? ஒரே வரியிலேயே நீக்கியிருக்கலாம். அதற்கு என்று என்ன முயற்சிகள் செய்ய வேண்டும்?

திரு. என். சுந்தரேசத் தேவர்: எங்களுடைய தேர்தல் பிரகடனத்திலேயே 1967-ல் வெற்றி பெற்றால், நிலவரியை நாங்கள் நீக்குவோம் என்று சொன்னோம். 1967-ல் வெற்றி பெற்றிருப்போமேயானால், நிலவரியை கண்டிப்பாக நீக்க





நடவடிக்கைகள் எடுத்திருப்போம். நீங்கள் வெற்றி பெற்றீர்கள். நீங்கள் வெற்றி பெற்றபின் காங்கிரஸ்காரர்கள் சொன்னதைச் செய்யக்கூடாது என்று இருக்க வேண்டியதில்லை. நிலவரியை நீக்கியிருக்கலாம். அது நியாயமானது. அதை நீங்கள் செய்திருக்கலாம். நம்முடைய நிதிப் பற்றாக்குறையைக் காரணமாக வைத்துக்கொண்டோ அல்லது என்ன காரணத்தாலோ, மதுவிலக்கை ரத்து செய்தீர்கள். இப்போது வருமானம் அதிகமாக இருக்கும்போது, மதுவிலக்கு ரத்தை நீக்கிவிட்டோம் என்று சொல்லும் சந்தோஷமான செய்தியை நான் கேட்கமுடியும் என்று பார்த்தேன். மதுவிலக்கு ரத்து இன்னும் அமுலிலேயே இருந்துகொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கரமாக இருக்கின்றது. நாமே பார்க்கின்றோமே. வருமானம் பட்ஜெட்டிலே தான் உயர்ந்திருக்கின்றதே தவிர, நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரமோ, வாழ்க்கை வசதிகளோ உயர்ந்திருக்கின்றதா என்று பார்த்தால், அதைக் காண முடியவில்லை. ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கின்றது. சமதர்ம பட்ஜெட் என்று சொல்லுகின்றோம். மேலும் ஏழைகள் நாட்டிலுள்ள சாமான்களை, உணவுப்பொருள்களை, பண்டங்களை வாங்கி நல்லவிதமாக வாழக்கூடிய நிலை இருக்கின்றதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. அது மட்டுமல்ல. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகப் பெருகியிருக்கின்றது. பட்ஜெட்டிலே பணம் இருந்துகொண்டிருக்கின்றபோது, வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க உருப்படியான காரியங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டால், அதற்குண்டான வகை எதுவும் செய்யவில்லை. அரசு நிர்வாகம் மேலும் மேலும் ஆடம்பரமாக இருக்கின்றது. நாம் சோஷலிஸம் என்று பேசுகின்றோம். சமதர்மம் என்று சொல்லுகின்றோம். சர்க்காருடைய நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகிறது என்று பார்த்தால், மிகப் பயங்கரமாக இருக்கின்றது. இது கிட்டத்தட்ட 50 சதம் ஆகிறது. நம்முடைய சர்க்காரில் நிர்வாகச் செலவு இன்றையதினம் உயர்ந்திருக்கின்றது. 30 சதம், 35 சதம் கூட காங்கிரஸ் அரசு நிர்வாகச் செலவு பண்ணவில்லை. ஆனால் 55 சதத்திற்கு மேலேயே சர்க்காருடைய நிர்வாகச் செலவு உயர்ந்துபோய்க்கொண்டேயிருக்கின்றது. பொதுவாக, சீர்திருத்தம் வேண்டுமென்று நீங்கள் முன்னாலே சொன்னீர்கள். இன்றைய தினம் அரசில் இருக்கக்கூடியவர்கள், எதிர்க் கட்சியில் இருக்கும்போது, காங்கிரஸ்காரர்களைப் பார்த்து "நாங்கள் பதவிக்கு வந்தால் நிர்வாகச் சீர்திருத்தம் கண்டிப்பாகச் செய்வோம்" என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய அண்ணா அவர்களும் கூறினார்கள். இன்று நிலை என்ன? நிர்வாகச் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கின்றதா, சிக்கன நடவடிக்கைகள் கையாளப்படுகின்றனவா என்றால், எந்த நடவடிக்கையையும் காண முடியவில்லை. அரசாங்க நிர்வாகம் ஆடம்பரமான உச்ச கட்டமான ஒரு நிலையிலே

இன்றையதினம் நடந்துகொண்டு வருகிறது. 55 சதம் நிர்வாகச் செலவு இருப்பது அதிகமான நிர்வாகச் செலவு என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படு கின்றேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஏதாவது உருப்படியான காரியம் பி.ப. 5-30 செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. பத்து கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்கிவிட முடியுமா என்றால், முடியாது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு சில பேருக்கு ஒரு வாய்ப்பு வசதி செய்து கொடுக்கக் கூடியதாக .....

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். அரசு நிர்வாகச் செலவு என்று சொல்கிறபோது, ஊழியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம்தான் முக்கியமாக இருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் அரசாங்க ஊழியர்களுக்கு 10 ரூபாய் அளவுக்கு அகவிலைப் படியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதை ஆதரிக்கிறாரா அல்லது வேண்டாமென்று சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்த வரையில். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பதில் சொல்லாததிலிருந்து ஆதரிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை என்று தெரிகிறது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தலைவர் அவர்களே, தொழில் துறையைப் பொறுத்த வரையில், நமது தமிழ் நாட்டில் நல்ல வளர்ச்சி ஏற்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. தொழில் துறையில் ஒரு பிரம்மாண்டமான தொழில் நிறுவனம் ஏதும் நிறுவப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். மத்திய அரசாங்கமும் பண்ணவில்லை. எந்த அரசாங்கமும் பண்ணவில்லை. தமிழ் நாடு அரசாங்கம் சில திட்டங்களை எடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பின்னால் சொல்கிறேன். சில தொழில்களை தேசியமயமாக்கி விட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் தேசியமயமாக்குவதால் தொழில் வளம் அழியக்கூடியதாக இருக்கக்கூடாது. இன்றைய நிலைமையில் தேசியமயமாக்கும் தன்மையை அரசாங்கம் கையாளும் நேரத்தில் மிகவும் உற்று கவனிக்க வேண்டும். இந்த நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பது உண்மை. பெருகியிருக்கும் தொழில்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொள்வதுதான் தேசியமயமா என்று யோசனை செய்து பார்க்க வேண்டும். சர்க்கார் எல்லாத் தொழில்களையும் எடுத்துக்கொண்டால்தான் தேசியமயம் என்றாகிவிடாது. சர்க்கார் சோஷலிசம் என்று சொல்லி வருகின்றபோது, தனி





யார் தொழில் வளர்ந்தால் அது சோஷலிசம் ஆகாது என்று சொல்ல முடியாது. சோஷலிசம் என்றால், தனியார் தொழில் வைத்துக்கொள்ளக் கூடாது என்று அர்த்தமில்லை. சர்க்காரும் தனியாரும் இருவரும் இருந்துகொண்டு தொழில் வளத்தைப் பெருக்குவதுதான் உண்மையாக தொழில் வளத்தைப் பெருக்குவதாகும். என்னென்ன தொழில்களை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை வகைப்படுத்தி ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். பெரிய மூலதனம் போட்டு, 10 கோடி ரூபாய், 8 கோடி ரூபாய் என்ற அளவில் போட்டு, நல்ல லாபம் தரும் தொழில்களை யெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல. இது சோஷலிசப் பாதையில் சர்க்கார் செல்வதாகக் கட்டாயமாகச் சொல்ல முடியாது. தேசியமயமாக்கும் தொழில்களால் ஒன்று அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் வரவேண்டும் அல்லது மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும். அந்த இரண்டு நிலையும் இல்லாது, ஒரு தொழிலை சர்க்கார் எடுத்துக்கொள்வது எப்படி லாபகரமாக இருக்க முடியும்? சர்க்காருடைய தொழில் கொள்கை ஒரு வரையறுக்கப்பட்ட கொள்கையாக இருத்தல் வேண்டும். திட்டவட்டமாகக் கூறி எந்தெந்தத் தொழில்களை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும். அதை முதலில் முறைப்படுத்த வேண்டும். யாரோ பணம் போடுகின்ற தொழில்களை சர்க்கார் தன்னிடம் சட்டம் இருக்கிறது என்று திடீரென்று நாட்டுடைமையாக்கி விடுவது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய செயலாகத் தோன்றவில்லை. நான் சோஷலிசத்திற்கு அப்பாற்பட்டுப் பேசவில்லை. நாட்டுடைமையாக்கும் திட்டம் என்ன என்பதற்கு ஒரு வரைமுறை குறிப்பிட்டிருந்தால், இப்படிப்பட்ட தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தால். . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் ஒரு பஸ் அதிபர். அது லாபமான தொழிலா அல்லது நஷ்டமான தொழிலா என்று அவரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தலைவர் அவர்களே, பஸ்களைத் தேசியமயமாக்கியதைப்பற்றி நான் சொல்லத் தயாராகவில்லை. அது லாபகரமான தொழில் அல்ல. நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதை எப்படி நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அதனுடைய கஷ்டத்தைப் பின்னால் பார்க்கப் போகிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அலுமினியம் தொழிற்சாலையை எடுத்துக்கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது லாபகரமான தொழிலா அல்லது நஷ்டம் தரக்கூடிய தொழிலா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அலுமினியத் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். என்னுடைய கட்சியின் நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் அதை ஆதரித்துப் பேசியிருக்கிறார். எது, எது லாபமாக நடக்கிறதோ அதை எடுத்துக் கொள்வது என்பது தான் சர்க்கார் கொள்கையா என்றும் புரியவில்லை. இப்பொழுது தமிழ் நாட்டில் எந்தத் தொழிலிலும் மூலதனம் போட்டு நடத்த தொழிலதிபர்கள் தயாராக இல்லாத நிலைமை இருந்து வருவதைக் காண்கிறோம். அந்த நிலைமை போக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும், அடிக்கடி குறுக்கிடுவதற்கு. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது தனியார் துறைத் தொழில்களில் எதையாவது அரசு எடுத்துக்கொள்வதாக இருந்தால், லாபகரமான தொழிலை மட்டும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டும், தனியார் துறையில் நஷ்டம் வந்தால், அதை அவர்கள் தலையிலேயே கட்டிவிட வேண்டும், லாபகரமான தொழில்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதானு என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, அப்படி அல்ல. தனியாருடைய தொழில் நிலைமையைப் பார்க்கும் போது, அது லாபகரமாக இருக்கிறதா, நஷ்டமாக இருக்கிறதா, அதன் தன்மை எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என்பதையெல்லாம் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிச் சிந்தித்துப் பார்த்து லாபகரமானதை எடுத்துக் கொள்ள வேண்டும், நஷ்டமானதை விட்டுவிட வேண்டும் என்பது தானே ?

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, லாபகரமான தொழில்களை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும், நஷ்டம் வருவதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லவில்லை. சர்க்கார் ஒரு திட்டவட்டமான முடிவெடுத்து, எந்தெந்தத் தொழில்களை எடுத்துக்கொண்டால், தொழில் வளம் மேலும் பெருகும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் என்று பார்த்துச் செய்யவேண்டும் என்பதுதான் எனது கருத்து. தனியாரிடம் லாபகரமான தொழில்களே இருத்தல் கூடாது என்பதுதான் சோஷலிசம் என்று கருதக்கூடாது.





மத்திய அரசாங்கத்தினுடைய நிலைமையைப் பார்க்கின்றபோதும், மாநிலத்தைப் புறக்கணிப்பதாகத்தான் தென்படுகிறது. நம்முடைய அரசாங்கத்தில் உள்ளவர்கள் அன்றையதினம் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அன்றையதினம் வடக்கு வளரவும் இல்லை, தெற்கு தேயவுமில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டில் 10.8 சதவீதம் மூலதனம் போட்டார்கள்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9.00 சதவீதம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சதவீதம், ஆனால் இன்றையதினம் நிலைமை என்னவென்றால், 4.7 சதவீதம் தான். இதுதான் மத்திய சர்க்கார் தமிழ் நாட்டுக்குக் கொடுத்திருப்பது. இந்த நிலைமையைப் பார்க்கும்போது, அன்றையதினம் தெற்கு தேய்ந்ததா அல்லது இன்றையதினம் தெற்கு தேய்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், மத்திய சர்க்காருடைய முதலீடும் திட்டங்களும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. இன்றையதினம் அவ்வளவு பெருத்த வசதியும் அதிகாரமும் மத்திய சர்க்காரிடம் இருக்கின்றன. அதைப் பார்க்கும்போது, மத்திய சர்க்காரால் தமிழ் நாடு புறக்கணிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டால், சில ஆண்டுகளில் தமிழ் நாடு மிகவும் பின்தங்கிப் போகக்கூடிய சூழ்நிலை வரக்கூடிய காரணத்தால், அப்படி விட்டுவிடாமல் அதற்குத் தக்க முடிவு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில்களில் மூலதனம் போடுவதில், இந்தியாவில் மொத்தம் 686 கோடி ரூபாய் போட்டிருப்பதில், தமிழ் நாட்டில் 20 கோடி ரூபாய் சேலம் உருக்காலையில்தான் போட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, மனதில் கொஞ்சம் அச்சம் ஏற்படுகிறது. 7.5 சதவீதம் மக்களைக் கொண்டது தமிழ்நாடு. தமது நாடு புறக்கணிக்கப்படுகிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது. ஆதலால் இந்த அரசாங்கம் என்ன நிலையை மத்திய அரசாங்கத்தோடு அனுஷ்டிக்க வேண்டும் என்பதை ஆராய்வது அவசர அவசியமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாநில சுயாட்சி நாங்கள் கேட்கிறோம், அவர்கள் கொடுக்கவில்லை. நீங்கள் அதரிக்கிறீர்களா என்று கேட்பதெல்லாம் சரியாக இருக்காது. பொதுவாக நம்முடைய நாடு மிகவும் பாதகமான நிலைமையில் போய்க்கொண்டிருக்கிறது. இன்றும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ரொம்பவும் பின்தள்ளப்படுவோம் என்பதை உணர்ந்து, அதற்குத் தக்க நடவடிக்கை இப்பொழுதே எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, மத்திய சர்க்காரைப்பற்றி வெளியே பேசுவது ஒரு பிரசங்கமாகவேதான் இருக்கும். நாட்டினுடைய வளத்தைப் பெருக்குவதற்குப் பயன்படாது. அரசாங்கப் பொறுப்பில் இருக்கின்றவர்கள் பொதுக்கூட்டங்கள் போட்டு தமிழ் நாட்டைப் புறக்கணிக்கிறார்கள் என்று கூறுவதால் என்ன பலன் ஏற்பட்டுவிடும்? அரசாங்கத்தை நடத்துகிறவர்கள் மத்திய

சர்க்காரைத் தட்டிக் கேட்க வேண்டும். உங்களுடைய நிலையைச் சுட்டிக் காட்ட வேண்டுமே தவிர, கூட்டம் போட்டு மத்திய சர்க்கார் புறக்கணிக்கிறது என்று சொல்வது எலெக்ஷன்—தேர்தல் பிரசாரமாகத்தான் இருக்கும். தட்டிக் கேட்கின்ற மாதிரியான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலும் ஒரு பாரபட்ச நிலைமை இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் தொழில் வளத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாடு இண்டஸ்டிரிஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. கார்ப்பரேஷனிடம் உள்ள தொகை எங்கெங்கு செலவழிக்கப்படுகிறது என்று கேட்டால், அத்தொகை தென்பாண்டி சீமைக் குத்தான் போகிறது. எல்லா மாவட்டங்களுக்கும் பரவலாகப் போகிறதா என்றால், அப்படி இல்லை என்றுதான் கூற முடியும். இது மகா பாப காரிய மாகும். எட்டு கோடி, பத்துகோடி என்ற அளவுக்கு தென் பாண்டி சீமைக்குத் தான் போகிறது. எல்லா மாவட்டங்களுக்கும் பரவலாகக் கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. அப்பொழுதுதான் தமிழ் நாடு தொழில் வளம் பரவலாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, தென்பாண்டி மண்டலம் என்றால், எதையெதைக் குறிப்பிடுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவர் அவர்களே, ராமநாதபுரம், மதுரை இவைகள் தான்.

அப்புறம் நாட்டுடமை ஆக்குகிற திட்டத்தில், நாம் பஸ் தொழிலை உதாரண மாகச் சொல்கிறோம். இதைத் தீவிரமாகப் பண்ணுகிறோம். நாட்டுடைமை என்ற பெயரில் ஓட்டு சேகரிப்பதற்காக, மக்களைக் கவர வேண்டும் என்பதற் காக, உருப்படாத திட்டத்தையெல்லாம் பிரச்சாரம் பண்ணி, மந்திரிமார் அதை உயர்ந்த திட்டமாகக் காட்டி, அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதற் காக இதைச் செய்வது சரியில்லை. என்னைப் பொறுத்த வரையில், பஸ் தொழில் ஒரு லாபகரமான தொழிலில்லை. உருப்படாத தொழிலை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அதைப்பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. நீங்கள் மக்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதற்காக இந்தத் தொழிலை எடுக் கிறீர்கள். அது நல்லதல்ல.

வேளாண்மையைப்பற்றி இனிமேல் தனியாக விவாதிக்கப் போகிறோம். இந்த பட்ஜெட்டிலே பார்க்கிறபோது, வேளாண்மைக்கு நிறையப் பணத்தை ஒதுக்கி, ஊக்கம் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குகிறோம். ஆனால் அதே நேரத்தில் உழவனுக்கு உதவி செய்வதில் அக்கறை காட்டவில்லை. விவசாயி



களுக்கு வேண்டிய உரம், மருந்து போன்றவற்றை அவர்களுக்குக் கொடுக்க, நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய, எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை. இன்றைக்கு மத்திய சர்க்கார் வரியைப் போட்டு, அந்தப் பொருள்களின் விலை யெல்லாம் ஏறிப்போயிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் கடன் கொடுக்கிறார் களென்று அதை வாங்கி இவைகளை வாங்கிவிட்டால், அதைத் திரும்பக் கட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். அதனால் ஜப்தி பண்ணப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு விலைகள் ஏறியிருப்பதால், விவசாயி களெல்லாம் அவைகளை வாங்கக்கூடிய சக்தியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே இந்த உரத்திற்கும், மருந்துகளுக்கும் விலை கூடாமலிருந்தால், நல்லதாக இருக் கும். உரத்திற்கும், மருந்துகளுக்கும் மத்தியமாநில சர்க்கார்கள் வரி போடக் கூடாதென்று வைத்திருக்கிறோம். ஆனால் அதைச் செய்யவில்லை. அது அல்லா மல் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் குறைவான கட்டணத் தில் கொடுக்கிறதால் நஷ்டம் ஏற்படுகிறதென்று சொல்லி, அதற்காக மின்சார இலாகாவுக்கு 8.2 கோடி ரூபாய் தரப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இது அவ்வளவு பொருந்தக்கூடிய விஷயமல்ல. மின்சார வாரியம் இன்றைக்கு திறமையற்றதாக இருக்கிறது. இன்றைக்கு இப்படி 11 பைசாவுக்கு நாம் விவசா யிகளுக்கு மின்சாரம் கொடுப்பதால் நஷ்டம் ஏற்படுகிறதென்று சொல்ல முடியாது. மின்சார இலாகா நஷ்டத்தில் ஓடுகிறது, அதனால் கொடுக்கிறோம் என்று வேண்டுமானால், இதைச் சொல்லலாமே தவிர விவசாயிகளுக்காக இதைக் கொடுக்கிறோம் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

மருத்துவத் துறையில் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. கிராமப் புறங்களில் மருத்துவத் துறை வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டவேண்டு மென்று நான் ஏற்கெனவே கேட்டுக்கொண்டேன். ஆனால் அதைச் செய்ய வில்லை. இந்த வருடமும் கிராமப்புறங்களில் மருத்துவ வளர்ச்சிக்கு எந்தவித மான திட்டமும் கொடுக்கப்படவில்லை. ஏதோ பஞ்சாயத்துக்களிலிருந்து 65 ஆஸ்பத்திரிகளை எடுத்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இதைத் தவிர, கிராமப்புறங்களில் வேறு எந்தவிதமான முயற்சியும் மருத்துவ வளர்ச்சிக்கு எடுக்கப்படவில்லை. வேறுவிதமாக பஞ்சாயத்துக் கூட்டு மூலமாக, நிறைய நிதி ஒதுக்கி, மருத்துவ வசதியைப் பெருக்க பஞ்சாயத்துக்களில், தாலுகாக்களில் அதைச் செய்ய எந்தத் திட்டமும் இல்லை. ஏதோ டிஸ்டிரிக் ஹெட்க்வார்ட் டேர்ஸ், மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இந்தவிதமாக முன்னேற் றம் இருக்கிறது. மற்ற இடங்களில் இல்லை. இந்தத் துறைக்கு 11 கோடி ரூபாய் செலவழித்த காங்கிரஸ் ஆட்சியை விட இந்த ஆட்சியிலே இன்றைய தினம் 33, 34 கோடி ரூபாய் செலவழித்தும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. ஆகவே, மருத்துவத் துறை பட்ஜெட் ஏமாற்றம் தருவதாக இருக் கிறதென்று கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி, கண்ணொளி வழங்கும் திட்டம் என்று சொல்லி மக்களிடம் பணம் நன்கொடையாக வாங்கப்படுகிறது. இதையெல்லாம் பட்ஜெட்டில் காட்டிச் செலவழித்தால், இது ஒரு பிரச்சினைக்கு உரிய விஷயமாக இருக்காது; இதைச் செய்வதில் என்ன கஷ்டம் என்று தெரியவில்லை. ஆகவே, அதைச் செய்தால் நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

போலீஸ் நிர்வாகம். இதற்கு ஏன் இவ்வளவு செலவாகிறது என்று எனக்குப் புரியவில்லை. 1962-ல் 5.84 கோடி ரூபாய் போலீஸ் துறைக்காகச் செலவழிக்கப்பட்டது. 1966-67-ல் 8.45 கோடி ரூபாய் காங்கிரஸ் ஆட்சியில் செலவு செய்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு 22 கோடியே 22 லட்ச ரூபாய் செலவழிக்கிறோம். இது எவ்வளவு பெரிய ஏற்றம்? இந்த நாட்டிலே ஏற்றம் அடைந்தவர்கள் யார் என்றால், போலீஸ்காரர்கள் தான். இப்படி ஏன் பண்ண வேண்டுமென்று புரியவில்லை. சரி, நாட்டில் ஏதாவது அமைதி இருக்கிறதா, போலீஸ் கலவரம் இல்லாமல் அடக்கியிருக்கிறார்களா, மக்கள் அமைதியாக இருக்கிறார்களா என்று பார்த்தால், அப்படி ஒன்றுமில்லை. இப்படி இருக்கிறபோது இந்தத் துறைக்கு இவ்வளவு பெரிய தொகை செலவழிக்க வேண்டுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத நிலை எங்கு பார்த்தாலும் இருக்கிறது. இதற்கு முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்ட நிலை பெருகுகிறது போல, விவசாயம் செய்கிற விவசாயிகளும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அரசியல் கட்சிகள் சேர்ந்துகொண்டு போராடுகிறார்கள் என்று பார்க்கக் கூடாது. இப்போது எங்கே பார்த்தாலும் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அப்புறம், அரசின் நிர்வாகச் செலவு 55 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. இதற்கு நிர்வாகக் குழு போட்டால், என்ன தவறு? நீங்களே கூட நிர்வாகக் குழு போட வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சியின்போது சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இன்றைக்கு நீங்கள் அதைப் போடுவதில் என்ன கஷ்டம்? ஒரு குழு போட்டதாகப் பேப்பரில் வந்திருக்கிறது. ஆனால் அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கையோ, ஒரு சட்டமோ வரும் என்று பார்த்தேன். ஒன்றுமே காணோம்.

ஆட்சியைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து ஆட்சி சோழன் காலத்திலே நல்லதாக இருந்தது என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு அது



தேய்ந்து போயிருக்கிறது. இன்றைக்கு மத்திய சர்க்கார் நம்முடைய அதிகாரத்தில் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் பஞ்சாயத்து, நகராட்சி நிர்வாகங்களில் நீங்கள் தலையிடுகிறீர்கள். நகராட்சி, பஞ்சாயத்து அதிகாரப் பட்டியலில் மாநில சர்க்கார் ஏன் அப்படிக் குறுக்கிட வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. ஆகவே அப்படித் தலையிடாமல் நீங்கள் முன்னோடியாக இருந்தால், மத்திய சர்க்காருக்கு அது ஒரு முன் உதாரணமாக இருக்க முடியும்.

இன்று நகராட்சிகளில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. நாம் பார்த்து இன்றைக்கு மெட்ராஸ் ஜெகஜ்ஜோதியாக இருக்கிறதே தவிர, நகரங்களெல்லாம் வளர்ச்சியடையவில்லை. கொசுத் தொல்லை இருக்கிறது. சாக்கடை நாற்றம் அடிக்கிறது. பட்டுக்கோட்டையில் இப்போது புதிதாக 'யானைக்கால்' வியாதி வந்திருக்கிறது. முன்பு கும்பகோணத்தில் தான் அது இருந்தது. இந்த மாதிரி நிலையெல்லாம் இருக்கிறது. ஆகையால் நகரங்கள், கிராமங்கள் இவற்றில் வாழ்க்கைக்கேற்றவாறு முன்னேற்றம் ஏற்பட நிதி ஒதுக்க வேண்டும். அப்படி இல்லாமலிருக்கிறதைப் பார்க்கிறபோது வருத்தமாக இருக்கிறது.

இந்த வாரியங்கள் தேவையா? குடிநீர் வாரியம், கழிவு நீர் வடிகால் வாரியம் என்று புதிது புதிதாக உண்டாக்கப்படுகிறது. இந்த வாரியங்களை ஏதோ தங்களுக்கு வேண்டியவர்களுக்குப் பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காக வைத்திருக்கிறீர்கள். இவையெல்லாம் தேவைதானா? இந்த வேலைகளெல்லாம் பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளிடம் கொடுக்கவேண்டிய, அவைகள் செய்ய வேண்டிய வேலைகளில்லையா? ஏன் இப்படி அவற்றின் அதிகாரத்தில், வேலைகளில் தலையிடுகிறீர்கள் என்று புரியவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு அதை நிறுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அப்புறம், பட்டுக்கோட்டையில் ஒரு கல்லூரி வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகச் சொல்லியும் இதுவரை அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது பட்டுக்கோட்டையின் 'பிராப்தமோ' என்னவோ தெரியவில்லை. அங்கேயிருந்து தான் பழைய காங்கிரஸ் ஆட்சியில் மந்திரியாக இருந்த திரு. ஆர். வெங்கடராமன் அவர்களும் வந்தார்கள். இப்போதிருக்கிற கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் அவர்களிடம் சொல்லியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவர்களும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. போன வருடம் கேட்டபோது இந்த வருடம் வைக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் எந்தவித

நடவடிக்கையும் எடுக்கவில்லை. விரைவில் அங்கே ஒரு கல்லூரி அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அறந்தாங்கி எந்த வட்டத்தைச் சேர்ந்தது என்று கேட்கிறேன். அதிராமபட்டினத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. அது பட்டுக்கோட்டையிலிருந்து 6 மைல் தூரத்தில் தானே இருக்கிறது. அது எந்த வட்டத்தைச் சேர்ந்தது?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** சில பேர்கள் அவர்களின் ஆசாபாசத்துக் கேற்றவாறு அவைகளை அமைத்திருக்கிறார்கள். ஆகவே பட்டுக்கோட்டைக்கு என்று ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பட்டுக்கோட்டையில் ஒரு கல்லூரி இல்லையே என்பதுதான் எங்களின் குறை. இன்றைக்கு அந்தப் பகுதியைச் சார்ந்த இரண்டு அமைச்சர்கள், மூன்று அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இறுதியாக, புதுக்கோட்டை மாவட்டம் ஏற்படுத்தியதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தை 'டிக்களேர்' பண்ணியது பெரிதில்லை. எந்தவித அரசியல் கண்ணோட்டமும் இல்லாமல் அதை எல்லா வகையிலும் ஒரு நல்ல மாவட்டமாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சப்ளிமெண்டரி பட்ஜெட் கொண்டுவருவதற்கு முன்னதாக அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக் கிறேன். வணக்கம்.

* **திரு. டி. வி. முத்துகிருஷ்ணன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் முதன் முதலாக எனது கன்னிப் பேச்சைப் பேசிட எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பேச்சைத் தொடங்கும் முன்பு என்னைப் போன்ற சாதாரணமான தொண்டர்களை அரசியலுக்கு ஆளாக்கிவிட்ட மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, அவர்களின் கல்லறை நோக்கி, எனது சிரம் தாழ்த்தி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இம் மாமன்றத்தில் என்னையும் ஒரு உறுப்பினராக இடம் பெறச் செய்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, நமது முதல்வர் அவர்கள் இம் மாமன்றத்தில் தாக்கல் செய்த 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை இன்று வரவேற்றுப் பேசுவதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். சமதர்மம் என்ற சொல்லுக்கு உண்மை யான வடிவம் தந்து, ஏழை எளிய மக்களை வாழவைத்திட இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தமிழக அரசின் திட்டங்களை முதல்வரின் அறிக் கையிலே கண்டு மனம் நிறைந்த பெருமையினை நான் அடைகின்றேன். அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, ஏழை எளியோர்க்கு, இரப் போர்க்கு, குடிசை வாழ்வோருக்கு, குருடராகி விட்டோருக்கு, வீட்டு மனை இல்லாதோருக்கு, விவசாயத் தொழிலாளருக்கு, மேட்டுக்குடியினரால் மிதி பட்டு சாவோருக்கு, ஆண்டாண்டு காலமாய் அவதிப்படும் அரிஜன மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவும் நல்வாழ்வு தந்திடவும், வாட்டத்தைக் குறைத்திடவும், வறுமையைப் போக்கிடவும் சொல்லால் அல்லாமல் செயலால் நல்ல திட்டங் களால் தமிழகத்தில் வளங்காண வழிவகுக்கும் இந்த நிதிநிலை அறிக்கையினைப் பூரிப்போடு வரவேற்கின்றேன்.

அடுத்து, இத்தனை ஆண்டுகள் இருந்த அரசுதான் நாட்டிலே உள்ள ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களைப்பற்றி எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. திருச்சி மாவட்டத்தில் கரூர் பகுதியில் மட்டும் 30,000 கைத்தறி யாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் நமது அரசு தான் நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயக்குழு அமைத்திருக்கிறது. இதற்காக நெசவுத் தொழிலாளர் சமுதாயம் என்றென்றைக்கும் கடமைப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி, அரசு கைத்தறி நெசவாளர்களின் குறைந்தபட்ச கூலி நிர்ணயத்தைச் சட்டம் செய்து அறிவித்த பின்னர், அது முறையாகத் தொழிலாளர்கள் வசம் போய்ச் சேரவேண்டுமானால், அரசு கீழ்க்கண்ட முறையைக் கையாளவேண்டும் எனப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் :—

1. ஐந்து தறிகளும் அதற்கு மேலும் வைத்துள்ளவர்கள் மாஸ்டர் வீவர்கள் அல்லது உரிமையாளர்கள் என அறிவித்து அப்படி உள்ளவர்கள் தொழிலாளர் நல அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டும்.

2. தொழிலாளர்களின் வருகைப் பதிவேடும் கூலிப் பதிவேடும் வைத்துக் கொள்ள வேண்டும்.

3. ஒரு மாஸ்டர் வீவரிடமோ, உரிமையாளரிடமோ தொடர்ந்து ஆறு தினங்களுக்குக் குறையாமல் வேலை செய்த நெசவுத் தொழிலாளிக்கு அவரது ஆண்டுக் கூலி விகிதத்திலிருந்து கணக்கிட்டு போனஸ் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பில்
பட்டு, பாடூன்றும் களிறு"

என்ற பொய்யாமொழிக்கேற்ப இயற்கை பொய்த்ததினால் ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல, இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட கேடுகளும் இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால் என்றோ உருவாக்கப்பட்ட அரசியல் சட்ட அடிப்படையில், இம் மாநில அரசின் முன்னேற்றமான அனைத்துக் காரியங்களும் 1,500 மைலுக்கப்பால் மத்திய அரசாங்கம் என்ற பெயரால் அரசோச்சும் பெரியவர்களின் மன வளத்துக்கு ஏற்றாற்போல் கூட்டியும் குறைத்தும் நமது தேவைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைகளும் அதனால் திட்டங்களை நிறைவேற்ற முடியாத தேக்கநிலையும், வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக ஒரு சில மன வளமில்லாத எதிர்க்கட்சிக்காரர்களின் விரும்பத்தகாத எரியீட்டிகளின் தாக்குதலும், இந்த அரசின் விலாவில் பாய்ந்தாலும் ஏழைகளின் சிரிப்பில் எளியவர்களின் வாழ்வில் ஏற்றம் காண புரட்சிகரமான, துணிச்சலான இந்த நிதிநிலை அறிக்கையினை இம் மன்றத்தில் தாக்கல் செய்து எதையும் தாங்கும் இதயத்தோடு பொற்கால ஆட்சியினை உருவாக்கிட அறிஞர் அண்ணாவின் வழியில் அயராது உழைக்கும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் 1973-74-ம் ஆண்டினுடைய நிதி நிலை அறிக்கையில் ஒன்பது புதிய அம்சங்களை நாட்டுக்குத் தெரிவித்து நல்லதொரு சமதர்ம திட்டதை நமது அரசு நிறைவேற்றியிருப்பதை நல்ல மனம் கொண்டவர்கள் கூட பாராட்டுவதற்கு மனமில்லாமல் இருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினைக் கண்டித்துப் பேசினார்கள். இது ஒரு அறிக்கை தானா என்று கூடக்கேட்டார்கள். இன்றைய தினம் மத்திய சர்க்கார் நிதிநிலை அறிக்கையை நாட்டுக்கு அளித்திருக்கிறது. அந்த அறிக்கையிலே நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிகிற புது வரிகளை அவர்கள் மக்கள் மீது போட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பார்த்தவர்கள் கூட இந்த நமது அறிக்கையைப் பாராட்டுவதற்கு மனமில்லாமல், இதைக் கண்டித்து, ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கோடு தான், பேசுகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே புது வரிகள் எதுவுமில்லை. பழைய வரிகளும் அதிகப்படுத்தப்படாமலிருக்கின்றன. மேலும் ஒரு உபரி நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பதிலிருந்து நமது அரசின் நிதி நிலையின் ஸ்திரத் தன்மையை அறிய முடிகிறது என்பதைத் தெரிவித்து,



தமிழக வரலாற்றில் புதிய பொன்னேடாக அமைந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் பேச்சை முடித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த 1973-74-ம் ஆண்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தை நிதி இலாகாப் பொறுப்பேற்றிருக்கிற முதல்வர் அவர்கள் சமர்ப்பித்து அவையினுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். அதிலும் இந்த ஆண்டு புதிய வரி இல்லாமல், மாநிலத்தில் உள்ள நிலைமையைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதற்குத் தகுந்தபடி சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்துகின்ற பாணியிலே, பயணத்திலே இந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார். அதை நான் வரவேற்று என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பல குறிப்பான நன்மைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. முதலிலே இது வரி இல்லாத ஒரு வரவு-செலவு பட்ஜெட். பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கெல்லாம் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கு விசேஷமான பண ஒதுக்கீடுகளும் அதற்கான அமைப்புகளும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. அடித்தளத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கு குறைந்த அளவு வீட்டு வசதியாவது செய்து தரவேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரை லட்சம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், அவர்கள் ஏற்கெனவே குடியிருந்த மனைகளையெல்லாம், சொந்தமாக்கிக் கொடுத்திருப்பது பாராட்டக் கூடியதாகும். அண்மையிலே ஏற்பட்ட வெள்ளம், வறட்சி, புயல் இவைகளாலே தமிழ் நாடு வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக எங்கள் ஜில்லாவாகிய தென் ஆற்காடு, மற்றும் வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர் பகுதிகளெல்லாம் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் தென் ஆற்காடு ஜில்லாவை வெள்ளம் மிகவும் அதிகமாகப் பாழ்படுத்தியிருக்கிறது. விவசாயிகள் பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளமும், புயலும் ஒன்றும் புதிதல்ல. எனினும், அண்மையில் வந்த வெள்ளம் மணலை அதிகமாக நிலங்களிலே வாரிவிட்டு, மூடிவிட்டுச் சென்றுவிட்டது. 10 ஆயிரம் ஏக்கர்களில் 2 அடி, 3 அடி அளவுக்கு மணலைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. அதனால் ஏற்கெனவேயுள்ள விவசாயிகளுடைய பயிர்களெல்லாம் நாசமாக்கப்பட்டன. மேற்கொண்டு விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலைமையை உண்டுபண்ணிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்தில் எங்கும் வந்ததாகத் தெரியவில்லை. அந்த நிலை அண்மையில் நமக்கு வெள்ளப் பாழினால் வந்துவிட்டது. மற்ற பாழ்களையெல்லாம் எப்படியாவது சீர்படுத்திவிட முடியும். ஆனால் இந்த மணலை எங்கே வாரிக் கொட்டுவது, அடுத்த நிலத்தில்

வாரிக் கொட்டுவதா என்கின்ற நிலையில் அந்த விவசாயிகளால் செய்ய முடியுமா என்ற ஒரு பீதியும், பயமும் இருந்து கொண்டிருந்தது. ஆனால் நமது முதல்வரவர்கள் அரசாங்கத்தின் சொந்தச் செலவிலே, ஒரு நல்ல காரியத்தை, பெரியதொரு காரியத்தை, மணல் எடுக்கும் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதைக் கடவுள் கூட செய்ய முடியாதென்றாலும் (கைதட்டல்), நம்முடைய முதல்வர், கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர் வெள்ளத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த மக்களைக் கைதூக்கிவிட்டிருக்கிறார். நான் இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன். இப்போதெல்லாம் அதிகமாகப் பேசப்படுகின்ற பிரச்சினை மின்சாரமும், அதனுடைய பற்றாக்குறையும்தான். எப்படி இந்த நிலைமை வந்தது என்பதில் பல்வேறு குற்றச்சாட்டுகளும், குறைபாடுகளும் பேசப்படுகின்றன. ஆனால் இது ஒரு கட்சிப் பிரச்சினையல்ல. இது மக்களுடைய பிரச்சினையாக இருக்கின்றது. அண்மையில் நமது முதல்வரவர்களும், மின்சாரத் துறைக்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்களும், அரசு பல நாட்களாக, பல மாதங்களாக, பல வருடங்களாக எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளையெல்லாம் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். தண்ணீர் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பதையெல்லாம் அவர்கள் முன்கூட்டியே செய்துதான் இருக்கிறார்களென்பது அவர்களுடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. ஆனால் அவைகள் எல்லாம் மாநில அரசினுடைய முழுப் பொறுப்பில் இல்லை. அவைகள் மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு செய்யப்பட வேண்டிய ஒரு நிலைமையை இந்த விவரங்களிலிருந்து அறிகிறோம். முன்பெல்லாம் மின்சாரம் என்றால், யாரும் கவலைப்பட மாட்டார்கள். மக்களுக்குத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த நிர்ப்பந்தம் வந்தபிறகு, வாழ்க்கையில் மின்சாரத்தின் தேவை எவ்வளவு என்பதை அறிய முடிகிறது. மின்சாரம் இல்லாமல் போய்விட்டால், வாழ்க்கையே சீர்குலைந்து போகிற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நிலைக்கு ஒருவர் மேல் ஒருவர் குற்றங்களைச் சொல்லாமல், குறைகளைச் சொல்லாமல், இதை இன்னும் காலதாமதப்படுத்தாமல், எந்தெந்த வகையிலே மத்திய அரசு பொறுப்பு, மாநில அரசு கவனிக்கவில்லையென்ற பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டு போகாமல், இதற்குத் தீர்வு காண அனைவரும் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அனைவரும் ஒத்துழைப்புத் தந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உட்பட வேண்டும். எப்படி போர்க் காலங்களில் அனைவரும் ஒன்றுபட்டு, கட்சிப் பாகுபாடு இல்லாமல் உறுதியாக இருந்து,



எதிரியைத் தோற்கடிக்க முழு முயற்சியும் எடுத்துக் கொள்கிறோமோ, அது போன்று இந்த நிலைமையைச் சமாளிக்க வேண்டும். அத்தனை கட்சிகளும் வீண் வாதங்கள், கிளர்ச்சிகள் செய்வது, இவர் செய்தது தவறு, அவர் செய்தது தவறு, மத்திய அரசு செய்தது தவறு என்று கூறிக்கொண்டிருக்காமல், அவர்களைச் சரிக்கட்டிக்கொண்டு, எங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவல நிலையைப் போக்க உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அனைத்துக் கட்சிகளும் இதை மக்கள் பிரச்சினையாக ஏற்றுக்கொண்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் நிலைமை எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் நன்றாக உணர்கிறேன். இன்றைக்குள்ள நிலையில், விவசாயத்திற்காக 4 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. முன்பெல்லாம் 24 மணி நேரமும் ஓடிக்கொண்டிருந்தது. எனக்கே 4 மணி நேரம் போதவில்லை. இது பொதுவாக உள்ள பற்றாக்குறை. இந்தப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்திற்காக எவ்வளவோ உதவிகளும், மானியங்களும், கடன்களும் வழங்கப்பட்டுள்ளன. நாம் கொடுக்கும் இந்தப் பணம், விவசாயிகள் கையில் போய்ச் சேரும்போது, பலவிதமான தவறுகளும், மோசடிகளும் ஏற்பட்டு, அவர்கள் சரியான முறையில் காரியங்களை ஈடேற்ற முடியாமல் போகிறது. குறிப்பாக அமோனியம் உரம் வழங்கப்படுகிறது. மாநில அரசு கோருகிற முழு அளவுக்கு மத்திய அரசு வழங்குவதில்லை. பாதி அளவுக்குத் தான் அனுப்புகிறது. எனவே பற்றாக்குறை வந்தால், பலவிதமான தகராறுகள் உண்டாகின்றன. அந்த நிலையைப் போக்க வேண்டும். இப்போது உரங்கள் எல்லாம் விவசாயிகளுக்கு நேரடியாக வருகின்றன. அந்த உரங்களெல்லாம் அவர்கள் கைக்குப் போய்ச் சேர்வதற்காக, 'கார்டு' முறைகளைக் கொண்டு வழங்கப்போவதாக நமது மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் முதலில் தென் ஆற்காடு ஜில்லாவில் அதை அமுலாக்கப்போவதாகச் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். விவசாயிகளுக்கு உரங்கள் நேரடியாகப் போய்ச்சேருவதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனம். இன்றைக்கு உள்ள ஆறுகள், ஏரிகள், குளங்கள் முதலியவற்றில் இருப்பதை வைத்துக்கொண்டு விவசாயம் செய்கிறோம். அவைகள் எல்லாம் போதுமானதாக இல்லை. பூமிக்கு அடியில் உள்ள நீரை எப்படியாவது மேலே கொண்டுவந்து, அதை விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்குத் தர தக்க முயற்சி எடுக்க வேண்டும். அவர்களுக்கு இந்த விஷயத்தில் உதவி செய்ய அரசு முற்பட வேண்டும். அதற்கான திட்டங்களையெல்லாம் தீட்ட வேண்டும். நம் மாநிலத்தில் ஜீவ நதிகள் கிடையாது. மற்ற மாநிலங்

களிலிருந்து வருகிற ஜீவ நதிகளை நம்பி, அவர்கள் தயவு தாட்சண்யத்தில் இருந்து வருகிற நிலையில் இருக்கிறோம். அவர்களுக்குக்கூட கட்டுப்பாடுகளும், குறுக்கீடுகளும், பல வழக்குகளும் இருப்பதைப் பார்க்கிறோம். அதனால் எந்த அளவுக்கு நம்முடைய தமிழகத்திலே விவசாயத்திற்கான நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். செய்வது என்றால், பூமிக்கு அடியிலுள்ள 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்'ஐப் பயன்படுத்த முடியும். அதையெல்லாம் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களுடைய நல்வாழ்வுக்காகப் பரிந்துரைகள் செய்வதற்காக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திரு. சட்டநாதன் தலைமையில் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் ஒரு அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலுள்ள பரிந்துரைகளை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு கூட, மாணவர்கள் தலைக் குழு ஒரு ஆண்டு விழாவில் முதல்வரவர்களை வரவழைத்து, அத்தனை விவரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். நீண்ட பட்டியலை வாசித்துக் கொடுத்தார்கள். அதை முதலமைச்சரவர்கள் படித்துப் பார்த்து, எந்த அளவுக்குப் பரிசீலனை செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து தருகிறோம் என்ற உறுதியையும் தந்திருக்கின்றார்கள். அதிலே தப்பாகவோ, தவறுதலாகவோ, மற்றவர்கள் குறை சொல்லும்படியோ, குற்றம் சொல்லும்படியாகவோ ஒன்றும் கூறவில்லை. உண்மையில் பிற்பட்ட மக்களுக்கு, இன்றைய நிலையில் சமுதாய சகாப்தத்தை ஏற்படுத்துவதில் எவ்வளவு இடர்ப்பாடுகள் இருக்கின்றன என்பதும், ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், கல்வி தருவதற்கும், இன்னும் சுகாதார வசதிகளுக்கும் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் முதல்வர் அவர்கள் நன்கு ஆராய்ந்து உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திரு. சட்டநாதன் குழு பரிந்துரைகளைச் சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கிறது. அதிலே கூறப்பட்டுள்ள பொரிகளையெல்லாம் செய்ய வேண்டும். அதற்கு அதிகமான பணச் செலவோ, சட்டத் திருத்தங்களோ தேவையில்லை. அதைச் செயல்படுத்துவதற்கு எந்தச் சூழ்நிலை தடையாக இருக்கிறது என்று தெரியவில்லை. அந்தத் தடையையெல்லாம் போக்கி, பின் தங்கிய மக்கள் வாழ்வுக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று ரொம்பப் பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, விழுப்புரத்திற்குப் பக்கத்தில் உள்ள ஒரு ஏரிக்குத் தண்ணீர் வேண்டும், தண்ணீர் ஏரியில் இல்லை, அதற்கு சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று சொல்லி, அந்த



ஊர் விவசாயிகள் வந்து என்னிடத்தில் முறையிட்டார்கள். அவர்களை நேராக அமைச்சரிடத்தில் கொண்டு போய் விட்டேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அது சம்பந்தப்பட்ட இலாகாவினரைக் கூப்பிட்டு தண்ணீர் திறந்து விடவேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அப்போது கீழேயிருந்த அதிகாரிகள் ஏதோ கொஞ்சம் தாமதம் செய்து இடைஞ்சல் கொடுக்க முயற்சித்தார்கள். மீண்டும் அமைச்சர் அவர்கள், தைரியமாகத் திறந்து விடு, தண்ணீர் போய்ச் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் பரவாயில்லை, யாருக்காவது பயன்படத்தான் போகிறது என்று ரொம்ப உறுதியாக உத்தர விட்டார்கள். அதனால் கிராம மக்களின் 400 ஏக்கர் நிலம் பெரிய விபத்தி லிருந்து காப்பாற்றப்பட்டது. அது மட்டுமல்ல, வழியில் இருந்த பல ஊர் மக்களும் அதனால் பயனடைந்தார்கள். இவ்வாறு மக்கள் குறை நேரடியாகத் தெரிந்தவுடனே, அதற்குப் பரிகாரம் செய்கின்ற ஒரு தன்மைக்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், தைரியமாக இந்தக் காரியத்தைச் செய்ததற்காக, அவருக்கு விசேஷப் பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறநிலையக் கோவில்களில் தர்மகர்த்தாக்களை நியமிப்பது பற்றிய விஷயம். இந்த நியமனங்கள் கட்சிக் கண்ணோட்டத்தில் செய்யப்படு வதாகத் தெரிகிறது. அதிலேயும் எங்கள் ஊரில் நடந்த சம்பவத்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களிடத்தில் கூட சொன்னேன். அங்கே திருப்பணிக் கமிட்டி அமைத்து, பல லட்சக்கணக்கான ரூபாய் வசூல் செய்தார்கள், திருவந்திபுரத்தில். அந்தக் கமிட்டியில் ஒருவரைக் கூட அந்தக் கோயில் தர்மகர்த்தாவாக நியமிக்கவில்லை. ஆனால், அதே ஊரில் ஒரு 'டீ' கடை வைத்திருப்பவரை நியமித்திருக்கிறார்கள். 10 லட்சம், 5 லட்சம் ரூபாய் என்று வசூல் செய்து திருப்பணி செய்தவர் களுக்கு அந்தக் குழுவில் இடம் கொடுக்கவில்லையென்றால், அங்கேயுள்ள மக்களுக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது. ஐந்து பேர்கள் டிரஸ்டிகள் என்றால், 4 பேர், 3 பேர் வேண்டுமென்றால், கட்சியின் பெயரால் இருக்கட்டும். அந்தக் கோயிலுக்காக உழைத்தவர்கள், திருப்பணி வேலைக்குப் பணம் 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று வசூல் செய்து கொடுத்தவர்கள், அப்படிப் பட்டவர்களை அப்பதவிகளில் போடாததற்கு வருத்தம் கூறிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1973-74 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது, அவர்களுடைய உரையில் திட்ட ஒதுக்கீடுபற்றி அவர்கள் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். திட்ட ஒதுக்கீட்டில் பாரபட்சம் நடக்கிறது, மாற்றாந்தாய்ப் பிள்ளைமாதிரி நடத்தப்படுகிறார்கள் என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் ஒரு பரிகாரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். திட்டங்கள் போடுவதில் பணம் ஒதுக்குவதற்கு நிதிக் கமிஷனுக்கு முழு அதிகாரம் கொடுத்துவிட்டால், இந்த நிலைமை ஏற்படாது, அதற்கு அது ஒரு நிரந்தரமான பரிகாரம் ஆகிவிடும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். என்னுடைய கருத்தில் 7½ பெர்செண்ட் ஜனத்தொகை இருக்கும்போது, 10.8 என்று இருந்தது, இப்போது 4 சதவிதம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது குறைந்ததற்கான காரணம் தெரியவில்லை. நம்முடைய தமிழ் நாடு 'டெவலப்டு ஸ்டேட்' என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்களா என்று எனக்கு விவரம் தெரியவில்லை. ஒரு நண்பரிடம் கேட்டேன், அப்படி இருக்கலாம் என்று சொன்னார். ஆனால், 'டெவலப்டு ஸ்டேட்' என்பதற்கு ஒரு அபராதம் விதித்தது மாதிரி இருக்கக்கூடாது. கார்ப்பரேஷன் டாக்சைச் சேர்த்து, மொத்தம் வருகின்ற வருமானத்தில் 50 சதவிதம் ஸ்டேட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்த அடிப்படையிலாவது, நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில், யாருடைய தயவோ, விருப்பு வெறுப்போ இல்லாமல், மத்தியில் ஒரு கட்சி அரசு, மாநிலத்தில் ஒரு கட்சி அரசு என்று இருந்தாலும், பொதுப் பணம் என்ற முறையில் அது சரியான முறையில், நியாயமான முறையில் கொடுக்கப்பட வேண்டும். இப்போது இருக்கின்ற நிதிக் கமிஷன் தலைவர் திரு. பிரம்மானந்த ரெட்டி அவர்கள், திரு. தாமோதரன் சொன்னது மாதிரி, ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தவர்கள். மாநிலத்திற்கு என்ன என்ன தேவை என்று அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய தலைமையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நினைக்கிறேன். இந்த மாதிரியான சூழ்நிலை இருப்பது எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் மனவேதனையாக இருக்கிறது. திரு. ஆறுமுகசாமி அவர்களிடம் இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தேன். இதற்கு ஒரு முடிவுகட்டியாக வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இந்த மாதிரி அபிப்பிராய பேதம் உண்டாக்கிக் கொண்டிருப்பது சரியல்ல. அதைப்பற்றி விமர்சனம் செய்யக்கூடிய காரியமாக இருக்கக் கூடாது. நாம் ஒரு நல்ல முடிவு கட்டியாக வேண்டுமென்று சொன்னார்கள். நிதிக் கமிஷனிடத்தில் விட்ட பிறகு புதுத் திட்டங்கள் வருகின்றன, இதற்குப் பணம் இல்லை என்று சொல்கிற மாதிரி பிரச்சினை ஏற்படுமா என்ற சந்தேகம் எழுகின்றது. அதனாலே, எது நல்லது, எது சரியானது என்பதை எல்லோரும் சேர்ந்து முடிவு செய்துவிட்டால், வருங்காலத்தில், இந்த மாதிரியான மாற்றாந்தாய்ப்





போக்கு என்று சொல்லும்படியாக ஒருவருக்கொருவர் சங்கடம், குழப்பம் முதலியவை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக அவர்களுடைய விஷயத்தில் அபிப்பிராயம் சொல்லுவதற்கு உரிமை இல்லையென்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு முடியுமானால் ஏற்றுக்கொண்டு, அதை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் 'கவர்னர் அட்ரஸில்' பேசும்போது, திரு. பிரம்மானந்த ரெட்டியைப் பார்த்த நேரத்தில் மாநிலத்திற்குத் தான் பெரிய அளவில் வசதிகள் செய்கின்ற பொறுப்பு இருக்கிறது, அதற்கு நிதி அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான் அவர்களிடம் சொன்னேன் என்று சொன்னேன். மத்திய சர்க்காரின் மேற்பார்வையில் தான் நிதி ஆணைக்குழு இருக்கிறது. அது பொருத்தமாக இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. பொருத்தமாக இருக்கும் என்றால் அதை நாம் ஒப்புக்கொண்டு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்தது, புயல் வெள்ள நிதி நிவாரணம் ஒதுக்குதல் பற்றியது. இது ஒரு 'கன்டின்ஜென்ஸி எக்ஸ்பென்சஸ்' மாதிரி இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இது அவசியமா என்று தெரியவில்லை. ஒதுக்கப்பட்டு அது செலவழிக்கப்படாவிட்டால், 'காரி ஓவர்' ஆகிக்கொண்டேயிருக்கும். வேண்டுமென்றால், நாம் கேட்டால் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். 25 கோடி ரூபாய் கேட்டார்கள், 14½ கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதற்கு முன்பு 18 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆகவே அதற்காகத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உர சப்ளைக்கு இரண்டு லட்சத்து 74 ஆயிரம் டன்னுக்குப் பதில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் டன் தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உர சப்ளை குறைந்ததால், 49½ ரூபாய்க்கு நம் சொசைட்டியில் விற்ற உர மூட்டை 70, 80 ரூபாய் வரை போயிற்று. நாம் கேட்கின்றபோது மார்க்கெட்டிங் சொசைட்டியிலிருந்து நியாயமாகப் போய்ச் சேருவதில்லை யென்ற நிலைமை இருக்கிறது. ஜாஸ்தியாக இருந்தால், பிளாக் மார்க்கெட் குறையும். இப்போது 'கரண்ட் கட்' வந்தவுடனே, அதே சப்ளைக்கு 5 ரூபாய் கொடுக்க ஆள் இல்லை. மார்க்கெட்டிங் சொசைட்டியிலிருந்து எடுத்துக்கொண்டு போகமாட்டேன் என்கிறார்கள்.

அடுத்து, கிராமங்களுக்கு அதிகப்படியான மருத்துவ வசதி செய்து கொடுக்கவேண்டும். அது சம்பந்தமாக திரு. சந்திரசேகர் தேவர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களில் மருத்துவமனை இல்லை என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகள், பிரைமரி ஹெல்த் சென்டர்கள்

எல்லாம் இருக்கின்றன. 374 பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரே மாதிரியாகச் செய்வது என்பது எளிதான காரியம் அல்ல. நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பார்த்தால், அதிகமாக டவுனில் உள்ள மருத்துவ மனைகளின் விஸ்தரிப்பில் தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு பகுதி கிராமப்
T.L.I. புறங்களில் செய்வதற்கு ஏற்பாடு செய்தால், நன்றாக இருக்கும். பழைய
6-20 காலத்தில் ஆயுர்வேத வைத்தியர்கள், நாட்டு வைத்தியர்கள் என்று இருந்தார்கள். இப்போது எதற்கெடுத்தாலும் அல்லோபதி டாக்டரிடம் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் கிராமப்புறங்களிலே அதிக வைத்திய சாலைகள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நமக்கு ரூ. 450 கோடி அளவிலே மொத்த வருவாய் வருகின்றது. அதிலே கிட்டத்தட்ட ரூ. 110 கோடி, அதாவது நான்கில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவழிக்கின்றோம். ஆனால் கல்விக்காகச் செலவிடும் ரூபாய், மாணவர்களுக்காகச் செலவழிக்கின்ற ரூபாய், இவைகள் எல்லாம் எந்தெந்த வகையிலோ செலவாகிப்போய்க் கொண்டே இருக்கிறதே என்று நான் மிகவும் மன வருத்தம் அடைந்தேன். இவ்வளவு பெரும் தொகையை நாம் இங்கே கொண்டுபோய்ப் போடுகிறோம், பலன் ஒன்றுமில்லையே என்று தான் மன வருத்தத்தோடு சொல்லிக் கொள்கின்றேன். எதற்கெடுத்தாலும், பள்ளி வேலை நிறுத்தம், கதவடைப்பு என்று சொல்லுகின்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கின்றது. இதுபற்றி கடந்த தடவையே நான் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். பள்ளி மாணவர்களை இந்த மாதிரியான வன்முறைப் போக்குக்கு யார் தூண்டி விடுகிறார்கள், ஆசிரியர்களா அல்லது மாணவர்களாகவே செய்கின்றார்களா என்று காண வேண்டும். மாணவர்களிடையே ஒரு நல்ல ஒழுக்க முறையை ஏற்படுத்தவேண்டும். இனிமேல் அந்த 110 கோடி ரூபாயும் நல்ல முறையில் செலவழிக்கப்பட வேண்டும். கல்வித் தரம் குறையாமல் இருக்க வேண்டும். கல்வித் தரம் ஒழுக்க அடிப்படையிலே அமைய வேண்டும். தமிழ் நாட்டிலே இருக்கின்ற மாணவர்கள் நன்கு பயில்கின்றார்கள். நல்ல ஒழுக்கமுடையவர்களாக, முன்பு இருந்ததைப்போல, மறுபடியும் நல்ல பெயர் வாங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசும் எதிர்க்கட்சிகளும் சேர்ந்து முடிவு செய்து முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மின் வெட்டுத்தான் இப்போது பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. இந்த மின்சார வெட்டு வந்த உடனே, எங்கள் ஊரிலே கற்காலத்திற்கே போய் விட்டோமோ என்று நினைத்தேன். இரண்டொரு டவுன்களிலே மின்சாரம் கொடுக்கின்றார்கள். கிராமத்திலே மின்சாரம் கண்டிப்பாகக் கொடுப்பதில்லை.



ஒருவர் டைமிங் கூட தெரியவில்லையென்று சொன்னார். அதை நான் ஒத்துக் கொள்வதற்கில்லை. இப்போது மின்சார போர்டுக்காரர்கள் ஒரு ஊருக்கு இவ்வளவு மணி நேரம் என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்களா, யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஏனென்றால் அதற்காக எல்லா ஊர்களுக்கும் தகவல் வந்திருக்கின்றது. எனது தோட்டத்திற்கு 6 மணி முதல் 12 மணி வரை நிச்சயமாகக் கொடுக்கப்படுகிறது. அதனாலே என் வேலைக்காரன் 6 மணிக்குப் போய்விடுவான். ஆறு மணியிலிருந்து 7 மணி வரை கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அது கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. மின்சாரப் பற்றாக்குறை 4 மாதமாக உள்ளது. இந்த ஏப்ரல், மே-இல் நீலகிரியிலே ஃப்ளவர் ஷோ என்று ஒன்று நடக்கிறது. அன்றைக்குத்தான் மத்தியான நேரத்தில் மழை பெய்யும். அதாவது மே மாதம் 20, 22 தேதிகளில் வரும். அன்றைய தினத்தில் மத்தியானத்திற்கு மேலே மழை வரும். அப்போது ஃப்ளவர் ஷோ ஆரம்பித்து விடுவார்கள். நாம் இந்த 4 மாதத்தை எப்படிக் கழிக்கப் போகின்றோம்? விலைவாசி வேறு ஏறிக்கொண்டிருக்கின்றது. ஒரு நாள் நானே ஒரு புதிய அரிக்கேன் லைட்டை வாங்கி பங்களாவில் ஏற்றுவதற்காக, 30 பைசா கொடுத்து மண்ணெண்ணெய் வாங்கிவரச் சொல்லி ஒருவரை அனுப்பினேன். அவர் 50 பைசா என்று சொல்லுகின்றார்கள். வாங்கி வந்திருக்கிறேன் என்றார். அது இரண்டு நாளைக்கு வரவில்லை. சில்லறைக் கடைகளில் இருக்கின்ற நிலையைச் சொல்கிறேன். இந்த மாதிரியான நிலை இருக்கின்றது. இது காரணமாக, கிராமத்தாருக்கு கார்டு சிஸ்டத்திலே நல்ல முறையிலே கெரோஸின் விநியோகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படியும் சேர வேண்டிய ஊருக்கு தேவையான பொருள்கள் வந்து சேர்வதில்லை. நாம் கஷ்டப்பட்டு சேகரித்துக்கொடுக்கின்ற சர்க்கரை, உரம் போன்றவைகள் கன்ஸ்யூமர்களுக்குப் போய்ச் சேராத நிலைமை இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் மறுபடியும் வற்புறுத்திக் . கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாம் இடைத் தரகர்களை நியமிக்கின்றோம். அவர்கள் சரியாகச் செய்வதில்லை. இதை நன்றாகச் செய்ய வேண்டுமென்று மாவட்டக் கலெக்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு கண்டிப்பான உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நானும் கலெக்டர்களிடம் சொன்னேன். சில விஷயங்களைச் செய்திருக்கின்றார்கள்.

நெசவாளர்களுக்கு நூல் சப்ளை விஷயமாக நம்முடைய சர்க்காரிலே ஏற்கெனவே ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அவர்களுடைய பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. நான் கோயம்புத்தூருக்கு சமீபத்திலே

போயிருந்தேன். ஸ்டேட் மார்க்கெட்டிங் போர்டு மீட்டிங்குக்குப் போயிருந்தேன். திருப்பூரிலிருந்து எல்லா வியாபாரிகளும் வந்திருந்தார்கள். அவர்கள், " அந்தக் காலத்திலே பருத்தி விலை ரொம்ப அதிகமாக இருந்தபோது, ஒறார்வி, மில்காரர்கள் மில்லை முடிவிடுவோம், பஞ்சு மில்காரர்கள் மில்லை முடிவிடுவோம் என்று சொன்னார்கள். அரசாஙகம் கன்ட்ரோல் விலையில் பஞ்சு கொடுக்க வேண்டுமென்று மில்காரர்கள் கேட்ட அந்தக் காலத்தில் நீங்கள் சர்டிபிகேஷன் ஸ்கீமிலே மெம்பராக இருந்து, பஞ்சு வாங்கிக் கொடுத்தீர்கள். அந்த மாதிரியாக இப்போது சர்க்காரிடத்தில் ஒரு கார்ப்போரேஷனை வைத்து பருத்தியை வாங்கச் சொல்லுங்கள்" என்கிறார்கள். அப்போது அக்ரிகல்சுரல் செக்ரட்டரியும் இருந்தார்கள். நான் உடனே அடுத்த கூட்டத்திற்குப் போகும்போது முதலமைச்சர் அவர்களிடத்தில் இந்தப் பருத்தியை வாங்குவதற்கு ஏற்பாடு செய்கின்றேன் என்று சொன்னேன். சமீபத்திலே ஒரு அறிக்கையைப் பார்த்தேன். ஜாய்ண்ட் டைரக்டராக இருக்கும் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தஞ்சாவூரிலே இருக்கின்ற பருத்தியை மாத்திரம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்கின்றோம் என்று சொன்னார்கள். குவிண்டால் ஒன்றுக்கு 200 ரூபாய், பேசிக் பிரைஸ் வைத்து வாங்குகின்றோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். தஞ்சாவூரிலே மாத்திரம் வாங்கிப் பிரயோசனமில்லை. கோயில்பட்டி, விருதுநகர், திருப்பூர் முதலிய இடங்களில் ஒவ்வொரு சென்டர் இருக்க வேண்டும். கூடுமானால் உடுமலைபேட்டையிலும் ஒரு சென்டர் வைக்க வேண்டும். இங்கெல்லாம் பருத்தியை வாங்கி வைத்துக்கொள்ளலாம். நிச்சயமாக நஷ்டமே வராது. பஞ்சை கோடவுனில் வைத்திருந்து விற்றால், மில்காரர்கள் 500 ரூபாய்க்குக்கூட வாங்குவார்கள். வைத்திருக்கக் கூடிய சக்தி சம்சாரிகளுக்கு இல்லை. பேசிக் பிரைஸ் வைத்து வாங்குவதனால், நமக்கு நஷ்டமே வராது என்று தெரிவித்துக் கொள்கின்றேன். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சென்னையில் வேர் ஹவுசிங் போர்டு இருக்கிறது. அதைச் செய்யாததால் பருத்தி உற்பத்தியாளர்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். ஒரு கண்டி பஞ்சு வாங்கி நூல் நூற்றால், 40-ம் நம்பர் நூல் நூற்றால், ரூபாய் 1,500 வரைக்கும் லாபம் கிடைக்கும். அவ்வளவு கணிசமான அளவு லாபம் கிடைக்கிறது. துரதிர்ஷ்ட வசமாக கரண்டு 'கட்' ஏற்பட்டு விட்டதனாலே, 'லே ஆப்' ஆகிறதினாலே அவர்களுக்கும் சட்டுப்படியாகவில்லை. 'லே ஆப்' கொடுத்து தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை திரு. காட்டூர் கோபாலுக்கும் தெரியும். எதிர்காலத்தில் 4 மாதத்திற்குள்ளாக 'லேபர் அன்ரெஸ்ட்' எப்படி இருக்கப் போகிறது என்று தெரியவில்லை. மில்களில் எல்லாம் தொழிலாளர்கள் ஊர்களுக்குப் போகிறார்கள். சிம்ப்சன் கம்பெனியிலிருந்தும் 20,000 பேர்களைப்





போகச் சொல்லிவிட்டார்கள். பெரிய பெரிய நிறுவனங்கள் எல்லாம் நிற்கின்றன. தொழிலாளர்கள் எதிர்காலத்தில் அவர்களுடைய ஜீவனத்திற்கு என்ன செய்யப் போகிறார்கள், அரசாங்கம் அவர்களுக்கு செய்யப்போவது என்ன என்று தெரியாத நிலைமையில் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம்.

மத்திய அரசாங்கமானது நம்முடைய மாநிலத்திலே பல திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்றும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள். பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வரவேண்டுமென்பதை நானும் வரவேற்றிருக்கின்றேன். எங்களுடைய ஜில்லா பின் தங்கிய பகுதி என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே கிழக்கு ராமநாதபுரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும் மேற்கு ராமநாதபுரமும் சேர்ந்திருக்கின்றது என்று தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அத்துடன் உசிலம்பட்டி, திருமங்கலம் தாலுக்காக்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே தொழில் செய்கின்றவர்களுக்கு 10 பர்சண்ட் சப்சிடி கொடுக்கிறார்கள். 10 வருடங்களுக்கு, பின் தங்கிய இடங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு மத்திய சர்க்கார் ஒரு சலுகையைத் தருகிறது. அவர்களுக்கு 10 வருடங்களுக்கு 'இன்கம்-டாக்ஸ்' இல்லையென்று மத்திய அரசு ஒரு சலுகை கொடுத்திருக்கின்றது. அதைப் பயன்படுத்தி நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பின் தங்கிய பகுதிகளில், நம்முடைய அரசு சார்பிலோ தனியார் துறையிலோ, தொழில்களை உண்டாக்குவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடி, குடிசை மாற்று வாரியம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல், மற்ற நல்ல காரியங்களையெல்லாம் நிதிநிலை அறிக்கையில் பார்க்கின்றேன். அந்த வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொடுக்க வேண்டும். குத்தகைதாரர் சட்டத்தைப்பற்றி ஒரு விஷயத்தை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். குத்தகைதாரர்கள் அந்த நிலத்தை வாங்குவதற்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அது வரவேற்கத்தக்க சட்டம்தான். அதை நான் வரவேற்காது போனால், நீங்கள் சோஷலிசம் என்ன ஆயிற்று என்று கேட்பீர்கள். சோஷலிசம் என்ற மாதிரி நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு விஷயத்தைச் சொன்னால் கொஞ்சம் ஒரு மாதிரியாக இருந்தாலும் அதிலே ஒரு குற்றம் கண்டுபிடிக்கின்ற நிலைமை இருப்பதால், சொல்கிறேன். நான் ஒன்றும் பயந்தவன் அல்ல. இந்த நிலங்களை எடுத்துக் கொள்கின்றபோது, சாதாரணமாக அதிக பட்ச நிலவுடைமை 15 ஸ்டேண்டர்ட் ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். அதற்கு மேல் உள்ளதைத்தான்

எடுக்கப்போகிறோம். அதற்கு எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால், எவ்வளவு நெல் வருகிறதோ அதற்கு பாங்கியில் ரூபாய் போட்டால் 9 சதவிதம் வட்டி வருகின்ற அளவுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறேன். அந்த அளவு வட்டிக்கு ஈடுகட்டுவதாக இருக்க வேண்டும். அதற்குக் குறைந்ததாக இருத்தல் கூடாது. அதுதான் நியாயமாக இருக்கும். அதற்கு ஈடு செய்கின்றமாதிரி வட்டியும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, வரும் நான்கு மாதங்களில் விவசாயிகளுக்கு ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. இந்த மின் வசதியை முதல் கட்டமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி தொழில் துறை வேலை செய்ய வேண்டாமா என்று கேட்கலாம். மின் விசை விவசாயிகளுக்கு மிக அவசியம். இப்பொழுது கவலையை உடனடியாகப் போக்க முடியாது. ஆழமான கிணறுகளை விவசாயிகள் பலர் வெட்டியிருக்கிறார்கள். மின் வசதியை விவசாயிகளுக்கு முதலில் கொடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, மண்ணெண்ணெயைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இடையிலே தலையிடக்கூடாது என்பதனால் இப்பொழுது சொல்கிறேன். இப்பொழுது மாநிலம் பூராவும் ஜீனி கார்டு வைத்துக்கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் நான்கு லிட்டர் என்ற அளவில் மண்ணெண்ணெய் கொடுக்கப்பட்டு வருகிறது. இது எல்லோருக்கும் அநேகமாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இது பத்து நாட்களுக்கு முன்னதாகவே ஏற்பாடாகிவிட்டது. சில கிராமங்களில் ஜீனி கார்டு இல்லையென்று சொல்லப்படுகிறது. அவ்வாறு கேள்விப்படுகிறேன். அந்தக் கார்டுகளையெல்லாம் அந்தக் கிராம ஜனங்கள் ஜீனிக்காக பிறருக்கு விற்றுவிட்டார்கள் போலிருக்கிறது. இப்பொழுது எல்லாவற்றையும் பரிசீலித்துப் பார்க்கச் சொல்லி 4 லிட்டருக்குக் குறைவில்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மண்ணெண்ணெய் பூராவும் சரியான முறையில் செலவழிக்கப்பட்டு வருகிறது.

